
பூங்கொடி
பதிப்பகம்



# நானறிந்த ராஜாஜி

சிலம்புச் செல்வர்
ம.பொ. சிவஞானம்

ஈஸ்வரி

# நானறிந்த ராஜாஜி

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**
**நூலக நூல்கள்**
நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**
**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

சிலம்புச் செல்வர்
டாக்டர் ம.பொ.சிவஞானம்

**பூங்கொடி பதிப்பகம்**
14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு
மயிலாப்பூர், சென்னை - 600 004
தொலைபேசி : 24943074

## நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நானறிந்த ராஜாஜி |
| நூலாசிரியர் | : | சிலம்புச் செல்வர்<br>டாக்டர் ம.பொ.சிவஞானம் |
| மொழி | : | தமிழ் |
| வெளியீடு | : | பூங்கொடி பதிப்பகம்<br>14, சித்திரைக்குளம் மேற்குத் தெரு<br>மயிலாப்பூர், சென்னை - 600 004 |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, ஜூன், 1987<br>இரண்டாம் பதிப்பு, டிசம்பர், 2003 |
| பக்கங்கள் | : | 368 |
| நூல் அளவு | : | 18.5 x 12.5 செ.மீ. |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| தாள் | : | 10.9 கி.கி. வெள்ளைத்தாள் |
| பைண்டிங் | : | கார்டு போர்டு |
| ஒளி அச்சுக் கோர்வை | : | அமராவதி<br>சென்னை - 600 083<br>செல் : 9444169725 |
| அச்சிட்டோர் | : | எம்.எஸ். பிரிண்டிங் ஒர்க்ஸ்,<br>சென்னை - 600 014 |

**விலை ரூ. 100-00**

# முன்னுரை

உலகப் புகழ்பெற்ற ராஜாஜியோடு நாற்பதாண்டுகளுக்கு மேலாக எனக்கு இருந்து வந்த அரசியல் - ஆன்மிகம் - இலக்கியம் ஆகிய பல்வேறு துறைகளிலான தொடர்புபற்றி ஒருநூல் எழுதி வெளியிட வேண்டும் என்ற ஆவல் பல ஆண்டுகளாகவே எனக்கு இருந்து வந்தது. அவரது ஆயுள் முடிந்த பின்னர், அந்த ஆவல் அதிகரித்து வந்தது. அப்படியொரு நூலை எழுதி வெளியிட வேண்டுமென்ற ஆவலை எனக்கு உண்டாக்கியவர் என் மகன் ம.சி. திருநாவுக்கரசுதான். அந்தப் பணியைத் தொடங்குவதிலே நான் காலங்கடத்தி வந்தபோது, அவர் என்னை அடிக்கடித் தூண்டியும் வந்தார். அதனால், அவரை ஆசிரியராகக் கொண்ட ''செங்கோல்'' இதழிலே ''நானறிந்த ராஜாஜி'' என்ற தலைப்பில் தொடர் கட்டுரையாக எழுதலானேன். 15-12-85 இதழ் தொடங்கி 11-1-87 இதழ்வரை 41 கட்டுரைகள் எழுதி, அவற்றைத் தொகுத்து இந்நூல் வடிவில் வெளியிட்டுள்ளேன்.

ராஜாஜி 95 ஆண்டுக்காலம் ராஜரிஷி போன்று வாழ்ந்தவர். அவருடன் எனக்கு இருந்த தொடர்பை அவர் வாழ்ந்த காலத்திலேயே எழுத நேர்ந்திருக்குமாயின், யான் விமர்சிக்க விரும்பிய அனைத்தையும் விமர்சித்திருப்பேன். அவர் ''செங்கோல்'' இதழை வாரந்தோறும் படித்து வந்தாராதலால், எனது தொடர் கட்டுரையில் பிழை கண்டிருப்

பாராயின், அதைத் திருத்தும்படி வற்புறுத்தியிருப்பார். அவர் விரும்பாத சில விஷயங்களை நூலில் வெளி யிடுவதைத் தவிர்க்கும்படியும் என்னைக் கேட்டிருப்பார். அதற்கான உரிமை என்மீது அவருக்கு உண்டு. ஆனால், அவர் மறைந்த பின்னர், அவரோடு எனக்கு இருந்த தொடர்புபற்றி விமர்சன ரீதியில் எழுதி, மக்களுக்கு வழங்கவேண்டி ஏற்பட்டதால், கருத்து வேற்றுமைக்குரிய விஷயங்களிலே சிலவற்றை எழுதாமல் விடவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. அது, அரசியல் நாகரிகமும் ஆகும். மறைந்துவிட்டவரைப் பற்றி யார் என்ன எழுதினாலும், அது ஒருதலையாகத்தான் இருக்க முடியும்.

முடிந்தவரை ராஜாஜியின்பால் பேரன்பு கொண்டவர் கள் விரும்பாதவற்றை விமர்சிக்காமல் விட்டிருக்கிறேன். ஆனால், வரலாற்றுத் தொடர்புடைய நிகழ்ச்சிகளை அடியோடு மறைத்து விடுவதற்கில்லை. ராஜாஜியும் அதை விரும்பாதவர். அரசியல் - பொருளாதாரம் - மொழிப் பிரச்சினைகளிலே எங்களிடையில் நிலவிய ஆழமான கருத்து வேற்றுமைகளை மறைக்காமல் விமர்சித் திருக்கிறேன். அவற்றிற்குச் சான்றாக, ராஜாஜி வாழ்ந்த காலத்திலேயே அவரால் எழுதப்பட்டும், பேசப்பட்டும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை முடிந்தவரை சேகரித்துத் தந்திருக்கிறேன்.

ராஜாஜியைப்பற்றி எத்தனையோ நூல்கள் அவர் வாழ்ந்த காலத்தும், அவர் மறைந்த பின்னும் வெளிவந் திருக்கின்றன. வாழ்ந்த காலத்தில் வெளிவந்தது அநேகமாக அவரது வரலாறுதான். நானறிந்தவரை அவரது வாழ்க்கை வரலாற்றை நடுவுநிலையில் நின்று விமர்சிக்கும் நூல்

எதுவும் தமிழில் வெளியானதாகத் தெரியவில்லை. அந்த வகையில் இதுவே முதல் நூல் என்று கருதுகிறேன்.

பல விஷயங்களிலே ராஜாஜியைப்பற்றித் தவறான கருத்துக்கள், அவருடைய புகழுக்கு மாசு கற்பிக்கும் எண்ணங்கள் தமிழ் மக்களிடையே நிலவி வருகின்றன. அவற்றைப் போக்கவும் இந்நூலில் யான் முயன்றிருக் கிறேன்.

ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த கருத்தொற்றுமை களோ, கருத்து வேற்றுமைகளோ இந்த நூலில் முழு அளவில் விமர்சிக்கப்பட்டுவிட்டன என்று நான் சொல்வதற்கில்லை. முக்கியமான சிலவற்றைப்பற்றி மட்டும்தான் விமர்சித்திருக்கிறேன்.

ராஜாஜியின்பால் யான் கொண்டுள்ள பக்தியிலே வேறு யாரும் என்னை விஞ்சிவிட முடியாது. இதனை யான் உறுதியாகச் சொல்ல முடியும். நாங்கள் கருத்து வேற்றுமைக்கிடையேயும் பரஸ்பரம் அன்பு காட்டி, அடிக்கடி சந்தித்துப் பேசிப் பழகி வந்திருக்கிறோம். இதுபற்றி ராஜாஜி கூறியவற்றையே இந்நூலில் பல விடங்களில் சான்று காட்டியிருக்கிறேன். இந்நூலை வெளியிடுவதிலே யான் மிகுந்த மனநிறைவு பெறுகிறேன்.

நான் இதுவரை 130-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். இந்நூல் தரத்தில் அவற்றி லிருந்து தனிப்பட்டதாகும். தமிழர் ஒவ்வொருவரும் இந்நூலைப் படிக்கவேண்டும் என்பது என் விருப்பம். அரசியலிலே கருத்து வேற்றுமைகளுக்கிடையேயும் ஒரு தலைவரும் அவரைப் பின்பற்றும் அரசியல்வாதியும் எப்படி அன்போடு பழகவேண்டும் என்பதற்கு ராஜாஜியும்

நானும் வழிகாட்டிகளாக அமைந்திருக்கிறோம். அதனால், அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் இந்த நூலைத் தவறாமல் படித்துப் பயனடைய வேண்டுகிறேன்.

இதுவரை எனது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரும் திரு.வே. சுப்பையா அவர்களின் ''பூங்கொடிப் பதிப்பக''மே வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நூலையும் வெளியிட்டிருக்கிறது. எனது நூல்களை - அளவில் சிறியதாயினும், பெரியதாயினும் - எனது எழுத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையிலே் அழகிய பதிப்பாக வெளியிடுவதில் பூங்கொடி பதிப்பகம் எப்போதுமே அக்கறை காட்டி வந்திருக்கிறது. இந் நூலையும் அப்படியே வெளியிட்டிருக்கிறது. பூங்கொடி பதிப்பகத்தாருக்கு எனது பாராட்டு.

ம.பொ. சிவஞானம்

# பதிப்புரை

ராஜரிஷியாகவும், தீர்க்கதரிசியாகவும், அறிவின் சிகரமாகவும், உலகம் போற்றிய மகானாகவும் வாழ்ந்தவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்.

இந்திய விடுதலைப் போரில் தென்னாட்டுக் காந்தியாகச் செயல் புரிந்தும் விடுதலை பெற்ற பாரதத்தில் கவர்னர் ஜெனரல் பதவி வகித்தும் தமிழகத்திற்குப் புகழ் சேர்த்தவர் அவர்.

இத்தகு பெருமைமிகு மூதறிஞர் ராஜாஜி அவர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை ''நானறிந்த ராஜாஜி'' என்ற தலைப்பில் சிலம்புச் செல்வர் ஐயா ம.பொ.சி. அவர்கள் ''செங்கோல்'' வார இதழில் தொடர் கட்டுரையாக எழுதி வந்தார்கள். அது இப்போது நூல் வடிவம் பெற்றுள்ளது.

சிலம்புச் செல்வர் அவர்கள் மகான் ராஜாஜி அவர்களைத் தனது குருவாக ஏற்றுப் போற்றினார். பின்னர் தனது குருவிடமே ''மகான்'' என்ற பட்டத்தையும் பெற்று மகிழ்ந்தார்.

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் அறிவை - ஆற்றலை நன்குணர்ந்தவர் சிலம்புச் செல்வர் ஐயா ம.பொ.சி. அவர்கள். ஆகவேதான் அறிஞர் ராஜாஜி அவர்களின் அருமை பெருமைகளை பாமர மக்களும் புரிந்து கொள்ள வேண்டுமென விரும்பினார். இன்னும் சொல்லப்

போனால் மூதறிஞர் ராஜாஜி அவர்களையும் சாதாரண மக்களையும் இணைக்கும் பாலமாக சிலம்புச் செல்வர் விளங்கினார்கள்.

அரசியலில் மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்களையெல்லாம் தனது எழுத்தாலும் பேச்சாலும் எதிர்த்து வெற்றி பெற்றவர் - எதிரிகளின் கல்லடியையும் சொல்லடியையும் தன் நெஞ்சிலும் நெற்றியிலும் ஏற்று சரித்திரம் படைத்தவர் சிலம்புச் செல்வர் அவர்கள். இந்த இரு மகான்களின் நட்பால் தமிழ்நாடு பெற்ற பயன்கள் பல.

புதிய தமிழகம் படைக்க சிலம்புச் செல்வருக்கு உறுதுணையாக இருந்தவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார் அவர்கள்.

தமிழகத்தின் தலைநகராம் சென்னையை ஆந்திரரிட மிருந்து காப்பாற்ற சிலம்புச் செல்வருக்குப் பேருதவி செய்தவர் மகான் ராஜாஜி அவர்கள்.

தமிழகத்தின் எல்லைகளை மீட்பதிலும் இதே நிலைதான்.

சரித்திர புருஷர் ஒருவரைப் பற்றி சரித்திரம் படைக்கின்ற ஒரு மகான் எழுதியுள்ள இந்நூல் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த அரிய நூலை சிலம்புச் செல்வர் அவர்களின் 85-வது பிறந்த தின வெளியீடாகக் கொண்டுவருவதில் பூங்கொடி பதிப்பகம் பெருமை கொள்கிறது.

வே. சுப்பையா

# காணிக்கை

மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வாழ்ந்த காலத்திலே அவருக்கும் - எனக்கும் இணைப்புப் பாலம்போல் விளங்கினார் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி.

அந்த அறிஞருக்கு - புகழ்மிக்க நாவலாசிரியருக்கு - விடுதலைப் போரில் சிறை புகுந்த தியாகிக்கு - ராஜாஜியின் மெய்யன்பருக்கு - இந்த நூலைக் காணிக்கை யாக்குகிறேன்.

ம.பொ. சிவஞானம்.

# நுழைவாயில்

தமிழ் நாட்டிலுள்ள மாவட்டத் தலைநகரங்களுள் ஒன்றான சேலம் நகரம் இருவேறு ''சக்கரவர்த்திகளா''ல் பெருமை பெற்றுவிட்டது. அவர்களில் காலத்தால் முற்பட்டவர் சேலம் சி. சக்கரவர்த்தி விஜயராகவாச் சாரியார். பிற்காலத்தவர் சக்கரவர்த்தி இராசகோபாலாச் சாரியார்.

நான் கூறும் இந்தச் ''சக்கரவர்த்திகள்'' சாம் ராஜ்யத்தின் அதிபர் பதவியை வகித்தவர்கள் அல்லர். அந்தச் சக்கரவர்த்தி பதவி வாழ்க்கையின் இடைக் காலத்தில் வரும்; இடைக்காலத்திலேயே போய்விடவும் கூடும். நான் குறிப்பிடும் இருவரும் பிறப்பிலேயே சக்கரவர்த்திகள்! ''நல்லான் சக்கரவர்த்தி'' என்னும் பெயருடைய சான்றோரின் குலத்தில் பிறந்ததால், இவர் களுக்குச் ''சக்கரவர்த்தி'' என்பது குடும்பப் பெயராகி விட்டது.

வைஷ்ணவ சமயத்தின் வரலாற்றிலே நல்லான் சக்கரவர்த்தி என்னும் சான்றார் ஒருவர் கூறப்படுகிறார். இவர், தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் மரணமடைந்தபோது, அவருக்கு ஈமக் கடன்களைச் செய்தாராம். அதனால், பிராமண சமுதாயம் அவரைப் பகிஷ்கரித்தது. ஆம்; பிராமணர் பார்வையிலே அவர் ''பொல்லாதவர்'' ஆகக் காட்சியளித்தார். அந்தச்

சந்தர்ப்பத்திலே திருமால் அவர்பால் அருள்கூர்ந்து, ''நீவிர் ஊருக்குப் பொல்லான் என்றாலும், நமக்கு நல்லான்'' என்று கூறிப் பாராட்டினாராம்.

## ஒத்துழையாமையின் கர்த்தாக்கள்

இந்த இருவருக்குமிடையே பலவகையில் ஒருமைப்பாடு இருக்கக் காண்கிறோம். இருவருமே உயர்வு - தாழ்வோடு கூடிய சாதி வேறுபாட்டில் நம்பிக்கை யற்றவர்கள்; இந்து சமுதாயத்திலிருந்து தீண்டாமையை ஒழிக்க, தங்கள் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர்கள்; வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டுப் புகழ் பெற்றவர் கள்; இந்திய தேசிய காங்கிரசைச் சார்ந்திருந்து, தேச விடுதலைக்காக அரும்பாடுபட்டவர்கள்; இந்திய அரசியலிலே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல திருப்பங்களை ஏற்படுத்தி, தேச விடுதலையைத் துரிதப் படுத்தியவர்கள்; ''தேசத்தின் தந்தை'' என்று போற்றப் பெறும் காந்தியடிகளிடம் அன்பு கொண்டவர்கள்; அவருடைய பேரன்புக்கும் பாத்திரமானவர்கள்.

ஒத்துழையாமை இயக்கத்தைக் காங்கிரஸ் தோற்று விப்பதற்கு சேலம் சி. ராசகோபாலாச்சாரியார் தூண்டு தலாக அமைந்தார். 1920-இல் நாகபுரியில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையிலே, ஒத்துழையாமைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, அதன் தலைமைப் பொறுப்பில் இருந்தார் சேலம் சி. விஜயராகவாச்சாரியார்.

அனைத்திந்திய அரசியலிலே சேலத்துப் பெரியார் இருவரும் இந்து - முஸ்லிம்களிடையே ஒற்றுமையை வளர்க்க ஓயாது பாடுபட்டவர்கள்.

திரு. விசயராகவாச்சாரியாரும், திரு. ராசகோபாலாச் சாரியாரும் சேலம் நகரில் வாழ்ந்து அனைத்திந்தியாவுக்கும்

அறிமுகமானவர்கள் என்றாலும், அவர்கள் பிறந்தது சேலம் நகரத்தில் அல்ல.

திரு.சி. விசயராகவாச்சாரியார் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் பிறந்த காலத்திலே அது மிகச் சிறிய கிராமமாக இருந்தது. அந்தக் கிராமத்திலே புரோகிதத் தொழில் புரிந்த திரு. சடகோபாச்சாரியாருக்கு மகனாகப் பிறந்தார்.

திரு.சி. ராசகோபாலாச்சாரியார், பழைய பெரிய சேலம் மாவட்டத்தின் ஒரு சிற்றூரான தொரப்பள்ளியில் பிறந்தார். இப்போது, சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தர்மபுரி மாவட்டத்தின் ஒரு பகுதியாக தொரப்பள்ளி இருந்து வருகிறது. அது இப்போதும் சிற்றூர்தான்.

தொரப்பள்ளியைத் தன்னுட்கொண்ட ஓசூர் தாலூகாவிலே கன்னட மொழிக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. காரணம், அவ்வூர் கருநாடக மாநிலத்தின் எல்லையில் இருப்பதுதான்.

**சேலத்துக் கிழவர்!**

திரு.சி. விசயராகவாச்சாரியார் தமது முதுமைப் பருவத்தில் ''சேலத்துக் கிழவர்'' என்னும் சிறப்புப் பெயரால் அனைத்திந்திய தேசியத் தலைவர்களால் அழைக்கப் பெற்றார். சங்க காலத் தமிழிலே, ''கிழவர்'' என்னும் சொல் முதுமைப் பருவத்தைக் குறிப்பதல்ல; ''தலைவர்'' என்னும் பொருளைக் கொண்டதாகும். திரு. விசயராகவாச்சாரியாரும் ''தலைவர்'' என்னும் பொருள் தோன்ற ''கிழவர்'' எனப்பட்டார் என்று கருதலாம்.

சேலம் சி. விசயராகவாச்சாரியார் இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மகாசபையிலே முதன்

முதலாகக் கலந்து கொண்டார். அந்நாள் தொடங்கி 1921 வரை காங்கிரசோடு இடையறாது தொடர்பு கொண்டிருந் தார். காங்கிரசின் அமைப்பு விதிகளைத் தயாரித்துக் கொடுத்த சட்ட நிபுணர்களில் சேலத்துக் கிழவர் முதல் வராவார். சமயச்சார்பற்ற அரசியலையே விரும்பினார். காந்தியடிகள் காங்கிரசுக்கு வழிகாட்டத் தொடங்கிய பின்னர், அந்த மகாசபையின் அரசியலிலே மதக் கலப்பு அதிகமாகிவிட்டது திரு.சி.வி. ஆச்சாரியாருக்குப் பிடிக்க வில்லை. குறிப்பாக, தேச விடுதலைக்குரிய ஒத்துழையாமைப் போரின் வேலைத் திட்டத்திலே, இஸ்லாமிய சமயம் சம்பந்தப்பட்ட ''கிலாபத்'' இயக்கத்தையும் இணைத்தார் காந்தியடிகள். இது, விசயராகவாச்சாரியாருக்குப் பிடிக்க வில்லை. இதுபற்றித் தமது எதிர்ப்புணர்ச்சியை ஒத்துழை யாமைத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட நாகபுரி காங்கிரஸ் மகாசபையில் நிகழ்த்திய தமது தலைமையுரையிலேயே அவர் வெளியிட்டார். அவர் நாகபுரிக்குப்பின் அரசியல் வாழ்விலிருந்து ஒதுங்கியதற்கு அதுவும் ஒரு காரணம் போலும்!

திரு.சி. விசயராகவாச்சாரியார் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தை எதிர்த்து, காங்கிரஸ் நடத்திய தேச விடு தலைப் போரில் கலந்து சிறை செல்லும் பாக்கியத்தைப் பெற்றவர் அல்ல. ஆயினும், இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு முன்பே பத்தாண்டுக் காலச் சிறைத்தண்டனை பெற்றவர். அக்காலத்திலே பிரிட்டிஷ் ஆட்சி இந்துக்களையும், முஸ்லிம்களையும் பரஸ்பரம் பகைவர்களாக்குவதிலே தனி ஆர்வம் காட்டியது. இதற்கு ''பிரித்தாளும் தந்திரம்'' எனப் பெயர் தந்தனர் தேசியத் தலைவர்கள். இந்தத் தந்திரத்தை சேலம் நகரிலும் வெள்ளை அதிகார வர்க்கம் கையாண்டு இந்து முஸ்லிம்

கலவரத்தைத் தோற்றுவித்தது. தொடர்ந்து மூன்று நாட்கள்வரை சேலம் நகரில் அரசாங்கம் என்பதாக ஒன்று இருக்கிறதா என்று வினா எழும் அளவுக்கு சட்டமும் ஒழுங்கும் குலைந்து போயின. இது நிகழ்ந்தது 1882 ஆகஸ்டிலாகும்.

## பத்தாண்டு சிறைத் தண்டனை!

இந்தக் கலவரத்தின்போது, சேலத்துக் கிழவர் எந்த ஒரு வகுப்பினரையும் சார்ந்துவிடவில்லை. ஆனால், வழக்கறிஞர் என்ற முறையிலே இந்துக்கள் பக்கம் நியாயமிருப்பதை உணர்ந்து, வகுப்புக்கலவர வழக்கில் குற்றவாளிகளாக்கப்பட்டவர்களை அதிகார வர்க்கத்தின் சதியிலிருந்து மீட்கவும், அதன் மூலம் இந்து - முஸ்லிம் மக்களிடையே சமரசத்தை வளர்க்கவும் பாடுபட நீதிமன்றம் ஏறினார். இது பிடிக்கவில்லை அதிகார வர்க்கத்திற்கு. ஆச்சாரியாரையும் கலகத்தில் சம்பந்தப் படுத்தி, பத்து குற்றவாளிகளில் அவரையும் ஒருவராக்கி, கிரிமினல் வழக்கு நடத்தியது. சேலம் வெள்ளை நீதிபதி, பத்தாண்டு நாடுகடத்தல் தண்டனை விதித்தார். இந்த நிகழ்ச்சி தரும தேவதைக்கே அதிர்ச்சியைத் தந்திருக்க வேண்டும்!

சிறந்த சட்ட நிபுணரான சேலம் சி. விசயராகவாச் சாரியார் தண்டனை கண்டு அஞ்சவில்லை. நீதிபதியின் தீர்ப்பை ஆட்சேபித்து சென்னை உயர்நீதிமன்றத்திலே மேல் வழக்குத் தொடுத்தார். உயர்நீதி மன்றம், கீழ்க் கோர்ட்டு நீதிபதி விதித்த தண்டனையை ரத்துசெய்து, ஆச்சாரியாருக்கு விடுதலை தந்தது.

கைது செய்யப்பட்ட நாள்தொட்டு உயர்நீதிமன்றத் திற்குத் தந்த மேல் வழக்கில் விடுதலை கிடைக்கும்வரை

சுமார் பத்துமாத காலம் ஆச்சாரியார் சிறையில் அடைப் பட்டிருந்தார். ஆம்; இடைக்காலத்தில் அதிகார வர்க்கம் அவரை ஜாமீனில் விடவும் மறுத்தது. உயர்நீதி மன்றத்திற்குச் செய்த மனுவும் பயன்படவில்லை. இந்த வகையில் பார்த்தால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் கடுஞ்சினத்திற்காளாகி, கொடுந் தண்டனை யடைந்த தேசியப் பெருந்தலைவர்களில் திரு.சி. விசயராகவாச்சாரியார்தான் முதல்வர் என்று சொல்லலாம்.

வ.உ. சிதம்பரம் பிள்ளை 1909 -ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் போட்டியாக சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கியபோது, அதன் சட்ட ஆலோசகர் பொறுப்பை ஏற்றார் விசயராகவாச் சாரியார். சுதேசிக் கப்பல் கம்பெனியின் பங்குதாரராகவும் சேர்ந்தார்.

சேலத்துக் கிழவர் கப்பலோட்டிய தமிழரின் பெருமதிப்பிற்குரிய தலைவராவார். இரண்டு ஆயுள் தண்டனை பெற்று வ.உ.சி. சிறையில் அடைபட்டிருந்த போது, அப்படிப்பட்ட கொடுமைக்கு அவரை ஆளாக்கிய நெல்லை மாவட்ட கலெக்டர் ஆஷ் என்ற வெள்ளையனை வாஞ்சிநாதன் என்னும் இளைஞன் மணியாச்சி ஜங்ஷனில் சுட்டுக் கொன்றான். ஆஷ் என்னும் கொடுங்கோலனுக்கு வீரன் வாஞ்சி சரியான தண்டனையே கொடுத்தான் என்று வ.உ.சி. கருதினார். இதனை, கவிதை நடையில் தாம் எழுதியுள்ள ''வ.உ.சி. சுயசரிதை'' என்னும் நூலிலும் அவர் ஒளிவு மறைவின்றி வெளியிட்டுள்ளார். ஆயினும், தேச விடுதலைப் போரானது கொலை வழியில் செல்வதை முத்தமிழில் முழுப்புலமையுடைய வ.உ.சி விரும்பவில்லை. ஆகவே, கவிதை வடிவில் சேலம் சி. விசயராகவாச்சாரியாருக்கு எழுதிய கடிதம் ஒன்றிலே, கீழ்வருமாறு வ.உ.சி. கூறுகின்றார்.

''நான் சிறைப்பட்ட பின்னும் சுதேசிக் கிளர்ச்சியை அறவழியில் நடத்தி வரும் அன்பர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், எனது கோட்பாட்டுக்கு மாறாக, கொலைச் செயல்கள் நடைபெறுவதற்கு வருந்துகிறேன். நாம் போராடுவது பிரிட்டிஷ் ஆட்சி முறையை எதிர்த்தேயாகும். ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்வதால் அன்னிய ஆட்சி அழிந்துவிடாது. கொடியவர்களாயினும் அவர்களது உயிருக்கும் தீங்கு செய்யக் கூடாதென்பதே எனது கோட்பாடு. இதைப் புரட்சியில் விருப்பமுடையோருக்கு அறிவியுங்கள்.''

வ.உ.சி. தொடங்கிய சுதேசிக் கப்பல் கம்பெனிக்கு சேலம் நகரில் பங்குதாரர்களைத் திரட்டித் தந்ததிலேயும் சேலம் சி. விசயராகவாச்சாரியார் அவர்களுக்குப் பங்கு உண்டு.

## மாறுதல் வேண்டாதார் தலைவர்!

ஒத்துழையாமைப் போரின் தொடக்கத்திலேயே காந்தியடிகளுக்கு ஆறாண்டுக்கால கடுங்காவல் தண்டனை விதித்து, அந்த மனித குல மாணிக்கத்தை எரவாடா சிறையில் அடைத்துவிட்டது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். அந்தக் காலத்திலே இந்திய தேசிய காங்கிரசின் பெருந் தலைவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. மோதிலால் நேரு, தேசபந்து சித்தரஞ்சனதாசர், லாலா லஜபதி ராய் ஆகியோர் ஒத்துழையாமைப் போரைக் கைவிட்டு சட்டசபைக்குள் பிரவேசிக்க வேண்டுமென்று வாதாடினர்.

ராஜாஜியின் தலைமையிலே மற்றோர் சாரார் ஒத்துழையாமைப் போர் தொடர்ந்து நடைபெற

வேண்டுமென்று வற்புறுத்தினர். முன்னவர், ''மாறுதல் வேண்டுவோர்'' என்று பெயர் பெற்றனர். ராஜாஜியின் தலைமையைப் பெற்றிருந்த குழுவினர் ''மாறுதல் வேண்டாதார்'' என்று அழைக்கப்பட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலே சேலத்துக் கிழவர் தேசிய காங்கிரசிலே பிளவு ஏற்படுவதை விரும்பாததால், அரசியல் வாழ்விலிருந்து விலகிக் கொண்டார் என்று சொல்லலாம். சேலம் தந்த இரட்டையர்களில் இளையவ ரான சி. ராசகோபாலாச்சாரியார் தமது கடைசி மூச்சு உள்ள வரை அரசியல் வாழ்வோடு தொடர்பு கொண்டிருந்தார்.

## டாக்டர் நாயுடுவின் வழக்கறிஞர்

சேலம் மாவட்டத்திற்குப் புகழ் தேடியவர்களிலே மற்றொரு மாவீரரையும் நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அவர், திரு.பி. வரதராஜுலு நாயுடு ஆவார். சேலம் மாவட்டத்திலுள்ள ராசிபுரம் நகரில் எளிய குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும், செல்வம் மிகுந்த குடும்பத்தின் மாப்பிள்ளையானார். மாணவப் பருவத்தி லேயே அரசியலில் குதித்துவிட்டார். பொது வாழ்வில் ஈடுபட்டிருந்த காலத்திலே, முற்பகுதியில் சேலம் நகரில் வாழ்ந்தார். பிற்பாதியிலே சென்னை நகரத்தை உறைவிடமாகக் கொண்டார்.

இவர், இந்திய மருத்துவத்தில் பயிற்சி பெற்றிருந்த தாலும், 'மின்சார ரசம்' என்னும் மருந்து ஒன்றை நாட்டிற்கு அறிமுகப்படுத்தியதாலும் தமது பெயருக்கு முன்னே ''டாக்டர்'' என்பதனை அடைமொழியாகப் பெற்றார்.

அரசியலில் புகுந்த ஆரம்பத்திலேயே தீவிரவாதி யாகச் செயல்பட்டார். மேடையேறிப் பேசுவதில்

வல்லவரானார். இவருடைய நாக்கை இரரமபாணத்திற்கு ஒப்பிட்டுப் புகழ்ந்தவர்களும் உண்டு. ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுமளவுக்குப் புலமை பெற்றிருந்தா ரென்றாலும், பட்டதாரியல்ல. மேடைப் பேச்சில் தமிழிலேயே தமது வல்லமையைக் காட்டினார். தமிழக இளைஞர்களிடையே தேசாவேசத்தை ஏற்படுத்தியதிலே டாக்டர் நாயுடுவுக்குப் பெரும்பங்கு உண்டு.

*1918*-ல் மதுரை மாநகரில் ஹார்வி மில் தொழிலாளர் கள் தொடர்ந்து பலவார காலம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அந்த ஆலை வெள்ளை முதலாளிகளுக்குச் சொந்தமானது. அதனால் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டிருந்த தொழிலாளர்களுக்கு ஆதரவாக நடந்த பிரசாரத்திலே ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியலும் கலந்து கொண்டது. தமிழ் நாடெங்கணுமிருந்து நாவன்மை மிக்க பேச்சாளர் பலர் மதுரை மாநகரில் முகாம் செய்து மாலை நேரத்தில் பொதுக் கூட்டங்களில் பேசினர். நகரம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாசறையாக விளங்கியது. மதுரை நகர மாஜிஸ்திரேட் கோர்ட்டு கட்டடத்தின் மேல் தளத்திலே முன்னெச்சரிக்கையாக பீரங்கி வண்டி நிறுத்தி வைக்கப்பட்டது.

நகரத்தில் ஒன்றிரு சந்தர்ப்பங்களில் போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகங்களால் சிலர் உயிரிழந்த னர். நகரத்தில் நாள்தோறும் கொந்தளிப்பு அதிகரித்து வந்தது. இவ்வளவுக்கும் காரணம், டாக்டர் பி. வரத ராஜுலு நாயுடுவின் வீரமிக்க பேச்சுதான் என்று அதிகார வர்க்கம் கருதியது. அதனால், இ.பி.கோ. *124* ஏ-பிரிவின் படி டாக்டர் நாயுடுவைக் கைதுசெய்து அவர்மீது வழக்குத் தொடுத்தது.

சேலத்து வாசியான டாக்டர் வரதராஜுலு நாயுடு, தம் சார்பில் ஆஜராகி வாதாடுவதற்காக சேலத்தில் புகழ்பெற்று விளங்கிய வழக்கறிஞரான திரு.சி. ராசகோபாலச்சாரியாரை நியமித்தார். இந்த வழக்கு சம்பந்தமான நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழ்நாட்டு ஆங்கில தமிழ் நாளிதழ்களில் மட்டுமன்றி, வடநாட்டு ஆங்கில மொழி நாளேடுகளிலும், பிரதேச மொழிகளில் வெளிவந்த நாளேடுகளிலும் விவரமாகப் பிரசரிக்கப் பட்டன. டாக்டர் நாயுடுவின் வழக்கிலே ராஜாஜி எழுப்பிய சட்டவாதங்கள் தேசமெங்கும் எதிரொலித்தன.

இ.பி.கோ. 124 ஏ பிரிவின்படி ஒருவரைக் கைது செய்து வழக்குத் தொடுக்க ஆளுநரிடம் எழுத்து மூலம் முன் அனுமதி பெற வேண்டுமென்றும், அந்த அனுமதி இந்த வழக்கில் பெறப்படவில்லையென்றும் ராஜாஜி வாதாடினார். தந்தி வாயிலாக அனுமதி பெற்றிருப்பதாக போலீஸ் தரப்பில் வாதிடப்பட்டது. தந்திவாசகம் மட்டும் போதாது என்றார் ராஜாஜி.

ராஜாஜி ஓராண்டுக்கு முன்புதான் பெசன்ட் அம்மையாரின் ''ஹோம்ரூல்'' (சுயாட்சி) இயக்கத்தில் சேர்ந்து, அதன் மூலம் காங்கிரசோடும் தொடர்பு கொண்டார். அரசியலுக்குப் புதுமுகமாக இருந்த ராஜாஜிக்கு மதுரை வழக்கு அனைத்திந்தியாவிலும் புகழ் தேடித் தந்தது ஆயினும், நாயுடுவுக்கு 18 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

## ராஜாஜிக்கு வெற்றி!

டாக்டர் நாயுடு மாஜிஸ்திரேட் தீர்ப்பை ஆட்சே பித்து, சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் வழக்குத் தொடுத்தார். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் நாயுடு சார்பில்

ஆஜராகி வாதாடினார். டாக்டர் நாயுடுவை கைது செய்ததும், அவர்மீது வழக்குத் தொடுத்ததும் இ.பி.கோ விதிகளுக்கு விரோதமானவை என்று மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ராஜாஜி எடுத்துக்காட்டிய ஆதாரங்களையே சென்னை உயர்நீதி மன்றத்திலும் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் பயன்படுத்தினார். நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்து, டாக்டர் நாயுடுவை விடுதலை செய்தார். இதனால் சேலத்துத் தலைவர்களான ராஜாஜியும் நாயுடுவும் அனைத்திந்திய ரீதியில் புகழ் பெற்றனர்.

இந்த வகையில் பார்த்தால், சேலத்தின் புகழைப் பெருக்கியவர்களின் வரிசையிலே டாக்டர் நாயுடு மூன்றாவது இடத்தைப் பெறுகிறார்.

**சுப்பிரமணிய சிவா**

பழைய பெரிய சேலம் மாவட்டத்தின் வரலாற்றிலே பொன்னேட்டில் பொறிக்கத்தக்க சாதனைகளைப் புரிந்த மற்றொரு வீரத்தியாகியையும் இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும். அவர் மதுரை மாவட்டத்திலுள்ள வத்தலக் குண்டு என்னும் ஊரில் பிறந்த தியாகி சுப்பிரமணியசிவம் ஆவார்.

தூத்துக்குடியில் 1908 -இல் அரச நிந்தனையாக சொற்பொழிவாற்றிய குற்றத்தின் பொருட்டு, இ.பி.கோ. 151 விதியின்படி நெல்லை செஷன்ஸ் நீதிபதி பின்ஹே என்னும் பெயர் பெற்ற வெள்ளையர் வ.உ. சிதம்பர னாருக்கு இரண்டு ஆயுள் தண்டனையும், அவர் பேசிய மேடையிலேயே அரச நிந்தனைச் சொற்பொழிவு நிகழ்த்தியதற்காக சுப்பிரமணிய சிவாவிற்கு பத்தாண்டுத் தண்டனையும் விதித்தார். இந்தத் தண்டனையோடு 'நாடு

கடத்தல்' என்னும் மற்றொரு கொடிய தண்டனையையும் விதித்தார், நீதிபதி பின்ஹே. ஆனால், இவ்விருவரும் கடைசிவரை நாடு கடத்தப்படவில்லை. வ.உ.சி. முதலில் கோவை சிறையிலும், பின்னர் கேரளத்திலுள்ள கண்ணனூர் சிறையிலும் வைக்கப்பட்டார்.

சுப்பிரமணிய சிவா முதலில் திருச்சி சிறையில் வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொழுநோய் கண்டதால், அந்தக் கொடிய நோய்க்காளான கைதிகளை வைக்கும் இடவசதியைப் பெற்ற சேலம் நகர மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். இதனால், சேலம் நகரத்திற்குப் புகழ் சேர்த்த பெருமையிலே தியாகி சிவாவுக்கும் பங்கு உண்டு. அந்தப் பெருமகனார் தம் வாழ்நாள் முழுவதுமே தொழுநோயால் வருந்தி, அந்நோய்க்கே அர்ப்பணமானார்.

சேலம் மாவட்டத்தின் வரலாற்றிலே சுப்பிரமணிய சிவா சேர்த்த வேறு சில சிறப்புகளும் உண்டு. பழைய பெரிய சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த பாப்பாரப்பட்டி என்னும் ஊரிலே ''பாரதாசிரமம்'' என்னும் பெயரில் ஒரு நிறுவனத்தைப் படைத்தார் சிவா. தேசபக்தியுடைய தொண்டர்களிலே சிலரை ஆசிரமவாசிகளாக்கினார்.

இந்த பாரதாசிரமத் தோழர்களையே பஜனைக் கோஷ்டியினராக்கி, நாடெங்கும் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பரப்பினார். அவர்களுக்கு நாடக மேடை களிலே நடிக்கவும் பயிற்சியளித்து, ''சிவாஜி'' என்னும் பெயருடைய நாடகம் உட்பட பல நாடகங்களைத் தயாரித்து, தமிழ் நாடெங்கணும் நடத்தினார். அதன்மூலம் தமிழர்களிடையே தேசாவேசத்தை எழுப்பினார்.

பாப்பாரப்பட்டியிலே ''பாரத மாதா'' திருக்கோயில் ஒன்றையும் எழுப்ப முயன்றார். தேசபந்து சித்தரஞ்சன

தாசரை அந்தச் சிற்றூருக்கு அழைத்து வந்து, தாம் எழுப்ப விரும்பிய கோயிலுக்கு அடிக்கல் நாட்டச் செய்தார். ஆனால், கோயில் எழும்புவதற்கு முன்பு சிவாவின் சமாதி எழும்பிவிட்டது பாப்பாரப்பட்டியிலே! ஆம்; தமது புனிதவுடலை பாப்பாரப்பட்டியில் சமாதியாகச் செய்து, சேலம் மாவட்டத்திற்குப் புகழ் தேடினார் சிவா.

நான் எழுதத் தொடங்கியது ராஜாஜியின் வாழ்க்கையைத்தான். குறிப்பாக, அவரோடு நான் தொடர்பு கொண்டிருந்த நாற்பதாண்டுக் காலத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைத்தான். ஆயினும், ராஜாஜியின் வாழ்க்கையோடு சிறப்புமிக்க தொடர்பினையுடைய நகரம் என்பதால் சேலத்தை நுழைவாயிலாக்கினேன்.

# பெயருக்கே தனி வரலாறுண்டு

‘‘ராஜாஜி’’ என்று அனைத்துலகும் அழைக்கும் மாமேதையின் பிள்ளைத் திருநாமம் ‘‘இராசகோபாலன்’’ என்பதாகும். பெற்றோரிட்ட இந்த இயற்பெயருடன் வாழ்க்கையைத் தொடங்கியவர், அதற்கென ஒரு வரலாற்றைப் படைத்து வைத்துப் போய்விட்டார். ‘‘ராஜாஜி’’ என்னும் பெயர் அவர் வாழ்ந்த 95 ஆண்டுக் காலத்தில் அடைந்துள்ள மாறுதல்களை இன்று நினைவு கூர்ந்தால், அதற்கென தனி வரலாறு ஒன்று அமைந்து விட்டதை உணர்கிறோம்.

தொரப்பள்ளி என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்த இராசகோபாலன், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் படித்து பி.எல். பட்டம் பெற்று, சேலம் நகரில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கிய பின்னர், நாளுக்கு நாள் அவரது மதிப்பு உயர்ந்தது; அத்துடன் சேர்ந்து வக்கீல் தொழிலில் வருவாயும் பெருகியது. காளைப் பருவத்தைக் கடந்து குடும்பத் தலைவரான பின்னர், ‘‘இராச கோபாலாச்சாரி’’ என்று அழைக்கப் பெற்றார்.

### ஆச்சாரியார் ஒருவரே!

ஏற்கெனவே எடுத்துக் காட்டியபடி, அன்னிபெசன்ட் அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கத்தைச் சார்ந்ததனாலும், மதுரையில் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு மீது நடந்த

அரச நிந்தனை வழக்கில் சட்டத்தில் தமக்குள்ள நுண்ணறிவை வெளிப்படுத்தியதாலும் அவருடைய புகழ் பரவியது. கற்றறிந்தோர் அவரை மதிக்கத் தொடங்கினர். அதனால், ''இராசகோபாலாச்சாரியார்'' என்னும் பெயரானது ''ஆச்சாரியார்'' என்னும் அளவில் சுருங்கியது.

காங்கிரசின் முன் வரிசைத் தலைவர்களிலே ஒருவராகி, ''ராஜாஜி என் மனச்சாட்சியின் காவலர்'' என்று காந்தியடிகளால் போற்றப்பட்ட பின்னர் ''ஆச்சாரியார்'' என்றாலே அனைத்திந்தியாவிலும் இராசகோபாலாச் சாரியாரைத்தான் குறிப்பதாயிற்று.

அரசியல் உலகிலே ஆச்சாரியாரின் செல்வாக்கு ஓங்கத் தொடங்கிய பின், ''சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியார்'' என அறிஞர் உலகம் அவரை அழைக்கலாயிற்று. ''சக்கரவர்த்தி'' என்பது நல்லான் சக்கரவர்த்தி மரபில் வந்தவர் என்பதையே குறித்தது.

பின்னர், ஆங்கில மரபு அரசியல் உலகில் இந்தியரின் நாகரிகத்தைத் தாக்கியபோது, அறிஞர்களுடைய பெயர்களை இரண்டு அல்லது மூன்று தலையெழுத்தால் மட்டுமே விளம்பரப்படுத்தும் வழக்கம் பிறந்தது. அப்பொழுது சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் என்னும் பெயர். 'சி.ஆர்' என்று சுருங்கியது. ஆங்கில நாகரிகத்திலே மோகங்கொண்டு, இந்திய மொழிச் சொற்களுக்குரிய பெருமையை மறந்தனர் கற்றறிந்தோர். ''எஸ். வேதாசலம்'' என்னும் பெயரை 'எஸ்.வி.சலம்' எனச் சுருக்கினர். இந்த ஆங்கில மரபு தமிழ் வழக்கிலும் புகுந்து பாமரர் நாவிலும் 'சி.ஆர்.' என்னும் சொல் செல்வாக்குப் பெற்றது. 'சி.ஆர்.' என்றால், உலக அரசியலிலே சேலம் சக்கரவர்த்தி இராசகோபாலாச்

சாரியாரைத்தான் குறித்தது. போட்டிக்கு வர வேறு பெயர் புறப்படவில்லை.

**காந்தி ஆசிரமம்**

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி இந்திய தேசிய காங்கிரசுக்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்றதும், ஆமதாபாத் நகரில் சபர்மதி என்னும் ஆற்றின் கரையிலே ஆசிரமம் அமைத்தார். அது ''சபர்மதி ஆசிரமம்'' என்றழைக்கப்பட்டது.

காங்கிரசின் முன்னணித் தலைவர்கள் 'மாறுதல் வேண்டுவோர்' எனவும் 'மாறுதல் வேண்டாதார்' எனவும் இருவேறு குழுவினராகப் பிரிந்து போராடியபோது, ராஜாஜி ''மாறுதல் வேண்டாதார்'' குழுவின் தலைவராக இருந்தார் என்பதை ஏற்கெனவே அறிந்தோம். எளிய குடும்பத்தில் பிறந்து, அரசியலில் ஆடம்பரத்தை விரும்பாமல் அடக்கமாகப் பணிபுரிந்து, மெல்லமெல்ல முன்னுக்கு வந்த ஆச்சாரியார், எரவாடா சிறையில் இருந்த காந்தியடிகளின் பிரதிநிதியாக நாடு சுற்றி ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அடிகள் திடீரென நோயுற்றதன் காரணமாக, தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே எரவாடா சிறையிலிருந்து விடுதலை பெற்றார். அவர் விடுதலை பெறுவதற்கு முன்பே ''மாறுதல் வேண்டும்'' குழுவினர் ''சுய ராஜ்யக் கட்சி.'' என்னும் பெயரில் காங்கிரசின் கிளையாக புதிய கட்சியொன்றைத் தொடங்கினர். அவர்கள் சாமான்யர் அல்லர். பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சன தாசர், லாலா லஜபதிராய் ஆகியோராவர்.

தேசத்தினர் எதிர்பாராத வகையில் அரசினரால் விடுதலை செய்யப்பட்டு சபர்மதி ஆசிரமத்தையடைந்த

காந்திஜி, மாறுதல் வேண்டாத காங்கிரஸ்காரர்களுக்கும் மாறுதலை விரும்பிய சுயராஜ்யக் கட்சியைத் தோற்று வித்தவர்களுக்கும் சமரசம் செய்து வைத்தார். இதிலே, மாறுதல் வேண்டாதார் ஆக்கவழிப் பணிகளில் ஈடு படலாம் என்றும், மாறுதல் வேண்டுவோர் மாநில - மத்திய சட்டமன்றங்களில் புகுந்து, பார்லிமெண்டரி அரங்கில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரை நடத்தலாம் என்றும் சமரசம் செய்து வைத்தார். இதிலே ராஜாஜிக்கு உடன்பாடில்லை. ஆயினும், தமது அரசியல் குருவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, கோஷ்டிப் பூசலிலிருந்து ஒதுங்கியவராகி, ஆக்கவழிப் பணிகளில் ஈடுபட விரும்பி, திருச்செங்கோடு என்னும் நகரையடுத்துள்ள சிற்றூரில் தனியாக ஒரு ஆசிரமத்தை நிறுவினார். அதற்கு ''காந்தி ஆசிரமம்'' எனப் பெயர் வைத்தார். இதனால், காந்தியடிகளின்பால் ராஜாஜிக்கு இருந்த குரு பக்தியைப் பாரத மக்கள் அறிந்தனர். காந்தி ஆசிரமம் அமைந்த சில மாதங்களுக்குள் ராஜாஜியின் அழைப்பின் பேரில் காந்திஜி அங்கு வருகை தந்தார்.

பாரதமெங்கணும் சுற்றுலாச் செய்து, மக்களிடையே தமக்கு இருந்ததை விடவும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த பெருந் தலைவர்களோடு வாதப்போர் நடத்திய ராஜாஜி, அதனைத் திடீரெனக் கைவிட்டு, காந்தி ஆசிரமம் என்னும் சின்னஞ்சிறு குகைக்குள் அடைபட்டு, ஆக்கவழிப் பணிபுரிய முடிவு செய்தது சாதாரண விஷயமல்ல. தியாக உணர்வுகளுக்கு இது மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### தென்னாட்டுக் காந்தி''

காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் ராஜாஜி தம் அரசியல் வாழ்வில் ஏற்படுத்திக்கொண்ட மாறுதல் கண்டு

வியப்புற்றனர். ராஜாஜி, குடும்ப வாழ்க்கை வேறு. ஆசிரம வாழ்க்கை வேறு எனத் தம் வாழ்க்கையை இருகூறாக அமைத்துக் கொள்ளவில்லை. காந்தியடிகளுக்கு சபர்மதி ஆசிரம வாழ்க்கையே மனைவியோடு இருந்து நடத்தும் குடும்ப வாழ்க்கையாக மாறியது. அதுபோல, ராஜாஜியும் தமது மகன் சி.ஆர். நரசிம்மன், இளைய மகள் லட்சுமி ஆகிய இருவரையும் காந்தி ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டு, அந்த ஆசிரமத்தையே குடும்பமாக்கிக் கொண்டார். ஆம்; ஆசிரமத்திற்கு வெளியே அவருக்குக் குடும்பம் இருக்கவில்லை. சக்கரவர்த்தி ராச கோபாலாச்சாரியார் இளமையிலேயே தம்முடைய மனைவியைப் பறிகொடுத்துவிட்டார் என்பதனை இங்கு நினைவூட்ட வேண்டும். தம்மை விட்டுப் பிரிக்க முடியா மல் இருந்த மகனையும், இளைய மகளையும் கொண்ட காந்தி ஆசிரம வாழ்க்கையையே குடும்ப வாழ்க்கையாகக் கொண்டார்.

ஒத்துழையாமைக் கொள்கையில் காட்டிய உறுதி யாலும், காந்தியடிகளைக் குருவாகக் கொண்டதாலும், தனி வாழ்க்கையிலும் தமது குருவையே பின்பற்றும் வகையில் காந்தி ஆசிரமம் அமைத்துக்கொண்டு, ஆக்கவழிப் பணிகளில் தமது முழுக் கவனத்தையும் செலவழித்ததாலும் ஆச்சாரியாரை ''தென்னாட்டுக் காந்தி'' என மக்கள் அழைக்கலாயினர். ''காந்தியம்'' என்னும் தத்துவத்திற்கு ராஜாஜி வியாக்கியான கர்த்தாவானார்.

ராஜாஜியின் புகழ் தென்னகத்தையும் விஞ்சும் வகையிலே வடபுலத்தில் அதிகமாக வளர்ந்தது. அவருக்கு இந்தி தெரியாது என்றாலும், ஆங்கிலம் தெரியாத கடைசி ஓர் இந்தியனும் அவரை நேசிக்கும் வகையில், காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள பாரத மக்களுக்கு

'தென்னாட்டுக் காந்தி' யாக அறிமுகமானார். இதனால், சக்கரவர்த்தி ராசகோபாலாச்சாரியாரை ''ராஜாஜி'' என வடபுலத்து மக்கள் அழைக்கலாயினர். மோகனதாஸ் கரம் சந்த்ர காந்தியை ''காந்திஜி'' என அழைத்தது போல, சக்கரவர்த்தி ராசகோபாலாச்சாரியாரை ராஜாஜி என அழைக்கலாயினர். பின்னர் தென்னகத்திலும் 'ராஜாஜி'தான்!

**பட்டப் பெயர்கள்!**

சேலம் தந்த மாமேதையின் பெயரிலே ஏற்பட்டு வந்த மாறுதல்களையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் சுவையாக இருக்குமல்லவா!

இராசகோபாலன்,

இராசகோபாலாச்சாரியார்,

ஆச்சாரியார்,

சி.ஆர்.,

ராஜாஜி.

பெயரில் இத்தனை மாறுதல்கள் ஏற்பட்டு வந்ததோடு அமையாமல், பட்டப் பெயர்கள் பலவும் அசல்பெயருக்கு அடைமொழிகளாயின. அவற்றையும் தொகுத்துப் பார்த்துச் சுவைப்போம்:

சக்கரவர்த்தி ராஜாஜி
தென்னாட்டுக் காந்தி ராஜாஜி
பாரத ரத்னா ராஜாஜி
மூதறிஞர் ராஜாஜி
டாக்டர் ராஜாஜி.

தம்முடைய பெயருக்கு முடி சூட்டியதுபோல் அமைந்த பட்டப் பெயர்களால் ராஜாஜி பூரிப்படைய

வில்லை. பிறந்த குடும்பத்தால் வந்த சக்கரவர்த்தி என்ற பெயரால் மக்கள் அழைத்தபோதும் சரி; குருநாதர் என்னும் பொருளைத் தரும் ஆச்சாரியார் என்றழைத்த போதும் சரி; மனித குலத்தின் மாணிக்கமான காந்திஜியுடன் ஒப்பிட்டு தென்னாட்டுக் காந்தி என அழைத்தபோதும் சரி; தமது வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் பாரதப் பேரரசே தமக்கு ''பாரத ரத்னா'' எனப் பட்டம் தந்தபோதும் சரி; தாம் பல்வேறு பதவிகளை வகித்த காலங்களில் இந்தியா விலுள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் டாக்டர் பட்டங்கள் தந்தபோதும் சரி; அந்தப் பட்டங்களில் எதுவும் தமது பெயருக்கு அடைமொழியாக நிலைத்துவிட அவர் அனுமதிக்கவில்லை. இந்த உயர் பண்புக்குப் பெயர்தான் ராஜாஜி.

இந்தப் பட்டப் பெயர்களில் எந்த ஒன்றையும் அவர் பயன்படுத்திக் கொள்ளாததோடு, பிறர் பயன்படுத்தவும் அனுமதிக்கவில்லை. இராஜாஜி என்ற பெயரை மட்டுமே கொண்டு, அந்தப் பெருமகனார் 95-வயதுவரை வாழ்ந்து அமரராகிவிட்டார்.

## ராஜாஜி - பெரியார் நட்பு

பெரியார் ஈ.வே.ரா. இந்து சமுதாயத்திலுள்ள பிறப்பு வழிப்பட்ட சாதி வேறுபாடுகளை விரும்பாதவர். ஏன்? வெறுத்தவர் என்றும் சொல்லலாம். இதனை ஒழிப்பதற் கென ஒரு பேரியக்கத்தையே தமிழகத்தில் நடத்தியவர். அப்படிப்பட்டவரும் தம் வாழ்நாள் முழுவதும் ராஜாஜியை ''ஆச்சாரியார்'' என்னும் சாதிப் பெயராலேயே அழைத்து வந்தார் என்பது வியப்புக்குரியதாகும். அப்படி அவர் அழைத்தது, பிராமணத் துவேஷத்தால் என்று பலர் நினைக்கிறார்கள். பெரியாரைப் பின்பற்றும் திராவிட இயக்கத்தார் அனைவருமே அப்படித்தான் நினைக்கிறார் கள். அது தவறு.

பெரியார் காங்கிரசில் இருந்த காலத்திலே - அவரும் ராஜாஜியும் தோளோடு தோள் சேர்த்துத் தேச விடு தலைக்குத் தொண்டாற்றிய சகாப்தத்திலே, ஆச்சாரியார் என்றே ராஜாஜியை ஈ.வே.ரா. அழைப்பது வழக்கம். பக்தி விசுவாசத்தோடுதான் பெரியார் அப்படி அழைத்தார் என்று சொல்ல வேண்டும். பொது மேடைகளிலும் தனியாக என்னோடு பேசிய பல சந்தர்ப்பங்களிலும் 'ராஜாஜி என் அரசியல் குரு' என்று ஈ.வே.ரா. சொல்லி நான் கேட்டிருக்கிறேன்.

ஆச்சாரியார் என்னும் சாதிப் பெயருக்கு 'குருநாதர்' என்றும் பொருள் உண்டு. இந்தப் பொருளிலேயே ராஜாஜியை 'ஆச்சாரியார்' என்று ஈ.வே.ரா. அழைத்து வந்தார். ராஜாஜியை நேரில் சந்திக்கும் போதெல்லாம் தமக்குள்ள குரு விசுவாசத்தை வெளிப்படுத்தப் பெரியார் ஈ.வே.ரா. தவறியதேயில்லை.

இதுபோல, ராஜாஜியும் பெரியாரை 'நாயக்கர்' என்றே சொல்வது வழக்கம். பெரியார் சாதிப் பெயரை விரும்பாதவர் என்பது ராஜாஜிக்குத் தெரியும். அப்படி யிருந்தும், தமது பெருமதிப்பிற்குரிய நண்பரை 'நாயக்கர்' என்றே அழைத்தாரென்றால், அதிலே பொருள் உண்டு. 'நாயக்கர்' என்றாலே அந்நாளில் ஈ.வே. ராமசாமியைத் தான் குறிக்கும். ஆம்; தமிழ் நாட்டு அரசியல் வட்டாரத் திலே! தம் நண்பரை நாயக்கர் என்று அழைப்பதிலே ராஜாஜிக்குத் தனி மகிழ்ச்சி. அதனை அவர் ஒரு கௌரவப் பெயராகவே கருதினார்.

**குருநாதர் ராஜாஜி!**

ஆச்சாரியார் என்னும் சாதிப் பெயரால் பெரியார் தம்மை அழைப்பதை ராஜாஜி வெறுத்ததில்லை.

அப்படியே தாம் விரும்பாத சாதிப் பெயரால் நாயக்கர் என்று ராஜாஜி தம்மை அழைப்பதைப் பெரியாரும் கௌரவக் குறைவாகக் கருதியதில்லை. அவர்கள் அரசிய லில் சந்திக்க முடியாத இரு துருவங்களாக வாழ்ந்தனர் என்றாலும், பரஸ்பரம் அன்பும், பண்பும் உடையவர் களாகவே இருந்தனர். அப்படியொரு இரட்டையரை அரசியலில் இன்று காண முடியவில்லை. ராஜாஜியை பெரியார் ஈ.வே.ரா. 'ஆச்சாரியார்' என்று சாதிப் பெயராலேயே பிடிவாதமாக அழைத்து வந்து பிற சாதியிடமிருந்து அவரைப் பிரித்துக் காட்டி பிராமணத் துவேஷத்தை வளர்க்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் அல்ல என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

ஆச்சாரியார் என்னும் சாதிப் பெயருக்கு 'குரு நாதர்' என்று பொருள். ஆச்சாரியார் என்று அழைக்கப்படும் ஒவ்வொருவருக்குமே இந்தப் பொருள் பொருந்தி விடு வதில்லை. ஆனால், ராஜாஜிக்கு நிச்சயமாகப் பொருந்தும். அரசியலில் மட்டுமல்லாமல், ஆன்மிகத்திலும் அவர் குருநாதராகவே வாழ்ந்து வந்தார்.

மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் பயின்ற டாக்டர் உ.வே. சாமிநாதையர், அவரிடம் குறைவற்ற குருபக்தியுடையவராக இருந்தார். அவரை எழுத்திலும் பேச்சிலும் குறிப்பிட நேரும்போதெல்லாம் ''பிள்ளைவாள்'' என்றே குறிப்பிடுவார். தமது குருவின் பெயரைச் சொல்லவேமாட்டார். அதுபோன்றது ராஜாஜியை ஆச்சாரியார் என்று ஈ.வே.ரா அழைத்தது.

பெரியார் தமது அரசியல் குருவாக ராஜாஜியைக் கருதினார் என்றால், ராஜாஜியும் தமது குறைவற்ற அன்புக்குரிய சீடராக பெரியாரை ஏற்றுக் கொண்டு, தமது வாழ்நாள் முழுவதும் அவரிடம் அன்பு காட்டி வந்தார்.

## "குருவுக்கு மிஞ்சிய சீடர்கள்!"

எனது 55-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா 26-6-60 அன்று சென்னை தியாகராய நகரிலுள்ள கிருஷ்ணகான சபைக் கட்டடத்தில் நடைபெற்றது. மிகச் சிறப்பாக நடந்த இந்தக் கூட்டத்திலே என்னை வாழ்த்திப் பேசுவதற்கு என்று ராஜாஜி பேரன்புடன் கலந்து கொண்டார். அவரது நீண்ட நேரப் பேச்சிலே,

''எனக்கு முன்னே பேசியவர்கள், ம.பொ.சி. எனக்கு சிஷ்யர் என்று சொன்னார்கள். ஆனால், குருவுக்கு திருமந்திரம் ஓதுகின்ற சிஷ்யர்களும் உண்டு. அதனால், அன்பு ஒன்றும் குறைந்துவிடாது. குறையவே குறையாது. நாயக்கர் அவர்க்ள்கூட என்னுடைய சிஷ்யர்தான்.'' என்று ராஜாஜி கூறினார்.

நாயக்கர் என்று அவர் அன்பு ததும்பிய குரலில் கூறியது பெரியார் ஈ.வே. ராவைத்தான்! எனது பிறந்தநாள் விழாவிலே ராஜாஜி வெளியிட்ட இந்தக் கருத்து பெரியார் ஈ.வே. ராவின் ''விடுதலை'' நாளேட்டிலே பெட்டிச் செய்தியாக வெளிவந்தது.

# தமிழ் நாட்டு 'ஸோக்ரதர்'

புனிதர் ராஜாஜி முதன் முதலில் என்னைக் கவர்ந்தது அவர் தமிழில் எழுதி வெளிவந்துள்ள ''ஸோக்ரதர்'', ''மார்க்க அரேலியர்'' என்னும் இரண்டு நூல்களின் வாயிலாகத்தான். அந்நூல்கள் என் கைக்கு வருவதற்கு முன்பே ராஜாஜி பாரதத்தின் மாபெரும் தலைவர்களில் ஒருவர் என்பதை அறிந்திருந்தேன்.

''தமிழ் நாடு'' நாளிதழில் அச்சுக் கோக்கும் தொழிலாளியாக நான் வேலைபார்த்த நாட்களிலே அந்த நாளிதழை ஒவ்வொரு நாளும் தவறாமல் படித்து அரசியல் அறிவைப் பெற்று வந்தேன். சென்னைக் கடற்கரையில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டங்களிலே ராஜாஜி நிகழ்த்திய அரசியல் சொற்பொழிவுகளையும் கேட்டு வந்தேன். ஆயினும், ராஜாஜி முதன்முதலில் என் இதயத்தில் இடம் பெற்றது மேலே சொன்ன இரண்டு நூற்களின் வாயிலாகத்தான். அந்த இரண்டும் அரசியல் போராட்டங்களோடு தொடர்பில்லாத ஆன்மிக இலக்கியங்களாகும்.

**ஞானியாகிவிட ஆசை!**

இளமைப் பருவத்திலேயே யான் சமய இலக்கியங்களைப் படிப்பதிலே ஆர்வம் கொண்டிருந்தேன். இந்திய நாட்டு ஞானிகளின் போதனைகளைப் படிப்பதிலே பித்துக் கொண்டவனாக இருந்தேன். இளமைப்

பருவத்திலே என் எதிர்காலத்தைப் பற்றி எனக்கு ஏற்பட்ட ஆசை ஒன்று உண்டென்றால், அது ஞானியாகி விட வேண்டும் என்பதுதான். மற்றபடி, பணக்காரனாகிவிட வேண்டுமென்று எனக்கு ஆசை இருந்ததில்லை. வறுமைக் குழியின் ஆழத்தில் கிடந்த எனக்கு அந்த ஆசை ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏது?

அரசியலிலே பெரிய பெரிய பதவிகளை அடைய வேண்டுமென்ற ஆசையும் எனக்கு இருந்ததில்லை. நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்த காலமாதலால், பெரிய பெரிய பதவிகளை அடைந்துவிட வேண்டும் என்ற ஆசை பட்டதாரிகளான அரசியல் தலைவர்களுக்கே அந்நாளில் இருந்ததில்லை. அப்போதெல்லாம் நாடு விடுதலைபெறும் நாளை நினைத்துப் பார்க்கவும் தேசபக்தர்களால் முடிந்த தில்லை. எப்போதேனும் ஒரு நாளில் தேசம் விடுதலை பெற்றே தீரும் என்று எண்ணி அவர்கள் ஆறுதலடைவது உண்டு. மூட நம்பிக்கைகளில் இதுவும் ஒன்றாகத்தான் அந்நாளில் பிரிட்டிஷ் விசுவாசிகளால் கருதப்பட்டது.

தரைப்படை, கப்பற்படை, விமானப்படை போன்ற படைபலங்களைப் பெற்றுள்ள ஆங்கிலேயன் இந்த நாட்டைவிட்டு என்றைக்குமே வெளியேறமாட்டான் என்று எண்ணிய பிரிட்டிஷ் விசுவாசிகளும் உண்டு.

அவர்கள் நிலையே இதுவென்றால், ஏழைத் தொழிலாளியாகிய யான் அரசியலிலே பெரிய பெரிய பதவிகளை அடையவேண்டும் என்று கனவு காண்பதற்குக் கூடச் சந்தர்ப்பம் இருக்கவில்லை. ஆனால், அடிமைக் குடிமகன்கூட ஆன்மிகத் துறையில் அறிவை வளர்த்துக் கொண்டு, அருட் சக்தியை அணுகலாந்தானே!

இந்தியநாடு மொகலாயருக்கும் ஆங்கிலேயருக்கும் அடுத்தடுத்து அடிமைப்பட்டிருந்த ஆயிரமாண்டு

காலத்திலே எத்தனையோ ஞானியர்கள் வாழையடி வாழையெனத் தோன்றி, பாரத மண்ணின் தெய்வீக மனத்தைத் திக்கெட்டிலும் பரப்பினர். மெய்ஞ்ஞானியர் தோன்றுவதை எந்த அன்னிய ஏகாதிபத்தியத்தாலும் தடுத்துவிட முடியாது என்ற உண்மையை இந்திய நாட்டின் ஆயிரம் ஆண்டுக்கால வரலாறு நமக்கு அறிவிக்கின்றது.

நான் ராஜாஜியின் ஆன்மஞான நூற்களைப் படித்த காலத்திலே சரித்திர நூல்களைக் கையாலும் தீண்டி அறியேன். கேள்வி ஞானத்தால் சில மாமன்னர்களைப் பற்றிய செய்திகளை அறிந்து வைத்திருந்தேன், அவ்வளவு தான்!

## ராஜாஜியின் நூல்கள்

ஞானியர்கள் பற்றிய வரலாற்று நூல்களோ, அவர்கள் வழங்கிய போதனைகள் அடங்கிய நூல்களோ என் கைக்குக் கிடைத்துவிட்டால் உணவையும் மறந்து படிக்கும் வழக்கம் எனக்கு அந்த நாளிலேயே இருந்தது. அப்போது எனக்குத் தமிழிலுள்ள சங்ககால - இடைக்கால - ஏன், பிற்கால இலக்கியங்களைப் பற்றிய ஞானம் நான் பெருமைப்பட்டுக் கொள்ளுமளவுக்கு இருந்ததில்லை. பள்ளியிலே தமிழை முறையாகப் பயின்றவனல்ல வாதலால், கவிதை நடையிலுள்ள தமிழ் இலக்கிய நூல்களை அணுகவும் அஞ்சினேன். புராணச் சொற் பொழிவுகளைக் கேட்பதிலே எனக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அப்படிப்பட்ட சொற்பொழிவுகளைக் கேட்க மைல் கணக்கில் நெடுந்தொலைவுக்கு நடந்து சென்றதும் உண்டு.

ஸோக்ரதர் பற்றியும், மார்க்க அரேலியர் பற்றியும் நான் தெரிந்து வைத்திருக்கவில்லை. அவர்களைப் பற்றி

ராஜாஜி நூல் எழுதியிருக்கிறார் என்றறிந்ததால், அந்த நூல்களைப் படிக்க விரும்பினேன். அதுவும் இரவலாக வாங்கித்தான்! விலை கொடுத்து வாங்க வசதி ஏது? முதலில் படித்தது ஸோக்ரதர் நூலைத்தான். அந்த நூலை ராஜாஜி எழுதத் தொடங்கியது, அரச நிந்தனைப் பேச்சுக்காக 1920 - இல் மூன்று மாதத் தண்டனை பெற்று வேலூர் சிறையில் அடைபட்டிருந்த போதாகும்.

தமிழ்நாட்டுத் தலைவர்களிலே திலகர் சகாப்தத்தில் முதன் முதலில் கடுந்தண்டனை பெற்றுச் சிறை புகுந்த பெருமை வ.உ. சிதம்பரனாருக்கு உண்டு. அதுபோல, 1919 இல் தோன்றிய காந்தி சகாப்தத்திலே முதன் முதலில் சிறை புகுந்த தமிழர் எனது நினைவிலுள்ளபடி ராஜாஜிதான்.

வேலூர் சிறையில் தாம் எழுதிய நாட் குறிப்பிலே, ஸோக்ரதர் பற்றித் தாம் எழுதத் தொடங்கியிருப்பதாக அவர் தகவல் தந்திருக்கிறார். அந்த நாட்குறிப்புத் தொகுப்பு ''சிறையில் தவம்' என்னும் பெயரில் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

சாக்கிரட்டீஸ் என்னும் பெயருடைய கிரேக்க நாட்டு ஞானியைத்தான் தமிழில் ஸோக்ரதர் என்று ராஜாஜி திருத்தியிருக்கிறார். சாக்கிரட்டீசிடம் அப்போது எனக்குக் கவர்ச்சி இருந்ததில்லையென்றாலும், ராஜாஜி எழுதி யிருக்கிறார் என்பதற்காக அவரை அணுகினேன்.

ராஜாஜியின் நூலை நான் படிக்கத் தொடங்கியதற் கான மற்றொரு காரணத்தையும் இங்கு சொல்லியாக வேண்டும். ராஜாஜியின் ஸோக்ரதர் நூலுக்கு எனது வணக்கத்திற்குரிய பெரியவராக நான் கருதி வந்த திரு.வி. கலியாணசுந்தரனார் அணிந்துரை கொடுத்துள்ளார். அந்த அணிந்துரையைப் படித்துவிட்டுத்தான் நூலுக்குள்

புகுந்தேன். நூலை எழுதிய ஆசிரியரின் முன்னுரையை யோ, அதற்கு அறிஞர் பெருமகனார் ஒருவர் தந்துள்ள அணிந்துரையையோ படிக்காமலே நூலுக்குள் புகுவோரும் உண்டுதானே! அந்தத் தவறை நான் எப்போதும் செய்ததில்லை.

## திரு.வி.கவின் அணிந்துரை

அந்த நாளிலே திரு.வி.க. வின் தமிழ் நடையைக் கொஞ்சம் கஷ்டப்பட்டுப் படித்துத்தான் நான் பொருள் உணர வேண்டியவனாக இருந்தேன் என்றாலும், ராஜாஜி யிடமும் திரு.வி.க. விடமும் எனக்கு இருந்த பற்றுதல் - ஏன், பக்தி காரணமாக, நூலுக்குள் புகுவதற்கு முன்பே ராஜாஜிபற்றி திரு.வி.க என்ன சொல்கிறார் என்பதை அறிந்து கொள்ள அணிந்துரையைப் படித்தேன். இங்கு அவ்வணிந்துரையை அப்படியே தருகிறேன்.

''உயிர்கள் துன்பத்தில் வெறுப்பும் இன்பத்தில் விருப்புங் கொள்வதைக் காண்கிறோம். இதனால் உயிர்களின் உடைமை இன்பம் என்பது ஏற்படுகிறது. ஆனால், துன்பத்தை வெறுப்பதால் துன்பம் நீங்காது; இன்பத்தை விரும்புவதால் இன்பம் விளையாது. துன்பம் நீங்கினால் இன்பம் தானே விளையும். ஆதலால் துன்ப நீக்கத்துக்கு முயல்வதே மக்கள் கடமை.

''ஒரு பொருள் நாடி ஆராயுங்காலத்து அது விளக்கமுறாதபோது துன்பமும், விளக்கமுறும்போது இன்பமும் நிகழ்தல் இயல்பு. பொருள் விளக்கமுறாதவாறு அதை மறைப்பது அறியாமை. பொருளை விளக்க முறுத்துவது அறிவு. எனவே துன்பத்துக்குக் காரணம் அறியாமை என்பதும், இன்பத்துக்குக் காரணம் அறிவு என்பதும் பெறப்படுகின்றன.

''துன்பத்துக்குக் காரணமான அறியாமை, உலகைத் தன் வசப்படுத்தி, அதை அலைத்து வருவதை என்னென்று கூறுவது? அறியாமைக்குள்ள ஆற்றல் அளப்பரிது! அது பொருளல்லவற்றைப் பொருளாகக் காட்டுகிறது; செயற்கைத் துன்பத்தை இயற்கையின்பமாகப் புலப் படுத்துகிறது; முனைப்பு அவா பொறாமை சினம் முதலிய விதம் விதமான நஞ்சுகளால் மனிதனை மயக்கி, அவனை இரக்கமில்லா அரக்கனாக்குகிறது. மனிதனைத் தேகாத்ம வாதியாக்கி அவனுக்கு அச்சமூட்டுவது எது? மரணத்துக்கு அவனை நடுக்குறச் செய்வது எது? அவனைக் கோல் தாங்கச் செய்வது எது? அறியாமையன்றோ?

''அறியாமை முதலாளியாய், அரசாங்கமாய், துப்பாக்கி பீரங்கியாய், வெடிக்குண்டாய், வேறு பல கொலைக்கருவிகளாய் உலகத்தை ஆண்டு, மனிதன் சுயராஜ்ஜியத்தைக் கொள்ளை கொள்கிறது; கடவுள் ஆணைக்கு மாறாக ஒரு நாட்டை இன்னொரு நாடு ஆளச் செய்கிறது; ஆண்டவன் பிள்ளைகளாகிய மக்களுக்குள் பலவித வேற்றுமைகளை உண்டு பண்ணி, ஒரு கூட்டத்தாரைக் கொல்ல இன்னொரு கூட்டத்தாரை ஏவுகிறது. அறியாமை படிப்பாய், பட்டமாய், உத்தியோக மாய், சட்டமாய், வக்கீலாய் உலகை இடர்ப்படுத்துகிறது. கல்வியாளரும், கவிராயரும், சாஸ்திரிகளும் அறியாமை வழி உழல்கின்றாரென்றால், அறியாமையின் ஆற்றலை என்னென்றுரைப்பது? ஆ! ஆ! அறியாமைக்கு உலகம் எவ்வாறு இரையாகிறது! கொடுமை! கொடுமை!

''அறியாமைக்கு இவ்வளவு ஆற்றலுண்டா என்று எவரும் மலைவுறலாகாது. அறிவாற்றலின் முன்னர் அறியாமையின் ஆற்றல் போலியாக முடியும்; ஒளிமுன்னே

இருள் நிற்குமோ? மெய்யறிவின் முன்னே அறியாமை என்ன செய்யும்? மெய்யறிவு செம்பொருள் இன்னது என்று காட்டும்; அது மனிதன் உண்மை நிலையை உணர்த்தும். அதன் முன்னே பொறுமையும் அன்பும், அருளும் அரும்பும்; ஆன்ம சக்தி உதயமாகும். மெய்யறிவுடையான் மரணத்துக்கு நடுக்கமுறான்; அச்சத்தால் கோல் தாங்க ஒருப்படான்; ஆயுதங்களுக்கு அஞ்சான்; அவன் எல்லா உயிரையும் தன்னுயிர்போல் எண்ணுவான்; பிற உயிர் வருத்தத்தைத் தன்னுயிர் வருத்தம்போலக் கருதுவான்; மறந்தும் பிறர்க்குக் கேடு சூழான்; தான் வருந்தியாவது மற்றவர்க்கு நலஞ் செய்வதிலேயே அவன் கண்ணுங் கருத்துமாயிருப்பான். தன்னை எரிக்க வருவோரிடத்திலும் கொல்ல வருவோரிடத்திலும் பகைமை பாராட்டாது, அவர் விருப்பப்படி தனக்கு இடர் செய்யவும் உடன்படுவான்; அவர்க்கு இன்னா செய்யக் கனவிலும் மறந்தும் நினையான்; அவரிடத்திலும் அன்பு காட்டுவான். மெய்யறிவு பெற்றோன் பெருமையே பெருமை!

''மெய்யறிவுடையோர் பேச்சிலும் சொல்லிலும் பொய்யறிவுடையோர் (அறியாமையுடையோர்) பொறாமை கொண்டு அவரைப் பழித்தலுமுண்டு; ஒறுத்தலுமுண்டு. அன்னார் எவர் பழித்தலையும் ஒறுத்தலையும் பொருட்படுத்துவதில்லை. பிரகலாதன், வசிஷ்டன், ஸோக்ரதர், கிறிஸ்து, திருநாவுக்கரசு, மெய்ப்பொருள் முதலிய பெரியோர் வரலாறுகள் மெய்யறிவின் வெற்றியை இனிது விளக்கும். நம்மெதிரிலேயே மெய்யறிவு பெற்ற சத்தியாக்கிரகியாகிய காந்தியடிகள் சிறையிலுறைவது எனது கூற்றை வலியுறுத்தும்.

''மருளைப் பெருக்கும் அறியாமையை ஒழிப்பதற்கும், அருளைப் பெருக்கும் மெய்யறிவைப் பெறு

வதற்கும் வழி யாது? அவ்வழியை அறிவுறுத்திய பெரியோர் பலர். அவருள் ஒருவர் கிரீஸ் தேசத்து ஸோக்ரதர் என்பவர். அன்னார் மக்கட்கு மெய்யறிவைத் தாங் கண்டவாறு விளங்கப் போதித்து வந்தது காரணமாக, அவர் தேசத்துப் பெரும்பான்மையோர் சினத்துக்கு ஆளாகி, இறுதியில் மரண தண்டனை பெற்றார். அதைப்பற்றி விவரித்துக் கூறும் நூலே இந்நூல்.

''ஸோக்ரதர் கிறிஸ்துவுக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னே கிரீஸ் தேசத்தில் பிறந்தவர். அவர் பல அருஞ் செயல்கள் செய்தார்; பல போர் புரிந்தார். அவை யாவும் அவரைப் பெரியராக்கவில்லை. பின்னை அவரைப் பெரியராக்கியது எது? அன்னார், தெல்பி சுவாமி ''ஸோக்ரதரைவிட ஞானியில்லை'' என்று கூறியதை சிந்தித்துச் சிந்தித்து ''நான் எனது அறியாமையை நன்கு உணர்ந்திருக்கிறேனாதலால் தெல்பி சுவாமி என்னை ஞானியென்று கூறிற்று'' என்ற முடிவு பெற்று, அறியாமையை உணர்வது ஞானமென்றும், அறியாமையை அறிவாக் கொண்டு இறுமாந்து கிடப்பது அஞ்ஞான மென்றும் போதித்துவர, ஆங்கிருந்த கல்வியாளர்கள், கவிராயர்கள், சாஸ்திரிகள், ''ஸோக்ரதன் நம்மையெல்லாம் அஞ்ஞானிகள் என்கிறான்'' என்று அவரைக் காய்ந்து, நாடகக்காரர் வாயிலாக அவர்மீது பலவித பழிகளைப் பரப்பி, அவர் மீது வழக்குத் தொடுத்து, அவர்க்கு மரண தண்டனை விதிக்க, அதை அகமலர்ச்சியோடு ஏற்றுக் கொண்ட அருஞ்செயல் அவரைப் பெரியராக்கிற்று.

''ஸோக்ரதர் மெய்யறிவு பெறுதற்கு அறிவுறுத்திய வழி, ஒருவன் தன் அறியாமையை உணர்வது என்பது. மெய்யறிவுடையார் இலக்கணங்கள் அவர்பால் அடங்கிக் கிடப்பது நீதி மன்றத்தில் அவர் பொழிந்த சொற்

பெருக்காலும், க்ருதரோடு அவர் சம்பாஷணையாகப் பொழிந்த சொல்லமிழ்தத்தாலும் நனி விளங்கும்.

''இந்நூலை ஆங்கிலத்தினின்றும் தமிழில் பெயர்த்தெழுதிய ஆசிரியர், திருமிகு சேலம் - சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார். இப்பெரியார், மக்கள் ஆன்மாவை மறந்து, சத்தியம் தவறி, அறியாமையால் பொருளல்லவற்றைப் பொருளாகக் கொண்டு, பாழுக்கு உழைத்து வரும் வேளையில், அன்னார்க்கு அறியாமையை உணர்த்துமாறு ஒத்துழையாமை தோன்றி இயங்கும் நேரத்தில், தாம் அவ்வியக்கத்தில் சேர்ந்து சத்தியம் காத்தற் பொருட்டுச் சிறைக் கோட்டம் நண்ணிய காலத்தில், அறியாமை உணர்ந்து மெய்யறிவு பெற்ற ஒரு சத்தியாக்கிரகியின் மரண தண்டனை வரலாற்றை எழுதியது போற்றத் தக்கதே.

''ஸோக்ரதர் வரலாற்றை ஸோக்ரதர் போன்ற ஒருவர் எழுதுவதே சிறப்பு. ஏனையோர் சொல்லில், சொல்லணியில் அறிவைச் செலுத்தி எழுதுவர். நமது ஆச்சாரியார் தமது உடல் சிறைப்பட்டுத் தமது உயிர் சுதந்திர இன்பத்தில் தோய்ந்து கிடந்தபோது இந்நூலை மொழி பெயர்த்திருக்கிறார். இந்நூலை வாசிக்கும்போது கிரீஸ் தேசமும், நியாய மன்றமும், ஸோக்ரதர் பிரசங்கமும், சிறைச்சாலையும், அவர் போதனையும், சகித்தற்கரிய அவரது மரணக் காட்சியும் புலனாகி மனதைக் கவர்ந்து செய்கையறச் செய்கின்றன. இது நூலாசிரியரின் மனோநிலையைப் புலப்படுத்துகிறது. கசிந்து கசிந்துருகிப் பாடினோர் பாடலை ஓதுவோரும் கசிந்து கசிந்து உருகுதல் இயல்பு. இதை எழுதியபோது ஆசிரியர் இராசகோபாலர் தம்மை மறந்து ஸோக்ரதராயிருந்தார் என்பது இந்நூலை வாசிக்கும் சத்தியாக்கிரகிகளுக்கு இனிது புலனாகும்.

இந்நூலை ஸோக்ரதர் போன்ற ஒருவர் எழுத நேர்ந்ததைக் குறித்துத் தமிழ்நாடு கழிபேருவகையுறும் என்பதில் ஐயமில்லை.

''இந்நூற்கண் போந்துள்ள பொருள்கள் யாவும் மெய்யறிவையும் சத்தியாக்கிரகத்தையும் ஆன்ம சக்தியையும் குறிக்கொண்டு நிற்கின்றன. தேசபக்தியைப் பற்றியும் ஆன்மாவின் உண்மையைப் பற்றியும் ஸோக்ரதர் மொழிந்துள்ள அமுத வாசகங்கள் அறிஞர்க்குப் பெரு விருந்தாகும். ஸோக்ரதர் நறுமொழிகளுள் சிலவற்றை இந்நூலினின்றுந் தாலிபுலாக நியாயம் பற்றி ஈண்டு எடுத்துக் காட்டுகிறேன். அவை வருமாறு:-

''என் பக்ஷத்தில் தர்மமும் நியாயமும் இருப்பதாக நான் நம்பியிருப்பதால் அழகிய பதங்களைத் தேட நான் முயலவில்லை. என் மனமும் வாக்கும் ஒன்றுபடச் சமயத்தில் தோன்றுகிறவாறு பேசுகிறேன்.

''தங்கட்கு அறிவில்லை என்று நினைக்கும் பாமர ஜனங்கள்தான் ஞானம் ஏற்படக்கூடிய நிலையில், கொஞ்சமாவது இருப்பதாகவும் நான் கண்டேன்.

''மனிதனாய்ப் பிறந்தவன் ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யப் புகும்போது, அது தர்மமா அதர்மமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டுமேயொழிய, அதனால் தன் பிராணனுக்கு ஏதாவது அபாயம் வருமா வராதா என்றாவது வேறு விஷயத்தையாவது மனதில் எண்ணவே கூடாது.

''அஞ்ஞானத்தைப் பூரண ஞானமாக நினைப்பதே உலகத்தாருடைய பெருங்குற்றம். மரணத்தைக் கண்டு பயந்தேனானால் நானும் அந்தப் பெருங்குற்றத்திற்கு

உள்ளாவேன். மரணத்தை நாம் ஏன் துன்பமாகக் கருத வேண்டும்?

''நீங்கள் இடும் ஆணையைவிடக் கடவுள் இட்ட ஆணை பெரிது, எனக்கு உயிரும் சக்தியுமிருக்கும் வரையில் நான் மெய்யறிவைத் தேடுவதில் வாழ்நாளைக் கழிப்பேன்.

''முதலில் ஆத்மாவைக் கவனியுங்கள்; அதைச் சுத்தப் படுத்திக்கொண்டு அதற்குப் பலம், பக்குவம் உண்டாக்கிக் கொண்ட பிறகு உங்கள் தேகம் செல்வம் இவைகளைக் கவனியுங்கள்; செல்வத்திலிருந்து ஆத்ம சுத்தியும் தர்மமும் உண்டாகா.''

''ஒழுக்கங் கெட்டு வாழும் ஜனங்கள் அறிவுள்ளவர் களுடைய பழியிலிருந்து தப்புவதற்கு வழி, அறிவுள்ளவர் களைக் கொன்றால் உண்டாகாது. தர்ம மார்க்கத்தையறிந்து நல்வழியில் செல்வதே வழியாகும்.

''ஒருவன் இறந்தால் இரண்டில் ஒன்று ஆகவேண்டும். ஆத்மாவும் உடலுடன் அழிந்துபோய் அறிவு இன்பம், துக்கம் ஒன்றுமில்லாமல் நாஸ்தியாய்ப் போக வேண்டும். இப்படியாயின் மரணத்தை ஏன் வெறுக்க வேண்டும்? இல்லையாயின் சநாதனமாய் நாம் நம்பி வந்தபடி மரணம் வாய்த்த காலத்தில் ஆத்மாவானது வேறு உலகத்திற்குச் செல்லும். இதுவரையில் இறந்த பெரியோர்கள் எல்லாரும் இருக்குமிடத்திற்கு நாம் போவதானால் அதை ஏன் வெறுக்க வேண்டும்?

''ஞானமடைந்தவன் ஒவ்வொருவனும் இந்த உடலைவிட்டுப் போகவே விரும்புவான். ஆனால்,

பலவந்தமாய் உயிர் மாய்த்துக் கொள்ளமாட்டான். அது தவறாகும்.

''ஞானியின் மனம் உடலைப் பொருந்தினது அன்று. உயிருடன் இருந்தாலும் சாத்தியமான வரையில் உடலையும் அதன்வழிச் சேரும் சிற்றின்பங்களையும் மனதினின்று நீக்கி ஆத்ம விஷயங்களிலேயே அவன் மனதைச் செலுத்துவானல்லவா?

''அன்பர் இராசகோபாலாச்சாரியார் இந்நூலின் ஊடே ஊடே பொன் சுவரில் மணியிழைத்தாற்போல வரைந்துள்ள சில அரிய கருத்துக்களும் எடுத்துக் காட்டியுள்ள ஆன்றோர் மொழிகளும் பொன்னேபோல் போற்றத்தக்கன. ''உண்மையான துறவுக்கு மழித்தலும் நீட்டலும் வேண்டா'' என்ற வாக்கியமும், ''சாதாரணமாகச் சாதுக்களும் ஞானிகளும் வீரமற்றவர்களென்று ஜனங்கள் நினைப்பதுஞ் சொல்வதுமுண்டு. அவ்வாறு நினைப்பதும் சொல்வதும் தவறு...'' என வரும் வாக்கியங்களும், ஸோக்ரதர் தேசத்தார் சட்டத்தை மீறலாகாது என்பதை வலியுறுத்திப் பேசுமிடத்தில் நமது ஆச்சாரியார் பொறித்துள்ள குறிப்பும், ''கிரேக்க தேசத்துக்குப் பாரததேச ரிஷிகள் இயற்றிய நூல்களும் அவைகளால் உண்டான ஞானமும் சிறிது பாகம் போய்ச் சேர்ந்தேயிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை'' என்ற அபிப்பிராயமும் கவனிக்கற்பாலன.

''அறிஞர் இராசகோபாலாச்சாரியார் முதல்முதல் தமிழில் எழுதிய நூல் இதுவே. மிக எளிய நடையில் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பயன்படுமாறு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலை வாசிக்க வாசிக்க இன்பம் பெருகிக் கொண்டே போகும். இந்நூலை

உண்மைப் பொருள் வேட்கை கொண்டு வாசிப்போர், அறியாமை உணர்ந்து மெய்யறிவு பெற்றுத் துன்பம் நீங்கி இன்பம் பெற்று ஆன்ம சக்தியுடையராய் வாழ்வர் என்பதில் ஐயமில்லை.

''வெளியிலுள்ளபோதும் பிறர்க்குழைத்து, சிறையிலுள்ளபோதும் பிறர்க்குப் பயன்படுமாறு இந் நூலை எழுதுவதில் உழைத்துப் பரோபகார சிந்தையை வளர்த்து வரும் திருமிகு சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார்க்குத் தமிழ் உலகம் பெரிதும் கடமைப்படுதல் வேண்டும். இது போன்ற பன்னூல்களைத் தமிழில் எழுதித் தமிழ் நாட்டுக்கு அன்னார் உதவ, அவர்க்கு நீண்ட நாளும் நோயற்ற யாக்கையும் ஆண்டவன் அருள் செய்வானாக!''

## ஆன்ம ஞானியாகவே எனக்கு அறிமுகமானார்!

ராஜாஜி எழுதி வெளியான முதல் நூல் 'ஸோக்ரதர்' தான் என நினைக்கவேண்டியிருக்கிறது. இதனை அவர் வெளியிட்டது 1922 -இல். திரு.வி.கவின் குடும்பத்திற்குச் சொந்தமான இராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்தில் இந்நூல் அச்சிடப்பட்டிருக்கிறது. 79 பக்கங்கள் கொண்ட முதல் பதிப்புக்கு விலை எட்டு அணா (50 காசு) வைக்கப் பட்டிருக்கிறது.

தமது நூலில் ஸோக்ரதர் வரலாறு முழுவதையும் ராஜாஜி கூறவில்லை. நீதிமன்றத்தில் அவர் தண்டனை பெறுவதற்குக் காரணமாக இருந்த சொற்பொழிவில் மூன்று பகுதிகளையும், நீதிமன்றத்தில் அவர் கொடுத்த வாக்குமூலத்தையும், மரண தண்டனை பெற்றுச் சிறையில் இருந்தபோது 'க்ருதர்' என்ற தம் நண்பரோடு அவர் நிகழ்த்திய உரையாடலையும் தொகுத்துக் கொடுத் திருக்கிறார்.

### முதல் சத்தியாக்கிரகி

இந்நூலின் தொடக்கத்திலும் இடையிடையேயும் முடிவிலும் சாக்கிரட்டீஸைப் பற்றித் தம்முடைய கருத்துக் களை சுருக்கமாகவும், சுவையாகவும் தந்திருக்கிறார்.

நூலின் முதற்பதிப்பு 'ஸோக்ரதர் அல்லது சத்தியாக் கிரக விஜயம்' என்ற பெயருடன் வெளியாகியிருக்கிறது. காந்தியடிகள் தமது சத்தியாக்கிரக நெறியை இந்திய அரசியலில் புகுத்திக் கொண்டிருந்த நேரத்திலே எழுதப் பட்ட நூல் இது. அதனாலோ என்னவோ, காந்தியடி களைப் போன்ற ஒரு சத்தியாக்கிரகியாகவே ராஜாஜிக்கு ஸோக்ரதர் காட்சியளித்திருக்கிறார். காலத்தால் காந்தியடி களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவரான தால், சத்தியாக்கிரக நெறியானது அவர் மூலம்தான் மனித சமுதாயத்தின் மத்தியில் விஜயம் செய்திருக்கிறது என்று ராஜாஜி கருதியிருக்கிறார். சத்தியாக்கிரக நெறிக்கு காந்திஜிக்கு முன்னோடியாக ஸோக்ரதரைக் கருதுகிறார்.

ஸோக்ரதர் வாழ்விலே அவர் மரண தண்டனை பெற்ற கட்டத்தை மட்டுமே தமது நூலின் மூலம் ராஜாஜி தமிழருக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறா ராதலால், நூலின் முடிவிலே ''ஸோக்ரதர் மரண வரலாறு முற்றிற்று'' என்று பொறித்திருக்கிறார்.

## ராஜாஜியின் நூன்முகம்

நூலின் தொடக்கத்திலே திரு.வி.க.வின் அணிந்துரை யை 10 பக்கங்களில் தந்துவிட்டு, நூலின் நாயகரான ஸோக்ரதர் பற்றிய தமது கருத்தை ''நூன்முகம்'' என்னும் தலைப்பில் 2 பக்க அளவில் எழுதி, அதன் இறுதியில் 'ச.இரா.' என்று கையொப்பமிட்டிருக்கிறார்.

இந்நூலின் பிந்திய பதிப்புகள் முதல் பதிப்பிலிருந்து பலவகையில் மாறுபட்டவையாக இருக்கின்றன. முதல் பதிப்பிற்குரிய பெயரில் காணப்படும். ''சத்தியாக்கிரக விஜயம்'' என்னும் வாசகம் விடப்பட்டிருக்கிறது. நூன்முகத்தின் முடிவில் முதல் பதிப்பில் 'ச.இரா.' என்று

மட்டுமே ராஜாஜி கையொப்பமிட்டிருக்க, அது ''சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி'' என்று நீட்டப் பட்டிருக்கிறது. முதல் பதிப்பில் காணப்படும் திரு.வி.க. தந்த முகவுரை பிந்திய பதிப்புகளில் காணப்படவில்லை. இந்த மாறுதல்கள் ராஜாஜியின் பண்புக்கு மதிப்புத் தருவனவாக இல்லை. 'நூன்முகம்' பகுதியிலே ராஜாஜி கூறுவது வருமாறு:

''சத்திய நெறியில் நின்று அச்சம் என்பது சிறிது மில்லாமல் அதர்மத்தைக் கண்டவிடத்து அதனுடன் போர் புரிந்து நிற்கிறவன் சத்தியாக்கிரகி எனப்படுவன். அப்போரின் முறை, பிறருடைய அசத்தியம், அதர்மம், ஹிம்சை இவைகளை வெல்ல வேண்டித் தானும் அசத்தியம், அதர்மம், ஹிம்சை இவைகளை எவ்விதத் திலும் செய்யாமலும், பிறர் சினம், பகை, தீமை இவை களைப் போக்கத்தான் பொறுமை, அன்பு, நன்மை இவை களைச் செய்தலும், பழிக்குப்பழி வாங்கும் உலக வழக்கை யொழித்து,

''இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.''

என்ற திருக்குறள் வாக்கியத்தின் வழியில் நிற்றலும், அநீதி செய்வாருடைய வலிமையைக் கண்டு அஞ்சாமல் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அவருடைய அநீதிக்கு இரையாக்கி எதிர்நின்று மற்றவர்களைக் காத்தலுமாம்.

''இந்நெறியில் வாழ்பவனுக்குச் சத்தியாக்கிரகி என்னும் புதிய பெயர் காந்தி மகாத்மா இட்டாரானாலும், இது புதிய கோட்பாடன்று; பழைய தர்மமே. ஸநாதன மான ஆரிய தர்மமும், கௌதம சாக்கிய முனிவரான புத்தர்

உலகுக்கு உபதேசித்ததும், ஏசுநாதர் மீண்டும் உலகத்திற்கு எடுத்துக் காட்டியதும் இந்தத் தர்மமேயாகும்.

''உலகத்தில் சிறந்தோங்கி விளங்கின சத்தியாக்கிரகிகள் நால்வர். அவர் புத்தர், ஸோக்ரதர், ஏசுநாதர், காந்தியடிகள் என்பவர். இவர்களில் பாரத தேசத்திலல்லாமல் அன்னிய நாட்டில் அவதரித்தவரும், தமிழ் மக்களால் சாதாரணமாய் அறியப்படாதவருமான ஸோக்ரதர் மரண வரலாற்றை ஒருவாறு தமிழ் மக்கள் படித்தறியும் பொருட்டுப் பிரசுரிக்கப்பட்ட இச்சிறு புத்தகத்தை வேலூர் சிறைச்சாலையில் என்னை ஆங்கில அரசாங்கத்தார் தனி அறையில் அடைத்து வைத்திருந்த காலத்தில், பொழுதுபோக்க எழுதி முடித்தேன். நூலிலுள்ள பல பிழைகளைக் கருதாமல் இம்மகானுடைய சரித்திரத்தில் விளங்கும் தத்துவங்களை உட்கொள்ளுமாறு நேயர்களை வேண்டுகிறேன்.- ச.இரா.''

## ராஜாஜி - திரு.வி.க. தொடர்பு

தாம் எழுதி வெளியிட்ட முதல் நூலுக்கு திரு.வி.க.விடம் முகவுரை பெற ராஜாஜி விரும்பியது, அவர்கள் இருவரிடையில் அந்நாளிலேயே நிலவிய பரஸ்பர மதிப்பை நன்கு புலப்படுத்துகின்றது. நூல் வெளியான 1922 -ஆம் ஆண்டிலே, இருவருமே அநேகமாக அரசியலுக்குப் ''புது முகங்கள்!''

1917 -இல் ''ஹோம்ரூல்'' இயக்கத்தின் மூலம் ராஜாஜியும், 1919 -இல் அதே இயக்கத்தின் மூலம் திரு.வி.க.வும் தேசிய வாழ்வில் புகுந்தனர். அதனால், அவர்களுடைய நட்பு அப்போதுதான் ஆரம்பமாகி இருந்தது என்று கருத வேண்டியிருக்கிறது. அப்படியிருந்தும், தமது முதல் நூலுக்கு திரு.வி.கவிடமிருந்து

முகவுரை பெற ராஜாஜி விரும்பியது, நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கிருந்த தீர்க்கதரிசனத்தைக் காட்டுகிறது.

பிற்காலத்தில் எத்தனையோ அரிய நூல்களை எழுதி வெளியிட்டாரென்றாலும், நானறிந்தவரை அவர் பிறரிடம் அணிந்துரை பெற்றது ஸோக்ரதர் நூலுக்குத்தான். வேறு எந்த நூலுக்கும் எவரிடமும் ராஜாஜி அணிந்துரை பெற்றதில்லை.

ராஜாஜியின் நூலுக்கு முகவுரை தந்தபின் சரியாக முப்பதாண்டுக் காலம் திரு.வி.க. வாழ்ந்திருக்கிறார். அந்த நீண்டகால வாழ்க்கை மாசு மருவற்றது. ராஜாஜிக்கு முகவுரை தந்தபோது, அவர் திரு.வி. கலியாணசுந்தர முதலியார்தான். அதன்பின்னர், ''தமிழ்த் தென்றல்'', ''இராயப்பேட்டை முனிவர்'', ''சாது முதலியார்'' என்றெல்லாம் பட்டப் பெயர்களைப் பெற்றார் திரு.வி.க. தொழிற்சங்க இயக்கத்திலே பெசன்ட் அம்மையார், வாடியா, தோழர் சிங்காரவேலர் ஆகிய பெரியோர்களோடு தோழமை கொண்டு தொண்டாற்றினார். திலகர் பெருமானும் காந்தியடிகளும் தமிழகத்திற்கு வருகை தந்த போது, அரசியல் மேடைகளிலே அவர்களின் ஆங்கிலப் பேச்சுக்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பேற்றினையும் பெற்றார்.

இப்படி, பிற்காலத்தில் புகழ் ஏணியில் படிப்படியாக ஏறி, அதன் உச்சிக்கே சென்றவர் திரு.வி.க. அப்படிப்பட்டவரை தகுதி தெரிந்து தமது நண்பராக மட்டுமல்லாமல், தமது நூலுக்கு முகவுரை தரும் ஆசானாகவும் கருதினார் ராஜாஜி. நூலுக்கு முகவுரை தருவார்க்கு ''நன்னூல்'' இலக்கணம் கூறுகின்றது.

''தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் றகுமுறை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே.''

*(சூத். 51)*

திரு.வி.க. ராஜாஜியின் மாணவரோ, அவருக்குத் தமிழ் கற்பித்த ஆசானோ அல்ல. இருவரும் மொழிப் புலமையிலே ஒருகலாசாலை மாணவர்களும் அல்லர். ஆனால் தமிழில் அவருக்கிருந்த பெரும் புலமை காரணமாக, அவரைத் தமது மானசீக ஆசானாகக் கருதி, அவரிடம் முகவுரை பெற்றார் ராஜாஜி.

**திருவடிக்கு அஞ்சலி!**

1953 செப்டம்பர் 17 -இல் திரு.வி.க. ஆவி நீத்தார். மறுநாள் காலை அந்த மகானுக்கு அஞ்சலி செலுத்த ராஜாஜி பூமாலையும் கையுமாக அந்தப் புனிதரின் இல்லத்திற்கு வந்தார். அப்போது நானும் அங்கு இருந்தேன். சாது முனிவரின் பிரேதத்திற்கு மாலை அணி வித்துவிட்டு, அந்தப் பிரேதத்தை மும்முறை வலம் வந்தார். இறுதிச்சுற்று முடிந்தபோது, திரு.வி.க. வின் திருவடிகளைத் தம் இரு கைகளாலும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார். அப்போது அங்கிருந்தவர்கள், அந்தக் காட்சியைக் கண்டு மன முருகினர். திரு.வி.க.வின் மறைவினால் அவர்களின் கண்களில் வடிந்த துக்கக் கண்ணீர், ராஜாஜி காட்டி மரியாதை காரணமாக ஆனந்தக் கண்ணீராக மாறியது. எனது நிலையும் அதுதான்.

வயதிலே ராஜாஜிக்கு ஐந்து ஆண்டு இளையவர் திரு.வி.க. என்பதை நான் இங்கு நினைவூட்டியாக வேண்டும். தமிழிடத்துத் தமக்கிருந்த ஆழ்ந்த பற்றுதல்

காரணமாக, அத்தமிழின் வடிவமாகத் திகழ்ந்த திரு.வி.க.வை ராஜாஜி வழிபட்டிருக்க வேண்டும். ரசிகமணி டி.கே.சி.யிடம் அவருக்கிருந்த பற்றும் இது போன்றதுதான்.

எனது வாழ்நாளிலே அத்தகைய பெரியோர்களுடன் எல்லாம் தொடர்பு கொண்டிருந்ததை இன்று நினைத் தாலும் என் மெய் சிலிர்க்கின்றது. வளரும் சமுதாயத்திலே யும் அத்தகைய பெரியோர்கள் தோன்றுவதைப் பார்த்து மகிழ வேண்டும் என்பது என் பேராசை. காலம் கை கொடுக்குமா? கடவுள் தமிழச் சாதியின் பேரில் கருணை காட்டுவார் என்று நம்புவோமாக!

## அடையாளங் காட்டினார்

எனது நினைவிலுள்ளபடி, நான் ராஜாஜி எழுதிய ஸோக்ரதர் நூலைப் படித்தது, 1930-ஆம் ஆண்டின் ஆரம்பத் திலாகும். பாரதப் பெருநாடு தனது விடுதலைக்காக ஏகாதி பத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபடத் தயாராகிக் கொண் டிருந்த நேரம் அது. வடக்கில் தண்டி நோக்கி யாத்திரை தொடங்கக் காந்தியடிகளும், தெற்கே வேதாரண்யத்தை நோக்கி நடைபோட ராஜாஜியும் படை திரட்டிக் கொண்டி ருந்தனர். குமரி முதல் காஷ்மீரம் வரை விடுதலை உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருந்த நேரத்திலே, நான் ஸோக்ரதரைப் படித்தேன். அதனால், ராஜாஜியிடம் தனிப்பற்றும், அவரால் முதல் சத்தியாக்கிரகியாக அறி முகப்படுத்தப்பட்ட ஸோக்ரதரிடம் ஆழ்ந்த பக்தியும் ஏற்பட்டன. ராஜாஜியின் நூலுக்கு முகவுரை வழங்கிய திரு.வி.க., பிற்காலத்தில் சைவ சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசரையும் சத்தியாக்கிரகியாகவே அறிமுகப்படுத்தினார். அவர் தமது அணிந்துரையிலே, ராஜாஜியையும் ஒரு ஸோக்ரதராகவே தாம் கருதுவதாகக்

குறிப்பிட்டது ரொம்பவும் பொருத்தமானது என்பதைக் காலம் காட்டிவிட்டது. ஸோக்ரதர் நூல் வெளியான காலத்திலே, ராஜாஜி அரசியல் தலைவராக மட்டுமே மக்களால் கருதப்பட்டார். திரு.வி.க.வோ, வருவதுணரும் தமது கூர்த்த மதியால் ''ஸோக்ரதருக்கு நிகரான ஆன்ம ஞானி'' என்று சொல்லி, அவரை அடையாளம் காட்டினார்.

**ஸோக்ரதர் நாத்திகரல்ல!**

ராஜாஜி அமைத்துக்கொண்ட எளிய வாழ்க்கையானது அரசியல் ஆடம்பரங்களுக்கு அப்பாற்பட்டதாகும். அவருடைய இல்லத்திற்குச் சென்று, அவரோடு உரையாடிப் பழகிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒரு ஞானியின் தவச்சாலைக்குள் சென்று அவரது தரிசனத்தைக் காண்பதாகவே என் மனம் கருதியது.

ராஜாஜியின் நூலைப் படிப்பதற்கு முன்பு அப்பட்டமான ஒரு நாத்திகராகவே ஸோக்ரதரை நான் கருதினேன். நான் அவரை முதன்முதலில் அறிந்தது, பெரியார் ஈ.வெ.ரா. நடத்திவந்த சுயமரியாதை இயக்கத்தார் செய்த பிரசாரத்தின் மூலம்தான். அந்த இயக்கத்தின் மேடைப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் இந்து மதத்திற்கும், தெய்வ வழிபாட்டிற்காக இந்துக்கள் கடைப்பிடித்து வரும் பழக்க வழக்கங்களுக்கும் எதிர்ப்புக் காட்டுவதற்கு ஸோக்ரதரின் சரித்திரத்தையும் பயன்படுத்தி வந்தனர். அவருடைய கருத்துக்களை இங்கொன்று அங்கொன்றாக எடுத்துக்காட்டி, தங்கள் இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தி வந்தனர். இந்தப் பழக்கம் மதப் பிரசாரகர்களிடமும் உண்டு. அதனாற்றானே, ''தீண்டாமை'' என்னும் கொடுமையைக்கூட நியாயமாக்கிவிட அவர்களால் முடிந்தது.

வள்ளற் பெருமான் தெய்வத்திடம் ஆழ்ந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தார். அதிலே உறுதி காட்டி, அந்தத் தெய்வத்தின் பெயரால் இந்துக்களிடையே வளர்க்கப்பட்டு வரும் மூடநம்பிக்கைகளை வன்மையாகக் கண்டித்தார். ''கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக'' என்று அவர் பாடினார். சுயமரியாதை இயக்கத் தினரோ, இதுபோன்ற புரட்சிகரமான கருத்துக்களைத் தெய்வ நம்பிக்கைக்கு எதிராகவும் பயன்படுத்தினர். இந்த வகையைச் சேர்ந்ததுதான் ஸோக்ரதரின் கருத்துக்களை அவர்கள் பயன்படுத்தியது. ஸோக்ரதரின் முழுமையான தோற்றத்தை முதன் முதலில் ராஜாஜி எழுதிய நூலின் மூலம் அறிந்தபோது, அவரைப்பற்றி யான் கொண்டிருந்த தவறான கருத்து என்னிடமிருந்து அகன்றுவிட்டது.

## ராஜாஜியின் பார்வையில் ஸோக்ரதர்

ஸோக்ரதர் துவராடையணிந்து, மனைவாழ்க்கை துறந்து வனத்திலே தவம்செய்த துறவியல்ல. அப்படி யிருந்தும், ராஜாஜியின் பார்வையிலே அவர் ஒரு துறவி யாகவே காட்சியளித்தார். ஸோக்ரதர் நாத்திகர் அல்ல என்று ராஜாஜி கூறுகிறார், கேட்போம்:

''ஸோக்ரதரின் உண்மையான தத்துவங்களையும் தர்மோபதேசத்தையும் அரிஷ்டவாணர் சரியாய் அறிந்து கொள்ளாமல், அவரையும் புதிய நாஸ்திகத்தில் சேர்ந்த வராக மதித்து நாடகமொன்று வரைந்தார்.

''கிரேக்க மகரிஷியாகிய ஸோக்ரதர் என்பவர், தர்மத்திற்காகப் பிராணனை அர்ப்பணம் செய்த மகாத்மாக் களில் ஒருவர். அவர் பரமபதமடைந்த சரித்திரத்தைத் தமிழ்நாட்டு ஸ்திரீ புருஷர்களும் குழந்தைகளும் அறியவேண்டியது அவசியம். அவர் இப்போதைக்குச்

சுமார் இரண்டாயிரத்து நானூறு வருஷங்களுக்குமுன் கிரேக்க தேசத்தில் ஆதன்ஸ் நகரத்தில் அவதரித்தவர். அவர் தகப்பனார் ஒரு சில்பி தொழிலாளி; தாயார் ஒரு மருத்துவச்சி.

''ஸோக்ரதர் தம் உடல் பொருள், ஆவி அனைத்தையும் மெய்யறிவுக்காகத் தத்தமிட்டுத் தங்கிரக கிருத்தியத்தையும் கவனியாமல் உண்மையான துறவுபூண்டு, ஜனங்களுடன் சம்பாஷணை செய்து அதன் வாயிலாய் அவர்களுக்குத் தர்மோபதேசம் செய்வதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார்.''

இது, ஸோக்ரதரைப்பற்றி ராஜாஜி கொண்ட கருத்து, இதனை உறுதிப்படுத்துவதற்கு,

''மாத்தா னவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்த னன்பு
கொண்டு
வேர்த்தாற் குளித்துப் பசித்தாற்புசித்து விழிதுயின்று
பார்த்தா லுலகத் தவர்போலிருப்பர்பற் றற்றவரே''

என்று பட்டினத்துப் பிள்ளையார் புனைந்துள்ள செய்யுளை எடுத்துக்காட்டி, ''உண்மையான துறவுக்கு மழித்தலும் நீட்டலும் வேண்டா'' என்ற வள்ளுவர் வாக்கையும் பயன்படுத்துகிறார் ராஜாஜி.

**அனுதாப உணர்வு**

கிரேக்க ஞானியான ஸோக்ரதர் தம் நாட்டுப் பாமர மக்களை அணுகி, மத குருமார்களிடம் மறைந்து கிடக்கும் குறைபாடுகளை எடுத்துக்காட்டி, அந்த குருமார்களிடம் மக்கள் வைத்துள்ள தவறான நம்பிக்கையை அகற்றப் பிரசாரம் செய்தார். அந்தப் பிரசாரத்தைச் சகித்துக் கொள்ள முடியாத கூட்டத்தார், அந்தப் பேரறிஞரை மரண

தண்டனைக்குள்ளாக்கினர். ஸோக்ரதர் தெய்வ நம்பிக்கையையே எதிர்க்கிறார் என்ற தவறான நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தினர் மதவாதிகள். இதனாற்றான், அனுதாபத்தோடு கூடிய ஒரு பக்தி உணர்ச்சி ஸோக்ரதரிடம் ஆத்திகரான ராஜாஜிக்கு ஏற்பட்டது போலும்!

ராஜாஜி, ரோமாபுரிச் சக்கரவர்த்தியான ஆன்மஞானி மார்க்க அரேலியரின் பொன் மொழிகளையும் தொகுத்தார். இது, தேசபக்தர் பரலி சு. நெல்லையப்பர் நடத்தி வந்த ''லோகோபகாரி'' என்னும் தமிழ் வார இதழிலே, ''மார்க்க அரேலியரின் ஆத்ம சிந்தனை'' என்னும் தலைப்பில் 1928 - இல் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டது. ''மார்க்க அரேலியரின் ஆத்ம சிந்தனை பகவத் கீதைக்கு வியாக்யான நூல்'' என்கிறார் ராஜாஜி. ஆம்; கண்ணபெருமானின் அடிச்சுவட்டில் மார்க்க அரேலியரைக் காட்டுகிறார்.

மார்க்க அரேலியரின் போதனைகள் வேதாந்த ரகசியங்களாக நம் நாட்டு சமயவாதிகளால் கருதப்படுபவையாகும். உண்மையும் அதுதான். ராஜாஜி, மிகப் பெரிய தத்துவத்தையும் பழகு தமிழால் விளக்குவது என்னைப் பெரிதும் கவர்ந்தது.

**'கை விளக்கு' காட்டிய ஒளி!**

வடமொழியிலுள்ள பகவத் கீதையைப் பழகு தமிழில் மொழி பெயர்த்துத் தந்த பெருமையும் ராஜாஜிக்கு உண்டு. அதனை நான் எத்தனையோ முறை படித்துப் படித்து கீதாச்சாரியாரின் பக்தனானேன். பகவத் கீதை தமிழ் மொழி பெயர்ப்புக்குக் ''கைவிளக்கு'' என்று பெயர் தந்துள்ளார். ராஜாஜியின் நூல் கீதா வாக்கியங்களில் பொதிந்து கிடக்கும் பொருள்களைப் பளிச்செனக் காட்டுகிறது. அதற்குக் காரணம், அவர் கையாண்டுள்ள பழகு தமிழாகும்.

ராஜாஜி எழுதிய ''உபநிடதப் பலகணி'' என்னும் சிறிய நூலும், என் ஆன்மாவில் பதிந்து கிடக்கும் இருளை அகற்றப் பயன்பட்டது. வடமொழியிலுள்ள உபநிடதங் களிலே பொதிந்து கிடக்கும் கதை ரூபமான போதனை களை ராஜாஜி திரட்டியளித்தது தமிழுக்கும் வேதமொழிக் கும் அவர் ஏற்படுத்தி வைத்த நல்லுறவாகும், இந்தப் பணியைத் தொடர்ந்து வியாச பாரதத்தையும், வான்மீகி ராமாயணத்தையும் தமிழில் கொடுத்தார். இந்த இரு பெரும் காப்பியங்களை ராஜாஜிக்கு முன்பே பலர் தமிழில் தந்தனர் என்றாலும், ராஜாஜியின் நூலிலே அவருடைய வியாக்யானங்களும் ஆங்காங்கே கலந்திருத்தலால், நூலைப் படிக்கத் தொடங்கினால் முடிக்கும்வரை வேறு எதையும் நினைக்க முடிவதில்லை.

ராஜாஜியின் எளிய வாழ்க்கையும், வாய்மையோடு கூடிய வாக்குகளும், உயிர்க்குலம் அனைத்திடமும் அன்பு செலுத்திய பண்பும், லோகாயதப்படியும் உயர்வருணத்தில் பிறந்திருந்தும் தாழ்ந்த வருணத்தவரிடமும் காட்டிய அன்பும், பாரத தேசத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்த போதும் மிதிலாபுரி மன்னன் ஜனகனைப் போன்று அந்தப் பதவியிலே பற்றுக்கொள்ளாமல் ஆன்மிகத்திலே ஆழ்ந்து விளாம்பழமும் ஓடும்போல வாழ்க்கை நடத்தியதும் அவரை ஆன்ம ஞானியாகவே காணும்படிச் செய்தன. 1944 முதல் 1946 முற்பாதிக் காலம்வரை ராஜாஜியுடன் சேர்ந்து தமிழ்நாடு முழுவதும் சுற்றுலாச் செல்லும் பேற்றினைப் பெற்றிருந்தேன். அந்தக் காலங்களிலே அவரிடம் ஆன்மிகக் கருத்துக்களையே பொது விரும்பி உரை யாடினேன். அவரது தொடர்பால் பெரிதும் வாழ்வில் மட்டுமன்றி, தனி வாழ்விலும் ஒழுக்க முறையில் நடைபோடும் பேற்றினைப் பெற்றேன்.

## “நாம் முதன் முதலில் சந்தித்தது எப்போது?”

ராஜாஜியை காங்கிரஸ் மேடையின் வாயிலாக அரசியல் தலைவராகவும், அவர் எழுதிய சோக்ரதர், மார்க்க அரேலியர் என்னும் நூல்களின் வாயிலாக ஆன்ம ஞானியாகவும் நான் அறிந்து கொண்ட பின்னரும் அவரோடு தனித்துப் பழகும் வாய்ப்பினைப் பெற வில்லை. அதனைப் பெற்றது 1937 -இல்தான்.

### முதல் பிரதமர்!

1937 - இல் ஒரு இடைக்கால ஏற்பாடாக இந்தியா வில் ஆறு மாநிலங்களிலே இந்திய தேசிய காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. அப்போதைய பெரிய சென்னை மாகாணமும் அவற்றுள் ஒன்றாகும். அந்த மாகாணத்தின் பிரதமராக ராஜாஜி பொறுப்பேற்றார். 1937 -இல் நடைமுறைக்கு வந்த 1935 -ஆம் ஆண்டுச் சட்டப்படி; மாகாண முதல்வர் “பிரதமர்” என அழைக்கப்பட்டார். அந்த வகையில் ராஜாஜியும் பிரதமரானார். 6 மாகாணங் களில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதென்றாலும், அவற்றுள் முதன் முதலில் காங்கிரஸ் அமைச்சரவை நிறுவப்பட்டது சென்னை மாகாணத்திலேதான். அதனால், இந்தியர் ஒருவர் முதன் முதலில் பிரதமர் பொறுப்பை ஏற்றதும் சென்னை மாகாணத்தில்தான். சுதந்திரம் பெற்ற

பின்னர், பாரதத்தின் முதல் பிரதமராக நேருஜி பொறுப் பேற்றார். அதற்கு முன்னோடியாக ராஜாஜி பிரதமரானார் சென்னை மாகாணத்திலே!

அந்த ஆண்டிலேதான் நான் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளனாக தேர்ந்தெடுக்கப் பட்டேன். நான் அப்போது வட சென்னையிலுள்ள தண்டையார்ப்பேட்டையில் வசித்து வந்தேன். பிற்பட்ட சாதியிலே கள்ளிறக்கும் தொழிலாளியின் மகனாகப் பிறந்தவன் சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் பதவியை அடைவது அந்நாளில் எளிதல்ல. நான் வாழ்ந்த வடசென்னை அரசியலில் மிகவும் பிற்பட்ட பிரதேசமாகக் கருதப்பட்டது. கடுமையான உழைப்பின் காரணமாகவும், மேடைப் பேச்சாளனாக இருந்து ஓரளவு நகர மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருந்ததாலும் சென்னை மாவட்டக் காங்கிரஸ் செயலாளனாக வர முடிந்தது. காங்கிரஸ் ஊழியர்களிடத்திலே நல்லெண்ணம் காட்டும் பண்புடைய திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர் தூண்டியதனாலேயே நான் சென்னை மாவட்டச் செயலாளர் பொறுப்பை ஏற்றேன்.

## முதல் சந்திப்பு

சென்னை நகரில் ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் காங்கிரஸ் ஆட்சிக்குக் கடுமையாக எதிர்ப்புக் காட்டி வந்தன. சுயமரியாதை இயக்கத்தில் நாவன்மை மிக்க பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் இருந்தனர். அறிஞர் அண்ணா தமிழக அரசியலில் உதயசூரியனாக தோன்றியிருந்த காலம் அது. காங்கிரஸ் ஆட்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டி பிரசாரம் செய்ய வேண்டிய பொறுப்பு சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின்மீது

விழுந்தது. அதன் செயலாளர் என்ற முறையில் பிரசாரத்தில் முன்னணியிலிருக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். திரு.எஸ். சத்தியமூர்த்தி ஐயர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். அவரது ஆலோசனையின் பேரில் இராயப்பேட்டை காங்கிரஸ் திடலில் (இப்போது சத்தியமூர்த்தி பவன்) ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தேன். அதில் பேசுவதற்கு பிரதமர் ராஜாஜியை அழைக்க அவரது இல்லத்திற்குச் சென்றேன். அந்த முனிவரின் ஆசிரமத்துக்குள் நான் முதன் முதலில் நுழைந்தது அப்போதுதான். இந்த முதல் சந்திப்புபற்றிய சுவையான செய்தி ஒன்றை பிற்காலத்தில் ராஜாஜியின் மூலமாக நான் அறியலானேன்.

21-12-59 அன்று மயிலை ரசிக ரஞ்சனி சபைக் கட்டடத்தில் சுதந்திரக் கட்சி நடத்திய ராஜாஜியின் பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் நான் பேசியபோது, ராஜாஜியும் நானும் முதன்முதலில் தனித்துச் சந்தித்த நிகழ்ச்சியை முதன் முதலாகக் கூறினேன். அது வருமாறு:

''ஒருநாள் ரெயிலில் நாங்கள் பயணம் செய்து கொண்டிருக்கையில், என்னைப் பார்த்து ராஜாஜி கேட்டார், ''நாம் இருவரும் முதன் முதலில் எப்போது சந்தித்தோம் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா?'' என்று. 'எனது நினைவில் இல்லை' என்று நான் பதில் சொன்னேன். அவர் சொன்னார். ''எனக்கு ஞாபகமிருக்கிறது. நீங்கள் அப்போது, சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி. ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக என்னை அழைக்க வந்தீர்கள். 1937 -இல் என்று நினைக்கிறேன். இப்போது மீசையில் உடம்பு மறைந்திருக்கிறது; அப்போது உடம்பிலே மீசை மறைந்திருந்தது. அந்தப் பயங்கரத் தோற்றத்தோடு பார்த்த நான்,

உங்களை ஒரு போக்கிரி என்றே நினைத்தேன். அரு வெறுப்புக் காரணமாக அழைப்பை ஏற்க மறுத்து உங்களை அனுப்பிவிட்டேன்'' என்று சொல்லிக் 'கதை' யை நிறுத்திச் சில விநாடிகள் மௌனம் சாதித்தார்.

''நான் பணிவுடன் அவரை நோக்கி, 'என்னைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறீர்கள்?' என்று கேட்டேன். வாய்விட்டுச் சிரித்த வண்ணம் 'அந்த நினைப்பை அன்றே சத்தியமூர்த்தி ஐயர் மாற்றிவிட்டார்' என்றார். 'உங்களை வெறுத்து அனுப்பிவிட்ட பின்னர், சத்தியமூர்த்தி ஐயர் வந்தார். 'சரியான ஒரு முரடரை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாக வைத்திருக் கிறீர்களே?' என்று கேட்டேன். அவர், 'கிராமணி பார்ப்பதற்கு அப்படித்தான் இருப்பார். பழகுவதற்கு மிகவும் நல்லவர்' என்றார். அதன்பிறகே நான் உங்களிடம் நெருங்கிப் பழகினேன்' என்றார்.

''அப்படி போக்கிரி என்று கருதி என்னை வெறுத்த ராஜாஜிக்கு பிற்காலத்தில் நான் நம்பிக்கைக்குரிய சீடனாகி விட்டேன்.''

*('செங்கோல்' 27-12-59 இதழில் வெளியானபடி)*

**எளிதில் நம்பமாட்டார், நம்பிவிட்டால் விடமாட்டார்!**

ராஜாஜி யாரையும் சந்தேகிக்கும் குணமுடையவர். அவர் வெற்றிகரமாகத் தொழில்புரிந்த கிரிமினல் வக்கீல். அதனாலோ என்னவோ தன்னை நெருங்கி வருபவர்களை முதலில் சந்தேகித்து, பலமுறை அவர்களைச் சோதித்து, அதன் பின்னரே நண்பராக்கிக் கொள்ளக்கூடியவர். எங்கள் முதல்ள சந்திப்பிற்குப் பின்னரும் என்னை எளிதில் அவர் தமது நண்பராக ஏற்றுக்கொள்ளவில்லை.

நான் ஏற்பாடு செய்யும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டங்களுக்கு அநேகமாக அதன் தலைவராக இருந்த சத்தியமூர்த்தியே தலைமை வகிப்பது வழக்கம். கூட்டத் தொடக்கத்தில் நான் தலைவர் பெயரைப் பிரேரேபித்துப் பேசுவேன். சத்தியமூர்த்தியும் அதை விரும்புவார். ஆனால், ராஜாஜி அதை விரும்பமாட்டார். ''கிராமணி! தலைவர் பெயரைப் பிரேரணை செய்து பேசுங்கள்'' என்று சொல்லி என்னை அழைப்பார் சத்தியமூர்த்தி. ராஜாஜியோ, ''நீங்கள் தலைமை வகிப்பது பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறதே, அதன் பின்னர் ஒருவர் பிரேரணை செய்து பேசுவது எதற்கு? நீங்கள் தலைமை உரையைத் தொடங்குங்கள்'' என்று சத்தியமூர்த்தியிடம் கூறுவார். இது எனக்கு அவர்பால் அதிருப்தியை ஏற்படுத்தியதுண்டு.

அநேகமாக நான் ஏற்பாடு செய்யும் ஜில்லாக் காங்கிரஸ் கூட்டங்களிலே செயலாளன் என்ற முறையிலே கூட்ட இறுதியில் நான் நன்றி சொல்ல முற்படுவது வழக்கம். ஆனால் ராஜாஜி பேசும் கூட்டங்களிலே, அதற்கு வாய்ப்புக் கிடைப்பது அரிது. தாம் பேசி முடிந்ததும், ''இத்துடன் கூட்டம் முடிந்தது'' என்று சொல்லி கூட்டத்தில் கூடியுள்ள மக்களைக் கலைந்து செல்லத் தூண்டுவார்.

இப்படி அவர் செய்வது, என்மீது நல்லெண்ணமில்லாததால் அல்ல. கூட்டத் தொடக்கத்திலே தலைவரைப் பிரேரேபித்து ஒருவர் பேசுவதும், அவரே கூட்டத்தின் இறுதியில் நன்றியுரை நிகழ்த்துவதுமான சடங்குகள் ராஜாஜிக்குப் பிடிப்பதில்லை. இதெல்லாம் திட்டமிட்டுச் செய்யும் சுயவிளம்பர ஏற்பாடு என்பது அவர் கருத்து. இப்படி அவர் நடந்துகொள்ளும் போ

தெல்லாம் அவர்மீது எனக்குக் கோபமேற்படுவதில்லை என்றாலும், என் மனம் வருத்தப்படுவதுண்டு.

இப்படி எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, அதன் பின்னரே நான் ராஜாஜியின் நம்பிக்கைக் குரியவனானேன். நம்பியபின் அவர் யாரையும் கைவிடுவ தில்லை. தம் வாழ்நாள் முழுவதும் என்னிடம் பேரன்பும் பெருமதிப்பும் காட்டி வந்தார். வயதில் என்னைவிட 27 ஆண்டுகள் மூத்தவர். அந்த வகையிலே அவ்ருக்கும் எனக்குமிடையே தந்தைக்கும் மகனுக்கும் உரிய நிலையிலிருந்தது.

1937 -இல் முதன் முதலில் ராஜாஜியின் இல்லத்தில் ஏற்பட்ட தனிமைச் சந்திப்புக்கு முன்பே நாங்கள் காங்கிரஸ் மேடைகளில் சந்தித்தது உண்டு. அது அனேக மாக வடசென்னையில்தான். 1934 -இல் இந்திய சட்ட சபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், 1936 -இல் சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலி லும் காங்கிரஸ் வேட்பாளர்களுக்குவெற்றிதேடும் பொறுப்பு வடசென்னை வாசிகளான சர்தார் பு.ம. ஆதிகேசவ நாயகர்மீதும், என் மீதுமே சுமத்தப் பட்டிருந்தது. நாயகர் அவர்களால் அழைக்கப்பட்டு, பல மேடைகளில் ராஜாஜி பேசினார். அப்போதெல்லாம் என் பேச்சையும் அவர் கூர்ந்து கவனித்துக் கேட்டதுண்டு. சுருங்கச் சொன்னால், எனது 25-வது வயதிலிருந்தே ராஜாஜி என்னை அறிவார். இதனை, 1966 - இல் நடைபெற்ற எனது மணி விழாவில் பேசியபோது அவரே வெளியிட்டார்.

### 'ம.பொ.சி. ஒரு மகான்!'

எங்கள் முதல் சந்திப்பின்போது என்னை ஒரு போக்கிரியாக மதிப்பிட்ட ராஜாஜி, காலப் போக்கில் ஒரு

மகானாகக் கருதும் அளவுக்கு என் விஷயத்தில் மன மாற்றம் அடைந்தார். எனது மணிவிழா மேடையில் அவர் பேசியது வருமாறு:

''ம.பொ.சி. சிறுவராக இருந்தபோது காங்கிரசில் சேர்ந்தார். அந்தக் காலம் முதற்கொண்டே அவரை நான் அறிவேன். அப்போதே இவர் முன்னுக்கு வந்து விடுவார் என்று எண்ணினேன். அப்படியே வந்திருக்கிறார். ம.பொ.சி. நல்ல வீரர். நன்றாக உழைக்கக் கூடியவர். தேச பக்தி, தெய்வ பக்தி, தமிழ்ப் பக்தி ஆகிய எல்லா பக்திகளும் கலந்து தலைவராக விளங்குகிறார்.

''அவருடைய பெற்றோர், 'ஞானம்' என்று அவருக்கு பெயர் வைத்தது சரிதான். உண்மை ஞானம், அரசியல் ஞானம் என எல்லா ஞானமும் பெற்றிருக்கிறார். ம.பொ.சி. இப்படி ஆவார் என்று எதிர்பார்த்து, அவருடைய பெற்றோர் பெயர் வைக்கவில்லை. ஆக வேண்டும் என்று ஆசீர்வாதமாகத்தான் வைத்தார்கள். அது பலித்துவிட்டது.''

எனது மணிவிழா 1966 சூன் 26 மாலையிலும், 27 ஆம் தேதி காலையிலும் மயிலையில் உள்ள ஏ.வி.எம். இராஜேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் ராஜாஜி பெருமகிழ்ச்சி யோடு கலந்து கொண்டு என்னை வாழ்த்திப் பேசினார். முதல் நாளில் பேசியதன் ஒரு பகுதி மேலே தரப்பட்டது. இரண்டாவது நாள் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு நன்றியுரை கூறும் பொறுப்பைத் தம்மிடம் விடுமாறு கேட்டுக் கொண்டு, அவர் பேசியது வருமாறு:

''எல்லோரும் ஒன்றுகூடி இந்தத் திருவிழாவை நன்றாக நடத்தி முடித்ததற்காக ம.பொ.சி. யின்

சார்பாகவும் என் சார்பாகவும் நன்றி செலுத்துகிறேன். நேற்று நடந்த விழாவிலும் பேசினேன், சொன்னதையே திருப்பிச் சொன்னால், சொல்லின் மதிப்பு குறைந்துவிடும். ஒரு நல்ல மகானுக்கு மணிவிழா நடத்துகிறோம். இது நமக்கும் நன்மை தருவதாகும். என்னைவிடச் சிறியவர் களுக்கெல்லாம் மணிவிழா நடத்துகிறார்கள். அவ்விழாக் களில் கலந்து கொள்ளும் போதெல்லாம் எனக்கு நடத்தப்படுவதாகவே நான் நினைத்துக் கொள்கிறேன். மணிவிழாத் தம்பதிகளுக்கு என் வாழ்த்துக்கள்.''

# புரிந்து கொண்டவர்களுக்கு நல்லவர்!

தமிழக அரசியலிலே மேல் மட்டத்திலுள்ள தலைவர்கள் ராஜாஜியைப் பெரிதும் மதித்தனர் என்றாலும், அடிமட்டத்திலுள்ள ஊழியர்கள் அவரிடம் நல்லெண்ணம் இல்லாதவர்களாகவே இருந்தனர் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இது, ஆகஸ்டுக் கிளர்ச்சிக்குப் பின்பு ஏற்பட்ட நிலை.

ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு முன்வரை தமிழ்நாடு காங்கிரசிலே எல்லாம் அவராகத்தான் இருந்தார். அவரின்றி ஓரணுவும் அசையாது என்ற நிலை இருந்தது. சத்தியமூர்த்தி ஐயர், ஓமந்தூர் ரெட்டியார், முத்துரங்க முதலியார் ஆகியோர் தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி யின் தலைவர் பொறுப்பிலிருந்தபோது ராஜாஜியையே வழிகாட்டியாகக் கொண்டு செயல்பட்டனர். திரு.கு. காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவரான பின்னரும் முதல் இரண்டு ஆண்டுகளில் பழைய நிலைமையே இருந்தது. காங்கிரஸ் அடித்தளத்து ஊழியர்களோடு ராஜாஜிக்கு நல்ல தொடர்பு இருந்த காலமது.

### ஏழைகளின் தோழர்!

1937 -ஆம் ஆண்டில் சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் ஈடுபட்டுப் போட்டியில் புகுந்த

போது காங்கிரஸ் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட வர்களிலே மிகப் பெரும்பாலோர் சாதாரண ஊழியர்கள்! பரம ஏழைகள்! அவர்களை யெல்லாம் வேட்பாளர் களாக்கி, அவர்கள் வெற்றிக்கு இரவு பகலாக ராஜாஜி உழைத்தார். அவர்களில் சிலர் பிற்காலத்தில் அனைத் திந்திய ரீதியில் பெருந்தலைவர்களாக வளர்ந்தனர்.

இதற்கு முன்னும் பின்னுமாக அப்போதைய ஜில்லா போர்டுகள், தாலுக்கா போர்டுகள், நகராட்சிகள், சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு மிகமிகச் சாமான்யர்களையும் காங்கிரஸ் சார்பில் நிறுத்திவைத்து அவர்களுக்கு ராஜாஜி வெற்றி தேடித்தந்தார். இவற்றையெல்லாம் அறிந்தவர்கள் ராஜாஜியை காங்கிரஸ் ஊழியர்களின் வளர்ச்சிக்கு உதவி புரியாதவர் என்று சொல்லமாட்டார்கள்.

அந்தக் காலத்தில் போட்டியிட்டவர்கள் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த மிட்டா மிராசுகள் என்பதையும், அவர் களுக்கு எதிராகத்தான் காங்கிரசின் சார்பில் ஏழை எளியவர் களான ஊழியர்களை ராஜாஜி நிறுத்தி வைத்தாரென் பதையும் இங்கு நான் நினைப்பூட்ட வேண்டும்.

இப்படி, எத்தனை எத்தனையோ எளியோரை பெரிய மனிதர்களாக்கிவிட்ட பெருமை ராஜாஜிக்கு உண்டு. குறிப்பாக, ஏதேனும் ஒரு துறையில் திறமையுள்ளவரை காங்கிரஸ் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ள ராஜாஜி தவறியதேயில்லை. ஆனால், ஆகஸ்டுக் கிளர்ச்சியை விரும்பாதவராக அவர் மாறிய பின்னர், காங்கிரஸ் வட்டாரமே அவரை விரோதிக்கத் தொடங்கியது. அக்கிளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே அவர் காங்கிர சிலிருந்து தாமாகவே வெளியேறிவிட்டார். அதனால், காங்கிரஸ்காரர்கள் எல்லோருடனும் தொடர்பற்றுப் போய்விட்டார்.

## ஆகஸ்டுக் கிளர்ச்சி

காங்கிரசுக்கு வெளியே இருந்து கொண்டு, ஆகஸ்டுக் கிளர்ச்சியைக் கண்டித்து அடிக்கடி விட்டுக்கொண்டிருந்த அறிக்கைகளால் காங்கிரஸ் ஊழியர்கள் அவர்மீது அடங்காக் கோபம் கொண்டனர். அந்நிலையிலும் காங்கிரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, ஆகஸ்டுக் கிளர்ச்சியில் கலந்து கொண்ட - தமிழ் நாடு காங்கிரசில் மேல் மட்டத்திலிருந்த - தலைவர்களும் ராஜாஜியை நன்கு அறிந்து வைத்திருந்த ஊழியர்களும் அவரை மனமார நேசித்தனர். ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது ஒரு புதிய பட்டாளம் சிறைபுகுந்து, தியாக முத்திரை பெற்று அரசியலிலே முன்னணிக்கு வந்தது. இவர்களுக்கு ராஜாஜி பற்றி அதிகம் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆகஸ்டுக் கிளர்ச்சிக்கு எதிரியாக இருந்தார் என்ற ஒன்றை மட்டுமே கொண்டு, தங்களுக்கிருந்த தேசபக்தி காரணமாக அவர்கள் ராஜாஜியை வெறுக்கலாயினர்.

ஆகஸ்டுக் கிளர்ச்சி முடிந்து தேசம் விடுதலையை நெருங்கிக் கொண்டிருந்தபோது ராஜாஜி திரும்பவும் காங்கிரசில் இணைந்து, மத்தியில் தோன்றிய இடைக்கால அமைச்சரவையில் சேர்ந்து கொண்டுவிட்டார். அதனை யடுத்து, மேற்கு வங்கத்தில் ஆளுநர் பொறுப்பில் அமர்ந்தார். அதை விட்டதும், கவர்னர் ஜெனரல் பொறுப்பை ஏற்று டில்லியில் முகாமிட்டார். அதனை விட்ட பின்னரும் திரும்பவும் மத்திய அமைச்சரானார். இப்படி, 1942 முதல் 1952 ஏப்ரல் வரை ராஜாஜிக்கு தமிழ் நாடு காங்கிரஸ் நிர்வாகத்தோடு தொடர்பற்றுப் போய்விட்டது. தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ் ஊழியர்களில் ராஜாஜியின் மனதை நன்கு அறிந்து அவரை நேசித்தவர்கள்கூட, அவருடன் தொடர்பற்றவர்களாகி விட்டனர்.

1945 - 46 -இல் ''ராஜாஜி வேண்டாம்'' எனும் கிளர்ச்சி தோன்றியதற்குத் தமிழ்நாட்டு அரசியலில் புகுந்த புதிய வெள்ளமே முதல் காரணமாகும். அடுத்த காரணம், தமிழ்நாடு காங்கிரசுடன் அடியோடு தொடர்பற்ற நிலையிலே அவர் வடபுலத்தில் தங்கிவிட்டதாகும். ஊழியர்களிடம் ராஜாஜி செல்வாக்கற்றுப் போனதற்கான மற்றொரு காரணத்தையும் இங்கு சொல்லியாக வேண்டும்.

**கோஷ்டி அரசியல்!**

காங்கிரசானது சுதந்திர இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், வாழ்க்கை வசதிகளை நாடிச்செல்லும் மனோபாவம் தியாகப் பரம்பரையினரான காங்கிரஸ்காரர்களுக்கும் ஏற்பட்டது. விடுதலைப் போராட்ட காலத்திலே சன்னியாசிகளைப்போல் வாழ்க்கை நடத்தியவர்கள், விடுதலை பெற்ற இந்தியாவிலே வாழ்க்கை வசதிகளைத் தேடியலையும் ''சம்சாரி''களாகி விட்டனர். இவர்களைத் திருப்தி செய்வதற்கான சந்தர்ப்பமும் மனோபாவமும் ராஜாஜிக்கு இருக்க வில்லை. அரசியல் வாதிகள் தொழில் செய்துதான் பிழைக்க வேண்டும் என்பது ராஜாஜியின் சித்தாந்தம். அரசியலிலிருந்து வேறுபட்ட துறைகளிலே ஈடுபட்டு வருவாயைத் தேடிக் கொள்ள முடியாதவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதும் அவருடைய கொள்கையாகும். இது, விடுதலை இந்தியாவில் காங்கிரஸ் வட்டாரத்தில் விலை போகாத சரக்காக இருந்தது. உயர்ந்த கல்வியும் செல்வமும் உடையவர்கள்தான் பொது வாழ்க்கையில் நேர்மையுடன் இருக்கமுடியும் என்ற கன்சர்வேடிவ் எண்ணமும் ராஜாஜிக்கு உண்டு.

தேசம் விடுதலை பெற்றபின்னர் தமிழ்நாடு காங்கிரசிலே கோஷ்டி அரசியல் வலுப்பெற்றுவிட்டது.

தலைவர்கள் பிளவு பட்டனர். அதனால், ''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'' என்னும் பழமொழிபோல தலைவர்களின் பிளவைப் பயன்படுத்தி கோஷ்டி அரசியல் நடத்தி வாழ்க்கை வசதிகளைத் தேடிக்கொள்ளும் ''திறமை'' காங்கிரஸ் ஊழியர்களிலே பலருக்கு ஏற்பட்டுவிட்டது. இது, காலத்தின் நிர்ப்பந்தத் தால் ஏற்பட்ட அவல நிலையாகும். இதற்கு ஏற்ற போக்கிலே ஊழியர்களைத் திருப்தி செய்து, அவர் களுடைய நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் பெறும் 'திறமை' ராஜாஜிக்கு இருக்கவில்லை. இவை அனைத்தும் சேர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் களுக்கும் தலைவர் ராஜாஜிக்குமிடையே மிகப் பெரிய இடை வெளியை ஏற்படுத்திவிட்டது.

''ராஜாஜி'' என்றாலே, அவர் பிறருடைய வளர்ச்சிக்கு உதவி புரியாதவர்; கல் நெஞ்சினர்; ஏழை எளியவர்களைக் கைதூக்கி விடும் எண்ணமில்லாதவர் என்றெல்லாம் பழிச் சொற்களைச் சுமக்க வேண்டிய நிலையில் ராஜாஜியின் பிற்கால அரசியல் வாழ்க்கை நிலை அமைந்துவிட்டது.

என்னைப் பொறுத்தவரையில் இந்த மனோ பாவத்திற்கு எதிரான போக்கிலேயே என் தலைவர் ராஜாஜியை நான் பார்க்கிறேன். ஒருவரைப்பற்றி அவருக்கு மிகுந்த நல்லெண்ணம் இருந்தாலும், அதை வார்த்தைகளால் வெளிப்படுத்துவதால் அவர் கெட்டுப் போய்விடுவார் என்பது அவரது எண்ணமாக இருந்தது. அதை அவரே என்னிடம் சொல்லி பலமுறை கேட்டி ருக்கிறேன் - ஏன் நானே அனுபவித்தும் இருக்கிறேன். இதற்கு என் வாழ்க்கையிலிருந்தே சில சான்றுகளைச் சொல்ல முடியும்.

## எனது பொன் விழாவின் போது...

*1956* -ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள ராசா சர். அண்ணாமலை மன்றத்திலே எனது ஐம்பதாமாண்டு நிறைவு பொன் விழாவாக நடந்தது. அவ்விழாவிலே எனக்குப் பணமுடிப்பு அளிக்கப் போவதாகவும் முன் கூட்டியே விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. எனக்குத் தரப்படவிருக்கும் நிதிக்குப் பொருள் தருவோரின் பெயர்ப் பட்டியலும் வாரந்தோறும் ''குமுதம்'' பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருந்தது. விழா ஏற்பாடு பற்றிய செய்திகள் நாளிதழ்களில் அடிக்கடி வெளியிடப்பட்டு வந்தன. இது ராஜாஜிக்குப் பிடிக்காது என்பது எனக்குத் தெரியும்.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர் அதற்குச் சன்மானமாக மக்களிடமிருந்துகூட நிதியுதவி பெறக் கூடாது என்பது அவரது கொள்கை. ஐம்பது வயதிலேயே ஒருவருக்கு ஆரவாரமாகப் பிறந்த நாள் கொண்டாடுவது என்பதும் என் தலைவருக்குப் பிடிக்காத விஷயம் என்பதும் எனக்குத் தெரியும். லோகாயத்திற்கு எதிரான அவருடைய 'கன்சர்வேடிவ்' போக்கு எனக்குத் தெரிந் திருந்ததால் எனது பொன் விழாவுக்கு அவரை அழைப் பதை நான் விரும்பவில்லை. என்னைச் சூழ்ந்திருப் பவர்கள் ராஜாஜியை அழைக்க வேண்டுமென்று கூறிய போதும், ''வேண்டாம்'' என்று மறுத்துரைத்தேன். என்னை யும் மீறி விழாக்குழுவின் செயலாளர் கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தி, குழுவின் தலைவர் ஔவை தி.க. சண்முகம் ஆகியோர் ராஜாஜியிடம் சென்று விழாவுக்கு அவரை அழைத்தனர். அவர்கள் நம்பினார்கள், ''ம,பொ.சி. யின் விழா என்றால், ராஜாஜி வர மறுக்கமாட்டார்'' என்று. பாவம்! அவர்கள் ஏமாந்து போகும் வகையிலே அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார் ராஜாஜி.

''நிதி யெடுத்து ம.பொ.சி.க்குள்ள நல்ல பெயரைக் கெடுக்கப் பார்க்கிறீர்கள். அவரைப் பொது வாழ்விலிருந்து விரட்டிவிடப் போகிறீர்கள். அது எனக்குப் பிடிக்க வில்லை. ஐம்பது வயதிலே பிறந்த நாள் விழா வேண்டியிருக்கிறது? என்றெல்லாம் சொல்லிவிட்டார்.

ஔவை தி.க. சண்முகத்திற்கும் கவிஞர் கு.சா. கிக்கும் என் தலைவர் மீது அளவு கடந்த ஆத்திரம்! நான் ராஜாஜியைப் புரிந்து கொண்டவனாதலால், அவர்களுக்குப் பொறுமையைப் போதித்தேன். பொன் விழாவில் பணமுடிப்பைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்து நான் பேசுகையில்,

''என் மதிப்பிற்குரிய தலைவர் ஒருவர் - ம.பொ.சிக்கு நிதியளித்து, பொது வாழ்க்கையிலிருந்து அவரை விரட்டப் பார்க்கிறீர்களா?' என்று சொன்னாராம். இன்று முப்பதாயிரம் ரூபாய் பெற்றுள்ளேன். இது முப்பது லட்சமாக இருந்தாலும் இந்தச் சிவஞானம் பொது வாழ்க்கையிலிருந்து விலகி சுகவாழ்க்கை நடத்தப் போய்விடமாட்டான்'' என்று சொன்னேன்.

எனது பொன் விழாவுக்கு வரமறுத்த ராஜாஜி, சரியாகப் பத்தாண்டுகளுக்குப்பின் எனது மணிவிழாவின் இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு ஒரு மகானாக என்னை வருணித்துப் பேசினார். என் பெயருக்கு வியாக்யானம் சொல்லி என்னை ஒரு மெய்ஞ்ஞானியின் நிலைக்கு உயர்த்திப் பேசினார்.

நான் ராஜாஜியின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாத வனாக இருந்திருந்தால் எனது பொன் விழாவுக்கு வர மறுத்தபோதே, அவரை வெறுத்து அவரது நட்பைக் கைவிட்டிருப்பேன். இப்படி, ராஜாஜியைப் புரிந்து

கொள்ளாத சுயநலக்காரர்கள்தான் அவரை வெறுத்தார்கள் அவர் வாழ்ந்த காலத்திலே!

## கப்பலோட்டியது வ.உ.சியா?

இன்னொரு நிகழ்ச்சியையும் இங்கு சொல்ல விரும்புகிறேன். 1939 -ஆம் ஆண்டு நவம்பர் 18 -இல், சென்னை முதல் சர்க்கிள் (வடசென்னை) காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனாரின் நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்து, அதில் பேசுவதற்கு ராஜாஜியை அழைத்தேன். என்னைப் ''போக்கிரி'' யாகவும் ''முரடனாக''வும் அவர் எண்ணியிருந்த காலம் அது. அதனால், அவர் என்னிடம் அன்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவில்லை.

''கப்பலோட்டிய தமிழர் நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறேன். அதிலே தாங்கள் கலந்துகொண்டு பேசவேண்டும்'' என்று கூறி அழைத்தேன்.

ராஜாஜி, ''கப்பலோட்டிய தமிழரா? அது யார்?'' என்று வியப்புடன் என்னைக் கேட்டார். நான், ''வ.உ. சிதம்பரம் பிள்ளை'' என்று பதிலுரைத்தேன்.

அவர், ''தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளையைச் சொல்கிறீர்களா?'' என்று சொல்லிவிட்டு, ''கப்பலை அவர் ஓட்டவில்லை. மாலுமிகள்தான் ஓட்டினார்கள். அவர் ஓட்டியதாகத் தப்பாகச் சொல்லாதீர்கள்'' என்று கூறி, விழாவுக்கு வர மறுத்துவிட்டார். தனி நபர்களை அதிகமாகக் கொண்டாடுவது அவருக்குப் பிடிக்காது. பெரியவர்களுடைய பிறந்த நாளையோ, இறந்த நாளையோ கொண்டாடுவது என்று ஏற்பட்டுள்ள வழக்கத்தை யெல்லாம் ராஜாஜி விரும்பாதவர். அவரது பிறந்த நாளைக் கொண்டாட 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி

முயன்றபோது, அதற்கும் எதிர்ப்புக் காட்டினார் ''எனது பிறந்த நாள் நினைவில் இல்லை'' என்றார்.

அரசியல்வாதிகள் பட்டப் பெயர்களைப் பயன் படுத்துவதும் அவருக்குப் பிடிக்காதது. ''வ.உ. சிதம்பரனார்'' என்ற இயற் பெயரே புகழுடையது. அதற்குப் பட்டஞ்சூட்டிப் பெருமைப்படுத்த வேண்டுமா?' என்று அவர் நினைத்திருக்கலாம். ஆனால், எப்படியோ, ராயபுரம் பிரைட்டன் டாக்கீஸில் முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி நடத்திய விழாவில் பேசுவதற்கு அவருடைய இசைவைப் பெற்றுவிட்டேன். இதற்கு 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி எனக்குத் துணை புரிந்தார். வ.உ.சி. விழாவில் பேசியபோதும், தனது வைதிகத்தை ராஜாஜி விட்டுவிடவில்லை.

''சிதம்பரம் பிள்ளை கப்பல் ஓட்டியதாகக் கிராமணியார் நம்பிக் கொண்டிருக்கிறார். அதனால் கப்பலோட்டிய தமிழர் என்றே சிதம்பரம் பிள்ளைக்குப் பெயர் வைத்துவிட்டார். கப்பலை ஓட்டியது மாலுமிகள் தான்'' என்று கொஞ்சம் கிண்டலாகக் கூறினார். அந்தக் கூட்டத்தில் தலைமை வகித்த திரு.வி.க.கூட இதைக் கேட்டு வருந்தினார்.

ராஜாஜி இப்படிக் கூறியதால் வ.உ.சி. யின் புகழை வளர்க்கும் பணி அவருக்குப் பிடிக்கவில்லையென்று கருதிய காங்கிரஸ்காரர்களும் உண்டு. அவர்களிலே சிலர் வகுப்புவாத ரீதியிலும் அதற்குக் காரணம் காட்டினார்கள். ஆனால், நான் அப்படி நினைக்கவில்லை.

**ராஜாஜியே எழுதினார்!**

*1939* -இல் வ.உ.சி.யைக் கப்பலோட்டிய தமிழர் என்று அழைப்பதை ஏற்க மறுத்த ராஜாஜி, பிற்காலத்தில்

அந்தப் பெயராலேயே அவரை அழைத்தார். அவரது புகழைப் பரப்பப் பேருதவி புரிந்தார்.

தூத்துக்குடியில் இன்றுள்ள வ.உ.சி. கல்லூரி ராஜாஜியின் ஆதரவோடு 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி திரட்டிய நிதியை முதல் உதவியாகக் கொண்டு நிறுவப்பட்டதாகும். வ.உ.சி. கல்லூரியை நிறுவ தமிழ் மக்கள் நிதியுதவி புரியவேண்டுமென்று பத்திரிகைகளில் ராஜாஜி வேண்டுகோள் விடுத்தார். அந்த அறிக்கையை அவர் எழுதும்போது நான் அருகில் இருந்தேன். தூத்துக்குடி எம்.சி. வீரபாகுப் பிள்ளை, ஏ.பி.சி. வீரபாகுப் பிள்ளை, 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் இருந்தனர். பத்திரிகைகளுக்காகத் தம் கைப்பட எழுதிய அறிக்கை யிலே ''கப்பலோட்டிய தமிழர்'' என்று எழுதிவிட்டு, 'கிராமணியாருக்குப் பிடித்திருக்கும் என்பதற்காக இதை எழுதுகிறேன்'' என்று சொல்விட்டுச் சிரித்தார்.

தூத்துக்குடியில் ''எஸ்.எஸ். சிதம்பரம்'' என்னும் பெயரில் ஒரு கப்பலை கடலில் மிதக்கவிட்ட பெருமையும் ராஜாஜிக்கு உண்டு. தேசபக்தர்கள் எம்.சி. வீரபாகு, ஏ.பி.சி. வீரபாகு ஆகிய கனவான்கள் ஒரு கப்பல் கம்பெனியை நிறுவி, வ.உ.சி. யின் நினைவாக ''எஸ்.எஸ். சிதம்பரம்'' என்னும் கப்பலை வாங்கினார்கள். அதனைக் கடலில் செலுத்தவேண்டி, அப்போது டில்லியில் கவர்னர் ஜெனரல் பொறுப்பிலிருந்த ராஜாஜியை அழைத்தனர். அவரும் மனமுவந்து அழைப்பை ஏற்று, வங்கக் கடலிலே, ''எஸ்.எஸ். சிதம்பரம்'' கப்பலை மிதக்கவிட்டு, தமது நண்பர் வ.உ.சி. யை வாய்மணக்கப் புகழ்ந்து பேசினார்.

ராஜாஜியும் நானும் மனமொத்த நண்பர்களானது 1944 -க்குப் பின்னர்தான். அவர் காங்கிரசிலிருந்து வெளி

யேறிய பின்னர் அநேகமாக இந்திய அரசியலிலே தனிமைப்பட்டுவிட்டார். தமிழகத்திலோ, அவரால் வளர்க்கப்பட்டு பெரிய பெரிய பதவிகளைப் பெற்றவர் களும் சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக அவருடன் நெருங்கிப் பழகுவதற்கும் அஞ்சி ஒதுங்கி நின்றனர். அந்தக் காலத்தில் (1944 - 1945), நான் ஒருவன்தான் துணிந்து தொடர்பு கொண்டு, அவருடன் தமிழகத்தில் சுற்றுலாச் செய்து அவருக்கு ஆதரவு திரட்டினேன். அதனால், எங்கள் நட்பு வலுப்பெற்றது. என்னை நம்பிக்கைக்குரிய நண்பனாக்கிக் கொண்டார். வைதிக மொழியில் சொல்வ தானால், நாங்களிருவரும் குருவும் சீடனு மானோம். என்னிடம் மனம் திறந்து பேசுவார். என் விஷயத்தில் தம்முடைய மனதிலுள்ளதை ஒளிவு மறைவின்றிச் சொல்வார்.

## இப்படியும் எழுதினார்!

''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்னும் பெயரில் நூல் எழுதி, என் அரிய நண்பர் திரு சோம. சாமிநான் அவர்களைக் கொண்டு, 1963 நவம்பரில் அவருடைய இன்ப நிலையம் பதிப்பகத்தின் சார்பில் வெளியிடச் செய்தேன். இந்த நூலின் பிரதியொன்றை ''என் அரசியல் குருநாதர் ராஜாஜிக்குக் காணிக்கை'' என்று நூலின் உட்பக்கத்தில் எழுதிக் கையொப்பமிட்டு, 1964 மே திங்களில் ராஜாஜிக்கு அனுப்பி வைத்தேன். அவர் நூல் முழுவதையும் படித்துவிட்டு எனக்கு எழுதிய கடிதம் வருமாறு:

அன்பும்

வணக்கமும்

கையெழுத்திட்ட வள்ளலார் புஸ்தகம் பெற்றுக் கொண்டேன். அன்புடன் அனுப்பியதற்கு நன்றி - மிக்க நன்றி.

பல ஆராய்ச்சிகள் செய்து எழுதிய நூலாகக் காணப்படுகிறது.

தொடர்பறாத ஞானமும் பக்தியும் கலந்த பரம் பரையடங்கிய பாடல்கள் வள்ளலார் தந்திருப்பதை தமிழர்கள் பயன்பெற்று அனுபவிக்கிறார்கள். எல்லா நாயன் மார்களும், ஆழ்வார்களும் புரட்சிக்காரர்களே. என்னைப் பொருத்தமட்டில் புது விவாதங்கள் வேண்டி யளவு இருக்கும் பொழுது பழைய சமயப் போர்களை ஆராய்ந்தறிய மனமும் ஆசையுமில்லை.

ஆசியும் அன்பும்
-இராசகோபாலாச்சாரி.

இக்கடிதத்திலுள்ள, 'என்னைப் பொறுத்த மட்டில் புது விவாதங்கள் வேண்டியளவு இருக்கும் பொழுது பழைய சமயப் போர்களை ஆராய்ந்தறிய மனமும் ஆசையுமில்லை' என்ற வாசகம் அவர் திறந்த மனத்துடன் எழுதியதாகும். இதிலுள்ள உணர்வில் அவரோடு நானும் ஒன்றுபடக்கூடியவனே.

'ஆராய்ச்சி' என்ற பெயரில் சிலர் வகுப்புத் துவேஷத்தையும் மதப்பூசலையும் வளர்த்துவந்த நேரமது. அதனால் ராஜாஜி பழைய சமயப் போர்களைப்பற்றிய ஆராய்ச்சியையே வெறுக்கலானார். ஆயினும், இந்த வெறுப்புக்கு விலக்காகவே அவர் என்னை நடத்தினார்.

**வலுவில் வந்து பாராட்டினார்!**

''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' நூலின் இரண்டாம் பதிப்பு மலிவுப் பதிப்பாக வெளியானபோது, அதன் வெளியீட்டு விழா அரண்மனைக்காரன் தெரு விலுள்ள கோகலே மன்றத்தில் 4-10-64 -இல் இன்ப

நிலையத்தாரால் நடத்தப்பெற்றது. டாக்டர் மு. வரதராசனார், அறிஞர் கி.வா. ஜகந்நாதன், வள்ளல் நா. மகாலிங்கம், திருமதி ஆ.ரா. இந்திரா ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். கோகலே மன்றங் கொள்ளாத அளவில் ஜனக்கூட்டம்! மன்றத்திற்கு வெளியேயும் கூட்டம்!

நானோ வேறு யாருமோ எதிர்பாராத வகையில் ராஜாஜி அந்தக் கூட்டத்திற்கு வந்து விட்டார். அவரைக் கண்டதும் மன்றத்தில் கூடியிருந்த கூட்டத்துக்குக் கொள்ளை ஆனந்தம்! எனது நிலையும் அதுதான்.

எனது நூலைப் படித்த பின்னர் ''ஆராய்ச்சி'' பற்றிய தமது மாறுபட்ட கருத்தை அவர் எனக்கு எழுதினாரென்றாலும், எனது நூல் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அதற்காக என்னைப் பாராட்டிப் பேச வாய்ப்பை எதிர்பார்த்திருந்தவர்போல கோகலே மன்றக்கூட்டத்திற்கு வந்துவிட்டார். முன்கூட்டி அவர் பெயர் விளம்பரப் படுத்தப்படவில்லை. விழாநாளன்று காலை தனிநபர் மூலம் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு வந்தார். அப்படியெல்லாம் வரும் வழக்கம் அவரிடம் கிடையாது. ஆனால், அந்த அந்தஸ்துப் பிரச்சனைக்கு என்போன்ற உண்மை நண்பர்களை விலக்காக நடத்துவதுண்டு. நூல் வெளியீட்டு விழாவிலே அவர் பேசியது வருமாறு:

''இதே மண்டபத்தில் பலமுறை பல கூட்டங்களில் நான் மற்றவர்கள் பேசக் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் பேச்சுக்கள் என் காதில் சரியாக விழவில்லை. இன்றைய கூட்டத்தில் பேச்சுக்கள் சரியாக விழுந்தன. ஒவ்வொரு வார்த்தையும் சரியாகக் கேட்டன. காரணம். இன்று பேசப்பட்ட விஷயம் - பேசியவர்களின் அமைதி.

''நம்முடைய தலைவர் சிவஞான கிராமணி யாரவர்கள் எனக்கு 30 அல்லது 32 வருடங்களாகப் பழக்கம். ஆரம்பத்தில் எனக்கும் அவருக்கும் கொள்கை களில் எந்தவிதமான பேதமும் கிடையாது. இன்று அனேக விஷயங்களில் கொள்கை மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. கொள்கைகளில் ஒருமைப்பாடு இருந்திருக்குமானால், அப்போது எங்களிடையே உள்ள அன்புக்கு விசேஷம் ஒன்றுமில்லை. கொள்கை வேறுபாடு இருக்கும்போதும் நாங்கள் மிகுந்த அன்பு கொண்டிருக்கிறோமே அதுதான் விசேஷம்.

''சில இளைஞர்களுக்கு சந்தேகம் ஏற்படலாம். தமிழரசுக் கழகம் வேறு; ராஜாஜி வேறு - அப்படியிருக்க இவர் எதற்கு இங்கு வந்திருக்கிறார். ஏதோ தாட்சண்யத் திற்கு வந்திருக்கிறார் என்று எண்ணலாம். உங்களுக்குச் சொல்லுகிறேன்; அன்பு விலைகொடுத்து வாங்கும் பொருளல்ல. அது தானாக உள்ளத்தில் தோன்றவேண்டும். மாறாமலும் இருக்க வேண்டும். எங்களிடையே அப்படிப் பட்ட அன்பு இருக்கிறது. அதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்தலாம். அவரும் எனக்கு நன்றி செலுத்தலாம்.

''முற்காலத்தில் எல்லோருக்கும் சமய உணர்ச்சி இருந்தது. அதனால்தான் சமய பேதங்கள் இருந்தன. இப்போது சமய உணர்ச்சி குறைந்து போனதால் பேத உணர்ச்சியுமில்லை. நாத்திகம் அதிகமாகிப் போனதால் சமய பேதங்கள் பற்றி மக்களுக்குக் கவலை இல்லை. ஒரு சமயத்தில் பற்று வைத்துக்கொண்டு எல்லா சமயங் களையும் நேசித்தால் அதில் அர்த்தமுண்டு. திருமூலரும் சமய ஒருமைபாடுபற்றிச் சொல்லியிருக்கிறார். அதைத் தமது நூலில் எடுத்துக்காட்டியிருக்கிறார் ம.பொ.சி.

''ஒரு சமயத்திலும் பற்றுக் கொள்ளாமல் எல்லா சமயங்களும் ஒன்று என்று சொல்லாதீர்கள். பதினாயிரம் வருஷங்களுக்கு முன்பே எல்லாம் ஒன்றுதான் என்று வேதங்களிலே, உபநிடதங்களிலே சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் இராமலிங்க சுவாமியும் சொன்னார்கள். இப்பொழுது நாஸ்திகத்தை எதிர்ப்பதிலேதான் நாம் கவனம் செலுத்த வேண்டும். பிடிவாதத்திற்கு 'மதம்' என்று பெயர். நாஸ்திகர்கள் ஆஸ்திகர்களை விடப் பிடிவாதமாக இருக்கிறார்கள். அந்தப் பிடிவாதமும் ஒரு மதம்தான். அதனால், அவர்களிடமிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

''ம.பொ.சி.க்கும் எனக்கும் கொள்கை வேறுபாடு இருப்பதாகச் சொன்னேன், அதெல்லாம் உணர்ச்சியைப் பொறுத்தவை. உண்மையில் அவருக்கும் எனக்கும் வேறுபாடே கிடையாது. வேறுபாடு பாஷையில்தான். என்ன காரணத்தாலோ, ஆங்கிலத்தின் பேரில் அவர்கள் வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள். இது வள்ளலார் கொள்கைக்கே விரோதம் என்று சொல்வேன். எல்லா பாஷையும் ஒன்றுபோலத்தான். நான் இப்போது அவருக்கு உபதேசம் பண்ணவில்லை. என்னுடைய குறைகளுக்கு உங்களிடம் நான் சமாதானம் சொல்லிக்கொள்கிறேன். ஆங்கிலம் படித்து இரண்டுங் கெட்டான்களாகப் போனவர்களிலே நான் ஒருவன்.

''சிதம்பரம் அவர்கள் (பாரதி பதிப்பக அதிபர்) ம.பொ.சி.யின் நூலைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்கள். அதைப் படித்துப் பார்த்தேன். அதில் என்னைப்பற்றி ம.பொ.சி. சொல்லியிருக்கிறார்கள். என் பெயர் இல்லை. என் வகையறாவைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். மெக்காலே கல்வித் திட்டத்தைப் பற்றிச்

சொல்லிவிட்டு, ''ஆங்கிலம் படித்ததனால் நம்முடைய மக்கள் இரண்டுங்கெட்டான்களாக ஆகிவிடுகிறார்களே! ஆங்கிலமும் சரியாக வருவதில்லை; தமிழும் சரியாகத் தெரிவதில்லையே'' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இரண்டுங் கெட்டான்களைக் கொண்ட பெரிய குடும்பத்தில் நானும் ஒருவன். என்னைப் போன்று ஆங்கிலம் படித்துக் கெட்டுப் போனவர்களால் (வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு) இதுபோன்ற நூல் எழுத முடியாது.

''புஸ்தகத்தை எல்லோரும் வாங்கிப் படிக்க வேண்டும். அதற்காகத்தான் இன்ப நிலையம் சாமிநாதன் அவர்கள் இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்தார்கள். அருமையான புத்தகம். விலையும் குறைவாகத்தான் இருக்கிறது. ஒவ்வொருவரும் வாங்கிப் படியுங்கள். ஒரு புத்தகத்தை வாங்கிப் பத்துபேர் படிக்காதீர்கள். விலை குறைவாக இருக்கிறபடியால் ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்க வேண்டும். சமயமும் நிலைபெற வேண்டும்; புத்தகத்தை எழுதியவரும் புகழ்பெற வேண்டும்; புத்தகத்தை அச்சிட்டவரும் நஷ்டப்படக்கூடாது. ம.பொ.சி.யின் முயற்றி வெற்றிபெற ஆசீர்வதிக்கிறேன்.''

*(''செங்கோல்'' 11-10-64 இதழில் வெளியானபடி)*

**பலமுறை பாராட்டினார்!**

இதன் பின்னர்தான் 1966 -இல் ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' இந்திய சாகித்திய அகடமியின் பரிசைப் பெற்றது.

ராஜாஜி, தம் திருவாயால் சொன்ன ஒவ்வொரு சொல்லிலும் அன்புரசம் கசிந்தொழுகுவதைக் காணலாம். அந்தச் சொற்கள் தேடிப் பிடித்துச் சொன்னவையல்ல. இயற்கையாகவே இதயத்திலிருந்து வெளிப்பட்டவை.

எனது நூலைப்பற்றி ராஜாஜி எழுதிய கடிதத்தை மட்டும் வைத்துப் பார்த்தால், அவர் எனது ஆராய்ச்சியைப் பழித்தெழுதியதாக எண்ணி நான் அவரை வெறுத்தொதுக்க நியாயமுண்டு. ஆனால், எனது தலைவரை நான் நன்கு அறிவேனாதலால், அவரது கடிதத்தை நான் சரியாகவே புரிந்து கொண்டேன்.

கோகலே மன்றக் கூட்டத்திற்குப் பின்னரும் எத்தனையோ சந்திப்புகளின்போது, வள்ளலார் பற்றிய நூலில் யான் வெளியிட்டுள்ள முற்போக்கான கருத்துக் களை நினைவில் வைத்து எடுத்தெடுத்துச் சொல்லி என்னை அவர் பாராட்டியதுண்டு. என் மணிவிழாவில் எனது பெயரிலுள்ள ''ஞானம்'' என்னும் சொல்லுக்கு அவர் பொருளுரைத்ததும், ''மகானுக்கு விழாக் கொண் டாடுகிறோம்'' என்று சொன்னதும் எனது வள்ளலார் பற்றிய நூலை அவர் படித்ததன் விளைவுதான்.

## 'கல்கி' ஆசிரியரின் வினாக்கள்

ராஜாஜி தம் நண்பர்களிடத்தில் இரக்கமின்றி நடந்து கொள்ளும் கடின சித்தமுடையவர் என்ற தவறான எண்ணம் அவர்பால் மிகுந்த பக்தியுடையவர்கள் மனத் திலும் பதிந்திருந்தது.

''கல்கி'' ஆசிரியர் ராசேந்திரன் என்னைப் பேட்டி கண்ட நிகழ்ச்சி ஒன்று சென்னை வானொலியில் 14-9-84 இல் ஒலிபரப்பப்பட்டது. அதிலே, மூதறிஞர் ராஜாஜி, பெருந் தலைவர் காமராசர், அறிஞர் அண்ணா, நாவலர் சத்தியமூர்த்தி ஆகியோரைப் பற்றிக் 'கல்கி' ராசேந்திரன் வினாக்கள் எழுப்பி, அந்தச் சான்றோர்கள்பற்றி என்னுடைய விடைகளைப் பெற்றார். அதிலே ராஜாஜி பற்றி அவர் எழுப்பிய வினாவும் நான் அளித்த விடையும் வருமாறு:

*கல்கி ராசேந்திரன்: ராஜாஜியை தீர்க்கதரிசி, ஞானி, மூதறிஞர் என்றெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறவர்கள்கூட அவர் ஈரமில்லா நெஞ்சினர் என்றும் கூறுவார்கள். இது எந்த அளவுக்கு உண்மை? நீங்கள் அறிந்தவரை எப்படி?*

ம.பொ.சி., ராஜாஜி ஒரு முனிவர் போன்று வாழ்ந்தவர். ஆனால், கட்சி அரசியலை அவரால் விடமுடியவில்லை. நாளுக்கு நாள் அரசியல் சாமான்ய மக்களிடம் போய்க் கொண்டிருப்பதால் நிலைமை மாறிவிட்டது. சுதந்திரப் போராட்டக் காலத்தின் அரசியல் வேறு. அந்தக் காலத்தில் இரண்டாடை உடுத்திய காந்திஜியே அரசியலில் இருந்தார். ஆனால், சுதந்திர இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பை அவர் ஏற்கவில்லை. காந்திஜி சுதந்திர இந்தியாவில் பொறுப்பேற்காததற்கு என்ன நியாயமும் காரணமும் உண்டோ, அவை ராஜாஜிக்கும் உண்டு. ஆனால் ராஜாஜி சுதந்திர இந்தியாவில் பதவிப் பொறுப்புகளை ஏற்றார். அதனால் அவருக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. காந்திஜியைப் போன்று ராஜாஜியும் ஆன்ம ஞானி. ''கல்கி'' கிருஷ்ணமூர்த்தியே ஒரு சமயத்தில் எழுதினார் ரமண மகரிஷியுடன் ராஜாஜியை ஒப்பிட்டு. அது ரொம்ப உண்மை. அவர் நிர்வாகப் பொறுப்பை ஏற்று, கோப்புகளைப் புரட்டித் தனி நபர்களின் தேவைகளை வழங்க முடியாத ஒரு நிலையில்தான் ''கல் நெஞ்சினர்'' என்று பெயர் எடுக்க நேர்ந்தது. ஆனால் நானறிந்தவரை அவர் நல்ல ஈர நெஞ்சினர்.

*(''செங்கோல்'' 23-9-84 இதழில் வெளியானபடி)*

## ராஜாஜியின் அரசியல் வைதிகம்

விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரசில் முன்னணி ஊழியர்களாக இருந்தவர்களில் மிகப் பெரும்

பாலோர் ஏழைகளே. அவர்களில் சிறந்த பேச்சாளர் களுமிருந்தனர். மாவட்ட மட்டத்தில் தலைவர்களாக இருந்தவர்களிலேயும் பெரும்பாலோர் ஏழைகளே. இவர்களிலிருந்துதான் மாநில சட்டமன்றத்திற்கும் ஜில்லா போர்டுகளுக்கும் தாலுக்கா போர்டுகளுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் காலங்களிலே ராஜாஜி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தாரென்பதனை ஏற்கனவே எடுத்துக் காட்டினேன். இவர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு வசதி செய்யத் தமக்கிருந்த கடமையை ராஜாஜி துறந்துவிடவில்லை என்பதையும் இங்கு நினைவூட்ட வேண்டும். அரசியல் பணியை ஊதியம் தேடுவதற்கான தொழிலாகக் கருதக்கூடாதென்பது அவருடைய உறுதியான கொள்கையென்றாலும், இதற்கு விலக்காக அவர் நடந்து கொண்ட சந்தர்ப்பங்களுமுண்டு.

*1937* -இல் நடந்த சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலிலே பொதுத் தொகுதிகள் அனைத்திலும் நூற்றுக்கு நூறு காங்கிரசுக்கே வெற்றி கிடைத்தது. வெற்றி பெற்ற எம்.எல்.ஏ. க்களில் பெரும்பாலோர் பரம ஏழைகள். இவர்களை தேர்தலில் நிறுத்தி வைத்ததிலே மூதறிஞர் ராஜாஜிக்குத்தான் பெரும் பங்கு உண்டு. இப்படி, பரம ஏழைகளை, உயர் கல்வியில்லாத சாமான்யர்களை சட்ட மன்றத்துக்குள் புகுத்தியதற்காக ஜஸ்டிஸ் கட்சியார் ராஜாஜியையும் காங்கிரசையும் பழித்துப் பேசினர். எம்.எல்.ஏ. பதவியின் கௌரவத்தையே கெடுத்துவிட்ட தாகவும் குற்றஞ் சாட்டினர்.

இந்நிலையில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் 75 ரூபாய் ஊதியமும் ரூ. 2-50 தினப்படியும் வழங்க முதலமைச்சர் பொறுப்பிலிருந்த ராஜாஜி சட்டஞ் செய்தார். இந்தியாவிலேயே சட்டமன்ற உறுப்பிர்களுக்கு

மாதச்சம்பளம் வழங்குவதற்கான சட்டத்தை முதன் முதலில் பிறப்பித்தது சென்னை மாகாணந்தான். அதன் பின்னர்தான் பிற மாகாணங்களும் சென்னையைப் பின்பற்றிச் சட்டஞ் செய்தன. ஏழைகள்பால் இரக்க மற்றவர் என்று சிலரால் வருணிக்கப்படும் ராஜாஜிதான் இந்தக் காரியத்தை மிகுந்த மனிதாபிமானத்தோடு செய்தார்.

## எம்.எல்.ஏக்களுக்குச் சம்பளம்

*1-9-1937* - இல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்த சட்ட முன்வடிவின்மீது முதலமைச்சர் ராஜாஜி ஆற்றிய உரையில் ஒரு பகுதி வருமாறு:

''நான் இப்போது சட்டமுன்வடிவின் முக்கிய விதி குறித்து - அதாவது, இரண்டு அவைகளையும் சேர்ந்த உறுப்பினர்களுக்குச் சம்பளம் வழங்குவது குறித்துக் குறிப்பிட விரும்புகிறேன். உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட வேண்டுமென்று சட்டரீதியான விவாதங்கள் நிறைய நடைபெற்றுள்ளன. உலகெங்கிலும் உள்ள அநேகப் பாராளுமன்றங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இந்தியாவில் இந்த ஆண்டுதான் அநேக மாகாணங்களில் சட்டமன்ற உறுப் பினர்களுக்கு முதன்முறையாக சம்பளம் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட உள்ளது: முதல் தடவையாக புதிய ஒரு பிரிவினர் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருப்பதை மக்கள் உணரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

''போதுமான அவகாசமும் பண வசதியும் படைத் தவர்கள் மட்டும் இப்பதவிகளில் கௌரவமாக பணி ஆற்ற

வேண்டும் என்பது தற்போதைய தேவைகட்குப் பொருத்தமுடையதாக இல்லை. இது குறித்து மேலும் விவாதித்து அவையினுடைய நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. இதனுடைய நோக்கம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், இப்போதைய இந்திய அரசு சட்டத்தில் இதற்கான திட்டத்திற்கு வழிவகை செய்துள்ளது. அதற்கொப்ப நான் இச்சட்ட முன்வடிவை முன்மொழிகிறேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயணப்படி, தினப்படி பொறுத்தவரையில் அதற்கான விதிகளில் வரைமுறைகளை வகுத்துக் கொள்ளலாம்; அவை அடிக்கடி திருத்தப்பட வேண்டியிருக்கும்.

''பயணப்படியும், தினப்படியும் அதிகம் எனப் பலர் கருதுகின்றனர். குறிப்பாக, உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.75 அளிக்கப்படும் நிலையில் அரசினால் புதியதாக இயற்றப்படவிருக்கும் விதிகளில் தினப்படியை யும், பயணப்படியையும் குறைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.75 சம்பளம் வாங்கியே ஆகவேண்டுமென்று யாரையும் நாம் கட்டாயப் படுத்தவில்லை. யாருக்குப் போதுமான நிதி வசதி உள்ளதோ அவர்கள் சம்பளம் பெறும் உரிமையை விட்டுக் கொடுக் கலாம். அதற்காக இந்தச் சட்ட முன்வடிவில் வகை செய்யப் பட்டுள்ளது. ஏழையாக உள்ள உறுப்பினர்களுக்காகத்தான் இச்சட்டம் கொண்டு வரப்பெற்றுள்ளதே தவிர, வசதி படைத்த உறுப்பினர்களுக்காக அல்ல. உறுப்பினர்களில் பின் குறிப்பிடப்பட்ட பிரிவைச் சார்ந்த பலரும் இந்தச் சட்டமுன்வடிவு மூலம் அளிக்கப்படும் தங்களது சம்பளம் வாங்கும் உரிமையை விட்டுக்கொடுக்க முன்வருவார்

களென நம்புகிறேன். இதன் தொடர்பாக ஒன்றைமட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ரூ.75 என்ற விகிதத்தில் சம்பளம் வாங்கும் ஏழ்மை நிலைமையை அடிப் படையாகக் கொண்டு, படிகளின் அளவை நிர்ணயிக்க இருக்கிறோம். ஆனால், இந்த ரூ.75 மாதச் சம்பளத்தை வாங்காத வசதிபடைத்தவர்களுக்கு தங்குமிடம், சாப்பாடு, பயணம் ஆகியவற்றில் கூடுதல் வசதிகளைக் கோரலாம். ரூ.75 சம்பளம் பெறுபவர்களுக்குண்டான தகுதியின் அளவுகோல், வசதி படைத்தவர்களைப் பொறுத்தவரை அவர்கள்மீது திணிக்கப்படமாட்டாது.''

## ஜஸ்டிஸ் கட்சியினரின் கேலிப் பேச்சு

1937 -க்கு முன்பு எல்லா மாகாணங்களிலும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாட்களுக்கு மட்டும் தினப்படியாக ரூ.10 தரப்பட்டு வந்தது. அந்நாளில் சட்டமன்றம் கூடும் நாட்கள் மிகவும் சொற்பமாகவே இருந்தன.

''தியாகிகள்'' எனப் பெயர்பெற்ற காங்கிரஸ்காரர்கள் மாதச் சம்பளம் பெறுவதை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் கடுமையாகத் தாக்கி எழுதியும் பேசியும் பிரச்சாரம் செய்தனர்.

மாதந்தோறும் ரூபாய் 75 சம்பளம் என்பது இந் நாளில் அற்பமான தொகையாக இருக்கலாம். ஆனால், அந்நாளில் இது பெருந் தொகைதான். ஏழைகளான எம்.எல்.ஏ.க்கள் கவுரவத்தோடு வாழ்வதற்கு இந்தத் தொகை பயன்பட்டதெனலாம். இந்நாளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதச் சம்பளம் தரப்படுவதோடு, வேறு

பலவகையான வசதிகளுக்கும் பெருந்தொகை தரப் படுகிறது.

ராஜாஜி காங்கிரஸ் தொண்டர்களுக்கு, காட்சிக்கு எளியராக இருக்கவில்லை என்பது ஓரளவு உண்மைதான். ஆனால், அரிதாகக் காட்சிதரும் சந்தர்ப்பங்களிலே கடுஞ் சொல்லராக இருந்ததில்லை. இன்சொல் வழங்கி அன்புடன் நடத்தும் பண்பாளராகவே இருந்தார்.

அவர் 1937 சூலை முதல் 1939 டிசம்பர்வரை ஒரு முறையும் - பின்னர், 1952 ஏப்ரல் தொடங்கி 1954 ஏப்ரல் வரை ஒரு முறையுமாக சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் பொறுப்பை வகித்தார். அந்தக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல்வரைப் பேட்டி காண முயல்வதுண்டு. தாங்கள் மட்டுமல்லாமல், தங்கள் தொகுதிகளிலுள்ள பிரமுகர்களையும் அழைத்துச் செல்வ துண்டு. ஆனால், முதல்வரின் பேட்டி கிடைப்பது அரிதாக இருந்ததால், சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்பால் சினங் கொள்ளலாயினர்.

ராஜாஜி, தாம் நேரடியாக நிர்வகித்த துறைகளின் கோப்புகளைக் காலந் தாழ்த்தாது உடனுக்குடன் பார்வை யிட்டுக் கடமையைச் செய்வதிலே மிகுந்த அக்கறை காட்டினார். மற்று, சக அமைச்சர்கள் நிர்வகிக்கும் துறைகளின் கோப்புகளையும், மேற்பார்வையிட்டு, இறுதி முடிவு எடுக்கும் பணியையும் செய்து வந்தார்.

1952 -இல் நடந்த தேர்தலில் காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் வாக்காளர் தோல்வியைத் தந்தனர். இதற்கான காரணங்கள், அமைச்சர்

களின் நிர்வாகத் திறமையின்மையும் ஊழல் குற்றச் சாட்டும்தான். இவற்றைத் தவிர்க்கவே சக அமைச்சர் களுக்குத் தாம் ஒதுக்கிய இலாக்காக்களின் கோப்புகளையும் மேற்பார்வையிட்டு இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பை அவர் மேற்கொண்டார். இதனால், தம் வீட்டிலோ, முதல்வர் அலுவலகத்திலோ கட்சி ஊழியர்களும் எம்.எல்.ஏ.க்களும் குவிந்து தமக்குத் தொல்லை தருவதை அவர் விரும்பாதவரானார். ஆம்; அவகாசமில்லாததால்!

ஆனால், எம்.எல்.ஏ.க்கள் தங்கள் தொகுதி வாக்காளரையும், தங்கள் வெற்றிக்கு உதவி புரிந்த பிரமுகர் களையும் திருப்திப்படுத்தக் கடமைப்பட்டவர்களாவர். காரியம் நடக்கிறதோ, இல்லையோ, தங்களுக்கும் தங்களுடன் வரும் பிரமுகர்களுக்கும் பேட்டியளித்து 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று தலையை யசைத்தால் போதும் என்ற நினைப்பில் அவர்கள் முதல்வரைப் பேட்டி காணத் தங்கள் தொகுதி பிரமுகர்களுடன் முதல்வரை அணுகினார்கள். அது நிறைவேறாதபோது அவர்மீது சினங் கொண்டார்கள்.

## பொதுத் தொகுதியில் போட்டியிடாதவர்

ராஜாஜி பொதுத் தொகுதி எதிலும் தம் வாழ்நாளில் போட்டியிடாதவர். 1937 -இல் சென்னைப் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் தொகுதியிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டப் பேரவையிலும் 1952 -இல் ஆளுநரால் நியமிக்கப் பட்டு சட்ட மேலவையிலும் இடம் பெற்றார்.

இரண்டாவது முறையாக அவர் முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்தபோது தமிழ்நாட்டுக் காங்கிரசிலே

கோஷ்டி அரசியல் செல்வாக்கு செலுத்தியது. ஆகஸ்டுக் கிளர்ச்சியின்போது தமிழ்நாடு காங்கிரசிலே ராஜாஜிக்கு எதிராக உருவான கோஷ்டியானது 1952 -இல் காங்கிரசைத் தன் செல்வாக்கில் எடுத்துகொண்டு விட்டது. அந்தக் கோஷ்டியினரைத் திருப்திப்படுத்த முதலமைச்சரால் முடியவில்லை. மற்று, எம்.எல்.ஏ.க்களைத் திருப்திப் படுத்துவதே முதலமைச்சரின் வேலையாக இருப்பதையும் ராஜாஜி வெறுத்தார். ஆயினும், எம்.எல்.ஏக்கள் தங்கள் தொகுதிக்குப் பாடுபட முதலமைச்சரை நாடுவதை அவர் வெறுக்கவில்லை. அதை, முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியே சாதித்துக் கொள்ளலாமென்பதே அவருடைய அணுகுமுறையாக இருந்தது. ராஜாஜி எவருக்கும் காட்சிக்கு எளியராக இருக்கவில்லை என்றாலும், கடிதப் போக்குவரத்துக்கு எளியராக இருந்து வந்தார். யார் கடிதம் எழுதினாலும் அஞ்சலட்டையில் இரண்டு வரிகளிலேனும் பதில் எழுதிவிடுவார். தங்கள் தொகுதிகளின் தேவை களைக் கடிதங்களின் வாயிலாக எம்.எல்.ஏக்கள் தெரி வித்தால், தமக்கு நியாயமெனத் தோன்றியதைச் செய்யத் தாம் தயாராக இருப்பதை சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலே அவர் அடிக்கடி கூறுவதுண்டு. இரண்டாவது முறை அவர் முதலமைச்சர் பதவி வகித்த காலம் முழுவதி லும் மேலவை உறுப்பினன் என்ற முறையிலே சட்டமன்ற காங்கிரஸ் கட்சியில் நான் அங்கம் வகித்து வந்தேன். தாம் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கால் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் காரியங்களுக்காகத் தம்மை அணுகலா மென்று அவர் அடிக்கடி கூறி வந்தார். எம்.எல்.ஏ. பதவியை முறைகேடான காரியங்களுக்காகப் பயன்படுத்து வதற்கு ஆதரவு தர ராஜாஜி உறுதியாக மறுத்து வந்தார்.

இதனால், இரண்டாவது முறை முதலமைச்சர் பதவிக்குரிய ஐந்தாண்டு காலம் முழுவதும் அதிலே அவர் நீடித்திருக்க முடியவில்லை.

## தாமாகவே விலகினார்

முதலமைச்சர் ராஜாஜிக்கும் சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் நிலவிவந்த நடைமுறையானது ஜனநாயகத்திற்கு ஏற்றதோ இல்லையோ, ராஜாஜி கடைப்பிடித்து வந்த அரசியல் ஒழுக்கத்திற்கு ஜனநாயகம் ஒத்து வரவில்லை என்பது மட்டும் உண்மை. அதனால் இரண்டாவது முறை தாமாகவே முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலக வேண்டி ஏற்பட்டது. சரியாக இரண்டாண்டு காலமே அவர் பதவியிலிருந்தார். அவரது அரசு கொண்டு வந்த அரைநாள் கல்வித்திட்டத்திற்கு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியிலும் எதிர்ப்பிருந்ததால்தான் அவர் முதல்வர் பதவியைவிட்டு வெளியேற நேர்ந்ததென்பது வெளிப்படையாகத் தெரிந்த உண்மை. ஆனால், அதைவிடவும் பெரிய உண்மை ஒன்று உண்டென்றால், அது, முதலமைச்சர் பதவியில் நீடிக்க வேண்டுமென்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த அவரால் முடியாமற் போனதுதான்.

இரண்டாவது முறை ராஜாஜி முதல்வராக இருந்த போது தமிழ்நாடு காங்கிரஸ் திரு. காமராசரின் செல்வாக்கில் இருந்தது. அவர்தான் ராஜாஜியை வலுவில் அழைத்துவந்து முதல்வர் பொறுப்பில் அமர்த்தினார் என்பதையும் இங்கு நினைவூட்ட வேண்டும். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் விஷயத்தில் ராஜாஜியின் அணுகுமுறையை காமராசர் கட்டோடு வெறுத்தார்.

காங்கிரஸ் கட்சியைக் கட்டி வளர்த்துத் தேர்தல் களத்திலே அதற்கு வெற்றி தேட வேண்டிய பொறுப்பு முழுவதும் திரு காமராசர்மீது சுமந்திருந்தது. முதல் முறையாக ராஜாஜி முதல்வர் பதவியிலிருந்தபோது தமிழ்நாடு காங்கிரசைக் கட்டி வளர்க்கும் பொறுப்பும் தேர்தல் காலத்திலே அதற்கு வெற்றி தேடித்தரும் கடமையும் அவர் மீதுதான் சுமந்திருந்தது. ஆனால், இரண்டாவது முறையாக அவர் முதல்வர் பதவியிலிருந்தபோது தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகத்தில் முற்றிலும் தொடர்பற்றவராகிவிட்டார். தேர்தல் காலத்தில் தேவைப்படும் நிதியை அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தித் திரட்டித் தரவும், கட்சி எம்.எல்.ஏக்களைத் திருப்தி செய்து அவர்களுடைய தொகுதிகளைக் காத்துத் தரவும் பொறுப்பேற்க இயலாத நிலையில் ராஜாஜி இருந்தார்.

ராஜாஜி ஒரு முனிவரைப்போல் ஆசிரமத்தில் வாழவேண்டியவர். துரதிருஷ்டவசமாக, ஆசிரம முனிவருக்குரிய பண்பாட்டை ஆட்சிப் பொறுப்பிலிருந்து கொண்டு கடைப்பிடிக்க அவர் முயன்றார்.

# நல்ல மரபுகளைப் படைத்த நாயகர்!

## பதவியை விரும்பாத சுபாவம்

ஆசிரம முனிவருக்குரிய மனோபாவத்துடன் ராஜாஜி முதல்வர் பதவியில் இருந்தார் என்று கூறினேன். இதனை, பதவி ஆசையின் விளைவாக நான் கருதவில்லை. நிச்சயமாக, ராஜாஜியை நன்கறிந்தவர்கள் அப்படிக் கருதமாட்டார்கள்.

இயற்கையாகவே அதிகாரப் பதவிகளை யேற்கும் சுபாவம் ராஜாஜிக்கு இருக்கவில்லை. அதிகாரப் பொறுப்பைத் தம்முடன் ஒத்துப்போகும் மனமுடையவர் தலையிலே சுமத்திவிட்டு, அவரிடம் வேலை வாங்கவே விரும்புவார். தமது வாழ்நாளில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு பதவியையும் தாமாக விரும்பிப் பிறரோடு போட்டியிட்டுப் பெற்றதில்லை. இது, அவரிடம் யான் கண்ட உயர்ந்த பண்பாகும்.

1920 -இல் காங்கிரஸ் மாகாணங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப்பட்டன. அதற்குமுன் அரசாங்க மாகாணங்களே காங்கிரஸ் மாகாணங்களாகவும் இருந்தன. தென்னகத்தில் சென்னை ராஜ்யம் முழுவதற்கும் ஒரே மாகாணகாங்கிரஸ் கமிட்டி இருந்தது. 1920 -இல்தான் தமிழ் வழங்கும் பிரதேசம் தனி மாகாணக் கமிட்டியைப் பெற்றது. அப்போது, காங்கிரஸ் மேலிடத்துத் தலைவர்களிடம்மட்டுமல்லாமல் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்

களிடத்திலும் ராஜாஜிக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. தமிழகத்தில் தனி மாகாணக் கமிட்டியை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளை அவரே செய்து முடித்தார். மாகாணக் கமிட்டி உறுப்பினர் தேர்தலையும் நடத்தினார். அவர் விரும்பியிருந்தால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முதல் தலைவராக அவரே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார். ஆனால், தலைமைப் பாரத்தை ஏற்கத் தாம் விரும்பாமல், தமக்கு மிகவும் பிடித்தவரான ஆரணி திரு. சுப்பிரமணிய சாஸ்திரியை அமர்த்தி வைத்து, அவருடன் ஒத்துழைத்தார்.

பின்னர், மாறுதல் வேண்டாதார் குழுவின் தலைவராக ராஜாஜி இருந்த காலத்திலே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மயிலை திரு.எஸ். சீனிவாச ஐயங்காரின் செல்வாக்கில் இருந்தது. அன்னார், மாறுதல் வேண்டுவோரின் அமைப்பான சுயராஜ்யக் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையையும் தம் கைப்பிடியில் வைத்திருந்தார். அந்தக் காலகட்டத்லே ராஜாஜி திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமம் அமைத்து, அதிலே தவசிபோல இருந்து ஆக்கப் பணிகளில் ஈடுபட்டாராதலால். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவி அவரை நெருங்கவில்லை. 1930 -இல்தான் முதன் முதலாக ராஜாஜி தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது, உப்புச்சத்தியாக்கிரகப் போர் தொடங்கவிருந்த நேரம். அப்போதும், சந்தர்ப்பம் நிர்ப்பந்தித்தால்தான் அவர் த.நா.கா.க. தலைவர் பதவியை ஏற்க வேண்டியதாயிற்று. அந்தப் பதவியிலிருந்த திரு.சி.என். முத்துரங்க முதலியார், 1929 டிசம்பரில் சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட லாகூர் காங்கிரஸ் தீர்மானித்தன் காரணமாகப் பதவி விலகினார். அவருக்கு வழிகாட்டியாக இருந்த திரு.எஸ், சீனிவாச ஐயங்கார் அதே காரணத்திற்காக காங்கிரசிலிருந்தே விலகிவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தமிழ்நாடு

காங்கிரஸ்வாதிகள் த.நா.கா.க. தலைவர் பதவியை ராஜாஜி மீது சுமத்தினர்.

தலைவர் பொறுப்பை ஏற்றதும் அவர் மேற்கொண்ட முதற்பணி திருச்சியிலிருந்து 99 தொண்டர்களுடன் புறப்பட்டு வேதாரண்யத்திற்கு யாத்திரை சென்று, அங்கு உப்புச் சட்டத்தை மீறியதாகும். அதற்காக 9 மாத சிறைத் தண்டனை பெற்றார்.

## பதவியைத் துறக்கும் பண்பாடு

ராஜாஜி, ஒருவரே தொடர்ந்து பல ஆண்டுக் காலம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருப்பதை விரும்பாதவர். அப்படியிருப்பதற்கான சந்தர்ப்பமும் செல்வாக்கும் தமக்கு இருந்தும், தாமே விரும்பி ஒதுங்கி நின்று திரு.ஈ.வே. ராமசாமி, திரு.எஸ். சத்தியமூர்த்தி, திரு.சி.என். முத்துரங்க முதலியார், திரு.ஓ.பி. இராமசாமி ரெட்டியார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உதவி புரிந்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பொறுப்பிலிருந்த இரண்டு சந்தர்ப்பங்களிலேயும் ஓராண்டு முழுவதும் அதைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை. அப்போது த.நா.கா.க. தலைவர் பதவிக்கு ஆண்டுதோறும் தேர்தல் நடைபெற்று வந்தது. ஆனால், ராஜாஜி இரண்டு முறையும் இருவேறு காரணங்களுக்காக இடைக்காலத்திலேயே தலைவர் பதவியைத் துறந்தார்.

முதன்முறை திருச்சி நகர மன்றத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ்வேட்பாளரைத் தோற்கடித்ததற்காகவும், இரண்டாவது முறையாக வடாற் காடு ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் காங்கிரஸ் காரர்களே காங்கிரஸ் வேட்பாளர்களைத் தோற்

கடித்ததற்காகவும் பதவி விலகினார். ஆம்; தாம் தலைமை வகிக்கும் நேரத்தில் கட்சிக்குள் கட்டுப்பாடின்மை நேர்ந்த தால் அதற்குத் தாமே பொறுப்பேற்றுப் பதவி விலகுவதாக ராஜாஜி அறிக்கை விடுத்தார். இதுபோன்ற ஆரோக்கிய மான அரசியல் மரபு பிற்காலத்தில் தமிழக அரசியலி லிருந்து மறைந்தே போய்விட்டது. காந்திஜியும் சர்தார் படேலும் வற்புறுத்திக் கேட்டும் தமது முடிவை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார்.

ராஜாஜி தாம் வகித்த எந்த ஒரு பதவியிலும் அதற்குரிய காலம் முழுவதிலும் அமர்ந்து அதிகாரச் சுவையை அனுபவித்ததில்லை.

*1937* -இல் சென்னை மாகாண முதலமைச்சர் பதவியில் சட்டப்படி அதற்குரிய ஐந்தாண்டு காலம் முழுவதிலும் அவர் இருக்கவில்லை. சுமார் இரண்டரை ஆண்டு காலமே இருந்தபின், காங்கிரஸ் மேலிடத்தின் முடிவுப்படி ராஜிநாமாச் செய்தார். ஆட்சிப் பொறுப் பிலிருந்து காங்கிரஸ் விலகியதற்கு ராஜாஜியே தூண்டுதலாக இருந்தார்.

**வழிகாட்டினார்!**

இந்தியாவில் 6 மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பிலிருந்த தென்றாலும், ஆட்சிப் பொறுப்பைத் துறக்க முதலில் முன் வந்தது ராஜாஜியை முதலமைச் சராகக் கொண்டிருந்த சென்னை மாகாணந்தான். பதவிப் பொறுப்பிலிருந்தபோதும் ''ராஜினாமாவை சட்டைப் பையில் வைத்துக் கொண்டுதான் பதவியிலிருக்கிறேன்'' என்று அடிக்கடி சட்டமன்றத்தில் சொன்ன ஒரே முதல்வர் ராஜாஜிதான்.

1952 -இல் இரண்டாவது முறையாக சென்னை மாகாண முதல்வர் பதவியை அவர் ஏற்றபோதும் இரண்டாண்டு காலமே அதில் இருந்துவிட்டு, பின்னர் தாமாகவே விலகிக் கொண்டுவிட்டார்.

1947 -இல் மேற்கு வங்க மாநிலத்தில் ஆளுநர் பதவியில் அமர்த்தப்பட்டபோதும், ஓராண்டு காலம்கூட அதில் அவர் அமர்ந்திருக்கவில்லை. இந்திய அரசின் அழைப்பை ஏற்று, டில்லியில் கவர்னர் - ஜெனரல் ஆனார். அதுவும் ஒரு இடைக்கால அளவில்தான். கவர்னர் ஜெனரல் பதவியை விட்டபின், சென்னை திரும்பி மனநிறைவுடன் இலக்கியப் பணியில் ஈடுபட்டு வந்தார்.

திரும்பவும் பிரதமர் நேருஜி விடுத்த அழைப்பின் பேரில் மத்திய அரசில் சேர்ந்து முதலில் இலாகாப் பொறுப்பு எதுவுமில்லாமல் அமைச்சர் பொறுப்பிலிருந்தார். பின்னர், உள்துறை பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஆனால், சில மாதங்களே அதிலிருந்த பின், தாமாகவே காரணம் எதுவும் சொல்லாமல் விலகிக் கொண்டு சென்னை திரும்பி, வழக்கப்படி இலக்கியப் பணியில் ஈடுபட்டு அமைதியாக வாழ்க்கை நடத்தினார்.

1937 -இல் ஒரு முறையும் 1952 -இல் மற்றொரு முறையும் சென்னை மாகாணத்தில் அவர் முதல்வர் பதவியை ஏற்றது சந்தர்ப்ப நிர்ப்பந்தத்தின் பேரில்தான். 1937 -இல் காங்கிரஸ் ஆறு மாகாணங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அவற்றுள் சென்னை மாகாணமும் ஒன்று. தேர்தல் களத்தில் காங்கிரஸ் புகுவதற்கு முன்பே, அதன் வெற்றி நிச்சயமாகியிருந்தது. அதனால், ''முதல்வர் பதவி தமிழருக்கா, ஆந்திரருக்கா'' என்ற வினா எழுந்தது. தமிழரான திரு.எஸ். சத்தியமூர்த்தியின் பெயரும் ஆந்திரரான திரு.டி. பிரகாசம் பெயரும் போட்டியிட்டன.

ஆகவே, முதல்வர் பதவிக்குப் போட்டியின்றி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவது சாத்தியமில்லையென்பது தெளிவாகத் தெரிந்தது. போட்டியின் மூலம் எவர் முதல்வரானாலும் அதன் விளைவாக ஆந்திரர் - தமிழர் பூசல் ஏற்பட்டு, காங்கிரசுக்குக் கெட்டபெயர் ஏற்படும் அபாயம் இருந்தது. இதனால், இருசாராரும் ஒருமனப் பட்டு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கத் தக்க ஒருவர் தேவைப்பட்டார். அந்த ஒருவர் ராஜாஜியாகத்தான் இருந்தார். இந்தச் சூழ்நிலையில்தான் 1937 -இல் ராஜாஜி போட்டியின்றி முதல்வராகி ஆந்திரர் - தமிழர் பூசலின்றி சென்னை மாகாண ஆட்சியை நடத்தலானார்.

முதல்வர் பதவி வகித்த சுமார் இரண்டரை ஆண்டு காலத்திலே சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக்குள் ஆந்திரர் - தமிழர் பூசல் சிறிதளவு தலைகாட்டிய தென்றாலும், அது ராஜாஜியின் தலைமைப் பதவிக்கு எதிரானதாக இருக்க வில்லை. ஆந்திர மாகாணப் பிரிவினை பற்றியதாகத்தான் இருந்தது. அதை எளிதில் சமாளித்துக் கட்சிக் கட்டுப் பாட்டைக் காப்பாற்ற அவரால் முடிந்தது.

1952 -இல் ராஜாஜி முதல்வர் பொறுப்பை ஏற்றது சட்டமன்றத்திற்கு நடந்த பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் தோல்வியுற்றதன் விளைவாகும். இது பற்றிப் பிறிதோரிடத் தில் விரிவாகக் கூறுவோம்.

**காங்கிரஸ் தலைவராகாததேன்?**

விடுதலைப் போராட்ட காலத்திலே - அதாவது, 1937 -க்கு முன்பு காங்கிரஸ் தலைவர்கள் அடையக்கூடிய பெரும் பதவி ஒன்று இருந்ததென்றால், அது அனைத் திந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் ஓராண்டுகாலத் தலைவர் பதவி ஒன்றுதான். அதற்கு ராஜாஜி

ஒருமுறைகூடப் போட்டியில் புகுந்ததில்லை. அதுபற்றி அவர் நினைத்ததுகூட இல்லை.

*1934* -இல் முதன்முதலாக ராஜாஜியின் பெயரும் பாபு ராசேந்திர பிரசாதரின் பெயரும் காங்கிரஸ் மகாசபைத் தலைவர் பதவிக்குப் பிரஸ்தாபிக்கப்பட்டன. காந்திஜியும் சர்தார் படேலும் ராஜாஜியை விரும்பினர். ராஜன் பாபுவும் ராஜாஜிக்கு ஆதரவாகப் போட்டியைத் தவிர்க்க முன் வந்தார். ஆனால், ராஜாஜி தலைமைப் பதவியை ஏற்க மறுத்து காந்திஜிக்கு எழுதிவிட்டார்.

அதற்கு அவர் சொன்ன காரணம், ''இந்தி தெரியாத நான் காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்தால், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்யர்களோடு என்னால் தொடர்பு கொள்ள முடியாமற் போய்விடும். அதனால் காங்கிரஸ் பலவீனப்பட்டுவிடும்'' என்பதாகும்.

இரண்டாவது முறையாக *1936* -லும் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு ராஜாஜி மேலிடத்துத் தலைவர்களால் கட்டாயப்படுத்தப்பட்டார். அப்போதும் பழைய காரணத்தையே சொல்லிப் பதவியேற்க மறுத்தார். தம் வாழ்நாளில் ஒருமுறைகூட அவர் காங்கிரஸ் தலைவர் பதவியை வகித்ததில்லை.

காந்தி சகாப்தத்திலே - அதாவது, *1934* -க்கு முன்பே இந்தி தெரியாத சேலம் சி. விசயராகவாச்சாரியாரும் மயிலை எஸ். சீனிவாச ஐயங்காரும் காங்கிரஸ் மகாசபைத் தலைவராக இருந்தது ராஜாஜிக்குத் தெரியும். தெரிந்தும், அதை ஒரு காரணமாகச் சொல்லி தலைமைப் பொறுப்பை ஏற்க மறுத்தது, தலைமைப் பாரத்தை ஏற்கத் தயங்கும் அவரது இயற்கையான சுபாவந்தான். இதைத்தான் நான் ''சந்நியாசி மனப்பான்மை'' என்கிறேன்.

காங்கிரஸ் மகாசபை சட்ட விரோதமாக்கப் பட்டிருந்த ஒரு சந்தர்ப்பத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் சிறைப்படுத்தப்பட்டுவிட்டதால், தற்காலிகத் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறை புகுந்தார்.

## குடியரசுத் தலைவர் தேர்தலின் போது...

*1950* -இல் இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, அதன் விதிமுறைப்படி இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் பதவிக்குத் தேர்தல் நடைபெற வேண்டியிருந்தது. அந்தப் பதவிக்கு ராஜாஜியைக் கொண்டுவர நேருஜி விரும்பினார். சர்தார் படேல் ராசன்பாபுவைக் கொண்டுவர விரும்பினார். இவர்களுக் கிடையிலே சந்தர்ப்பவாதிகள் சிலர் புகுந்து இதை கோஷ்டி ரீதியான போட்டியாக உருவாக்கி ஆதாயம் தேட முயன்றனர். அவர்களில் தமிழ் நாட்டவருமிருந்தனர்.

சர்தார்ஜி தமது வீட்டில் காங்கிரஸ் எம்.பிக்கள் சிலரை அழைத்து வைத்துப் பேசி, ராசன்பாபுவுக்கு ஆதரவு திரட்டுமாறு அவர்களை ஊக்குவித்தார். இதையறிந்ததும் நேருஜி தமது நிலையில் பிடிவாதங் காட்டினார். ராசன் பாபுவின் ஆதரவாளர்கள் ''விவசாயிகள் இயக்கத்தை வலுப்படுத்த...'' என்று சொல்லிக் கொண்டு, மாநிலந் தோறும் ''விவசாயிகள் மாநாடு'' நடத்தி அதிலே ''விவசாயி'' என்ற முத்திரையுடன் ராசன்பாபு கலந்து கொள்ளச் செய்தனர். சென்னையிலும் அதுபோன்ற மாநாடு நடந்தது. போட்டி தவிர்க்க முடியாதது என்ற நிலைகூட ஏற்பட்டுவிட்டது.

அப்போது ராஜாஜி டில்லியில் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்தார். குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தல் காரணமாக சர்தார்ஜிக்கும் நேருஜிக்குமிடையில்

கோஷ்டிப் பூசல் உருவாக்கப்பட்டிருப்பதை அறிந்து ராஜாஜி வேதனைப்பட்டார். அதைத் தவிர்க்க முயன்று ராசன்பாபுவைத் தமது மாளிகைக்கு அழைத்து அவருடன் தனித்துப் பேசினார். ராசன்பாபு குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட உறுதியான முடிவுடனிருப்பதை அறிந்த ராஜாஜி,

''நாம் மூத்த அரசியல் தலைவர்கள். முதன்முதலில் நடைபெறும் குடியரசுத் தலைவர் தேர்தலில் நமக்குள் போட்டி ஏற்படுமானால், அதன் மூலம் இளஞ் சமுதாயத் தினருக்குத் தவறாக வழிகாட்டியவர்களாவோம். குடியரசுத் தலைவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதுவே என் விருப்பம்'' என்று சொல்லி, தம் கையால் ராசன்பாபுவுக்குத் தேநீர் கொடுத்து, ''இதனைத் தங்கள் வெற்றிக்குத் தரும் வாழ்த்தாகக் கொள்ளுங்கள்'' என்றாராம்.

இதைக் கேட்டதும் நேருஜி அதிர்ச்சியடைந்தாராம். ஆம்; தமக்கு ஆதரவாக இருந்த நேருஜியைக் கலந்தா லோசியாமல் ராஜாஜி போட்டியிலிருந்து விலகினார்.

தேர்தலில் ராசன்பாபுவே போட்டியின்றி குடியரசுத் தலைவரானார். போட்டியைத் தவிர்க்க ராஜாஜி முன் வராமல் இருந்திருந்தால், நேருஜிக்கும் சர்தார்ஜிக்கும் சமரசம் ஏற்பட்டு, ராஜாஜியே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பமும் உருவாகியிருக்கலாம்.

மூதறிஞர் ராஜாஜி அரசியலிலே ஆரோக்கியமான மரபுகளைப் படைப்பதிலே ஆர்வமுடையவர் என்பதற்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

அரசியலில் ஆரோக்கியமான மரபுகளைப் படைப் பதில் ராஜாஜிக்கு மிகுந்த ஆர்வமுண்டென்பதை

ஏற்கனவே அறிந்தோம். நடைமுறையிலுள்ள பழைய மரபுகளைக் காப்பதிலும் அக்கறை காட்டினார்.

தம்மைச் சூழ்ந்துள்ள அரசியல்வாதிகளோ, உயர் அதிகாரிகளோ மரபுக்கு மாறாகச் செயல்படுமாறு அவரைத் தூண்டுங்கால், 'அது ஒரு புதிய தவறான மரபாகிவிடும்' என்றும், 'அது நடைமுறையிலுள்ள பழைய மரபை அழித்துவிடும்' என்றும் சொல்லி அதைச் செய்ய மறுத்துவிடுவார். அதிகாரிகளாக செய்ய முற்பட்டாலும் அதைத் தடுத்து விடுவார். அப்படிப்பட்டவரும், 1952 -இல் இரண்டாவது முறையாகத் தாம் சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானபோது, ஒரு தவறான அரசியல் மரபைப் படைத்து, அத்துறையிலே அவர் முன்னுதாரணமாகி விட்டார்.

அதுவரை பொதுத் தொகுதியொன்றில் போட்டி யிட்டு சட்டப் பேரவையின் உறுப்பினராகும் ஒருவர்தான் மாகாணத்தின் முதல்வராவதென்ற மரபு ஏற்படுத்தப்பட்டு, அது காக்கப்பட்டும் வந்தது. இதற்குப் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறைதான் முன்னோடி.

## விதிக்கு விலக்காக...

சட்டப் பேரவை உறுப்பினராக இல்லாத ஒருவர் முதல்வராக வந்தாலும் ஆறு மாதத்திற்குள் துணைத் தேர்தலில் ஏதேனும் ஒரு தொகுதியில் போட்டி யிட்டு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட வேண்டும். இல்லையேல், முதல்வர் பதவி பறிபோய் விடும்.

சட்டமன்ற மேலவைக்குரிய தொகுதியொன்றில் தேர்ந்தெடுக்கப்படுவோர் அமைச்சராவது வழக்கம். ஆனால், முதல்வராவது வழக்கமில்லை. மேலவைக்கு

நிதிப் பொறுப்பு இல்லாததால் மேலவை உறுப்பினர் நிதியமைச்சராக வருவதும் இல்லை.

1937 லிருந்து 1939 வரையும் - பின்னர், 1946 தொடங்கி 1952 வரையிலும் காங்கிரஸ் கட்சி பல மாகாணங்களில் ஆட்சிப் பொறுப்பிலிருந்தபோதும் இந்த சிறந்த மரபைக் காப்பதிலே அனைத்திந்திய காங்கிரஸ் கட்சியும், அதன் செல்வாக்கிலிருந்த மத்திய அரசும், அதன் தலைவரான பிரதமரும் மிகுந்த உறுதிகாட்டி வந்தனர்.

அரசியல் பீஷ்மரான ராஜாஜி முதன் முதலாக 1952 -இல் சட்டப் பேரவைக்குப் பொதுத் தொகுதியொன்றில் தேர்ந்தெடுக்கபடாமலே மேலவையின் உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப்பட்டு, சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். 'யானைக்கும் அடிசறுக்கும்' என்னும் பழமொழியை இதற்குச் சான்று காட்டலாம். ஆனால், அது சரியாகாது. 'எந்த விதிக்கும் விலக்கு உண்டு; விலக்கில்லாத விதியே கிடையாது' என்ற பழமொழிப்படி விதிக்கு விலக்காக ராஜாஜி நடந்துகொள்ள சென்னை மாகாண சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி அவரைக் கட்டாயப்படுத்திவிட்டது.

1952 -இல் நடந்த சென்னை மாகாண சட்ட மன்றத் திற்கான பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெரும் பான்மை பெறுவதில் தோல்வியுற்றபோது மாகாண முதல்வர் பொறுப்பிலிருந்த திரு.பி.எஸ் குமாரசாமி ராஜா, 'காபந்து சர்க்கார்' எனப்பட்ட தம் இடைக்கால அமைச் சரவையின் முடிவுப்படி ராஜாஜியை மேலவையின் உறுப்பினராக நியமிக்கும்படி ஆளுநருக்குப் பரிந்துரை செய்தார். அதனை ஆளுநரும் ஏற்றார். அப்போது ஆளுநராக இருந்தவர் முதுபெருந் தேசபக்தரான திரு. ஸ்ரீபிரகாசா ஆவார்.

காங்கிரஸ் மேலிடத்தவரின் இசைவுப்படி ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ளார் என்பதும், அவர் ஆளுநரால் சட்ட மேலவைக்கு ஆறாண்டு காலத்துக்கு உறுப்பினராக்கப்பட்டுள்ளார் என்பதும் ஒரே நேரத்தில் சென்னை மாகாண சட்ட மன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு, எதிர்ப்பின்றி ஏற்கப்பட்டன. தமிழக, ஆந்திர, கேரள, கன்னட மாகாண காங்கிரஸ் கமிட்டிகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அங்குமிங்குமாக முணுமுணுப்போர் சிலர் இருந்தனர். ஆனால், அதனை வெளிப்படையாகக் காட்டமுடியாதபடி சந்தர்ப்பம் அவர்களை நிர்ப்பந்தித்தது.

காங்கிரஸை விடவும் சட்டமன்றத்தில் சற்றுப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருந்த ''முற்போக்கு ஐக்கிய முன்னணி'' யினர் ராஜாஜி மேலவைக்கு நியமன மானதைக் கடுமையாக எதிர்த்தனர். ''ராஜாஜி புறக்கடை வழியாகச் சட்ட மன்றத்திற்குள் புகுந்துவிட்டார்'' என்று சொல்லிக் கேலிக் குரல் எழுப்பினர். கண்டன ரீதியில் சென்னை மாகாண மெங்கும் கிளர்ச்சி நடத்தினர். காங்கிரஸ் கட்சியும் ராஜாஜியும் அசைந்து கொடுக்க வில்லை. ராஜாஜி மேலவையின் வாயிலாக முதல்வர் பொறுப்பை ஏற்றதை பொதுமக்கள் வரவேற்றனர் எனலாம்.

தவறான ஒரு மரபுக்கு ராஜாஜி முன்னுதாரண மானதற்குரிய சூழ்நிலையையும் இங்கு விளக்க வேண்டும். ஆந்திர கேசரி திரு.டி. பிரகாசம் தலைமை யிலும், அதன்பின் திரு.ஓ.பி ராமசாமி ரெட்டியார் தலைமையிலும், அதற்கும் பின்னர் ராசபாளையம் திரு.பி.எஸ். குமாரசாமி ராசாவின் தலைமையிலுமாக - அதாவது, 1946 ஜனவரி முதல் 1952 ஜனவரிவரை

தொடர்ந்து ஆறாண்டுக் காலம் காங்கிரஸ் கட்சி சென்னை மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்து வந்தது. இந்தக் கால கட்டத்திலே அமைச்சரவை திறம்படச் செயல்பட வில்லையெனப் புகார் கூறப்பட்டு வந்தது. ஊழல் புகாரும் அத்துடன் சேர்ந்துகொண்டது. சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக்குள் ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையில் இனவழிப் போட்டியுமிருந்தது. இதிலிருந்து வேறுபட்ட கோஷ்டிப் பூசலும் இருந்தது. ஒரு முதலமைச்சரும் ஐந்தாண்டுக் காலம் பதவியில் நீடிக்க கோஷ்டிப்பூசல் அனுமதிக்கவில்லை.

மற்று, யுத்தப் பிற்காலப் பிரச்னையும், தொடர்ந்து ஆறாண்டுக் காலம் பருவ மழை பொய்த்துப் போனதால் மாகாணத்தில் ஏற்பட்ட வறுமையும் வறட்சியும் காங்கிரஸ் ஆட்சிக்கு பயங்கரச் சோதனைகளாக அமைந்தன.

**காங்கிரஸ் முதுகுக்கு மண்!**

போதாக்குறைக்கு வெள்ளைய ராட்சியின்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ரேஷன்முறை படு தோல்வியடைந்ததால் அரிசி, விறகு, மண்ணெண்ணெய், துணி, சர்க்கரை, பருப்பு ஆகிய அத்தியாவசியப் பொருள் கள் கள்ளச் சந்தைக்குள் பதுங்கிவிட்டன. அவற்றின் விலைகள் விஷம்போல் ஏறி வந்தன. இந்த சோதனை களைச் சமாளிக்கக் காங்கிரஸ் ஆட்சியால் இயலாததால் மக்கள் அதன்மீது ஆத்திரம் அடைந்தனர்.

இதன் காரணமாக, 1952 -இல் நாடாளுமன்றத்திற்கும் அனைத்து மாகாணங்களின் சட்டமன்றங்களுக்கும் நடந்த பொதுத் தேர்தலிலே சென்னை மாகாணத்தில் மட்டுமே காங்கிரஸ் படுதோல்வியடைந்துவிட்டது. தேசம் சுதந்திரம் பெற்றபின் சரியாக நான்கரையாண்டு கழித்து நடந்த முதல்

பொதுத் தேர்தலிலே, மற்ற மாகாணங்களில் காங்கிரசுக்கு மகத்தான வெற்றி! நாடாளு மன்றத்தில் காங்கிரசுக்கு மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமாகவே பெரும் பான்மை கிடைத்தது. சென்னை மாகாணத்தில் மட்டும் நாடாளுமன்றத் தொகுதிகளிலும், பெரும்பாலானவற்றில் காங்கிரசுக்குத் தோல்வி! சட்டமன்றத் தொகுதிகளிலும் அதே கதி! சுதந்திரத்திற்குப்பின் நடந்த முதல் பொதுத் தேர்தலிலேயே அந்தச் சுதந்திரத்தைத் தேடித்தந்த காங்கிரசுக்கு தென்னகத்தில் படுதோல்வி!

அரசியல் நிர்ணய மன்றத்தால் தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டமானது, 21 வயதடைந்தவர்களுக்கு முதன் முதலாக வாக்குரிமையளித்தது. அதன்படி 1952 -இல் நடந்த பொதுத் தேர்தலிலே, அந்த அரசியலைப் படைத்துக் கொடுத்த காங்கிரசின் முதுகுக்கு மக்கள் மண் காட்டினர்!

## ஒரே பிரசார யந்திரம் தமிழரசுக் கழகமே!

சென்னை மாகாணத்தில் ஆந்திரப் பிரதேசத்திலே காங்கிரசுக்குத் தோல்வி யளித்தது கம்யூனிஸ்டுக் கட்சி தான்! ஆனால், சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியான தமிழகத்திலே காங்கிரசை எதிர்ப்பதற்கு, கொள்கை களையும் வேலைத் திட்டத்தையும் கொண்ட வலுவான அரசியல் கட்சி எதுவும் 1952 -இல் இருக்க வில்லை. கம்யூனிஸ்டுக் கட்சியும் போதிய வலுவற்றதாக இருந்தது. அப்படியிருந்தும், 190 இடங்களில் காங்கிரஸ் போட்டியிட்டு 94 இடங்களில் தோற்றுவிட்டது.

விளம்பரத்தை மட்டுமே விரும்பி வெற்றியில் நம்பிக்கையில்லாமல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த சுயேச்சைகளெல்லாம் நாடாளு மன்றத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள்.

அப்போது தமிழ்நாட்டில் ஆற்றல் மிக்க தலைவர்களையும் பேச்சாளர்களையும் எழுத்தாளர்களையும் நாளிதழ்களையும் வார இதழ்களையும் கொண்டிருந்த திராவிடர் கழகமும் திராவிடர் முன்னேற்றக் கழகமும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுக்கெல்லாம் வலுவில் சென்று பிரசாரம் செய்தன. காங்கிரஸ் பிரசார யந்திரமோ துருப்பிடித்துப் போய் பயனற்றுக் கிடந்தது. காங்கிரசுடன் தோழமை கொண்ட கலாசார அமைப்பாக விளங்கிய தமிழரசுக் கழகம் தனது சக்திக் கேற்பப் பிரசாரம் செய்து காங்கிரஸ் கட்சியின் தோல்வியினுடைய சத விகிதத்தைக் குறைத்தது.

காங்கிரசின் தோல்விக்கான பிரதான காரணங்கள் அதற்குத் திறமைமிக்க தலைமையின்மையும் ரேஷன்முறை படுதோல்வியடைந்ததுமே யாதலால், திறமைமிக்க ஒரு முதல்வரை மக்கள் விரும்பினர்.

## முற்போக்குக் கூட்டணி!

காங்கிரஸ் தோல்வியுற்றதால் ''முற்போக்குக் கூட்டணி'' என்ற பெயரால் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆட்சி தோன்றவிருந்தது. அப்போது கம்யூனிஸ்டுகள் ஆந்திரத்தின் ஒரு பகுதியான தெலுங்கானாவில் வன்முறையில் ஈடுபட்டு பயங்கரவாதிகளாக விளம்பரம் பெற்றிருந்தனர். அவர்களது கட்சி சட்டவிரோதமாக்கப் பட்டிருந்தது. பலர் தலைமறைவாகியிருந்தனர். முக்கிய தலைவர்கள் விசாரணைக் கைதிகளாகச் சிறையில் அடைப்படடிருந்தனர்.

இந்த நிலையில் அக்கட்சியின் சார்பில் 64 பேர் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். அவர்களில் ஆந்திரரே மிகுதியாக இருந்தனர். தமிழ்

நாட்டவர் 13 பேர்தான். மலபார் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலும் கம்யூனிஸ்டுகள் கணிசமான அளவில் இருந்தனர்.

கம்யூனிஸ்டு ஆந்திரரில் தோழர் நாகிரெட்டி, தமிழரில் தோழர்கள் பி. ராமமூர்த்தி, ப. ஜீவானந்தம், எம். கலியாணசுந்தரம் ஆகிய சிறந்த தலைவர்கள் சட்ட மன்றத்தில் இடம் பெற்றனர்! இவர்களைச் சமாளிக்கும் திறமையுடைய தலைவர் முதல்வர் பதவிக்குத் தேவைப் பட்டார்.

இந்தச் சூழ்நிலையில்தான் ராஜாஜி பழைய அரசியல் மரபுக்கு மாறாக ஆளுநரால் மேலவைக்கு நியமிக்கப்பட்டு முதலமைச்சரானார். ஆகவே, இது குறித்து சென்னை மாகாணப் பொது மக்கள் கவலைப்படவில்லை. அவர் ஒருவர்தான் அந்த நேரத்தில் மக்கள் பார்வையிலே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கினார். ஆகவே, மாகாணம் புதுவாழ்வைப் பெறுமென்ற நம்பிக்கையோடு ராஜாஜியின் தலைமையை மக்கள் வரவேற்றனர். அவர்கள் மரபைப் பற்றிக் கவலைப்படவில்லை. மாகாணத்தின் மறுவாழ்வைப் பற்றியே கவலைப்பட்டனர்.

தேர்தல் காலத்திலே காங்கிரசுக்கு எதிர்ப்பிரசாரம் செய்த திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ.வெ. ராவும், ராஜாஜி முதல்வரானதை வரவேற்று தம் ''விடுதலை'' வார இதழிலே எழுதினார்.

''கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'' என்பது பழமொழி. இத்தகு மேன்மகனாக, சுட்டபின்னும் வெண்மை தரும் சங்காக ராஜாஜியை மக்கள் கருதி அவரது தலைமையை நம்பிக்கையோடு வரவேற்றனர்.

## கம்யூனிஸ்டு அணி

கொள்கைப் பிடிப்பும் தியாகவுணர்வும் நிர்வாகத்திற் கேற்ற திறமையுமுடையவர்கள் கம்யூனிஸ்டு எம்.எல்.ஏக் களில் பலரிருந்தனரென்றாலும், அவர்கள் சார்ந்திருந்த முற்போக்கு ஐக்கிய முன்னணியில் சந்தர்ப்பவாதிகள் நிறைய இருந்தனர். பல கட்சிகளைக் கொண்ட கதம்பக் கட்சியாகவுமிருந்தது.

ராஜாஜி தாம் முதல்வரான ஆறு திங்களுக்குள் சட்டப் பேரவை காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரை பதவி விலகச் செய்து அவரது தொகுதியில் நடைபெறும் துணைத் தேர்தலிலே போட்டியிட்டு, எம்.எல்.ஏ. ஆகியிருக்கலாம். ஆனால், அப்போது தமிழ்நாடு காங்கிரசுக்குள் அதற்கு நம்பிக்கை தரும் சூழ்நிலை இருக்கவில்லை. மற்றும், 75 வயதான முதுமைப் பருவத்தில் ராஜாஜி முதல்வர் பதவிக்கு அழைக்கப்பட்டார். ஒரு தொகுதியில் போட்டி யிட்டு தம்மைச் சோதனைக்காளாக்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை. முதல்வர் பதவியில் நிலைத்து விடவோ, தமிழ்நாட்டுக் காங்கிரசிலே இரண்டறக் கலந்துவிடவோ அவருக்கு விருப்பமில்லை. ஒரு இடைக்காலத்திற்கு - சென்னை மாகாணத்தை கம்யூனிஸ்டுகளிடமிருந்து மீட்கும் வரையில் - முதல்வர் பதவியிலிருக்க எண்ணியே அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அதனாலும், அவர் ஒரு துணைத் தேர்தலில் போட்டியிட விரும்பாதவரானார்.

சட்டமன்றப் பேரவையிலிருந்து மேலவைக்குக் காங்கிரஸ் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரைப் பதவி விலகச் செய்து, சட்டமன்றப் பேரவை மூலமேனும் ராஜாஜி மேலவை உறுப்பினராகியிருக்க லாம். ஆனால், சட்டப் பேரவையில் காங்கிரஸ் கட்சிக்குப்

பெரும்பான்மை இல்லாததால், அதற்குச் சந்தர்ப்பமே இல்லை.

**புறக்கடை வழியா?**

எதிர்க் கட்சிகளான கம்யூனிஸ்டு, தி.க., தி.மு.க. ஆகிய அமைப்புகள் ராஜாஜி புறக்கடை வழியில் மேலவையில் புகுந்துவிட்டார் என்று உரத்துக் குரல் கொடுத்து வந்தன. அதற்கு, ''திருடன் தலைக்கடை வழியில் வீட்டிற்குள் புகுந்துவிட்டால், வெளியிலிருந்து வரும் வீட்டுக்காரன் திருடனை விரட்டியடிக்க புறக்கடை வழியாகப் புகுவதில் தவறில்லை'' யென்று ராஜாஜி பதிலளித்தார்.

சட்டமன்றத்தின் இரு அவைகளுடைய கூட்டுக் கூட்டம் முதன் முதலாக 1952 ஏப்ரல் திங்களில் கூடிய போது, ஆளுநர் ஸ்ரீபிரகாசா உரை நிகழ்த்தாதபடி சட்ட சபையில் எதிர்க்கட்சியினர் அமளி செய்தனர். முற்போக்கு ஐக்கிய முன்னணித் தலைவராகவும் சட்டசபைக்கு வெளியே ஆந்திர பிரஜா கட்சியின் தலைவராகவும் விளங்கிய முதியவர் டி. பிரகாசம் ஆளுநர் உரைநிகழ்த் தாதபடி ஆர்ப்பாட்டம் செய்தார்.

அன்று, சட்டமன்ற மரபுகள் எதிர்க்கட்சியினரால் மதிக்கப்படவில்லை. அதற்கு அவர்கள் சொன்ன காரணம், ''அரசியல் மரபுக்கு மாறாக ராஜாஜியை மேலவை உறுப்பினராக நியமித்த ஆளுநரிடம் சட்ட மன்றத்திற்கு நம்பிக்கையில்லை'' என்பதாகும். நிலைமை சமாளிக்கப் பட்டு, ஆளுநர் தமது உரையை நிகழ்த்தி முடித்தார்.

தாம் மரபுக்கு மாறாக மேலவையின் நியமன உறுப்பினராக முதல்வர் பதவியை ஏற்றதில் ராஜாஜிக்கே மகிழ்ச்சியிருக்கவில்லை யென்பதை அவரோடு அப்போது

நெருங்கிப் பழகிய என் போன்றவர்கள் அறிந்துகொள்ள முடிந்தது. அந்த மாமேதை தமது சுயசரிதையை எழுத நேர்ந்திருந்தால், ஒளிவு மறைவின்றி தமது வேதனையை அதிலே வெளியிட்டிருப்பார்.

சென்னை மாகாணம் குழப்பத்திலிருந்து காப்பாற்றப் படவேண்டும் என்ற முடிவோடுதான் அவர் தம்மை விவாதத்திற்குரியவராக்கிக் கொண்டு 1952 -இல் முதல்வர் பொறுப்பை ஏற்றார். அதனை, ''ராஜாஜி செய்த பெரிய தியாகம்'' என்று தமது ''கல்கி'' பத்திரிகையில் எழுதினார் நண்பர் ரா. கிருஷ்ணமூர்த்தி.

## துணைத்தேர்தல்கள்

ஆளுநரால் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டு முதலமைச்சர் பொறுப்பை ராஜாஜி ஏற்றதையடுத்து, சில திங்களுக்குள் சென்னை மாகாணத்தில் மூன்று துணைத் தேர்தல்கள் வந்தன. ஒன்று, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள காகினாடா தொகுதியிலே! இந்தத் தொகுதியில் கம்யூனிஸ்டு வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். துணைத் தேர்தலிலே கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் காங்கிரஸ் ஆதரவாளருக்கும் போட்டி ஏற்பட்டு, முன்னது வெற்றி வாகை சூடியது. இதிலே காங்கிரஸ் ஆதரவாளர் தோல்வி யுற்றாலும், அதுபற்றி ராஜாஜி கவலைப்படவில்லை. ஏனெனில், அது காங்கிரசுக்கு ஏற்பட்ட இழப்பல்ல என்பதுதான்.

கோவை - நீலகிரி நாடாளு மன்றத் தொகுதியிலே மற்றொரு துணைத் தேர்தல் நடந்தது. அது, பொதுத் தேர்தலின்போது காங்கிரஸ் கைப்பற்றிய தொகுதி. துணைத் தேர்தலிலும் காங்கிரசுக்கே வெற்றி கிடைத்த தனால், ராஜாஜியின் ஆட்சிக்குப் பிரச்சினை எழவில்லை.

மூன்றாவதாக, அருப்புக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெற்ற துணைத் தேர்தலிலே முத்துராமலிங்கத் தேவரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் நேரடிப் போட்டி ஏற்பட்டது. பொதுத் தேர்தலிலே இந்தத் தொகுதியில் பார்வர்டு பிளாக் வெற்றி பெற்றிருந்தது.

## ராஜாஜியின் பேச்சால் வந்தவினை

துணைத் தேர்தலிலே முதலமைச்சர் ராஜாஜி காங்கிரசுக்கு ஆதரவாகத் தொகுதி முழுவதிலும் சுற்றுலாச் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது, ''இந்தத் துணைத் தேர்தலானது, உங்களுக்கு நான் வேண்டுமா, வேண்டாமா? - என்பது பற்றித் தீர்ப்பளிக்கத் தக்கதாகும். நான் வேண்டுமானால், காங்கிரஸ் வேட்பாளருக்கு வாக்களியுங்கள்'' என்று ஒரு கூட்டத்தில் பேசினார்.

இது, நாளிதழ்களில் பிரதான்யம் தந்து பிரசுரிக்கப் பட்டது. பார்வர்டு பிளாக் கட்சி வேட்பாளருக்காக அக்கட்சியின் தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் வரிந்து கட்டிக்கொண்டு பாடுபட்டார். தேர்தல் முடிவில் காங்கிரஸ் தோல்வியுற்றது. பார்வர்டு பிளாக் கட்சி பொதுத் தேர்தலில் தான் வெற்றி பெற்ற தொகுதியைத் தக்க வைத்துக் கொண்டது. இதிலேயும் புதிதாகப் பிரச்சினை எதுவும் எழவில்லை, ஆயினும், ''நான் வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றித் தீர்ப்பளியுங் கள்'' என்று தேர்தல் காலத்தில் முதலமைச்சர் ராஜாஜி பேசியதால், அந்தத் தொகுதியில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்வி தனது ஆட்சியின்மீது வாக்காளர்கள் தெரிவித்த நம்பிக்கையின்மையாகும் என்று அவர் கருதினார்.

முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள அவர் சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அனுமதி கோரினார். ஆனால் கட்சியின் ஆதரவு கிடைக்கவில்லை. பொதுத் தேர்தலில் காங்கிரஸ் இழந்துவிட்ட தொகுதியை துணைத்தேர்தலிலே கைப்பற்ற முடியாமற் போனதால் அந்த முடிவானது ராஜாஜி ஆட்சிமீது வாக்காளர் தெரிவித்த நம்பிக்கையின்மையாகாது என்று சட்டமன்ற காங்கிரஸ் கட்சியில் பொதுவாகக் கருத்து தெரிவிக்கப் பட்டது. அருப்புக்கோட்டைத் தொகுதியின் முடிவுக்குக் கட்சி அரசியலைவிட பார்வர்டு பிளாக் கட்சிக்கிருந்த சாதி ரீதியான செல்வாக்கே காரணமென்பதும் எடுத்துக்காட்டப் பட்டது.

இது, ராஜாஜிக்குத் திருப்தியைத் தரவில்லை. ஆகவே சட்டமன்றப் பேரவையின் நம்பிக்கையை ஒரு தீர்மானத்தின் மூலம் பெற அவர் கருதினார். ''இது விஷப்பரீட்சையாக முடியக்கூடும்'' என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.கு. காமராசர் அபிப்பிராயப் பட்டார். ஆயினும், ராஜாஜி தமது கருத்தில் பிடிவாதம் காட்டினார்.

ஏற்கனவே நான் சொன்னதுபோல, அரசியலில் ஆரோக்கியமான மரபுகளைப் படைக்க வேண்டு மென்பதிலே ராஜாஜி அக்கறையுடையவராதலால், அருப்புக்கோட்டைத் தொகுதியில் காங்கிரசுக்கு ஏற்ட தோல்வியை ஒரு காரணமாகக் கொண்டு ஆரோக்கியமா ஒரு புதிய மரபைப் படைக்கத் துணிவாக முன்வந்தார்.

**நம்பிக்கை கோரும் தீர்மானம்**

*30-6-52* அன்று கூடிய அப்போதைய சென்னை மாகாண சட்டமன்றப் பேரவையிலே,அவை முன்னவரான

திரு.சி.சுப்பிரமணியம் (நிதியமைச்சர்) அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிந்தார்:

''திரு.சி. ராசகோபாலாச்சாரியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவையின் மீது இந்த அவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது.''

ஒரு கட்சியின் அமைச்சரவைமீது நம்பிக்கையின்மையைத் தெரிவித்து எதிர்க்கட்சியினர் தீர்மானம் கொண்டு வருவதுதான் அற்றை நாள்வரை இந்தியாவில் பார்லிமெண்டரி அரசியல் மரபாக இருந்து வந்தது. அதற்கு மாறாக, அமைச்சரவையே தன்மீது நம்பிக்கை தெரிவிக்கும்படி சட்டமன்றப் பேரவையைக் கோருவது என்பது ராஜாஜி தோற்றுவித்த ஆரோக்கியமான புதிய மரபாகும்.

தீர்மானத்தை முன்மொழிந்த நிதியமைச்சர் திரு.சி. சுப்பிரமணியம், ''இந்தியாவில் சட்டமன்றங்களில் இது போன்ற தீர்மானம் கொண்டு வருவது இதுதான் முதல் தடவையாகும். இதற்கெனத் தனிவிதி எதுவும் இல்லாத தால், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பின்பற்றி வரும் நடைமுறையையொட்டியே இத்தீர்மானம் முன்மொழியப் பட்டுள்ளது'' என்று கூறினார்.

நிதியமைச்சர் தீர்மானத்தை முன்மொழிந்து முன்னுரையாகச் சிறிது நேரம் பேசுமுன், தீர்மானத்தின் கர்த்தாவான முதலமைச்சர் ராஜாஜி, தம் சார்பில் அறிக்கை ஒன்றைப் பேரவையில் படித்தார்.

''நான் தாராளமான மனப்பான்மையுடையவன். ஆனால், ஜனநாயகம், கட்சிமுறை ஆகியவற்றைக் கடைப் பிடிக்க வேண்டியிருக்கிறது. அவை தவிர்க்க முடியாதவை என்றாலும், இந்தத் தீர்மானம் முக்கியமாக என்னிட

மிருந்து பிறந்திருப்பதால் இதைப் பொறுத்த வரையில் எதிர்த்தரப்பு என்றோ சர்க்கார் தரப்பு என்றோ பாகுபாடு பார்க்க வேண்டியதில்லை. மனதுக்குள்ளே இருக்கிற கடவுள் சொல்லுகிறபடி நீங்கள் நடந்தால் சரி'' என்று கூறினார். 1952 ஜூன் 30, ஜூலை 1,2,3 ஆகிய நான்கு நாட்களில் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. சட்ட மன்றத்தில் 1952 - 53 -ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பிரேரேபிக்கப்பட்டிருந்த நிலையிலே நம்பிக்கை வோட் கோரும் தீர்மானம் முன்மொழியப் பட்டது. ஆம், வரவு - செலவுத் திட்டம்பற்றிய பொது விவாதம் ஒத்திப் போடப்பட்டு, நம்பிக்கைவோட் கோரும் தீர்மானம் முன்மொழியப்பட்டது.

## காங்கிரஸ்காரர்கள் பேசவில்லை

நிதியமைச்சரைத் தவிர 71 பேர் தீர்மானத்தின்மீது பேசினர். ஆளும் கட்சியான காங்கிரசின் சார்பில் நிதியமைச்சர் தவிர வேறு யாரும் பேச கட்சி அனுமதிக்க வில்லை. பேசியவர்களெல்லாம் எதிர் தரப்பினராகவே இருந்தனர். அவர்களிலும் கம்யூனிஸ்டுகளே அதிகமாக இருந்தனர். விவாதத்தின்போது சூடு பறந்தது. ஆயினும், விவாதம் கண்ணியமான முறையில் நடைபெற்றது.

அவையின் உறுப்பினர் தொகை 375. அதில் காங்கிரஸ்காரர்கள் 152 பேர்தான். எதிர்த் தரப்பினர் 2? பேர். ஆகவே, நம்பிக்கை வோட் தீர்மானத்தை ஆளு கட்சியினர் தங்களுக்கு விடுத்த ஒரு அறை கூவலாகக்கருதி, எதிர்க் கட்சியினர் தீர்மானத்தை ஒருமனப்பட்டு எதிர்த்து அதைத் தோற்கடித்திருக்க வேண்டும். ஆம்; சட்டப் பேரவையில் பெரும்பான்மை பலமில்லாத கட்சியிடம் ஆட்சியை ஒப்புவித்ததற்காக ஆளுநர் உரைநிகழ்த்த

இயலாமல் ஆர்ப்பாட்டம் செய்த எதிர்க்கட்சியினர் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தியிருக்கவேண்டும்.

மேலவை உறுப்பினராக ஆளுநரால் நியமிக்கப் பட்டதால் புறக்கடை வழியாகப் புகுந்து முதலமைச்ச ரானவர் என்று ராஜாஜியை வருணித்தவர்கள் அவரைத் தலைக்கடை வழியாக வெளியேற்ற இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், எதிர்த் தரப்பினர் தீர்மானத்தைக் கட்டுப்பாடாக எதிர்த்தனர். இது, எதிர்க் கட்சியினரைப் பிளவுபடுத்த ராஜாஜி செய்யும் சதி என்றும் கூறினர்.

''அருப்புக்கோட்டை தொகுதி வாக்காளர்கள் காங்கிரசுக்கு எதிராகத் தீர்ப்பளித்தால், அதன்மீது அப்பீல் செய்வதுபோல தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே இந்த அவை என்ன உச்ச நீதிமன்றமா?'' என்று கம்யூனிஸ்டுத் தரப்பில் கேட்கப்பட்டது.

3-7-52 அன்று தீர்மானத்தின்மீது வாக்கெடுக்கப் பட்டது. நிதியமைச்சர் முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து 200 உறுப்பினர்களும், எதிர்த்து 151 உறுப்பினர் களும் வாக்களித்தனர். ஒரு உறுப்பினர் நடுநிலைமை வகித்தார். பெரும்பான்மையான வாக்குகளால் ராஜாஜி அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பேரவைத் தலைவர் திரு.ஜே. சிவசண்முகம் பிள்ளை அறிவித்தார்.

சட்டமன்றப் பேரவையிலே காங்கிரஸ் கட்சிக்கு நிகர பெரும்பான்மை இல்லாத நிலையிலேதான் ராஜாஜி அமைச்சரவைமீது நம்பிக்கை கோரும் தீர்மானம் முன் மொழியப்பட்டது என்பதை இங்கு மீண்டும் நினைவில் கொள்ளவேண்டும்.

## எதிர்க்கட்சியிலும் ஆதரவாளர்கள்

வியப்பென்ன வென்றால், எதிர்க்கட்சித் தரப்பிலேயும் சிலர் நிதியமைச்சர் முன்மொழிந்த தீர்மானத் திற்கு ஆதரவாக - அதாவது, ராஜாஜி அமைச்சரவைமீது நம்பிக்கை தெரிவித்து வாக்களித்ததாகும். கணிசமான எண்ணிக்கையில் இருந்த கம்யூனிஸ்டு உறுப்பினர் அவ்வளவு பேரும் கட்டுப்பாடாக அவையில் ஆஜராகி தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தனர்; காரசாரமாகப் பேசினர். 23 உறுப்பினர்கள் ஆஜராகவில்லை.

தம்முடைய தூண்டுதலால் நிதியமைச்சர் முன் மொழிந்த ''நம்பிக்கை ஓட்'' கோரும் தீர்மானம் தோற் கடிக்கப்படலாம் என்ற அச்சமும் ராஜாஜிக்கு இருந்தது. அந்தத் தோல்வியையும் சந்திக்கும் துணிவுடனேயே அவர் தமது தீர்மானத்தை முன்மொழியச் செய்தார். எதிர்க்கட்சித் தரப்பில் சுயேச்சையாளர்கள் அதிகம் பேர் இருந்தனர். எதிர்த்தரப்பில் கம்யூனிஸ்டு அல்லாத உறுப்பினர்களிலே பலர் ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றது, சென்னை மாகாணத்திற்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும் என்று கருதினர். அதனால், தீர்மானத்திற்கு ஆதரவாக அவர்கள் வாக்களித்தனர்.

வீழ்ச்சியிலிருந்து ராஜாஜியின் அமைச்சரவை தப்பியது. நம்பிக்கை வோட் கோரும் தீர்மானம் தோற்றி ருந்தால், சட்டப் பேரவையைக் கலைத்து மறுதேர்தல் நடத்துமாறு ஆளுநருக்கு ஆலோசனை கூற ராஜாஜி தயாராக இருந்தார். அப்படி மறு தேர்தல் நடந்தால் சேலம் நகரத் தொகுதியிலாவது, தாம் பிறந்த தொரப்பள்ளி கிராமத்தைத் தன்னுட்கொண்ட ஒசூர் தொகுதியிலாவது போட்டியிடவும் ராஜாஜி தயாராக இருந்தாரென்பதை

என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. அவர், தனது கட்சிக்கு 152 பேர் பலமும் எதிர்த் தரப்பினருக்கு 223 பேர் பலமும் இருந்த நிலையிலே நம்பிக்கை வோட் கோரி வெற்றி பெற்றார். இதற்குப்பின், ''புறக்கடை வழியாகப் புகுந்து முதலமைச்சரானார்'' என்ற பழிச்சொல் மறைந்தது.

## தேவரும் பாராட்டினார்

தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவர்களில் அருப்புக் கோட்டைத் தொகுதியின் துணைத் தேர்தல் முடிவுக்கு மூல காரணஸ்தராகிய திரு. முத்துராமலிங்கத் தேவர், சட்டப் பேரவை உறுப்பினர் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தார். அவர், ராஜாஜியின்பால் தமக்குள்ள வெறுப் புணர்ச்சியை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்திப் பேசினார். ஆனால், அவர்கூட, ராஜாஜிக்குப் பெருமை தரக்கூடிய ஒரு செய்தியை அவரைப் பார்த்தே கூறினார். அது வருமாறு:

''அருப்புக்கோட்டைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வியுற்ற செய்தி தெரிந்ததும் நீங்களே ராஜிநாமா செய்யப் பிரியப்பட்டதாகக் கேள்விப்பட்டேன்... அதைக் கேட்ட அளவுக்கு நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால், உங்கள் சகாக்கள்தான் உங்களை ராஜிநாமா செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள் என்று அறிகிறேன்.''

*('சென்னை சட்டப் பேரவை விவாதம்; வால்யூம் - 2; பக். 399)*

# அற்புதங்கள் புரிந்த அதிசய முதல்வர்!

முதலமைச்சர் ராஜாஜி, மாகாணத்தில் நடைமுறையிலிருந்துவந்த உணவுப் பங்கீட்டு முறையையும், அதற்காக அமுல் நடத்தப்பட்டு வந்த உணவு நடமாட்டக் கட்டுப்பாட்டு முறையையும் ரத்து செய்து ஆணை பிறப்பித்தார்.

''ரேஷன்'' எனப்பட்ட உணவுப் பங்கீடானது நாட்டில் நிலவிய உணவுப் பற்றாக்குறை காரணமாகத்தான் தோன்றிய தென்று சொல்லப்பட்டது. ஆனால் உணவுப் பற்றாக்குறை சுயநலக்காரர்களால் செயற்கையாகச் சிருஷ்டிக்கப்பட்டதாகுமென்று ராஜாஜி கருதினார். காந்தியடிகள் கருத்தும் இதுவாகவே இருந்தது. இந்த இருபெருந் தலைவர்களேயன்றி, காங்கிரஸ் முன்னணித் தலைவர்களில் ஒரு சாராருடைய கருத்தும் இதுவாகவே இருந்து வந்தது.

## உணவுப் பங்கீட்டு முறை

மகாராட்டிரத்திலுள்ள நாஸிக் நகரில் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் வருடாந்திர மகா சபையில் திரு. புருஷோத்தமதாஸ் தாண்டன், தாம் நிகழ்த்திய தலைமையுரையிலே உணவு நடமாட்டக் கட்டுப்பாட்டையும், உணவுப் பங்கீட்டு முறையையும் ரத்து செய்ய வேண்டுமென்று கோரினார்.

மாநிலங்களிலும் மத்தியிலும் ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரஸ்காரர்கள் ரேஷனை ரத்து செய்தால், மக்கள் பட்டினியால் மடிய நேருமென்று பயமுறுத்தினர். இவர்கள் அதிகார வர்க்கத்தின் மனப்பான்மையை எதிரொலித்து வந்தனர். பிரதமர் நேருஜியும் ரேஷனை அகற்ற வேண்டுமென்ற கருத்துக்கு உறுதியாக எதிர்ப்புக் காட்டி வந்தார்.

இந்தச் சூழ்நிலையில் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் சார்பில் பொறுப்பை ஏற்ற ராஜாஜி, திடீரென 6-6-52 -இல் சென்னை வானொலியில் உரைநிகழ்த்தி, உணவுக் கட்டுப்பாடும் உணவுப் பங்கீடும் 15-6-52 முதல் அரசால் கைவிடப்படுவதாகப் பிரகடனம் செய்தார். இது, யாரும் எதிர்பாராததாக இருந்தது.

தாம் பதவி யேற்றதுமே ரேஷனை அகற்றுவதற்கு மத்திய அரசின் ஆதரவைக் கோரினார். அப்போது மத்தியில் ரபி அகமது கித்வாய் உணவுத்துறை யமைச்சராக இருந்து வந்தார். ரேஷனை அகற்றுவது பற்றி முதல்வர் ராஜாஜி மத்திய உணவு அமைச்சருடன் தொலைபேசியில் வாதாடியபோது நான் அவரது அருகிலிருக்க நேர்ந்தது. கித்வாய் ரேஷனை அகற்றுவதற்கு ஆதரவளிக்க உறுதியாக மறுத்தார். ராஜாஜியும் தமது நிலையில் பிடிவாதம் காட்டினார். ''ரேஷனை அகற்ற ஆதரவு தராவிடில், சென்னை மாகாணத்தில் மத்திய அரசே ரேஷன் கடைகளை ஏற்று நடத்தவேண்டும்'' என்றார். இதற்கு, சென்னை நகரில் வட்டந்தோறும் அஞ்சலகங்களை மத்திய அரசே நடத்தி வருவதை முதல்வர் ராஜாஜி சான்று காட்டினார். கித்வாய் சென்னைக்கு வந்து ராஜாஜியுடன் வாதாடினார். முடிவில் அவரது கருத்தை ஏற்க வேண்டியதாயிற்று.

## முதல்வர் ராஜாஜி வானொலியில் பேசினார்

சென்னை வானொலியில் 6-6-52 -இல் ராஜாஜி வெளியிட்ட பிரகடனத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:

''நமது மாகாணத்தில் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்தல், மற்றும் விநியோகிக்கும் முறை ஆகியவற்றிலுள்ள கட்டுப்பாடுகளைப்பற்றி நான் பதவி ஏற்றதிலிருந்தே தீவிரமாக சிந்தித்து வந்துள்ளேன்.

''உணவு விஷயத்தில் நாம் நிர்வகிக்கும் முறை மிகவும் கஷ்டம் தருவதாக உள்ளது என்ற எண்ணம் எல்லாத் தரப்பு மக்களிடமும் இருந்து வருகிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்துள்ளோம். உணவு உற்பத்தி செய்பவர்களிடம் உற்சாகம் இல்லை. ஏராளமான ஏய்ப்புகள். இது, எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனால், அதைத் தடுப்பதற்கு யாருக்குமே அக்கறை இல்லை. இதுபற்றி வேண்டிய அளவு விவாதித்து, பின்னர் மத்திய உணவு அமைச்சரையும் கலந்து பேசி, கட்டுப் பாடுகளை நீக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசும் அனுமதி தந்துள்ளது. ஆகவே, உடனடியாக இது அமுலுக்கு வரும்.

''சென்னை மாநிலம் 6 மண்டலங்களாகப் பிரிக்கப் படும். ஒவ்வொரு மண்டலமும் உணவு தான்யத்தில் 2 உபரி மாவட்டங்களைக் கொண்டதாக இருக்கும். அந்த மாவட்டங்கள், அவற்றுடன் இணைக்கப்பட்ட பற்றாக் குறை மாவட்டங்களின் தேவைகளைக் கட்டுப்பாடற்ற சந்தை மூலம் பூர்த்தி செய்யும். இந்த மண்டலங்களுக்குள் வியாபாரமும் நடமாட்டமும் கட்டுப்பாடு அற்றதாக இருக்கும். கட்டுப்பாடற்ற சந்தையில் எந்த நுகர்வோருக் கும் அல்லது வியாபாரிக்கும் விலையைப் பொறுத்தோ,

அரிசியின் அளவைப் பொறுத்தோ யாதொரு கட்டுப்பாடும் இருக்காது. ஆங்காங்கு நியாய விலைக்கடைகள் இருக்கும். அங்கு விலையும், விற்கப்படவேண்டிய அளவும் அரசால் முறைப்படுத்தப்படும். இது திடீரென்று ஏற்படும் இடர்ப் பாட்டுக்குப் பாதுகாப்பாக அமையும். ஒரு மண்டலத்தி லுள்ள ஓர் இடத்திலிருந்து இன்னொரு மண்டலத்திலுள்ள எந்த இடத்திற்கும் அனுமதிச் சீட்டு இல்லாமல் ரெயில் மூலமாகவோ மோட்டார் வாகனங்கள் மூலமாகவோ தானியம் கொண்டு செல்ல அனுமதிக்கப் பட மாட்டாது. ஆயினும், மண்டலத்திற்கு உள்ளே யாதொரு கட்டுப் பாடும் இருக்காது. ஒரு மண்டலத்திற்கும் இன்னொரு மண்டலத்திற்கும் இடையே உழவர்கள் தலைச் சுமையாகவோ வண்டிகள் மூலமாகவோ சிறு அளவு தானியம் கொண்டு செல்வது தலையீட்டுக்கு உள்ளாகாது.

''இவ்வாறாக சட்ட ரீதியான பங்கீட்டு முறை உள்ள எல்லா நகராட்சி, மற்றும் நகரப் புறங்களில் இந்த முறை இப்பொழுது நீங்கிவிடும். சில பங்கீட்டுக் கடைகள் நியாய விலைக் கடைகளாக செயல்படும். இந்தக் கடைகள் மூலமாக நுகர்வோர்களுக்குப் போதிய அளவு கட்டுப் பாடற்ற சந்தையில் அரிசி கிடைக்கும். இதுவரையிலும் பங்கீட்டு முறையின் கீழ் இருந்த பகுதிகளில் யாதொருவித பயத்திற்கும் தேவையில்லை.

''ஒவ்வொரு மாறுதலும் துவக்கத்தில் தவிர்க்க முடியாத சில இடர்ப்பாடுகளை எதிர் நோக்கத்தான் வேண்டியுள்ளது. ஆனால், மாறுதல் கட்டாயம் பயனுடையதாகத்தான் இருக்கும். உபரி மாநிலங் களிலுள்ள நகராட்சிப் பகுதிகளில் தற்போதுள்ள முறைப் படி அல்லாத பங்கீட்டு முறை கைவிடப்படுகிறது.

கட்டுப்பாட்டுச் சந்தையில் ஒரு உறுதியான நிலைக்கு வரும்வரையில் நியாயவிலைக் கடைகளில் தற்போதுள்ள பங்கீட்டு அட்டைகளுக்கு தற்போதுள்ள பங்கீட்டு அளவு தொடரும். அதேபோல் முறை அல்லாத பங்கீட்டு முறை உள்ள மலபார், நீலகிரி ஆகிய பகுதிகளில் தற்போதுள்ள பங்கீட்டு அட்டைகளின் பேரில் தற்போதுள்ள அளவு தொடர்ந்து கொடுக்கப்படும். சிறிது காலத்திற்குப் பிறகு - அதாவது, 4 வாரங்கள் என்று மதிப்பிடும் காலத்திற்குப் பிறகு, கட்டுப்பாடு இல்லாத சந்தையில் வேண்டிய அளவு அரிசி கிடைக்க ஆரம்பித்தவுடன் இந்த அளவு குறைக்கப் படலாம்.

''அரசிடம் தற்போது கையிருப்பிலுள்ள அரிசி - அதாவது, ஏறக்குறைய நாலரை லட்சம் டன்கள் நியாய விலைக்கடைகள் மூலமாக வினியோகம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். அரசினுடைய ஒதுக்கீடு கையிருப்பை தற்போது கையாளும் மொத்த விற்பனையாளர்களும் நியாய விலைக்கடைகளை நிர்வாகம் செய்யும் சில்லரை விற்பனையாளர்களும் வெளிச் சந்தையில் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏதேனும் நெருக்கடியை சமாளிப்பதற்காக தற்போது இருப்பிலுள்ள நாலரை லட்சம் டன் அரிசியை ஒதுக்கி வைக்கிறோம். ஏதேனும் நெருக்கடியை சமாளிக்கவும் நியாய விலைக் கடைகள் மூலமாக அரிசி விநியோகம் செய்வதற்கு வேண்டிய அளவு அரிசியை மாநிலத்தின் எந்தப் பகுதிக்கும் இதன் மூலம் கொண்டு செல்ல முடியும். வரும் ஆண்டிற்கு ஒரு நெருக்கடி ஒதுக்கீடாகப் பயன்படுத்து வதற்காக சில உபரி மாவட்டங்களில் சுலபமான லெவி முறை மூலமாக ஒன்றரை லட்சம் டன் அளவு ஆண்டு கையிருப்பாக வைத்துக் கொள்ளக் கருதப்படுகிறது.

‘‘ஆர்வம் மிக்க மற்றும் அறிவுக் கூர்மையான பத்திரிகையாளர்களை இரு வாரங்களுக்கு ஒருமுறை நான் சந்தித்துக் கொண்டிருந்தாலும் கொள்முதல் மற்றும் பங்கீடு குறித்த பொருள்களின்மீது என்னுடைய கருத்துக்களை அவர்களுடன் கலந்து கொள்ளாமல் இருந்துள்ளேன். உண்மையாகவே ஓரளவுக்கு அவர்களை நான் திசை திருப்பியிருக்கிறேன் என்றுகூடச் சொல்லலாம். எங்களுடைய கருத்துக்களைத் தகுந்த காலத்திற்கு முன்னதாக பிரசுரிப்பதால் ஏற்படும் இன்னல்களை ஏற்றுக் கொள்ள நான் விரும்பவில்லை. எல்லாத் துறைகளிலும் துரதிருஷ்டவசமாக சுரண்டப்படும் சமூகத்தினரின் மேல் நிழல்படுகிறது. பேராசை என்ற பெரிய ராட்சசனிடம் எனக்குப் பயமாய் இருந்தது. அரைவேக்காடான செயற் குறிப்புகள், மற்றும் கருத்துக்களின் பலனை, சுரண்டுவோர் அடையக்கூடாது என்று விரும்பினோம்.

‘‘இது விஷயத்தில் எதுவும் திட்டவட்டமாக முடிவை நிச்சயிக்கவும் புதிய ஏற்பாடு எதுவும் செய்யவும் மத்திய அரசின் அனுமதி நமக்குத் தேவைப்படுகிறது. என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி இங்குவந்த மத்திய சர்க்கார் உணவு மந்திரி, மத்திய மந்திரி சபையில் பொருளாதாரக் குழுவிடமிருந்து (Economic Committee) இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்கள். உணவு தானியங்களைக் கொண்டு செல்வதிலும், அதன் வியா பாரத்திலும் கட்டுப்பாடு இல்லாத நிலையைத் திரும்பக் கொண்டு வருவதில் சென்னை மாகாணம் எல்லோருக்கும் முன்னோடியாக விளங்குகிறது. நமது பிரதம மந்திரி, மற்றும் அவருடைய ஆலோசகர்களின் முழு தார்மிக ஆதரவும் நமக்குள்ளது. நாம் மிக்க கவனமாகவும், விரயம் செய்யாமலும் இருந்தால் நமக்கு வேண்டிய உணவு தானியங்... நமக்குத் தாராளமாக உள்ளது. இத்தனை

வருஷங்களாக நாம் அனுபவித்து வந்த கட்டுப்பாடுகள், நாம் எப்படி இனி கவனமாக இருக்க வேண்டும், நாம் எப்படி நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதற்கு ஒரு படிப்பினை. நிர்ப்பந்தத்தின் காரணமாக நாம் மேற்கொள்ள வேண்டியிருந்த சில நல்ல பழக்க வழக்கங்களையும் நாடு விட்டுவிடக்கூடாது.

''மிகுந்த சிரமங்களுக்கிடையே உணவு தானியங்களை உற்பத்தி செய்பவர்களும், அவற்றை வாங்கிச் சேமித்து வைக்கும் மொத்த வியாபாரிகளும் பின்னர் அதை உபயோகிப்பவர்களிடம் விநியோகிக்கும் ஏராளமான வியாபாரிகளும் தங்களை நாட்டுக்கு விசுவாசமுள்ள பிரஜைகளாகவும் தர்மத்தைக் காப்பவர்களாகவும் சர்க்காருக்கு சிநேக மனப்பான்மை உள்ளவர்களாகவும் கருதி நடக்க வேண்டும். உத்தியோகஸ்தர்களின் தொல்லைக்கு ஆளாகாமலும், அவர்களின் கண்காணிப்புக்கு உட்படாமலும் நாம் அப்பழுக்கற்றவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும்.

''தேசபக்தி கொண்டவர்களாகவும் கடவுளுக்குப் பயப்படுபவர்களாகவும் இருக்க வேண்டும். எதற்கும் தகுதியானவர்கள் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். எனது நம்பிக்கை வீண் போகாது என்ற நம்பிக்கை எனக்குள்ளது. விளைவை எதிர்பார்க்காமல் மிக்க துணிச்சலுடன் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளேன். என்னுடைய சக அமைச்சர்களும் இது விஷயத்தில் என்னுடன் உடன்பாடு கொண்டவர்களாகவே உள்ளனர்.

''இப்புதிய ஏற்பாட்டிற்கு நமது பிரதமரும் அவருடைய சக அமைச்சர்களும் தங்களுடைய அங்கீகாரத்தைத் தந்துள்ளார்கள். என்னுடைய முயற்சிக்கான ஆதரவை நீங்கள் கைவிடமாட்டீர்கள் என்ற பூர்ண

நம்பிக்கை எனக்கு உண்டு. பட்டணங்களிலும், நகரங் களிலும் உள்ள நாணயமான வியாபாரிகளின் நல்லெண் ணம் எனக்கு ஆதரவு தந்து என்னைக் காப்பாற்றும் என்று நம்புகிறேன்.

''விவசாயிகளே! பகவான் உங்களைக் காப்பாற்று வாராக! நீங்கள் சாகுபடிசெய்த விளைபொருள்களை நீங்கள் எந்த இடத்துக்கும், எங்கு வேண்டுமானாலும் இஷ்டப்படி கொண்டு செல்லலாம். விற்பனை செய்யலாம். உங்கள் இஷ்டப்படி யாருக்கு வேண்டு மானாலும் விற்பனை செய்யுங்கள்.''

**கள்ளச் சந்தை ஒழிந்தது!**

ரேஷனை அகற்றியதோடு ராஜாஜி நின்றிருந்தால் உண்மையில் நாட்டில் உணவுப் பஞ்சம் விசுவரூப மெடுத் திருக்கக்கூடும். ஆனால், உணவு நடமாட்டத்திற்கிருந்த தடையையும் அகற்றினார். அத்துடன் சட்ட பூர்வமான ரேஷன் கடைகளை சம்பிரதாய பூர்வமான நியாய விலைக் கடைகளாக மாற்றினார். ரேஷன் கைவிடப்பட்ட சில நாட்களுக்குள் கள்ளச் சந்தையில் பதுங்கியிருந்த அரிசி வெள்ளைச் சந்தைக்கு வந்துவிட்டது. அரிசியை நியாய விலை கூறி விற்போர் சென்னை நகர தெருக்களில் நடமாடலாயினர்.

திடீரென ரேஷனை அகற்றி ராஜாஜி ஆணை பிறப் பித்தபோது, அரசின் உயர் அதிகார வர்க்கம் அதிர்ச்சி யடைந்ததெனலாம். த.நா.கா. தலைவர் காமராசர்கூட ''பொறுத்துப் பார்த்துத்தான் கருத்துத் தெரிவிக்க வேண்டும்'' என்று செய்தியாளரிடம் கூறினார். ஆனால், நாளாக ஆக ராஜாஜியின் ஆட்சியை மக்கள் பாராட்டு மளவுக்கு ரேஷன் ஒழிப்பு நடவடிக்கைக்கு வெற்றி

கிடைத்தது. பின்னர், பிற மாகாண அரசுகளும் சென்னை மாகாண அரசைப் பின்பற்றி அது கடைப்பிடித்த நடைமுறைப்படியே உணவுப் பொருள் நடமாட்டத் தடையை அகற்றி, ரேஷனை ரத்து செய்தன. ''அற்புதஞ் செய்த அதிசய முதல்வர்'' என்று எதிர்க் கட்சியாளரும் ராஜாஜியைப் பாராட்டினர். உணவுப் பொருளைப் பொறுத்தவரையில் ''பதுக்கல்'' ஒழிந்தது! ராஜாஜியின் ரேஷன் ஒழிப்புக்கு வெற்றி தந்ததிலே நியாயவிலைக் கடைகளுக்குப் பெரும் பங்கு உண்டு!

## "என் முதல் நெம்பர் விரோதிகள்"

மார்க்சியத்தின் வழிப்பட்ட கம்யூனிசத்தை ராஜாஜி விரும்பாதவரானார். அதற்கு, காந்தியத்தில் அவருக்கிருந்த அழுத்தமான நம்பிக்கை முதற்காரணமாகும். அடுத்தது, கம்யூனிஸ்டு இயக்கமானது இந்தியப் பெரு நாட்டிலே வன்முறையோடு கூடி இயங்கத் தொடங்கியதாகும். சென்னை மாகாணத்தில் முதலமைச்சர் பொறுப்பை அவர் ஏற்ற காலத்திலே, ஆந்திரத்தைச் சார்ந்த ''தெலுங்கானா'' பிரதேசத்தில் கம்யூனிஸ்டுகள் பயங்கரப் புரட்சியை நிகழ்த்தி வந்தனர். இவற்றின் காரணமாக, 64 கம்யூனிஸ்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்த சென்னை மாகாண சட்ட மன்றத்திலே, ''கம்யூனிஸ்டுகள் என் முதல் நெம்பர் விரோதிகள்'' என்று கூறியதோடு, ''அவர்களும் என்னைத் தங்கள் முதல் நெம்பர் விரோதியாக ஏற்கவேண்டும் என்பது என் விருப்பம்'' என்றும் பிரகடனம் செய்தார்.

கொள்கை ரீதியிலும் நடைமுறையிலும் கம்யூனிஸ்டு கள்பால் வெறுப்புக் கொண்டிருந்தாரென்றாலும், ஜன நாயகத்திற்கு விரோதமான முறைகளைக் கையாண்டு கம்யூனிஸ்டுகளை ஒடுக்க அவர் முயலவில்லை. அந்தப்

போக்கை அவர் முதல்வர் பதவிக்கு வருவதற்கு முன்னர் இருந்த காங்கிரஸ் ஆட்சி கடைப்பிடித்தது.

ராஜாஜி முதல்வர் பதவியேற்றதும், தலைமறைவாக இருந்த நிலையிலும் விசாரணைக் கைதிகளாக சிறையில் அடைப்பட்டிருந்த நிலையிலும் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு சென்னை மாகாணச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் மன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள தாராளமாக உதவி புரிந்தார். அதனால், தலைமறைவாக இருந்தவர்கள் வெளியே வந்து சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொள்ள முடிந்தது. விசாரணைக் கைதிகளாக இருந்தவர் களும் ஜாமீனிலும் பரோலிலும் வெளிவந்து சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள முதலமைச்சர் உதவி புரிந்தார். இவற்றைக் கால தாமதமின்றியும் செய்தார் என்பதும் கருத்தில் கொள்ளத் தக்கதாகும்.

## சதி வழக்குககள் கைவிடப்பட்டன

சென்னை மாகாணம் முழுவதிலும் பல்வேறு மாவட்டங்களில் கம்யூனிஸ்டுகளில் முன்னணித் தலைவர் களாக இருந்தவர்களை அணியணியாகச் சேர்த்து, அவர்கள் மீது சதி வழக்குகளை நடத்திக் கொண்டிருந்தது, ராஜாஜி முதல்வராவதற்கு முன்பிருந்த காங்கிரஸ் ஆட்சி.

*1950* -ஆம் ஆண்டில் ''திருச்சி கம்யூனிஸ்டு சதி வழக்கு'' ஒன்று உருவாக்கப்பட்டு நடந்துகொண்டிருந்தது. அதில் சம்பந்தப்படுத்தப்பட்டவர்களிலே திரு.பி. ராம மூர்த்தி, திரு.எம். கல்யாணசுந்தரம், திரு. உமாநாத் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

*1952* -இல் - அதாவது, ராஜாஜி முதல்வர் பதவியை ஏற்பதற்கு முன்பு - திருச்சி சதி வழக்கில் குற்றவாளி

களாகச் சேர்க்கப்பட்டிருந்தவர்களில் சிலர் தண்டிக்கப் பட்டுவிட்டனர். பொதுத் தேர்தல் முடிந்ததும், இவர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டனர். எஞ்சியிருந்தவர்கள் மீதிருந்த சதிவழக்குகள் வாபஸ் பெறப்பட்டன.

''சேலம் கம்யூனிஸ்டு சதி வழக்கு'' ஒன்றும் பொதுத் தேர்தலுக்கு முன்பு சிருஷ்டிக்கப்பட்டிருந்தது. திருச்சி கம்யூனிஸ்டு சதி வழக்குக் குற்றவாளிகளில் ஒருவராக இருந்த திரு.எம். கல்யாணசுந்தரம் சேலம் சதி வழக்கிலும் சேர்க்கப்பட்டிருந்தார்.

''நெல்லை சதி வழக்கு'' ஒன்றும் உருவாக்கப்பட்டு 82 பேர் மீது வழக்கு நடந்தது. அவர்களில் 16 பேர் தண்டிக்கப்பட்டனர். 9 பேருக்கு ஆயுள் தண்டனை! இந்த ஒன்பதின்மரிலே திரு.பி. மாணிக்கமும் ஒருவராவார்.

நெல்லை சதி வழக்கில் தண்டனை பெற்றவர்களான திருவாளர்கள் ப. மாணிக்கம், ஆர். வேலுச்சாமி தேவர், ஐ. மாயாண்டி பாரதி, ஆர்.வி. அனந்தகிருஷ்ணன் ஆகியோர் ராஜாஜி ஆட்சியால் நிபந்தனையின்றி விடுதலை செய்யப் பட்டனர்.

தோழர் மணலி சி. கந்தசாமி மீதிருந்த தனி வழக்கும் வாபஸ் பெறப்பட்டது. இவர் தலைமறைவாக இருந்த நிலையில் மன்னார்குடித் தொகுதியிலிருந்து சட்டமன்றத் திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்க தாகும். திரு.பி. ராமமூர்த்தியும் விசாரணைக் கைதியாக இருந்த நிலையில் மதுரை நகர வடக்குத் தொகுதியி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## கம்யூனிஸ்டுகளுக்கு நீதி வழங்கினார்

சுருங்கச் சொல்வதானால், கம்யூனிஸ்டுகளைப் பழிவாங்கும் பழைய போக்கை ராஜாஜி அரசு

கைவிட்டது. அவர்களுக்கு நீதி வழங்குவதிலும் அக்கறை காட்டியது. கம்யூனிஸ்டுக் கட்சி தாராளமாகச் செயல் படுவதற்கும் அரசு அனுமதித்தது. ஆனால், பார்லி மெண்டரி ரீதியில் சென்னை மாகாண சட்ட மன்றத்திலே கம்யூனிஸ்டுகளுடன் முதலமைச்சர் ராஜாஜியும் அவரது காங்கிரஸ் கட்சியும் கடுமையாகப் போராட வேண்டி யிருந்தது. அந்தப் போராட்டத்தை நடத்த முதலமைச்சர் ராஜாஜி கொஞ்சமும் தயங்கவில்லை. அதிலே மிகுந்த கண்டிப்புக் காட்டினார் எனலாம்.

சட்டமன்றப் பேரவையில் கம்யூனிஸ்டுக் கட்சியிலே திரு.பி. ராமமூர்த்தி, திரு.ப. ஜீவானந்தம், திரு.எம். கல்யாணசுந்தரம், திரு. நாகிரெட்டி போன்ற சிறந்த பேச்சாளர்களும், வாதத்தில் வல்லுநர்களும், ராஜதந்திரி களும் இருந்தனர். கம்யூனிஸ்டு அல்லாத எதிர்க் கட்சி களிலும் திரு. முத்துராமலிங்கத் தேவர், திரு. தென்னேட்டி விசுவநாதம் போன்ற நாவன்மையுடையவர்கள் இருந்தனர்.

சட்டமன்ற மேலவையில் ஆந்திர கேசரி டி. பிரகாசம், திரு.வி. சக்கரை செட்டியார், டாக்டர் ஆர்.கே. சண்முகம் ஆகிய பார்லிமெண்டரி அரசியலில் அனுபவம் பெற்றவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலிருந்தனர்.

சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலே அப்படிப்பட்ட வர்கள் போதுமான அளவில் இருக்கவில்லை. ராஜாஜி, கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பைத் தனித்து நின்று சமாளிக்க வேண்டியிருந்தது. நிதியமைச்சர் திரு.சி. சுப்பிரமணியம் பேரவையில் முன்னவர் என்ற முறையிலே முதல்வருக்கு ஓரளவு பக்க பலமாக இருந்தார்.

ராஜாஜி ஆட்சிக் காலத்திலே சட்டமன்றத்தில் மட்டு மின்றி, அதற்கு வெளியேயும் கம்யூனிஸ்டுக் கட்சியினர்

தொழிற்சங்க மேடைகளிலும், கம்யூனிஸ்டுக் கட்சிமேடைகளிலும் ராஜாஜியின் ஆட்சிக்கு அச்சமூட்டும் வகையிலே பிரசாரப் போர் நடத்தி வந்தனர். அவர்களுக்கு தி.க.வும் தி.மு.க.வும் துணைபுரிந்தன.

அதற்குத் தமிழ்நாடு காங்கிரசும் தமிழரசுக் கழகமும் ஓரளவு ஈடு கொடுத்தன.

**பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்**

ராஜாஜி, தஞ்சை மாவட்டத்தில் உழுவோருக்கும் உழுவிப்போருக்குமிடையில் 1947 தொடங்கி 1951 வரை உருவாகியிருந்த வர்க்க ரீதியான போராட்டத்தைச் சமாளிப்பதற்கு ''தஞ்சை குத்தகைதாரர் - பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்'' என்னும் புதியதொரு சட்டத்தை 1952 செப்டம்பரில் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அதனை முதலில் அவசரச் சட்டமாகவே பிரகடனப்படுத்தினார். அதற்காக, தஞ்சை மாவட்ட நிலச்சுவான்தார்கள் முதல்வர் ராஜாஜிமீது கடுங்கோபம் கொண்டனர்.

ராஜாஜியின் சட்டமானது, தஞ்சை மாவட்டத்தில் உழுவிப்போருக்கு எதிராக உழுவோர்மீது கம்யூனிஸ்டுகளுக்கிருந்த செல்வாக்கையும் கடுமையாகப் பாதிப்பதாக இருந்தது. அதனால், நிலச்சுவான்தார்கள், கம்யூனிஸ்டுகள் ஆகிய இரு சாராருமே வெவ்வேறு முனையில் நின்றுகொண்டு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் குறைகூறலாயினர். ஆயினும், கம்யூனிஸ்டுகள் பொதுவாக சட்டத்திற்கு ஆதரவளித்தனர்.

ராஜாஜி மிகவும் தந்திரமாக சட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றார். அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு, அதுபற்றிய செய்தி நாளிதழ்களில் வெளியான நாளிலேயே முன்கூட்டித் திட்டமிட்டிருந்தபடி தஞ்சை

மாவட்டத்தில் சுற்றுலாச் செய்யத் தொடங்கினார். ஆம்; உழுவோருடையவும் உழுவிப்போருடையவும் ஆதரவைப் பெறுவதற்காக!

நிதியமைச்சர் திரு.சி. சுப்பிரமணியமும் சுற்றுலாவில் முதல்வருடன் சேர்ந்து கொண்டார். ராஜாஜி அழைத்த தன் பேரில் நானும் அவருடன் சென்று அவர் பேசிய கூட்டந்தோறும் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்துப் பேசினேன். ''கல்கி'' ரா. கிருஷ்ணமூர்த்தியும் எங்களுடன் கலந்து கொண்டார்.

தஞ்சாவூர், திருவாரூர், திருத்துறைப்பூண்டி, மயிலாடுதுறை ஆகிய பெரு நகரங்களில் மாபெரும் பொதுக் கூட்டங்களில் நாங்கள் பேசினோம். இங்கெல்லாம் தமிழரசுக் கழகக் கிளைகள் பொதுக் கூட்டங்களுக்கு உதவி செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டின. இதனை ''கல்கி'' பத்திரிகை சிறப்புக் கட்டுரையொன்று எழுதிப் பாராட்டியது.

ராஜாஜி, இந்திய கம்யூனிஸ்டுகளின் கொள்கைகளிலும் வேலைத் திட்டங்களிலும் தமக்குள்ள கருத்து வேற்றுமையை வெளிப்படுத்துங்கால், அவர்களை தமது முதல்தர எதிரிகளாக வருணித்தாரென்றாலும், அதுபோல, சமுதாயத்தைச் சுரண்டிவந்த நிலப்பிரபுக்களிடமும் அவருக்கு எப்போதுமே நல்லெண்ணம் இருந்ததில்லை. அவர்களைத் தன் விரோதிகளாக அவர் பிரகடனப்படுத்தவில்லையென்றாலும், அவர்களுடைய கொடுமையான பிடியிலிருந்து உழவர்களைக் காப்பாற்றுவதை அவர் தனது அவசரக் கடமையாகக் கருதினார்.

ராஜாஜி 1952 -இல் முதல்வர் பதவியை ஏற்றபோது, தஞ்சை மாவட்ட நிலப் பிரபுக்கள் ஏர்பிடித்து உழும்

உழைப்பாளர்களைக் கொத்தடிமைகளை விடவும் கேவலமாக நடத்தி வந்தனர். உழவர்களுடைய வேலைக்கு உத்தரவாதமிருக்கவில்லை. உழுது விதைத்து அறுவடை செய்யும் ஆட்களை பருவத்திற்குப் பருவம் மாற்றிக் கொண்டிருந்தனர். நிலத்தின்மீது தங்களுக்கே உரிமை கொண்டாடி, உழவர்களுக்கு வேலையை உறுதிப் படுத்தாமலும், கூலியை உழைப்புக்கும் தேவைக்கும் ஏற்றதாக நிர்ணயித்துக் கொடுக்காமலும் கொடுமை யிழைத்து வந்தனர்.

## தஞ்சையில் நிலவிய கொடுமை

தஞ்சை மாவட்டத்தில் நிலச்சுவான்தார்களுக்கும், நிலத்தைக் குத்தகைக்கு எடுத்தோருக்கும், ஏர் பிடித்து உழுவோருக்கும் இடையில் நிலவி வந்த பகைமையானது கட்சி அரசியலாக மாறி, 1952 -இல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலே காங்கிரசுக்குத் தோல்வியையும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வெற்றியையும் தந்தது. தாங்கள் உழும் நிலத்தில் தங்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் கோரினர் உழவர்கள். அதைத் தர மறுத்தனர் நிலச்சுவான் தாரர்கள். வெளியிலிருந்து ஆட்களைத் தருவித்து விவசாயத் தொழிலை நடத்தி வந்தனர். இது சட்டம் - ஒழுங்குப் பிரச்சனையாக மாறியது.

துப்பாக்கி தாங்கிய காவலர்களுடைய பாது காப்புடன் நிலச்சுவான்தார்கள் உழவுத் தொழிலை நடத்தக் கூடிய அவல நிலையும் உருவாகியிருந்தது. தங்களுடைய வேலைக்கும் நியாயமான கூலிக்கும் உத்தரவாதம் கோரி உழவர்கள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் போராடி வந்தனர். இதனால் தடியடியும் துப்பாக்கிச் சூடும் தஞ்சை மாவட்டத்தில் அடிக்கடி நிகழலாயின. உழவர்களும் அவர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்த கம்யூனிஸ்டுகளும்

கைதியாவதும் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுச் சிறை புகுவதும் வழக்கமாகி வந்தன.

காங்கிரஸ் அரசு உழவர்களுக்கு எதிராக நில வுடைமையாளர் பக்கத்தில் சாய்ந்து விட்டதாக உழவர்கள் கருதினர். இதற்கு மற்றொரு காரணம், தஞ்சை மாவட்ட நிலவுடைமையாளரில் பெரும்பாலோர் காங்கிரஸ் கட்சியிலிருந்ததாகும்.

ராஜாஜி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், தஞ்சை மாவட்டத்தில் நிலவிய வர்க்கப் போரைத் தவிர்க்கவும் நிலச்சுவான்தாரர் - குத்தகைதாரர் - உழவர்கள் ஆகியோ ரிடையில் உறவை வளர்க்கவும் முயற்சி மேற் கொள்ள லானார்.

முதலமைச்சர் பொறுப்பை ஏற்றதும், ''தென்னிந் தியாவின் நெற்களஞ்சியமாகிய தஞ்சாவூரில் விவசாயம் தடைப்படாமல் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதுபற்றி அரசு யோசித்து வருகிறது'' என்று ராஜாஜி செய்தியாளரிடம் கூறினார். உடனே, தஞ்சை மாவட்டத்தில் நிலவுடைமையாளரும் பொதுவுடைமை யாளரும் ராஜாஜி அரசை மிரட்டுவதற்கு ஸ்தாபன ரீதியில் செயல்படலாயினர்.

## இரு வர்க்கங்களும் திரண்டன

கம்யூனிஸ்டுகளின் கோட்டையான திருத்துறைப் பூண்டியிலே, 'விவசாயிகள்' என்ற பெயரிலே உழவர்கள் மாநாடு கம்யூனிஸ்டுகளால் கூட்டப்பட்டது. ராஜாஜி அரசின் பிரதான விரோதியாகச் செயல்பட்டு வந்த டி. பிரகாசம் அம்மாநாட்டில் கலந்துகொண்டு கம்யூனிஸ்டு களை விடவும் தீவிரமாக புரட்சிக் கீதம் பாடினார்.

இன்னொருபுறம் நிலவுடைமையாளரும் ''விவசாயிகள் மாநாடு'' என்னும் பெயரையே பயன்படுத்தி பெரிய நிலவுடைமையாளரான திரு.என்.ஆர். சாமியப்ப முதலியார் தலைமையில் கூடி, ராஜாஜி அரசை எச்சரிக்கும் வகையில் கீழ்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

''*(1)* நிலங்களிலிருந்து உழவர்கள் அப்புறப் படுத்தப்படுகிறார்கள் என்பது அடியோடு உண்மையல்ல; ஆகையால், அதுபற்றி அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை.

''*(2)* உழவர்கள் தகராறு செய்யும் இடங்களில் அரசு தலையிட்டுச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும். அப்படிச் செய்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்.

''*(3)* நிலச்சுவான்தாரர்களின் உரிமைகளில் தலையிடும் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளக் கூடாது.''

''தஞ்சை மாவட்டத்தில் மூன்று நாட்கள் சுற்றுலாச் செய்யப் போகிறேன்; நீங்களும் என்னுடன் வரவேண்டும். எனக்கு வயது ஆகிவிட்டது; நான் அதிக நேரம் பேசுவதற்கில்லை; அந்தக் குறையை நிறைவு செய்ய நீங்கள் என்னுடன் வந்து பொதுக் கூட்டங்களில் பேச வேண்டும்'' என்று ராஜாஜி என்னிடம் சொன்னார்.

நான் முதலில் மறுத்தேன். ''நீங்கள் வரவில்லையானால், சுற்றுலாவை ரத்து செய்து விடுகிறேன்'' என்று என் தலைவர் கூறினார். நான் இல்லாமலும் அவர் சுற்றுலாச் சென்றிருப்பார் என்றாலும், நான் அவருடன் வரவேண்டும் என்பதிலே தமக்குள்ள உறுதியைத் தெரிவித்தார். அதற்குமேல் மறுக்கத் துணிவின்றி ஒப்புக் கொண்டேன்.

## முதல்வருடன் பயணம்

முதலமைச்சர் ராஜாஜியும் நிதியமைச்சர் திரு.சி. சுப்பிரமணியமும் ரெயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் ஒரே அறையில் ஏறினார்கள். மற்றொரு அறையில் நானும் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியும் ஏறினோம். ஆனால், ரயில் புறப்படுவதற்கு முன்பு ராஜாஜி தம்முடைய பெட்டிக்கு என்னை அழைத்து, ''செங்கல்பட்டுவரை என்னுடன் வாருங்கள்'' என்றார். நானும் அவர் பெட்டியில் ஏறிக் கொண்டேன். ரயில் சென்று கொண்டிருந்த போது, ''நான் ஏன் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுலாச் செய்யப் போகிறேன், தெரியுமா?'' என்று என்னைக் கேட்டார். ''தெரியாது'' என்றேன்.

''தஞ்சை குத்தகைதாரர் - பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை சென்னை மாகாண அரசு இன்று பிறப்பித்திருக்கிறது. அதற்கு மிராசுதார்களிடமும் உழவுத் தொழில் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களிடமும் பண்ணை யாட்களிடமும் ஆதரவு திரட்டத்தான் செல்கிறேன்'' என்றார்.

அவசரச் சட்டத்தின் ஆங்கிலப் பிரதி ஒன்றை என் கையில் கொடுத்துவிட்டு, 'இதைப்பற்றிய எல்லா விவரங்களையும் உங்களுடன் பயணம் செய்யும் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி உங்களுக்குச் சொல்லுவார்' என்றார்.

அவசரச் சட்டத்தைப் பற்றி முதல்வர் சொல்லித்தான் முதன்முதலில் நான் தெரிந்து கொண்டேன். உண்மையில் விவசாயத்தைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. தஞ்சை மாவட்டத்தில் மிராசுதார்கள் இருக்கிறார்கள் என்பது தெரியும் என்றாலும், அவர்களோடு குத்தகைதாரர்களுக்கும் பண்ணையாட்களுக்கும் உள்ள தகராறு பற்றி விவரமாக

நான் அறிந்து வைத்திருக்கவில்லை. இந்த நிலையில் அவசரச் சட்டத்திற்கு மக்களுடைய ஆதரவைத் தேடும் வகையிலே நான் எப்படிப் பொதுக்கூட்ட மேடையில் பேசுவது? முதலில் என் மனம் குழம்பியது. ஆனால், ராஜாஜி சொன்னதுபோல, ரயிலில் என்னுடன் பயணம் செய்த ''கல்கி'' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எல்லா வற்றையும் விவரமாக எனக்குச் சொன்னார். எனக்குள்ள பொது அறிவைக் கொண்டு அவர் சொன்னவற்றை ஓரளவு புரிந்துகொண்டேன்.

## முதல்வரின் சிலேடைப் பேச்சு

மறுநாள் காலை நாங்கள் தஞ்சை ரயில் நிலையத்தில் இறங்கினோம். மாவட்டத்திலுள்ள பெரிய சிறிய மிராசு தாரர்கள் எல்லாம் ஆளுக்கொரு ரோஜா மாலையைக் கையில் ஏந்திக்கொண்டு பிளாட்பாரத்தில் வரிசையாக நின்றிருந்தார்கள். ஆம்; தங்கள் முதலமைச்சருக்கு மாலை மரியாதைகள் செய்து வரவேற்க! அதுவரை ராஜாஜி அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டம் அவர்களுக்குத் தெரியாது. அந்தச் செய்தியைத் தாங்கிய தினப்பத்திரிகைகளின் இதழ்கள் நாங்கள் பயணம் செய்த ரயிலிலேதான் எங்களோடு சேர்ந்து பயணம் செய்தன.

ராஜாஜியைக் கண்ட மிராசுதாரர்கள் ''தாங்கள் முதலமைச்சர் பதவியை ஏற்றதும் முதன்முதலாகத் தஞ்சைக்கு வருகிறீர்கள். அது எங்கள் பாக்கியம். தங்கள் வரவு நல்வரவாகுக!'' என்றெல்லாம் சொல்லி, ஒவ்வொரு மிராசுதாரரும் தனித்தனியாக மாலை அணிவித்தார்கள். மிராசுதாரரல்லாத உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர்களும் வந்திருந்து வரவேற்றனர்.

முதலமைச்சரை வரவேற்க ரெயில் நிலையத்திற்கு வந்திருந்த மிராசுதாரர்களிலே, திருவாளர்கள் வி. நாடி

முத்துப்பிள்ளை, குன்னியூர் சாம்பசிவ ஐயர், சாமியப்ப முதலியார், பூண்டி வாண்டையார் ஆகியோர் முக்கியமான வர்களாவர். மற்றொரு பெரிய மிராசுதாரரான வடமாதி மங்கலம் திரு.வி.எஸ். தியாகராச முதலியார் எங்களுடனேயே ரயிலில் பயணம் செய்தார். தஞ்சை மாவட்டத்திலே ராஜாஜியின் சுற்றுலாவுக்கான பொறுப்பை காங்கிரஸ் பிரமுகரான அவர்தான் ஏற்றிருந்தார்.

''தங்கள் வரவு எங்கள் பாக்கியம்'' என்று மிராசுதாரர்கள் மகிழ்ச்சியோடு கூறியதைக் கேட்ட ராஜாஜி, ''நான் தஞ்சையை விட்டுத் திரும்பிச் செல்லும் போதும் இந்த மகிழ்ச்சி உங்களிடம் நிலைத்திருக்க வேண்டும்'' என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

''பெரியவாள் அப்படிச் சொல்லக்கூடாது. உங்களிடம் எங்களுக்குள்ள நல்லெண்ணம் என்றென்றும் நிலைத்திருக்கும்'' என்று உறுதியோடு சொன்னார்கள். வாய்விட்டுச் சிரித்தவராய் ''பார்ப்போம்'' என்று பெருமூச்சு விட்டவண்ணம் சொன்னார் ராஜாஜி,

அவசரச் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தாம் வந்திருப்பதைச் சிறிது நேரத்திற்குள் பத்திரிகைகள் வாயிலாக மிராசுதாரர்கள் அறிவார்களானால், அவர்கள் தம்மீது ஆத்திரப்படுவார்கள் என்று ராஜாஜி கருதினார்.

**மிராசுதாரர் கூட்டம்**

சுற்றுலாத் திட்டப்படி, முதல் நாளன்று காலை தஞ்சை நகரிலுள்ள ராமநாதன் செட்டியார் மண்டபத்தில் தஞ்சை மாவட்டம் முழுவதிலுமுள்ள மிராசுதாரர்கள் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட் டத்திலுள்ள மிராசுதாரர்கள் அனைவருமே மண்டபத்தில்

திரண்டிருந்தனர். அவர்களிலே பலர் காங்கிரஸ்காரர்கள். திரு.என்.ஆர். சாமியப்ப முதலியார் போன்ற சிலர் ஜஸ்டிஸ் கட்சிப் பாரம்பர்யத்தைச் சேர்ந்தவர்கள். மாவூர் சர்மா போன்ற அரசியல் கட்சிச் சார்பற்ற மிராசுதாரர்களும் இருந்தனர்.

ராஜாஜி எதிர்பார்த்ததைவிடவும் அதிக அளவில் மிராசுதாரர்கள் ராமநாதன் செட்டியார் மண்டபத்தில் திரண்டிருந்தனர். ஆம்; அவசரச் சட்டம் பற்றிய செய்தியை அறிந்துகொண்டு விட்டார்களாதலால், மிகுந்த பரபரப்பு உணர்ச்சியோடு திரண்டிருந்தார்கள். அக்கூட்டத்தில் ராஜாஜியும் நிதியமைச்சர் சி. எஸ்ஸூம் மட்டுமே பேசுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது.

திரு.வி.எஸ். தியாகராஜ முதலியார் முதலமைச்சரை வரவேற்றுப் பேசினார்.

''அவசரச் சட்டத்தைப் பற்றி மிராசுதாரர்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்'' என்றார் ராஜாஜி. இங்கொருவர் அங்கொருவராக சிலர் எழுந்து பேசினர். ஏக காலத்தில் இரண்டு மூன்று பேராகவும் ஆட்சேபக் குரலெழுப்பினார்கள். பொதுவாக, அவசரச் சட்டத்தை எதிர்த்தே அனைவரும் பேசினர்.

''குத்தகைதாரர்களும் பண்ணையாட்களும் மிராசுதாரர்களும் ஒரு தாய் வயிற்று மக்கள்போல் வாழ்ந்து வருகிறோம். எங்களுக்குள் சண்டையில்லை. தாங்கள் பிறப்பித்துள்ள அவசரச் சட்டமானது இப்பொழுது நிலவி வரும் சகோதர உணர்ச்சியைக் கெடுத்துவிடும்'' என்பது தான் மிராசுதாரர்கள் வெளியிட்ட பொதுவான கருத்து. ஒன்றிருவர் ராஜாஜிமீது தங்களுக்கிருந்த ஆத்திரத்தையும் வார்த்தைகளால் வெளிக்காட்டினர்.

அன்று காலை வெளியான ''இந்து'' பத்திரிகையிலே, அவசரச்சட்டம் பிரதான தலைப்புக்களுடன் பிரசுரிக்கப்பட்டிருந்ததோடு, அதைப்பற்றி வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கும் தலையங்கமும் எழுதப்பட்டிருந்தது.

மிராசுதாரர்கள் கூட்டத்திலே நானும் பேசவேண்டுமென்று ராஜாஜி விரும்பினார். மிகுந்த பணிவோடு நான் மறுத்துவிட்டேன். பொதுவாக, நான் நிலப்பிரபுத்துவத்தை விரும்பாதவன். காந்திய தருமப்படி, உழுபவனுக்கே நிலத்தின்மீது உரிமை இருக்க வேண்டும் என்பதிலே நம்பிக்கையுடையவன். ராஜாஜி பிறப்பித்துள்ள தஞ்சை குத்தகைதாரர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தினால் மட்டுமே தஞ்சை மாவட்டத்தில் கம்யூனிஸ்டுகளால் உருவாக்கப்பட்டிருந்த வர்க்கப் போராட்டத்தைச் சமாளித்துவிட முடியாது என்ற எண்ணமும் எனக்கு இருந்தது.

ஒருகால், நான் பேசியிருந்தால் அது மிராசுதாரர்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்தி இருக்கலாம். அதனால், ''பொதுக் கூட்டங்களில் பேசுகிறேன், மிராசுதாரர்கள் கூட்டத்தில் பேச விரும்பவில்லை'' என்றேன். எனது மனநிலையை ராஜாஜி புரிந்துகொண்டார்.

**ராஜாஜியின் அறிவுரை**

திரு.சி. சுப்பிரமணியம் பேசிய பின்னர் முதல்வர் ராஜாஜி பேசினார். அவர் பேசியதைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். முதல்வர் என்ற அதிகாரப் பொறுப்பில் இருப்பவர் பேசுவது போலல்லாமல், ஒரு ஞானியின் நிலையில் இருந்து, மிராசுதாரர்களின் குற்றங்களைத் துணிவோடு எடுத்துக்கூறி, திருந்துமாறு அவர்களுக்கு அறிவுரை கூறினார். அவர் வெளியிட்ட

கருத்துக்களை எனது நினைவிலுள்ளபடி இங்கு தொகுத்துத் தருகிறேன்.

''உங்கள் பண்ணையிலே பாடுபடும் உழவர்கள் குந்தக் குடிசையும் அற்றவர்களாக அவதியுறும் நிலையிலே நீங்கள் பங்களாக்களில் வாழ்கிறீர்கள். சுகவாசஸ் தலங்களான சென்னையில் ஒரு பங்களா; உதகையில் ஒரு பங்களா; குற்றாலத்தில் ஒரு பங்களா; கொடைக்கானலில் ஒரு பங்களா எனப் பல பங்களாக்களைப் பெற்றிருக் கிறீர்கள்; தனக்கொரு மோட்டார் கார்; பிள்ளைக்கொரு கார்; மாப்பிள்ளைக்கொரு கார் - என எத்தனையோ கார்களை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் பார்க்கும் ஏழை உழவர்கள் உங்களிடம் நல்லெண்ணங் கொள்வார்களா? 'மிராசுதாரர்களும் குத்தகைதாரர்களும் உழவர்களும் உடன் பிறந்தாரைப் போல வாழ்கின்றோம்' என்கிறீர்களே! அது உண்மையானால் பண்ணையிலே விவசாயத் தொழிலை நடத்த போலீஸ் பாதுகாப்புக் கோரி தந்திக்கு மேல் தந்தியாக எனக்குக் கொடுத்திருக்கிறீர்களே, ஏன்?

''நான் கொண்டு வந்துள்ள சட்டத்தை நீங்கள் ஏற்றால்தான் உங்களுக்கும் விவசாயத் தொழிலாளர் களுக்குமிடையில் நல்லுறவு ஏற்படும். உற்பத்தியைப் பெருக்கவும், பெருக்கிய உற்பத்தியை நியாயமான அளவில் பிரித்துக் கொள்ளவும் எனது அவசரச் சட்டம் உதவி புரியும். யாரிடமும் பாரபட்சம் காட்டாது. இதனை நீங்கள் ஏற்காவிடில் என் வாழ்நாளிலேயே உங்கள் விளைநிலங்கள் உங்களிடமிருந்து பறிக்கப்படுவதை என் கண்கள் காணப்போவது உறுதி.''

குத்தகைதாரர் - பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைக் குறைகூறி 'இந்து'வில் எழுதப்பட்ட

தலையங்கத்திற்கும் சுடச்சுட பதிலளித்தார் ராஜாஜி. ராஜாஜியின் அன்றைய பேச்சை ''கம்யூனிஸ்டு பாணி'' என்று ஒன்றிரு மிராசுதாரர்கள் கூறியதை என் காதுகளால் கேட்டேன். ஆயினும், பொதுவாக, நடுநிலையில் நின்று பேசுகிறாரென்பதை அவர்கள் நம்பினராதலால், ஓரளவு திருப்தியடைந்தனர் என்றே சொல்லவேண்டும்.

**வர்க்கப் பூசல் மறைந்தது**

தஞ்சை நகரில் மிராசுதாரர்கள் கூட்டம் 'வெற்றிகர' மாக நடந்தபின், திருவாரூர் - சீர்காழி - மயிலாடுதுறை ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்கெல்லாம் பொதுக் கூட்டங்களில் ராஜாஜி பேசினார்.

ராஜாஜி பிறப்பித்த அவசரச் சட்டம், தஞ்சை மாவட்டத்திலுள்ள குத்தகைதாரருக்கும் உழவர்களுக்கும் மனநிறைவைத் தருவதாக இருந்ததால், ராஜாஜி பேசிய கூட்டங்களுக்கு அவர்கள் திரண்டு வந்து தங்கள் திருப்தியை அவர் அறிந்து கொள்ளும்படி வெளிப் படுத்தினர். ஒவ்வொரு கூட்டத்திலும் மிராசுதாரர்களையும் முதலமைச்சர் தம்முடன் அழைத்துச் சென்றார். இதனால், விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடையே 1946 தொடங்கி ஆறாண்டு காலமாக வளர்ந்து வந்திருந்த வர்க்கத் துவேஷத்தைக் குறைக்க முடியுமென அவர் நம்பினார்.

ராஜாஜி செல்லுமிடந்தோறும் அவரது காரைத் தொடர்ந்து மிராசுதாரர்களும் தங்கள் கார்களில் பயணஞ் செய்ததும், ஏர் பிடித்து உழும் ஏழை உழவர்கள் பல்லா யிரக்கணக்கில் கலந்துகொண்ட பொதுக் கூட்டங்களில் அவர்களும் கலந்து கொண்டதும் அதற்கு முன் யாரும் கண்டிராத காட்சியாகும்.

இந்தச் சுற்றுலாவின்போது நான் ஒவ்வொரு கூட்டத்திலும் ராஜாஜிக்கு முன்பு பேசினேன். மாயூரம் கூட்டத்தில்தான் அதிக நேரம் பேசினேன்.

''பண்ணையாட்களின் உரிமைகளைக் காக்க அரசு பொறுப்பேற்க வேண்டியதுதான். என்றாலும், அதனை அவசரச் சட்டத்தின் வாயிலாகத்தான் செய்ய வேண்டுமா? 'ஆம்' என்றால், பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் என்ன வேற்றுமை?'' என்று தஞ்சையில் நடந்த மிராசுதாரர்கள் கூட்டத்தில் சில மிராசுதாரர் எழுப்பிய வினாவுக்கு அதற்குப் பின் நான் பேசிய கூட்டந் தோறும் பதிலளித்தேன். மயிலாடுதுறைக் கூட்டத்தில் விரிவாகப் பதிலளித்தேன். அது வருமாறு:

''பிரிட்டிஷ் ஆட்சியில் அன்னியருடைய ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் பொருட்டே அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. அவை அதிகார பலங் கொண்டு அமுல் நடத்தப்பட்டன. ராஜாஜியின் ஆட்சியோ சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண உழவர்களின் நலன் கருதி, அவசரச் சட்டம் பிறப்பித் துள்ளது. அந்தச் சட்டத்தை பத்திரிகை வாயிலாக மக்கள் அறிவதற்கு முன்பே அதனைப் பிறப்பித்த முதலமைச்சர் மக்கள் மத்தியில் வந்துவிட்டார். நிலப்பிரபுக்கள் - உழவர்கள் ஆகிய பரஸ்பரம் பூசலிடும் இருவேறு வர்க்கங் களையும் தனித்தனியே சந்தித்தும், ஒரே இடத்தில் (பொதுக் கூட்டத்தில்) அவர்களைக் கூட்டிவைத்தும், தாம் அவசரச் சட்டம் பிறப்பித்ததற்கான காரணங்களை அன்பு மொழிகளிலே கூறுகின்றார். இதுதான் அவசரச் சட்டம் பிறப்பிப்பதிலே பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காங்கிரஸ் ஆட்சிக்குமுள்ள வேற்றுமை.''

**"வக்கீல் ம.பொ.சி."**

மாயூரம் பொதுக்கூட்டத்தில் உணர்ச்சிப் பெருக்குடன் மிராசுதாரரின் வாதங்களைத் தகர்க்கும் வகையில் நான் பேசியதைக் கேட்டு ராஜாஜி பரவசமடைந்தார். எனக்குப்பின் பேசிய அவர், தமது சுற்றுலாவில் உழவர்களை மிகுதியாகக் கொண்ட பொதுக்கூட்டங்களில் நான் அவசரச் சட்டத்தை ஆதரித்துச் சொன்ன வாதங்களைக் குறிப்பிட்டு என்னைப் பாராட்டினார். அது எனது நினைவிலுள்ளபடி வருமாறு:

''நான்கூடப் பண்ணையாளரைப் பாதுகாக்க அவசரச் சட்டம் கொண்டு வந்ததை தவறென்றே உள்ளூரக் கருதிக் கொண்டிருந்தேன். ஆனால், கிராமணியாரின் வியாக்யானத்தைக் கேட்ட பின்னர், எனது செயல் சரியானதென்றே இப்போது நினைக்கிறேன். அவரது வாதத் திறமையைக் கேட்கும்போது, அவர் வக்கீலாக வந்திருக்க வேண்டியவர் என்றே நினைக்கத் தோன்றுகின்றது.''

ராஜாஜி என்னைப் புகழ்ந்து பேசியதை வக்கீல் ம.பொ.சி.' என்ற தலைப்புத் தந்து பெட்டிச் செய்தியாக ''தினமணி'' பிரசுரித்தது! முதலமைச்சர் ராஜாஜியின் தஞ்சை மாவட்டச் சுற்றுலா வெற்றிகரமாக முடிந்தது. அதுவரை மிராசுதாரர்களுக்கும் பண்ணையாட்களுக்கு மிடையில் நிலவி வந்த பூசல் மறைந்தது. அவசரச் சட்டத்திற்கு குத்தகைதாரர் - பண்ணையாட்கள் சார்பில் பேராதரவு தெரிவிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகளும் சட்ட மன்றத்தில் அவசரச் சட்டம் விவாதத்திற்கு வந்தபோது, பொதுவாக ஆதரவு தெரிவித்தனர்.

சென்னை மாகாண ஆளுநர் ஸ்ரீபிரகாசாவால் 28-8-52 -இல் பிறப்பிக்கப்பட்ட தஞ்சை குத்தகைதாரர்

பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமானது 3-12-52 -இல் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அதற்கு, 21-12-52 -இல் இந்தியக் குடியரசின் தலைவர் அங்கீகாரம் தந்தார். இந்தச் சட்டம் பிற்காலத்தில் காமராசர் ஆட்சியிலும் முற்போக்கான பல மாறுதல்களையடைந்து தஞ்சை குத்தகைதாரர் - பண்ணையாட்கள் நலன்களைப் பாதுகாத்து வருகிறது.

ராஜாஜி பதவி எதிலுமில்லாத காலத்திலே - ஏன், திரும்பவும் அவர் பெரும்பதவி எதையும் அடைவது சாத்தியமில்லை என்று மக்கள் நினைத்த காலத்திலே அவருடன் தமிழ்நாடு முழுவதிலும் நான் சுற்றுலாச் செய்ததுண்டு. ஆனால், அவர் முதல்வர் பதவியிலிருந்த போது அவருடன் சேர்ந்து சுற்றுலாச் செய்தது இதுதான் முதன்முறை. இதுவே கடைசி முறையாகவும் முடிந்தது.

## கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு

ராஜாஜி, தஞ்சை குத்தகைதாரர் - பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு அது சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் மசோதா வடிவத்தில் முன்மொழியப்பட்டு, சட்டமாக்கப்படுவதற்கு முன்னர், மற்றொரு சிக்கலான பிரச்சினையைத் தீர்த்து வைப்பதிலே சிந்தை செலுத்தினார். அது கைத்தறித் தொழில் பிரச்சினை யாகும்.

சென்னை மாகாணத்தில் விவசாயத்திற்கு அடுத்த படியான பிரதான தொழில் ஒன்று உண்டென்றால், அது கைத்தறித் தொழிலாகும். அது மட்டுமல்லாமல், இந்திய மாநிலங்களிலேயே சென்னை மாநிலத்தில்தான் கைத்தறித் தொழிலை நம்பி வாழ்வோர் கணிசமான எண்ணிக்கையில் இருக்கின்றனர்.

நெசவாளர்களுக்கு அன்றாட வாழ்க்கைத் தேவைக் கேற்ப வருவாய் வருமளவுக்குத் தொழில் செய்ய நூல் கிடைப்பதில்லை. கிடைத்தாலும், நெசவாளர்களின் சக்திக் கேற்ற விலையில் அது கிடைப்பதில்லை. அதிகவிலை கொடுத்து - அரிதில் தேடிப்பிடித்து நூல் வாங்கித் துணி நெய்தாலும், அதனை நியாயமான விலைக்கு விற்பதற்குச் ''சந்தை'' இருக்கவில்லை - அதாவது, ''மார்க்கெட்'' அமைந்திருக்கவில்லை. இதனால், நெசவாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றி, நாளுக்கு நாள் அதிகரித்தும் வந்தது.

இயற்கையாகவே மழையின்மையாலும், யுத்த பிற்காலப் பிரச்சினைகளாலும் சென்னை மாகாணத்தில் பயங்கரப் பஞ்சம் தோன்றி மக்கள் அனைவருமே பரிதவித்த நேரம் அது. அந்த நிலையிலே, கைத்தறி நெசவாளர்கள் பிற தொழில்களில் ஈடுபட்டிருந்தவர் களைவிடவும் அதிகமான - கொடூரமான பஞ்சத்திற்கு ஆளாயினர். தங்கள் சொந்த ஊரைவிட்டு வெளியேறி, ஊர் ஊராகச் சுற்றியலைந்து பிச்சை எடுத்துப் பிழைக்கும் இழி நிலையையும் அடைந்தனர்.

தமிழ்நாட்டளவில் பார்த்தாலும், நெசவுத் தொழிலில் மக்கள் குடும்பம் குடும்பமாக ஈடுபட்டிருக் கின்றனர். இன்னொரு வகையில் சொன்னால், சாதி ரீதியிலும், நெசவுத் தொழிலில் ஈடுபட்டு, அதையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். 'செங்குந்தர்', 'தேவாங்கர்', 'சௌராட்டிரர்', 'லெப்பை முஸ்லிம்கள்' ஆகிய சாதி களைச் சொல்லலாம். நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் பட்டினியால் பாதிக்கப்பட்டால், அடைக் கலம் புகுவதற்கு வேறு தொழிலில் ஈடுபட்டு நல் வாழ்க்கை நடத்தும் உறவினர்கள் அவர்களுக்கு

இருப்பதில்லை. ஆம்; அந்தத் தொழில் சாதி ரீதியில் அமைந்திருப்பதன் விளைவு. இப்படிப்பட்ட ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பஞ்சக் கொடுமையைச் சந்திப்பது என்றால், அது சாதாரண விஷயமல்ல - ஏன்? எந்த சர்க்காராலும் எளிதில் தீர்த்துவிடக் கூடியதுமல்ல.

## நெசவாளர் நிலை

தேசம் சுதந்திரம் பெற்ற ஆரம்பத்திலேயே நெசவாளர்களின் வாழ்க்கையில் பயங்கரமான பஞ்சம் தோன்றி ஆளுங்கட்சியான காங்கிரசைப் பயமுறுத்தியது. 1952 -இல் சுதந்திர இந்தியாவில் நடந்த முதல் பொதுத் தேர்தலிலே சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்ததற்கு கைத்தறி நெசவாளர்களின் பஞ்சப் பிரச்சினையும் ஒரு காரணமாகும். இதைத் தீர்த்து வைக்கும் பொறுப்பு தமக்கு இருப்பதை, திறமைமிக்க முதலமைச்சரான ராஜாஜி நன்கு உணர்ந்தார். இங்கொன்று அங்கொன்றாக ஒரு சில பரிகாரங்களை வழங்கி விடுவதால் நெசவாளர் சமூகத்தைக் காப்பாற்றிவிட முடியாது என்பதையும் அந்த மாமேதை உணர்ந்தார்.

நாட்டில் நவீன பஞ்சாலைகள் தோன்றிய காலந் தொட்டு அந்த ஆலைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வந்ததன் விளைவாகக் கைத்தறித் தொழில் நசிந்து வந்துள்ள நிலையை எதையும் ஆராய்ச்சிக் கண்கொண்டு காணும் ராஜாஜி நினைவில் கொண்டார். ஆகவே, கைத்தறியாளர்களின் கஷ்டத்தை நிரந்தரமாகத் தீர்க்க வேண்டுமானால், நவீன ஆலைகளின் போட்டியிலிருந்து அத்தொழிலைக் காப்பது ஒன்றுதான் வழி என்பதை அவர் உணர்ந்தார். அதனால், கரைபோட்ட வேட்டிகளையும் வண்ணப் புடவைகளையும் நெய்வதைக் கைத்தறிகளுக்கே ஒதுக்க வேண்டுமென்றும், அவற்றைத் தயாரிக்காதபடி

ஆலைகளுக்குத் தடைவிதிக்க வேண்டும் என்றும் அவர் கருதினார். ஆனால், இன்றுபோல அன்றும் ஆலைத் தொழிலில் தலையிடுவதற்கு மாநில அரசுகளுக்கு அதிகாரம் இருக்கவில்லை. அதனால், ஆலைத் தொழிலின் போட்டியிலிருந்து கைத்தறிகளைக் காப்பதற்கு மத்திய அரசின் தயவை நாட வேண்டியிருந்தது.

இது விஷயத்தில் மத்திய அரசின் உதவி சென்னை மாகாண அரசுக்குத் தேவை என்று ராஜாஜி ஒரு பொதுக் கூட்டத்தில் பேசினார். அப்போது மத்திய அரசில் தமிழ் நாட்டவரான திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் நிதியமைச்ச ராக இருந்தார். அவருக்குத் தமது சொந்த மாகாணத்தின் நலனில் - குறிப்பாக, கைத்தறியாளர்களின் நல்வாழ்வில் நாட்டம் இருந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும் ஆலைத்தொழில் நடத்தும் முதலாளிகள் மத்திய அரசின் மீது ஆதிக்கம் செலுத்தி, அதனைத் தம் வழிப் படுத்தும் சக்தி படைத்தவர்கள். ஆகவே, கரைபோட்ட வேட்டிகளையும் வண்ணப் புடவைகளையும் உற்பத்தி செய்வதைக் கைத்தறிகளுக்கே ஒதுக்கிவிட்டு அவற்றை உற்பத்தி செய்யாதபடி ஆலைகளுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற ராஜாஜியின் கருத்தை மத்திய நிதியமைச்சர் ஏற்க மறுத்தார். எதிர்த்தும் வாதாடினார். தமிழக முதல்வரும் மத்திய நிதியமைச்சரும் பரஸ்பரம் ''அறிக்கைப் போர்'' நடத்தினர் என்றும் சொல்லலாம்.

## ஆலைகளுக்குத் தடைகோரும் தீர்மானம்

மத்திய அரசை நல்வழிப்படுத்த சென்னை மாகாண சட்டமன்றத்தின் உதவியை முதலமைச்சர் ராஜாஜி நாடினார். அப்போது டாக்டர் யு. கிருஷ்ணாராவ் ராஜாஜி அமைச்சரவையில் தொழில்துறை அமைச்சராக இருந்தார். அவரைக்கொண்டு *3-11-1952* -இல் ஒரு தீர்மானத்தை

சென்னை மாகாண சட்டசபையில் ராஜாஜி முன்மொழியச் செய்தார். அது வருமாறு:

''இந்த மாநிலத்தில் மட்டும் ஆண்களும் பெண்களுமாக 45 லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ள, முக்கியமானதும் நாடெங்கும் பரவியுள்ளதுமான குடிசைத் தொழிலாகிய கைத்தறி நெசவுக்கு நிரந்தரமான விற்பனைச் சந்தையை உருவாக்கித் தரவேண்டுமென்றும்; கரைபோட்ட வேட்டிகள், வண்ணச் சேலைகள் நெய்வது கைத்தறித் தொழிலுக்கு மட்டுமே ஒதுக்கப்படவேண்டுமென்றும், ஆலைகளும் விசைத்தறிகளும் மேற்கண்ட துணி வகைகள் தயாரிப்பதை அனுமதிக்கக்கூடாது என்றும் அரசாங்கம் கொண்டுள்ள நோக்கத்தை இந்த அவை அழுத்தமாக ஆதரிக்கிறது.

''மேலும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சின் அதிகமான விலைச் சுமையை இந்தக் கைத்தறித் தொழிலின்மீது சுமத்தாமல், இந்தியப் பஞ்சிலிருந்து நூற்கப்பட்ட 40 அதற்குக் கீழே உள்ள எண்ணிக்கை கொண்ட நூல் ரகங்கள் கைத்தறித் தொழிலுக்குக் கிடைக்கும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த அவை கருதுகிறது.''

தீர்மானம் சட்டப் பேரவையில் விவாதிக்கப்பட்ட போது எதிர்க் கட்சியினர் பல திருத்தங்கள் தந்து, தீவிரவாதம் பேசினரென்றாலும், இறுதியில் ஒருமனதாக வாக்களித்துத் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தனர்.

இத்தீர்மானத்தைப் பிரதமர் நேருஜிக்கும், அவரது அமைச்சரவையில் தொழில் துறையையும் நிதித்துறையையும் நிர்வகித்தவர்களுக்கும் ராஜாஜி அனுப்பி வைத்தார்.

ஆனால், தீர்மானத்தை நடைமுறைப் படுத்த மத்திய அரசு திட்டவட்டமாக மறுத்துவிட்டது. "இந்தத் தீர்மானத்தை ஏற்றால், நாட்டின் தொழில் துறையில் விரும்பத்தகாத தீய விளைவுகள் ஏற்பட்டு விடக்கூடும்" என்று டில்லி நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் பேசினார். ஆயினும், ஆலைத் துணிகளுக்கு வரி விதித்து அதில் கிடைக்கும் தொகையை கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்த நெசவாளர்களுக்கும் வணிகர் களுக்கும் "ரிபேட்" என்ற பெயரில் நிவாரணமளிக்கத் தயார் என்றார். அதன்படி, நிவாரணமும் உடனடியாகக் கிடைத்தது. அது நெடுங்காலம் நீடித்தும் வந்தது.

## ராஜாஜியின் கனவு நனவாகியது

ராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய பின்னர் வந்த காமராசர் தலைமையைப் பெற்றிருந்த காங்கிரஸ் ஆட்சியும், அதற்குப்பின் வந்த தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிகளும் ஆலைத் தொழிலின் போட்டி யிலிருந்து கைத்தறிகளைக் காப்பதற்கு 1952 -இல் ராஜாஜி சொன்ன யோசனையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன. அதன் விளைவாக, *1984* -இல் வந்த ராஜீவ் காந்தியின் ஆட்சி ராஜாஜி சொன்ன யோசனையை தீவிரமாக அமுல் நடத்த முயன்றது. இது, ராஜாஜியின் தீர்க்கதரிசனத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

ராஜாஜி, எதிலும் தோல்வி காணாதவர்; தோல்வி கண்டாலும், அது பிற்காலத்தில் கிடைக்கவிருக்கும் நிரந்தரமான வெற்றிக்கு முன்னோடியாக அமைவது அவரது வரலாறு காட்டும் உண்மையாகும். இதனை, பாகிஸ்தான் பிரச்சினையிலும் கண்டுவிட்டோம் அல்லவா!

ராஜாஜி, கைத்தறியாளர்களின் துயரைத் தீர்க்கக் கூட்டுறவுச் சங்கங்களோடு கைத்தறித் தொழிலை இணைப்

பதற்குத் திட்டம் ஒன்றை வகுத்து, அதை நடை முறைப்படுத்தலானார். கைத்தறியாளர்கள், கூட்டுறவு சங்கத்தில் தங்கள் தறியைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அதற்கான சந்தாவை அவர்களுக்காக அரசாங்கமே செலுத்தும்; நியாயமான விலையில் எளிதில் நூல் கிடைக்கவும், உற்பத்தியான துணிக்கு மார்க்கெட் கிடைக்கவும் கூட்டுறவுச் சங்கங்கள் முயற்சி எடுக்கும் - இதுதான் ராஜாஜி வகுத்த திட்டம்! இது ஓரளவுக்குப் பலன் தந்ததென்றாலும், பண்டுதொட்டு சுதந்திரமாகத் தொழில் புரிந்து வந்த கைத்தறி நெசவாளர்கள் சில கட்டுத் திட்டத்திற்குட்பட்டு கூட்டுறவுச் சங்கங்களில் சேர்வதில் தயக்கம் காட்டலாயினர். வணிகர்களிலே சிலர், தங்களிடமுள்ள கைத்தறிகளின் எண்ணிக்கையைக் கூட்டிச் சொல்லி, அதிக சலுகைகள் பெற விரும்பினர். இதனால், ''கைத்தறி'' யோடு ''பொய் தறி''யும் போட்டியிட்டது. ஆனால், காலப்போக்கில் கூட்டுறவு இயக்கத்தை கைத்தறி நெசவாளர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள முன் வந்தனர். இது, ராஜாஜி ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குக் கிடைத்த நல்வரமாகும். இதன் வாயிலாக, கைத்தறி யாளர்கள் ராஜாஜியை தங்கள் ரட்சகராகக் கருதலாயினர்.

ராஜாஜி எடுத்த தீவிர முயற்சிகளால், கைத்தறி நெசவாளர் மத்தியில் காங்கிரஸ் கட்சிக்குத் திரும்பவும் நல்ல பெயர் ஏற்படலானது.

பிற்காலத்தில் ஆண்டுதோறும் மாநிலத் தலைநகரங் களிலும் மாவட்டங்களின் தலைநகரங்களிலும் கைத்தறித் துணிக் கண்காட்சிகள் நடந்து வருவதும், அயல் நாடுகளில் கைத்தறித் துணிக்குச் சந்தை தேடும் முயற்சிகளும் தாம் முதல்வர் பதவி வகித்த காலத்தில் ராஜாஜி எடுத்த முயற்சிகளின் நற்பலன்களாகும்.

# "மழை தந்த மகான்!"

இரண்டாவது முறை ராஜாஜி முதலமைச்சராக வந்த பின்னர் - அதாவது, 1952 டிசம்பரில் தமிழ்நாட்டில் மாமழை பெய்தது. சரியாக ஆறு ஆண்டு காலமாக மழையின்றி வறண்டு கிடந்த தமிழ் மண் மா மழையால் குளர்ச்சி யடைந்தது. ஏரி - குளங்கள் போன்ற நீர்நிலைக ளெல்லாம் மழை நீரால் நிரம்பி வழிந்தன.

## 'மாமழை போற்றுதும்!'

ராஜாஜி, சிலப்பதிகார இலக்கியத்தில் புலமை யுடையவர். 1940 -இல் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுத் தண்டனை பெற்றுத் திருச்சி சிறையிலிருந்த போது சக அரசியல் கைதிகளுக்கு சிலப்பதிகார வகுப்பு நடத்தினார். இந்தப் புலமை காரணமாக, "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" என்று அறிக்கை வெளியிட்டார். வான், மழையை காலமறிந்து வரையாது வழங்கிய இறையருளுக்கு நன்றி செலுத்துவதாகவும் தமது அறிக்கையில் அவர் குறிப்பிட்டார்.

ராஜாஜியை வழிபாட்டுக்குரிய மகானாகவே கருதும் "கல்கி" ரா. கிருஷ்ணமூர்த்தி, "மகான் வந்தார்; மழை பெய்தது" என்று தலைப்புத் தந்து ஆறாண்டுகளாக வாராத வான்மழை வந்ததற்கு மகான் ராஜாஜி முதல்வராக வந்ததுதான் காரணம் என்று சாதித்தார்.

ராஜாஜி கடவுளுக்கு நன்றி செலுத்தியும், 'கல்கி' யார் ராஜாஜிக்குப் பாராட்டு தந்தும் கருத்துக் கூறிய இரண்டு நாட்களுக்குள் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சையிலே பயங்கரமான புயல் அடித்து, பெருமளவு உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தியது தெரியவந்தது.

புயல் காரணமாக தந்திக் கம்பிகள் அறுந்தும், ரெயில் போக்குவரத்துத் தடைப்பட்டும் விட்டதால் செய்திப் போக்குவரத்து தடைப்பட்டு விட்டனவாதலால், தஞ்சையில் ஏற்பட்ட புயல் சேதம் பற்றிய செய்தி பத்திரிகைகளுக்கும் மாநில அரசின் தலைவரான முதல்வருக்கும் ஒன்றிரு நாள் தாமதித்தே கிடைத்தது.

அந்தப் புயலின்போது நான் தஞ்சை மாவட்டத்தில் தமிழரசுக் கழகப் பிரசாரச் சுற்றுலாவிலிருந்தேன். புயல் வீசிய நாளில் திருத்துறைப்பூண்டியில் சிக்கிக் கொண்டேன். நான் தப்பிப் பிழைத்தது தம்பிரான் புண்ணியம் என்ற நிலையில், பிரச்சாரப் பணியை இடையில் கைவிட்டு, இரண்டு நாள் தாமதப்பட்டு சென்னை வந்து சேர்ந்தேன்.

**பயங்கரச் சேதம்!**

தஞ்சை மாவட்டத்தில் - அங்கும் குறிப்பாக, கிழக்குப் பகுதியில் பெய்த பெருமழையாலும் வீசிய பெரும் புயலாலும் 350 பேர் மாண்டனர்; இரண்டே முக்கால் லட்சம் வீடுகள் அடியோடு நாசமாயின; 26 ஆயிரம் கால் நடைகள் மாண்டன; ரூபாய் ஐந்து கோடிக்கு நஷ்டம். இது, ராஜாஜி தந்த கணக்கு.

புயலால் விளைந்த சேதங்கள் பற்றி முழுத் தகவல்களும் தெரிந்த பின்னர், காங்கிரசை எதிர்க்கும் கட்சிகளும் - ஏன், ராஜாஜி ஆட்சியிடம் நல்லெண்ண

மில்லாத காங்கிரஸ்காரர்களும்கூட, ராஜாஜி தெய்வத்திற்கு நன்றி தெரிவித்து அறிக்கை விட்டதற்காகக் கேலி செய்து பேசினர். பொதுக் கூட்டங்களில் மட்டுமல்லாமல் சட்ட மன்றத்தில்கூட.

ஆயினும், ஆறாண்டு காலம் வறண்டு கிடந்த சென்னை மாநிலத்தின் மண்ணும், வெப்பத்தால் எரிந்து கரிந்து போன காடுகளும் மாமழையால் பசை கொண்டு புல்லும் பூண்டும் செடியும் கொடியும் தழைத்தன. குடிநீர் பஞ்சம் குறையலானது. வாயற்ற ஜீவன்களான கால் நடைகளுக்கு மேய்வதற்குத் தீனி கிடைத்தது.

ஆறாண்டுகாலம் ஓய்வு பெற்றிருந்த மாமழையானது ஓய்வை ரத்து செய்து தொழிலுக்குத் திரும்பியதற்குத் தெய்வம் காரணமா? முதலமைச்சர் பீடத்தில் ஏற்பட்ட நபர் மாற்றம் காரணமா? பகுத்தறிவுப்படி இயற்கை காரணமா? - என்ற வாதம் பத்திரிகையில் படிப்பதற்கும் பேச்சு மேடையில் கேட்பதற்கும் சுவையாகத்தானிருந்தது.

மாமழையும் பெரும்புயலும் தஞ்சை மாவட்டத்தைத்தான் பாழ்படுத்தியதாதலால், ''தஞ்சையை மட்டுமே பாதிக்கத்தக்க வகையில் ராஜாஜி கொண்டு வந்த லெவி முறையும், நிலவரி சர்சார்ஜும், தஞ்சை குத்தகை தாரர் - பண்ணையாள் பாதுகாப்புச் சட்டமும் தெய்வத் தாலும் பொறுத்துக் கொள்ள முடியாத தீமைகளாதலால் தெய்வம் சீறிவிட்டது'' என்று தஞ்சை மிராசுதாரரில் சிலர் வெளியிட்ட கருத்தும் பத்திரிகைகளில் வெளியாயின.

இதுபோன்ற மாமழையையும் பெரும் புயலையும் ராஜாஜி முதல்வர் பதவி வகித்த காலத்திற்கு முன்னும் பின்னும்கூடத் தமிழகம் கண்டதுண்டு.

இதன்படித்தான் ராஜாஜி ஆட்சியின்பால் நல்லெண்ணங் கொண்டோர், ஆறாண்டு காலம் ஓய்வு

பெற்றிருந்த மழையானது திரும்பவும் தொழில் புரியத் தொடங்கியதற்கு ராஜாஜியின் ஆட்சியைக் காரணமாக்கிப் புகழ்ந்தனர் எனலாம். 'நல்லார் ஒருவருளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும்மழை' என்பது பழமொழி.

''வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி மன்னர் நெறியினர்க் கோர்மழை
மாதர் கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே!''

என்பது தேவாரப் பாடல்.

கண்ணகி தேவியை மழைதரும் தெய்வமாகவே அறிமுகப்படுத்துகிறது சிலப்பதிகாரம். 'மழை' என்னும் பொருள் தரும் 'மாரி' யம்மன் என்னும் பெயரும் கண்ணகிக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

ஆகவே, *1946* முதல் வறட்சியால் வாடி வந்த சென்னை மாகாணத்தில், *1952* - இல் பெய்த மாமழை யானது, ராஜாஜியின் ஆட்சிக்குச் சாதகமாகவே அமைந்த தெனலாம். ஆம்; புயல் வீசிச் சேதம் விளைவித்தது தஞ்சை மாவட்டத்தில் மட்டும்தான். மாமழை பெய்து வறட்சியைக் குளிர்ச்சியாக மாற்றியது தமிழ்நாடு முழுவதிலுமாகும்.

இந்தக் கருத்து ராஜாஜி ஆட்சியின்பால் நல்லெண்ண மில்லாதவர்களுக்கு அந்நாளில் பேச்சு மேடைகளில் யான் தந்த பதிலாகும். ஆம்; இதற்கெனவும் தமிழரசுக் கழக மேடை ராஜாஜி ஆட்சிக்குப் பயன்பட்டது.

# ''அரை நாள் கல்வி''

ராஜாஜி, 1953 மே திங்களில் ஆரம்பக் கல்வியில் மாறுதலைக் காண புதிய திட்டமொன்றை வெளியிட்டார். அது, 1953 - 54 ஆவது கல்வியாண்டிலே நடைமுறைக்கு வருமென்றும் அறிவித்தார். அது, ''அரைநாள் கல்வித் திட்டம்'' எனப் பெயர் பெற்றது.

இந்திய அரசமைப்புச் சட்டத்திலே, ''இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னுள்ள பத்தாண்டுகளுக்குள் பள்ளிக்குள் புகவேண்டிய பருவத்தை யடைந்துவிட்ட குழந்தைகளுக்குக் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வியளித்துவிடவேண்டும்'' என்று விதி வகுக்கப் பட்டிருக்கிறது.

ராஜாஜி, சுதந்திர இந்தியாவின் அரசியலைத் தயாரித்த கர்த்தாக்களில் ஒருவராவார் - ஏன், சுதந்திர பாரதத்தைப் படைத்த பிரம்மாக்களில் ஒருவர் என்றும் சொல்லலாம். அதனால், இந்தியக் குழந்தைகள் அவ்வளவு பேருக்கும் கட்டாயமாகவும் இலவசமாகவும் கல்வியளிப் பதை அரசியல் சட்டம் வகுத்துள்ள காலவரம்புக்குள் நிறைவேற்றிவிட வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அதற்குத் தடைகள் பல உள்ளன என்பது அவருக்குத் தெரியும்.

இந்தியா வறுமை மிகுந்த நாடு. தமிழ்நாடும் இதற்கு விலக்கல்ல. கிராமத் தொழில்கள் அனைத்தும் குடும்பத்

தொழில்களாக - இன்னும் சொன்னால், பிறப்பு வழிப் பட்ட குலத்தொழில்களாக உள்ளன. அதனால், பள்ளிக்கு அனுப்ப வேண்டிய பருவத்திலுள்ள குழந்தைச் செல்வங்களைக் குடும்பத் தொழில்களில் பெற்றோர் ஈடுபடுத்தி வருகின்றனர். இது குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வியை அளிப்பதற்குப் பெருந்தடையாக இருக்கின்றது.

மற்றும் மக்கள் தொகை பெருகிக்கொண்டே வரும் இந்தியாவிலே, பள்ளிக்குள் புகும் பருவத்தை அடைந்து விட்ட அவ்வளவு குழந்தைகளுக்கும் கட்டாயமாகவும், இலவசமாகவும் கல்வியளிப்பதோ, அதையும் 1960 க்குள் செய்து முடிப்பதோ சுலப சாத்தியமல்ல. அதற்குத் தேவைப்படும் பள்ளிக் கட்டடங்களையும் ஆசிரியர் களையும் தயாரிப்பதற்கான பொருள் வசதி மாநில - மத்திய அரசுகளுக்கு இருக்கவில்லை. இந்நிலையில், இரண்டு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டியது அரசின் கடமையாகிறது.

முதலாவது, குடும்பத் தொழில்களில் - அதாவது, குலத்தொழில்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தி வருவாய் தேடும் பெற்றோரின் விருப்பத்தையும் நிறைவேற்றும் வகையில் ஆரம்பக் கல்வி முறையில் மாறுதல் காண வேண்டும். ஆம்; கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரண்டாவது, அரசுக்கு பொருளாதார பளுவை ஏற்படுத்தாத வகையில் - இருக்கின்ற பள்ளிக் கட்டடங் களையும் பணியிலிருக்கும் ஆசிரியர்களையும் கொண்டே எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வியளிப்பது.

**அரசியலமைப்புப்படி....**

ராஜாஜியின் அரைநாள் கல்வித் திட்டம் வருவதற்கு முன், அரசியல் சட்டம் வகுத்த பத்தாண்டு காலக்கெடுவில் மூன்றாண்டுகள் முடிந்து போயிருந்தன. எஞ்சியுள்ள ஏழாண்டுகளுக்குள் அதை நிறைவேற்றியாக வேண்டியிருந்தது. இதனை நினைவில் கொண்டு, அரைநாள் கல்வித் திட்டத்தை அவர் பிரகடனம் செய்தார். அது வருமாறு:

''பள்ளிக்கூட நேரம் தினமும் காலையில் அல்லது பிற்பகலில் 3 மணி நேரமாக இருக்கும். பள்ளிக்கூடத்தில் படிக்கும் 3 மணி நேரம்போக, எஞ்சிய நேரத்தில் மாணவியாக இருந்தால் தாயாரின் குடும்ப வேலையிலும், மாணவனாக இருந்தால் தகப்பனாரின் வருவாய்க்கு உரிய தொழிலிலும் ஈடுபட முடியும்.

''கைத்தொழில் எதிலும் ஈடுபடாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பள்ளிக்கூடத்திலோ அல்லது கிராமத்திலோ ஏதாவது தொழில் கற்க ஏற்பாடு செய்யப்படும்.

''பள்ளிக்கூட நேரம் குறைந்து இருப்பதால், அந்த நேரத்தில் மாணவர்களுக்கு நிரந்தரமான சமூக சேவையில் ஈடுபடப் பயிற்சியளிக்கலாம்.

''வசதியுள்ள கிராமங்களில் புதிய திட்டத்தை அமுல் நடத்துவதில் ஒத்துழைக்க கிராமப் பள்ளிக்கூடக் கமிட்டிகள் அமைக்கப்படும்.

''புதிய திட்டப்படி பள்ளிக்கூட நேரம் குறைக்கப்படுகின்றதென்றாலும், மொழி - கணக்கு - வரலாறு - பூகோளம், சுகாதாரம் - சிவிக்ஸ் முதலிய பாடங்களுக்குரிய போதனை நேரம் குறைக்கப்படமாட்டாது.

''இந்தத் திட்டத்தால் முதலாவது படிவத்தில் (ஆறாவது வகுப்பில்) சேருவதற்குத் தேவைப்படும் கல்விப் பயிற்சி குறையாதபடி கவனித்துக் கொள்ளப் படும்.

''புதிய கல்வித் திட்டம் முனிசிபல் நகரங்கள், மேஜர் பஞ்சாயத்துப் பிரதேசங்கள் அல்லாத சிறிய கிராமங் களில் மட்டுமே அமுல் நடத்தப்படும்.''

தமது திட்டத்தை மாநிலம் முழுவதுமே அமுல் நடத்துவதுதான் முதல்வர் ராஜாஜியின் குறிக்கோள் என்றாலும், நகரங்களில் வாழும் வாழ்க்கை வசதியுடைய உத்தியோக வர்க்கத்தாரின் குழந்தைகளில் பெரும்பாலோர் பள்ளிக்குச் செல்வது இயற்கையாகவே அதிகரித்து வந்த நேரமது. ஆனால், நகரங்களோடு ஒப்பிடுமிடத்து கிராமங்களிலேதான் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பு வது மிகவும் குறைவாக இருந்தது. ஆம்; கிராமங்களில் வாழ்வோரில் மிகப் பெரும்பாலோர் உத்தியோக வர்க்கத் தினரல்லர். சாதி ரீதியான குடிசைத் தொழிலில் ஈடுபட்டு வாழ்வோராவர். அதனால், 'அரை நாள் கல்வி' அவர் களுக்கு உதவிகரமாக அமையுமென்று ராஜாஜி நம்பினார்.

## ராஜாஜியின் அறிக்கை

தமது புதிய அரைநாள் கல்வித் திட்டத்தின் மூலம் தாம் எதிர்பார்க்கும் நற்பலன்கள் குறித்து முதலமைச்சர் ராஜாஜி விளக்கம் தந்து அறிக்கை விடுத்தார். அது வருமாறு:

''இந்தத் திட்டத்தை நகரங்களில் அமுல் நடத்தாதது பற்றிக் குறைகூறப்படுகிறது. கிராம மக்கள்தான் நகரங்களுக்கு ஓடி வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே,

அங்கு முதலில் சீர்திருத்தம் செய்துவிட்டால், அப்புறம் நகரங்களிலுள்ள பள்ளிகளைச் சீர்திருத்துவது எளிதாகும்.

''ஐந்து வயது முதல் எட்டு வயது வரையுள்ள குழந்தைகள் எல்லா வேலைகளையும் கற்றுக்கொண்டு அவற்றைச் செய்து தொழிலாளிகளாகிவிட வேண்டு மென்று நான் விரும்பவில்லை. கிராமாந்திரத் தொழில் களுடன் பிள்ளைகளுக்கு நெருங்கிய தொடர்பிருக்க வேண்டுமென்பதுதான் எனது எண்ணம்.

''பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்பும்படிச் செய்வதற்காக இதுவரை எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியுற்றன. புதிய திட்டத்தால் அதிகமான குழந்தை கள் பள்ளிகளுக்கு வருவார்கள்.

''இப்போது பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் பஞ்சம் இருந்து வருகிறது. புதிய திட்டம் அமுலுக்கு வந்தால், 2 அல்லது 3 ஆசிரியர்களே பல வகுப்புகளைத் திறமையாக நடத்த முடியும்; ஆசிரியர் பஞ்சம் தீரும்.

''இப்புதிய கல்வித் திட்டம் 31,784 பள்ளிகளில் அமுல் நடத்தப்படும். அந்தப் பள்ளிகளில் கல்வி பயில்வோரின் எண்ணிக்கை 29,37,277.''

ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்திற்கு ''குலக் கல்வித் திட்டம்'' என்று தவறான பெயர் கொடுத்து அறிஞர் அண்ணாவின் தலைமையில் இயங்கிய திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்புக் காட்டியது. நாளடைவில் பெரியார் தலைமையில் இயங்கி வந்த திராவிடர் கழகமும் போர்க்கொடி உயர்த்தியது.

ராஜாஜி காங்கிரஸ் கட்சிக்காகத்தான் முதல்வர் பொறுப்பிலிருந்தார். நிரந்தரமாகக் காங்கிரசிடமிருந்து கை

நழுவிப் போக இருந்த சென்னை மாகாண ஆட்சியை அதற்கு உரிமையாக்கித் தரத்தான் - தமிழ்நாடு காங்கிரசே விரும்பி அழைத்ததால்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ஆகவே, தி.க. - தி.மு.க.வின் எதிர்ப்புக்கு எதிர்ப்புக்காட்டி பிரசாரம் செய்ய தமிழ்நாடு காங்கிரஸ் கடமைப் பட்டிருந்தது. ஆனால், அப்படி எதுவும் நடைபெற வில்லை.

**கழகம் கைகொடுத்தது!**

இந்நிலையில், தமிழரசுக் கழகம் புதிய கல்வித் திட்டத்திற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யும் பொறுப்பை தானே தனித்து நின்று மேற்கொண்டது. ஸ்தாபன ரீதியில் தமிழரசுக் கழகப் பொதுக் குழு கூடி, கல்வித் திட்டத்திற்கு ஆதரவு காட்டித் தீர்மானம் நிறைவேற்றியது.

''*1960-க்குள் எல்லோருக்கும் கல்வி*'' என்னும் அரசியல் சட்ட விதிக்கு வெற்றி தேடுவதை சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்குச் செய்யும் தொண்டாகத் தமிழரசுக் கழகம் கருதியது. தமிழ்நாடு முழுவதிலும் பொதுக் கூட்டங்கள் போட்டும் மாநாடுகள் நடத்தியும் புதிய கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தது.

இதுபற்றிக் கழகத்தின் நிலையை விளக்கி 7-6-53 ''செங்கோல்'' இதழில் யான் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''தமிழரசுக் கழகத்தாருக்குத் தனியான ஒரு கல்விக் கொள்கை உண்டு. ஆங்கிலேயன் வகுத்த - ஆங்கில மொழியை முதன்மையாகக் கொண்ட இன்றைய கல்வி முறையை நாங்கள் அடியோடு வெறுக்கிறோம். இதைத் திருத்துவதனாலும் பயன் இல்லை. அடியோடு ஒழித்துக்

கட்டி, அமையவிருக்கும் சோஷலிசச் சமுதாயத்திற்கேற்ப ஒரு புதிய கல்வி முறையை வகுக்க வேண்டும்.

''ஆங்கிலேயர் வகுத்த கல்வித் திட்டம் நமது பண்பாடுகள் அனைத்தையும் பாழாக்கிவிட்டது. முன் பெல்லாம் தாய்மொழியில் ஞானம் உடையவர்களையே ''படித்தவர்கள்'' என்று சொல்லுவார்கள். இப்போது, ஆங்கில ஞானம் உள்ளவர்களே ''படித்தவர்கள்'' என்று சொல்லப்படுகிறார்கள். தமிழில் பல்கலையும் படித்துப் பண்டிதராயினும், அவர் படித்தவராகக் கருதப்படு வதில்லை. ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு உழைத்து உண்பதே நாகரிகமாகக் கருதப்பட்டது. இன்றோ உழைக் காமல் உண்பதே ''நாகரிகமா''கக் கருதப்படுகிறது.

''இந்தச் சீர்கேடுகளையெல்லாம் போக்கி, மக்களைச் சீர்படுத்த ஒரு புதிய - புரட்சிகரமான கல்வித் திட்டம் வேண்டும் என்பது தமிழரசுக் கழகத்தின் கல்விக் கொள்கை.

''ஆரம்பக் கல்விக்கென முதலமைச்சர் ராஜாஜி தயாரித்துள்ள புதிய கல்வித் திட்டம் நாட்டினரின் முன்னே வைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில், இந்தத் திட்டம் நமது குழந்தைகளுக்கு அரைநாள் கல்வியைக் கட்டாயமாகப் போதிக்கிறது. எஞ்சிய அரை நாளில் அவரவர்கள் விருப்பப்பட்ட தொழில்களில் ஈடுபட வாய்ப்புத் தருகிறது. ஆனால், அந்தத் தொழில்களைப் பள்ளிகளிலேயே கற்க வசதி செய்து தரப்படவில்லை என்பது ஒரு குறை.

''புதிய திட்டம், அமாவாசையைப்போல் காட்சி யளிக்கிறது சிலருக்கு. இன்னும் சிலருக்கு, பூரணச் சந்திரனைப் போலத் தோற்றமளிக்கிறது. என்னைப்

பொறுத்தவரையில் ராஜாஜியின் திட்டம் இருள் கவ்விய அமாவாசையும் அல்ல; ஒளி வீசும் பூரணச் சந்திரனும் அல்ல. பிறைச் சந்திரனாகவே காட்சியளிக்கிறது. அது முழுமதியாகுமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

''ராஜாஜியின் திட்டம் பழைய வருணாசிரமத் தருமத்திற்கு வாழ்வு அளிப்பதாகும் என்று திராவிட இயக்கத்தார் கூறுகின்றனர். அதற்குக் காரணம், திட்டத்தைக் கொண்டு வந்த ராஜாஜி பிராமணராக இருப்பதுதான். திராவிட இயக்கத்தாரின் கண்ணோட்டத்தில் காங்கிரசே ஒரு வருணாசிரம ஸ்தாபனம்.

''தமிழரசுக் கழகத்தார் காந்தியடிகளின் ஆதாரக் கல்வித் திட்டத்தை முன்பே ஒப்புக் கொண்டவர்கள். திராவிட இயக்கத்தார் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அதைக்கூட வருணாசிரமத் திட்டம் என்றுதான் கூறுகிறார்கள். ஆகவே, தமிழக காங்கிரஸ்காரர்களும் தமிழரசுக் கழகத்தாரும் திராவிட இயக்கத்தாரின் எதிர்ப்பில் கலந்து கொள்வதில் அர்த்தம் இல்லை.

''ராஜாஜியின் திட்டப்படி அரைநாள் படிப்பிலும் அரைநாள் தொழிலிலும் பிள்ளைகளை ஈடுபடுத்துவதால் எதுவும் கெட்டுப் போகாது. அதிக நன்மை ஏற்படும். அப்படி ஏற்படும்போது, புதிய திட்டத்தை நகரங்கள் உட்பட நாடு முழுவதிலும் அமுல் நடத்தலாம். செகண்டரிப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தலாம். ராஜாஜியின் திட்டம் கல்வித் துறைக்கான முழுத் திட்டமல்ல. அதனால்தான் அதை பிறைச்சந்திரனோடு ஒப்பிட்டேன்.''

## ஏழைகளுக்கான திட்டம்

ராஜாஜியின் கல்வித் திட்டம் வெளியானபோது, தமிழரசுக் கழகம் வடக்கெல்லைப் போராட்டத்தில்

தீவிரமாக ஈடுபட்டிருந்தது. அந்த நிலையிலும் கல்வித் திட்டத்தை ஆதரிப்பதிலும் தீவிரம் காட்டியது. காரணம், கொள்கையளவில் அதிலே கழகத்திற்கு இருந்த ஈடுபாடு தான். காந்தி மகான் தந்த ஆதாரக் கல்வியின் ஒரு பகுதி யாகவே ராஜாஜியின் திட்டத்தை எனது கழகம் கருதியது.

ராஜாஜியிடம் எனக்கு மிகுந்த பக்தி உண்டென் றாலும், அதற்காக நான் அவரது கல்வித் திட்டத்தை ஆதரிக்கவில்லை. இன்றும்கூட ''எல்லோருக்கும் கல்வி'' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டு மென்றால், ராஜாஜியின் பழைய திட்டம்தான் அதற்கு உதவி புரியும் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது:

ராஜாஜியின் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வரும் முன்னர் - அதாவது, 1950 - 51 -ஆம் கல்வி ஆண்டில் ஆரம்பக் கல்வி விஷயத்தில் தமிழகத்தில் நிலைமை இதுதான்;

''பள்ளிக்கு வரக்கூடிய பருவமடைந்த பிள்ளைகளில் 48 சதவிகிதத்தினரே பள்ளிகளில் படித்து வந்தனர். மற்ற 52 சதவிகிதத்தினர் படிக்கும் பருவமிருந்தும் பள்ளிக்கு வரவில்லை.

''மாகாண முழுவதிலும் முதல் வகுப்புகளில் சேர்ந்த பிள்ளைகளில் 100-க்கு 38 பேர்தான் ஐந்தாம் வகுப்புவரை தொடர்ந்து படித்து ஆரம்பக் கல்வியறிவைப் பூரணமாகப் பெற்றனர். எஞ்சிய 62 சதவிகிதத்தினர் இடை வகுப்பு களிலேயே பள்ளிக் கல்வியை இழந்தனர்.''

இந்த நிலையைப் போக்கி, 100க்கு 100 பேருக்கும் கல்வியளிப்பதற்காகவே அரைநாள் கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. திரும்பவும் சொல்கிறேன்;

ஆரம்ப வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளை வெளியேற்றுவதற்காக ராஜாஜியின் திட்டம் வரவில்லை. பள்ளிக்கு வெளியே இருந்த அவ்வளவு பிள்ளைகளையும் பள்ளிக்குக் கொண்டு வருவதற்காகத்தான் ராஜாஜி முயன்றார். அதையும் அரசியல் சட்டத்திலுள்ள ''எல்லோருக்கும் கல்வி'' - ''கட்டாயக் கல்வி'' என்னும் தத்துவங்களுக்கு உதவி புரியத்தான் செய்தார். ஆனால், எதிர்ப்பு மூண்டுவிட்டது! அது, கடுமையாகத்தான் இருந்தது.

முன்னாள் முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், தமிழ்நாடு காங்கிரசின் நிலையிலிருந்து வேறுபட்டு, ராஜாஜியின் ஆட்சிக்கு மனநிறைவோடு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தார். என்றாலும், அவரும் கல்வித் திட்டத்திற்கு எதிர்ப்புக் காட்டினார். இந்த மோசமான சூழ்நிலையிலே, தமிழரசுக் கழகம் ஒன்றுதான் ராஜாஜியின் திட்டத்திற்கு தனது கல்விக் கொள்கைவழி மனநிறைவோடு ஆதரவு காட்டியது.

**மாயூரத்தில் அடி!**

கல்வித் திட்டத்தை ஆதரித்து நான் பேசிய பொதுக் கூட்டங்களிலே கடுமையான எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. 'எதிர்ப்பு' என்றால், 'ஒழிக' என்ற கோஷம் மட்டுமல்ல; ஆட்சேபக் குரல்கள் மட்டுமல்ல; கல்லடிகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. 'ஆஸிட் பல்பு' களும் என்னை நோக்கி எறியப்பட்டன. தற்போது ''மயிலாடுதுறை'' என்று பெயர் மாற்றப்பட்டுள்ள மாயவரத்தில் 6-9-54 -இல் நடந்த கழக மாநாட்டிலே, கல்வித் திட்டத்தை ஆதரித்துப் பேசியபோது சரியாக ஒரு மணி நேரம் திராவிட இயக்கத்தாரின் எதிர்ப்புக் கூச்சலைச் சமாளித்து, இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து பேச

வேண்டியிருந்தது. கூட்டம் முடிந்து வீதி வழியே நடந்தபோது, யாரோ சிலர் என்னைச் சூழ்ந்து கொண்டு, ஏதோ ஒரு கருவியால் தலையில் அடித்தனர். அதனால், நெற்றியில் ஆழமான காயம் ஏற்பட்டு, ரத்தம் கொட்டியது. ஆரம்ப சிகிச்சையை மாயவரத்திலேயே பெற்றுக் கொண்டு, அன்றிரவே ரெயில் ஏறி மறுநாள் காலை சென்னை திரும்பினேன்.

மறுநாள் காலை சென்னை போலீசாரால் இராயப் பேட்டை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டேன். ஒருவாரம் அங்கு தங்கியிருந்து காயம் ஆறிய பின் வீடு திரும்பினேன். என்னைத் தாக்கியவர்கள் என்று கருதி சிலர்மீது போலீசார் வழக்குத் தொடுத்தனர். மாயவரம் மாஜிஸ்திரேட் கோர்ட்டிலே இருமுறை சாட்சிக் கூண்டில் நின்று, அரசாங்கத் தரப்பில் சாட்சியம் கூறினேன். குற்றவாளிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. கட்ட மறுத்து அவர்கள் சிறை சென்றனர்.

இவ்வளவையும் நான் இங்கு கூறுவது, 1952 -க்கும் 1954 -க்கும் இடைப்பட்ட காலத்தில் ராஜாஜி முதலமைச்சர் பதவியில் இருந்தபோது அவருக்கும் எனக்கும் இருந்த புனிதமான தொடர்பை விளக்குவதற்காகத்தான்!

1953 -இல் பெரிய சென்னை மாகாணத்திலிருந்து தெலுங்கு மொழி வழங்கும் ஆந்திர மாநிலத்தைப் பிரித்து மொழி அடிப்படையில் அதைத் தனி மாநிலமாக அமைக்க மத்திய அரசு முடிவெடுத்தது. அப்போது சென்னை நகரைக் காப்பதற்கு தமிழர் அரும்பாடு படவேண்டி யிருந்தது.

## சென்னை சண்டிகார் ஆகியிருக்கும்!

ராஜாஜி ஆட்சிப் பொறுப்பில் இருந்ததால், அவருடைய ஒத்துழைப்பைப் பெற்று, தலைநகரைக் காக்க

தமிழரசுக் கழகத்தால் முடிந்தது. ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த நட்பு எங்கள் சுயநலம் சம்பந்தப்பட்டதல்ல. ஆந்திரம் தனியரசு மாநிலமானபோது சென்னை மாநிலத்தில் ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பில் இருந்தில்லையானால், சென்னை நகரத்திலே ஆந்திர அரசுக்கு இடம் கிடைத்திருக்கும். அதன் விளைவாக, சென்னை நகரம் மற்றொரு ''சண்டிகார்'' ஆக மாறியிருப்பதும் சாத்தியமே! சென்னை நகரம் காக்கப்பட்டதிலே ராஜாஜிக்குள்ள பொறுப்பை மறைக்கவோ குறைத்து மதிப்பிடவோ நான் என்றுமே முயன்றதில்லை. ஆனால், தமிழரசுக் கழகம் பெரு முயற்சி எடுத்தில்லையானால், ஆந்திரருடைய ஆக்கிரமிப்பிலிருந்து சென்னையைக் காக்க ராஜாஜியின் ஆட்சியாலும் முடிந்திருக்காது, அதுபோல், அப்போது ராஜாஜி முதல்வர் பொறுப்பில் இருந்தில்லையானால், தமிழரசுக் கழகத்தாலும் சென்னையைக் காப்பாற்ற முடிந்திருக்காது. ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த நட்பானது மிகவும் புனிதமானது. தமிழரசுக் கழகத்தின் கொள்கைப்படி புதிய தமிழகம் படைப்பதற்கு, எங்கள் நட்பு பெரிதும் பயன்பட்டது. 1953 அக்டோபரில் ஆந்திர மாநிலம் பிரிந்து சென்றது.

ஆந்திரம் பிரிந்து போனதால், எஞ்சிய சென்னை மாகாணத்தில் ராஜாஜியின் ஆட்சி எதிர்ப்பின்றி நடக்க முடியும் என்று சிலர் கருதினர். ஏன்? அவரேயும் அப்படிக் கருதினார் என்பது எனது நம்பிக்கை. ஆனால், நடந்தது வேறாகிவிட்டது. ஆந்திரம் பிரிந்துபோன பின்னர், தமிழ்நாடு காங்கிரசுக்கும் திராவிடர் கழகத்திற்கும் ஏற்பட்ட தார்மிக ரீதியிலான உறவானது ராஜாஜியின் ஆட்சிக்கு அபாயகரமானதாக அமைந்தது. அரைநாள் கல்வித் திட்டத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பானது முதல்வர் பொறுப்பிலிருந்த ராஜாஜியை வெளியேற்றுவதற்கான ஒரு

சாதனமாக காங்கிரசிலிருந்த ஒரு சாராருக்குப் பயன் பட்டது.

*1954* -ஆம் ஆண்டின் தொடக்கத்திலே ஆந்திரர் களைத் தன்னகத்தே பெற்றிராத எஞ்சிய சென்னை மாகாண சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் கூட்டத்திலே கல்வித் திட்டம்பற்றி விவாதிக்கப்பட்டது. முதல்வர் ராஜாஜி, தாமே விரும்பி, தமது கல்வித் திட்டம்பற்றி கட்சியின் நிலையை அறிந்து கொள்ள முயன்றார்.

**'ம.பொ.சியுமா?'**

பொதுவாக, கல்வித் திட்டத்தின் சாதகபாதகங்களை எடுத்துக் காட்டி, அதைக் கைவிடும்படியோ தொடர்ந்து அமுல் நடத்தும்படியோ கோரியவர்கள் மிகவும் குறை வாகத்தான் இருந்தார்கள். ராஜாஜியின் ஆட்சி நீடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தால், அதற்குத் தடையாக இருக்கும் என்று நம்பி, கல்வித் திட்டத்தைக் கைவிடும்படி சிலர் கோரினர். அவர்களிலே நானும் ஒருவனாக இருந்தேன். விவாதத்தின் முடிவில் ராஜாஜி பேசியபோது,

''இங்குள்ளவர்களிலே கிராமணியாரிடம் நான் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறேன். எனது உள்ளத்தை அவர் நன்கறிந்தவர். அப்படிப்பட்டவரும் முதல்வர் பதவியில் நான் நீடிக்க வேண்டுமென்பதற்காகக் கல்வித் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று பேசியது எனக்கு வியப்பைத் தந்தது. எனது திட்டத்தை ஆதரித்துப் பேசிய பாவத்திற்காக மாயவரத்திலே அவர் அடிபட்டதை நான் மறக்க முடியுமா? அவருக்கும் சொல்கிறேன். முதல்வர் பதவியை விட, சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள எல்லோருக்கும் கல்வி அளிப்பது என்ற எனது புதிய திட்டம்தான் எனக்குப் பெரிது. அதை நான் கைவிடுவதற்கில்லையென்று

உங்களிடம் உறுதியாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று சொன்னார். இதிலே வார்த்தைகள் மாறியிருக்கலாம். அவருடைய வார்த்தைகளை அப்படியே நினைவில் வைத்து எழுதுவது எவருக்கும் சாத்தியமில்லை. ஆனால், அவர் வெளியிட்ட கருத்தின் சாராம்சம் இதுதான்.

ராஜாஜி கட்சிக் கூட்டத்திலே தமது புதிய திட்டத்தின்மீது வாக்கெடுப்பு நடத்தியிருந்தால், அவர் வெற்றி பெற்றிருக்கக் கூடும். ஆனால், சட்டசபை காங்கிரஸ் கட்சி எதிர்ப்பின்றித் தமது திட்டத்தை ஏகமனதாக ஏற்க வேண்டுமென்று விரும்பினார். அதற்குச் சந்தர்ப்பமில்லை என்பதை அறிந்ததும், 1954 மார்ச்சு திங்களில் தாமாகவே முதல்வர் பதவியைத் துறந்தார். ஆனால், காங்கிரசில் நீடிக்கலானார். பதவி விலகுவதற்கு அவர் சொன்ன காரணம் ''உடல்நலம் இல்லை'' என்பதாகும்.

## ''செங்கோல்'' தலையங்கம்

ராஜாஜியின் பதவி விலகல் எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. அவர் பதவியில் நீடித்து இருந்தால் தமிழக வடக்கு - தெற்கு எல்லைப் பிரச்சினைகளிலே அவருடைய பேருதவியை நான் பெற்றிருக்க முடியும். ஆயினும், அவரை பதவியில் நிலைக்க வைப்பது எனது சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. ராஜாஜி தாமாகவே முதல்வர் பதவியைத் துறந்தது பற்றி 'செங்கோல்' பத்திரிகையில் தலையங்கம் எழுதினேன். அதன் முக்கிய பகுதிகளை இங்கே தொகுத்துத் தருகிறேன்:

''எந்த ஒரு நாட்டிலும் சரி; ராஜாஜி போன்ற பெருந் தலைவர்கள் பதவியிலிருந்து விலகுவதானால், அது மக்கள் மனவழி நடப்பதாக இருக்கும்; அல்லது அந்தப் பெருந்

தலைவர்கள் உண்மையாகவே ஓய்வு பெறுவதற்காக இருக்கும். ஆனால், 'உடல்நலக் குறைவு' - 'ஓய்வு' என்றெல்லாம் ராஜாஜியின் பதவி விலகல் பற்றி உலவி வரும் செய்திகள் உண்மையை மறைக்கும் திரைகளே. ராஜாஜி முதுமை எய்திவிட்டார். அவருடைய உடலும் பலமிழந்துவிட்டது. இதெல்லாம் உண்மைதான். ஆனால், பதவியிலிருந்து விலகியே தீரவேண்டிய அளவுக்கு அவருடைய உள்ளம் பலவீனம் அடையவில்லை. அவரைப் பதவியிலிருந்து வெளியேற்றியே தீரவேண்டு மென்ற அளவுக்கு மக்களுக்கு வெறி பிடிக்கவில்லை. இதற்கு மாறாக, மக்கள் அவரை விரும்புகிறார்கள்.

''ஆயினும், திரைமறைவில் ஒரு சிலர் தமக்குக் கொடுத்து வந்த தொல்லைகளைச் சகிக்க முடியாமல்தான் ராஜாஜி பதவியிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறார். இதுதான் அப்பட்ட உண்மை. ஆம்; மானமா? மந்திரி பதவியா? என்ற கேள்விகளை எழுப்பி, விடையளிக் குமாறு வற்புறுத்தினர் அவருடைய விரோதிகள். மந்திரி பதவியைவிட மானமே பெரிது என்று அவர் விடை யளித்துவிட்டார்.

''பதவியிலிருந்து ராஜாஜி விலகியது வருந்தக் கூடியதுதான் என்றாலும், ஒரு வகையில், அதை நாமும் வரவேற்கிறோம். அவரைப் போன்றவர்கள் அதிகாரத்தில் இருப்பதைவிட, அதிகாரத்திற்கு வெளியேயிருப்பதுதான் நல்லது. தாமே எடுத்துக் கொண்ட இந்த 'ஓய்வை'ப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் அரசியலை - குறிப்பாக, காங்கிரசைத் தூய்மைப்படுத்த ராஜாஜி தொண்டாற்றுவார் என்று நம்புகிறோம்.

''ராஜாஜி எத்தகைய அபாயகரமான நிலையில் பதவியேற்றார்; மாகாணத்தை எதிர்நோக்கிய கஷ்டங்களை

யெல்லாம் அவர் சமாளித்தார்; இப்போது எத்தகைய திருப்திகரமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதனை நன்றி கெட்டவர்கள் மறந்தாலும் நாடு மறக்க வில்லை. இது ஒன்றுதான் அதிகாரப் பொறுப்பிலிருந்து விலகும் அவருக்கு ஆறுதல் தரும் விஷயம்.

''கடந்த இரண்டாண்டுகளாக ராஜாஜி ஆற்றி வந்துள்ள பெரும் பணிகளுக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் பூரண நலத்துடனிருந்து, எப்போதும்போல காங்கிரசுக்குப் பணிபுரிய வேண்டுமென்று பிரார்த் திக்கிறோம்.''

## காங்கிரசுக்கு முழுக்கு

ராஜாஜி முதலமைச்சர் பதவியைத் துறந்தபின், அப்போது தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் பொறுப் பிலிருந்த திரு. காமராசர் சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சரானார்.

ராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கு சில நாட்களுக்கு முன்புதான் தமிழக எல்லைப் பிரச்சினையிலே தமிழ்நாடு காங்கிரசுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக நான் மேலவை உறுப்பினர் பொறுப்பைத் துறந்தேன். இதையடுத்து நான்கு தினங் களுக்குப் பின்னர் காங்கிரசிலிருந்தே வெளியேறினேன். ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த ஆத்மார்த்தமான அரசியல் உறவுதான் நான் காங்கிரசைத் துறப்பதற்குக் காரணமாகும். வெளிப்படையாகச் சொல்லப்படும் காரணமானது, ராஜதந்திரத்தைச் சேர்ந்ததுதான். நானும் என் தமிழரசுக் கழகமும் ராஜாஜிக்கு ஆதரவாக இருப்பது பிடிக்காததால், த.நா.கா.வில் ஆதிக்கம் பெற்றிருந்தோர் என்னை வெளியேற்றினர்.

# ராஜாஜியின் தமிழ்ப் பற்று

**ரா**ஜாஜி அவர்கள், தமிழை சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்து அதற்காகப் பட்டம் பெற்றவரல்லர். ஆயினும், தமிழ் இலக்கியங்களிலே அவருக்குப் பொது அறிவு உண்டு. 'ரசிகமணி' டி.கே. சிதம்பரனார், கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார், திரு.வி.க ஆகியோரின் தொடர்பு காரணமாகத் தமிழ் இலக்கியங்களிலே தமக்குள்ள பொது அறிவை காலந்தோறும் வளர்த்துக் கொண்டே வந்தார்.

## தனித்தமிழ்ப் பற்றாளர்

'தனித்தமிழ்' - அதாவது, பிற மொழிச் சொற்கள் கலவாத தமிழ் என்கிறார்களே, அதிலேயும் ராஜாஜிக்குப் பற்று உண்டு. தமது பெயருக்கு முன்னே வரும் தலையெழுத்தை தமிழில் எழுதும்போதும் ஆங்கில முறைப்படி 'சி' என்றுதான் தொடக்க காலத்தில் அவர் போட்டு வந்தார். பின்னர், தமிழ்ப்பற்று முதிர்ச்சியடைந்தபோது 'ச' என்னும் தமிழ் எழுத்தையே பயன்படுத்தி வந்தார்.

தமது பெயரை 'ரா' என்று தொடங்கி அவர் எழுதி வந்த காலம் ஒன்று இருந்தது. பின்னர், 'இ' என்பதனைச் சேர்த்து இலக்கணப் பிழையின்றி எழுதலானார்.

தம்முடைய பெயரில் கலந்து வரும் 'ஜ' என்னும் வடமொழிச் சார்புடைய எழுத்தையும் கைவிட்டு 'ச'

என்னும் தமிழ் எழுத்தைப் பயன்படுத்திவந்தார். ஆனால், ''ராஜாஜி'' என்பதனை ''ராசாசி'' என்று எழுதுவதை நமது மூதறிஞர் விரும்பாதவரானார்.

கலைஞர் மு. கருணாநிதியால் நடத்தப்படும் 'முரசொலி' நாளிதழிலே தம்முடைய பெயர் 'இராசாசி' என்று வருவதில் தமக்குள்ள விருப்பமின்மையை வெளிப் படுத்தி அவருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

''எம்.ஜி.ஆர்.' என்னும் பெயரிலே கிரந்த எழுத்தான 'ஜி' இடம்பெற்றிருக்கும்போது, என் பெயரில் மட்டும் தானா 'ஜி' விலக்கப்பட வேண்டும்'' என்று கேட்டு கலைஞர் கருணாநிதிக்குக் கடிதம் எழுதினார். அதன் பின்னர், 'இராஜாஜி' என்று பிரசுரிப்பதை 'முரசொலி' வழக்கமாகக் கொண்டது.

## பிறமொழித் துவேஷமற்றவர்

ராஜாஜி வடமொழித் துவேஷத்தால் தனித் தமிழிடத்துப் பற்றுக் கொண்டவர் அல்ல. தமிழின் தன்னேரில்லாத தனிச் சிறப்பைக் காக்க வேண்டுமென்ற எண்ணத்தால்தான் தனித் தமிழிடத்துப் பற்றுக் கொண்டார். வடமொழியை வெறுப்பதும் பழிப்பதும்தான் தமிழிடத்துத் தங்களுக்குள்ள பற்றை வெளிப்படுத்தும் வழிமுறை என்ற தவறான உணர்வு தமிழரிடையே எப்படியோ புகுத்தப்பட்டுவிட்டது. இது, ராஜாஜிக்குப் பிடிப்பதில்லை; ஏன் எனக்குந்தான்! 'தமிழ்த் தென்றல்' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் திரு.வி. கலியாண சுந்தரனாரும் தூய தமிழில் எழுதுவதையும் பேசுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால், வடமொழிச் சொற்களை விலக்கிப் பேசுவதையும் எழுது வதையும் அவர் வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

கருத்துச் செறிவை வெளிப்படுத்துமிடத்து வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தி வந்தார். அதுபோல் ஒலியில் பிழைநேர்ந்துவிடக்கூடாது என்பதற்காகத் தமிழிலுள்ள கிரந்த எழுத்துக்களையும் அப்பெரியார் பயன்படுத்தினார். தாம் நடத்திய நாளிதழுக்குத் ''தேசபக்தன்'' என்றும் வார இதழுக்கு ''நவசக்தி'' என்றும் திரு.வி.க. பெயர் தந்ததனை இங்கு நினைவில் கொள்வோமாக!

ராஜாஜி, ஆரம்பக் கல்வி தொடங்கி, பட்டப் படிப்பு வரை தமிழ் மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவராக இருந்தார். மருத்துவம், பொறியியல் ஆகிய தொழிற் கல்விக்கும் தமிழே பயிற்றுமொழியாக இருக்கவேண்டும் என்று கூறி வந்தார். தமிழில் விஞ்ஞானக் கலைச்சொற்கள் போதிய யளவு இருக்கின்றன வென்று அவர் கருதினார். இல்லாத சொற்களைப் படைத்துக் கொள்ள முடியும் என்றும், அவற்றிற்கான வேர்ச் சொற்கள் தமிழில் இருக்கின்றன வென்றும் அவர் நம்பினார். சுருங்கச் சொன்னால், விஞ்ஞானத் துறையில் தமிழ்மொழி சூன்யத்தில் இல்லை என்பது அவரது உறுதிப்பாடாக இருந்தது. தமது கருத்தினை மெய்ப்பித்துக் காட்ட 'தமிழில் முடியுமா?' என்னும் பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டார். வடமொழி - ஆங்கிலக் கலப்பின்றித் தூய தமிழிலேயே விஞ்ஞான நூற்களை எழுத முடியும் என்பதனை அந்த நூலில் காட்டினார்.

*1937* - இல் தாம் முதன்முதலாக பெரிய சென்னை மாகாணத்தின் பிரதமரானபோது ஆரம்பக் கல்வியில் 3 -ஆம் வகுப்பு தொடங்கி ஆங்கிலம் கட்டாய பாட மொழியாக இருந்ததனை அகற்றினார். ஆரம்பக் கல்வியில் தாய் மொழியொன்றே போதிக்கப்பட வேண்டும்

என்பதனைப் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே நடை முறைப்படுத்திக் காட்டியவர் ராஜாஜியே யாவார்.

பள்ளிப் பிள்ளைகளுக்கெனத் ''தம்பி, வா!'' ''இதையும் படி!'' என்னும் பெயர்களில் பாடநூல்களை எழுதி அவற்றைப் பள்ளிகளில் பாடமாக்கினார்.

காங்கிரசின் தேசியக் கல்விக் கொள்கையிலும் காந்தியடிகளின் ''வர்தாக் கல்வி''த் திட்டத்திலும் ராஜாஜி முழு நம்பிக்கை கொண்டிருந்தார்.

## போதனா மொழிப் பிரச்சினை

1940 - 41 - ஆம் கல்வியாண்டில் உயர் நிலைப் பள்ளிகளில் தாய்மொழியின் மூலமே அனைத்துப் பாடங் களையும் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க ராஜாஜி முயற்சி எடுத்தார். அதற்கான ஆணையை 1939 - இல் கல்வி இலாகாவுக்கு அனுப்பினார். அப்போது, சென்னை மாகாண கல்வித்துறை இயக்குநராக ஸ்டாத்தம் என்ற ஆங்கிலேயர் இருந்தார். அவர், தாய்மொழியைப் போதனா மொழியாக்குவதற்குள்ள தடைகளை எடுத்துக் காட்டி, ஆங்கிலமே போதனா மொழியாக நீடிக்க வேண்டுமென்று வலியுறுத்தி கோப்பில் குறிப்பெழுதினார். அதற்கு 19-10-39 ஆம் தேதியில் முதலமைச்சர் ராஜாஜி எழுதிய மறுப்புக் குறிப்பு வருமாறு:

''தென்னிந்திய மொழிகளில் தக்க பாடப் புத்தகங்கள் பிரசுரமாகி, விஞ்ஞானத் துறைகளுக்கான அகராதிகள் வழுக்கப்படுகிறவரையில், பௌதிக விஞ்ஞான கணிதங் களைக் கற்பிக்க தாய்மொழியை உபயோகிக்க இயலாது'' என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இது ஒரு இக்கட்டான நிலை. அவ்வளவு அசௌகரியமாகவும் துப்புரவில்லாமலும் இருப்பினும், ஏதாவது ஒரு கட்டத்தில் ஆரம்பித்

தாலொழிய இந்த இக்கட்டுத் தீராது. பாடப் புத்தகங்கள் எழுதுவோர் துறவிகளல்லர். அவற்றிற்குக் கிராக்கி உண்டானால் ஒழிய அவை எழுதப்படும் என்று எதிர்பார்ப் பதற்கில்லை. தமிழில் போதிப்பது தொடங்கினாலன்றி, தமிழில் எழுதிய பாடப் புத்தகங்களின் தேவை புலப்படாது.

''நாட்டு மொழிகளில் பௌதிக விஞ்ஞானங்களைக் கற்பித்தால், மாணவர் ஆங்கில இலக்கணத்தையும் தேர்ந்து கொள்வதில் இடையூறு ஏற்படுமா என்ற விஷயத்தைப் பற்றி நாம் ஒரு திடமான முடிவுக்கு வர வேண்டும். தற்போது உலக வழக்கத்திலுள்ள ஆங்கில கலைச் சொற்களை அந்தந்தப் பிரதேச மொழிகளுக்கு ஏற்ப எடுத்து ஆள்வதில் குற்றமொன்றுமில்லை. இப்படிச் செய்வதால் ஆங்கில அறிவுக்குப் பாதகம் ஒன்றும் விளையாது. சில பாடங்களைக் கற்பிக்கும்போது 'மணிப் பிரவாளம்' ஏற்படுவதால் ஆங்கில மொழிப் பயிற்சி அப்படி யொன்றும் கெட்டுப் போகாது. அப்படியே கொஞ்சம் நேரிட்டாலும் நஷ்டத்தைவிட லாபமே அதிகம்.

''அறிவுத் துறைக் கல்வியில் சில அன்னியச் சொற்களை உபயோகிக்க வேண்டியிருப்பதால் போதனா மொழியே அன்னிய மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்வது தவறு என்பது என் கருத்து. மாணவர் களுக்குப் புகட்டப்படும் அறிவு தாய் மொழியிலாவது பிரதேச மொழியிலாவது வழங்கப்படுமானால், அதனால் ஏற்படுகிற உடனடியான பயன் மிகப் பெரியது. சில அன்னியக் கலைச் சொற்களை உபயோகப்படுத்துவதனால் இந்தப் பயன் கெட்டுவிடாது. சுருங்கக் கூறினால், போதனா மொழி என்பது வேறு. இந்தத் திட்டத்தைப் பின்பற்றினால் பிரதேச மொழியில் கலைச் சொற்கள்

விரைவில் தாமாக உண்டாகும். போதனையில் அன்றாடம் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் இந்தக் கலைச் சொற்களை எளிதில் தேடி எடுத்து வழக்கத்திற்குக் கொண்டுவர முடியும். இங்கிலாந்திலும் பிரான்சிலும் பௌதிக விஞ்ஞானக் கல்வியின் ஆரம்ப காலத்தில் லத்தின் மொழி யிலும் கிரேக்க மொழியிலுமா பள்ளிக்கூட வகுப்புகளை நடத்தினார்கள்?

''அன்னிய கலைச் சொற்களைத் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். அதே சமயம் போதனை பிரதேச மொழியிலேயே இருக்கலாம். பௌதிக விஞ்ஞானங் களுக்கு நான் இங்கு கூறியுள்ளது மற்றவகைப் பாடங் களுக்கும் பெரிதும் பொருந்தும். ஒரு மாணவன், வீட்டில் தன் சிறிய தம்பிக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதைப் பார்த்திருந்தால், அறிவுத் துறைகளில் எப்படி அன்னிய கலைச் சொற்களை உபயோகித்துத் தாய் மொழியிலேயே கற்பிக்க முடியும் என்பது புரியும்.

''ஆங்கிலத்திலேயே இதுவரை கற்பித்துப் பழகி விட்ட ஆசிரியர்களுடைய கஷ்டம் எனக்குப் புரிகிறது. வேறு எந்த பாஷையிலும் கற்பிக்க முடியாது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். நீங்கள் குறிப்பிடுகிற அனேக ஆட்சேபனைகளைச் சொல்லுகிறார்கள்.

''சென்னை போன்ற நகரத்தில் பலமொழி பேசும் மாணவர்கள் ஒருமித்துக் கூடும் வகுப்புகளில், ஒரு பிரதேச மொழியைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள கஷ்டம் எனக்குத் தெரியவே செய்கிறது.

''ஹோமர், வர்ஜில் முதலியோரின் நூல்களைக் கற்பிக்கின்ற ஆங்கில கலாசாலை வகுப்புகளில், இந்த நூல்களைக் கிரேக்க மொழி, லத்தின் மொழியிலா கற்பிக்கிறார்கள்? ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக்

கொண்டே இந்த கிரேக்க, லத்தின் இலக்கியங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

''பிரதேச மொழிகளில் பாடம் கற்பித்த போதிலும் கூட இப்போதைக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பாடப் புத்தகங்களை உபயோகிக்கும்படி சொல்லலாம். ஆனால், பள்ளிக் கூடத்தில் சொல்லித் தருவது பிரதேச மொழியிலேயே இருக்க வேண்டும்.

''நீங்கள் உடனே உங்கள் அதிகாரத்தின் கீழ் வேலை செய்யும் இன்ஸ்பெக்டர்களுக்கு உத்தரவு பிறப்பியுங்கள். அன்னியக் கலைச் சொற்களை உபயோகித்தபோதிலும் பௌதிக விஞ்ஞான கணித அறிவுத் துறைகளில் பிரதேச மொழியையே பயன்தரத்தக்க முறையிலும் அதிகமாகவும் உபயோகிக்கும்படி அறிவிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.''

# ஆங்கிலம் பற்றி அபிப்பிராய பேதம்

**1937** முதல் 1939 வரை ராஜாஜி பழைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோது தென்னகம் மொழிவழி ராஜ்யங்களாகப் பிரிக்கப்படவில்லை. ஆந்திரமும், தென் கன்னடம் - மலபார் மாவட்டங்களும் தமிழகத்தோடு இணைந்து ஒரே ஆட்சியில் இருந்தன என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஆளுநரும், சென்னை மாகாண தலைமைச் செயலாளரும், துறைதோறும் தலைமை பெற்றுத் ''துரைத்தனம்'' நடத்திய செயலர்களும் ஆங்கிலேயராக இருந்தனர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழ் - தெலுங்கு - கன்னடம் - மலையாளம் ஆகிய பல்வேறு மொழிகளைத் தாய் மொழி களாகக் கொண்ட பன்மொழி மாணவர்கள் படித்து வந்த காலம் அது.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பணிபுரிந்த ஆசிரியர் களும் பேராசிரியர்களும் கூடப் பல்வேறு மொழியினராக இருந்தனர். இந்தச் சூழ்நிலையை நினைவூட்டித்தான் தாய்மொழியை அறிவியல் பாடங்களுக்கான பயிற்சி மொழியாக்கும் சாத்தியம் இல்லையென்று கல்வித்துறை இயக்குநர் ஸ்டாத்தம் ராஜாஜிக்கு எழுதினார்.

அவரது கருத்தை மறுத்து ராஜாஜி எழுதிய குறிப்பிலே, இரண்டு விஷயங்கள் இந்நாளைய மக்கள் நினைவில் கொள்ள வேண்டியவையாகும். ஆங்கில

மொழி வழங்கும் பிரிட்டனிலே கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் உள்ள இலக்கியங்கள் கூட நாட்டு (ஆங்கில) மொழி மூலம்தான் போதிக்கப்படுகின்றன என்கிறார் ராஜாஜி. நம் நாட்டிலே இன்றுவரை கூட அந்த நிலை ஏற்படவில்லை. ஷேக்ஸ்பியர், ஷெல்லி ஆகியோருடைய ஆங்கில இலக்கியங்கள் ஆங்கில மொழி மூலம்தான் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கிரேக்க மொழியிலும் லத்தீன் மொழியிலும் உள்ள இலக்கிய நூல்களைக் கையில் வைத்துக் கொண்டு, அவற்றைப் போதிக்கும் பேராசிரியர்கள் ஆங்கில மொழியிலேயே விளக்கம் தருகிறார்கள். இதுபோல், அறிவியல் நூல்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும் அவற்றைத் தமிழில் மொழி பெயர்க்கும்வரை காத்திருக்கத் தேவையில்லை.

ஆங்கில மொழியில் எழுதப்பட்ட அந்த அறிவியல் நூல்களை அப்படியே கையில் வைத்துக்கொண்டு தமிழில் விளக்கம் தரப் பேராசிரியரால் முடியும். தாய்மொழி மட்டுமே போதனா மொழியாவதற்கு இந்த முயற்சி முன்னோடியாக அமையும். இது, அன்று ராஜாஜி கொண்டிருந்த கொள்கையாகும்.

இன்றுகூட, கலைக் கல்லூரிகளிலேயும், மருத்துவம் - பொறியியல் கலைகளைப் போதிக்கும் தொழில் கல்லூரிகளிலேயும் ஆங்கில நூற்களைக் கொண்டே தமிழில் வகுப்புகளை நடத்த முடியும். துரதிர்ஷ்டவசமாக, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள ''டமிலர்'' களான பேராசிரியர்கள் இந்த அரைகுறை வாய்ப் பைக்கூட தமிழுக்குத் தரத் தயாராக இல்லை. தாங்கள் பணிபுரியும் கல்லூரி பிரிட்டனிலுள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுபோல் கற்பனை

செய்துகொண்டு, ஆங்கிலம் ஒன்றையே பயன்படுத்தி வருகிறார்கள்.

கல்வித்துறை இயக்குநரான ஸ்டாத்தம் என்பவருக்கு ராஜாஜி அனுப்பிய ஆணை நடைமுறைக்கு வரவில்லை என்பது தமிழ் மொழியின் துரதிர்ஷ்டமாகும். தாய் மொழியில் பாடங்களைப் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யுமாறு கல்வித் துறை இயக்குநருக்கு முதலமைச்சர் ராஜாஜி ஆணை அனுப்பிய ஒரு திங்களுக்குள்ளாகவே காங்கிரஸ் அமைச்சரவை பதவிப் பொறுப்பிலிருந்து வெளியேறியது. அதனால், தமிழைப் போதனா மொழி யாக்க ராஜாஜி எடுத்த முயற்சி கருவிலேயே சிதைந்து விட்டது.

ஆங்கில ஆதிக்கத்தை அகற்றி, அதனிடத்தில் தமிழை அமர்த்துவதிலே ராஜாஜிக்கு இருந்த கொள்கைப் பிடிப்பு அவரது வாழ்க்கையின் கடைசி நாள்வரை இருந்து வந்தது. கொள்கையிலே அவர் மாறுதல் அடையவில்லை. ஆனால், இந்திமொழியை ஆட்சி மொழியாக்க மத்திய அரசு முயன்றபோது, மூதறிஞர் ராஜாஜி அதற்கு எதிர்ப்பு காட்டுவதிலே ஈடுபட்டார். அதற்காக, பெரியார், ஈ.வே.ரா. வோடும் அறிஞர் அண்ணாவின் தலைமையில் இயங்கிய தி.மு.க. வோடும் அவர் தோழமை கொள்ள லானார். அதுமட்டுமின்றி, தமிழகத்தில் ஆட்சிமொழி யாகவும், பல்கலைக் கழகப் பாடங்களுக்கான போதனா மொழியாகவும் தமிழைக் கொண்டுவர வேண்டும் என் பதிலே அவருக்கு நீண்டகாலமாக இருந்துவந்த ஆர்வம் குறைந்து போய்விட்டது. தமிழைப் பயிற்சி மொழியாக்க தமிழரசுக் கழகம் நடத்தி வந்த கிளர்ச்சியைக்கூட ராஜாஜி விரும்பாதவரானார். அடிக்கடி மாறுபட்ட கருத்தையும் வெளியிடலானார். இதனால், ராஜாஜிக்கும் எனக்கு

மிடையே வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. அறிக்கைப் போராட்டங்களும் அடிக்கடி ஏற்பட்டன. இதிலே அவருக்கும் சரி; எனக்கும் சரி; கொஞ்சங்கூட விருப்ப மில்லை. ஆனால், மனச்சாட்சிப்படி நாங்கள் கருத்துப் போர் நடத்த வேண்டியிருந்தது. அவரது கருத்தை மறுத்து 'செங்கோலி'ல் எழுதிய போதெல்லாம் மேடைகளில் பேசியபோதெல்லாம் என் மனம் மிகுந்த வேதனை யடைந்ததுண்டு. ஆயினும், எங்களிடையே நிலவிய அன்புக்கும் ஆத்மார்த்தமான உறவுக்கும் நலிவு ஏற்படாத வகையிலே நாங்கள் வாதம் நடத்தினோம். அதற்கு ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைச் சான்று காட்டினால் போதும் என்று நினைக்கிறேன்.

## 'தினமணி' யில் தவறான செய்தி

மூதறிஞர் ராஜாஜி 30-8-58-இல் இராயப்பேட்டை இலக்குமிபுரம் இளைஞர் சங்கத்தில் பேசியதாக 'தினமணி' 1-9-58 இதழில் ஒரு செய்தி வெளியாகி யிருந்தது. அது வருமாறு:

''மொழி வெறியைப் பற்றி ராஜாஜி மேலும் கூறினார். ஒவ்வொரு ராஜ்யத்திலும் அந்தந்தப் பிரதேச மொழிகளில் ஆட்சி நடத்தப்பட ஆரம்பித்தால் வேற்றுமை யுணர்ச்சி ஏற்பட இடம் ஏற்பட்டுவிடும். ஒவ்வொரு ராஜ்யமும் மற்ற ராஜ்யங்களுடன் தொடர் பில்லாமல் ஒரு தனித் தீவாகக் காட்சியளிக்கும்.

''நிர்வாகம் திறமையாக நடைபெற வேண்டு மானால், அதை நடத்துகிறவர்கள் படித்தவராக இருக்க வேண்டும் என்றும், நிர்வாகம் இப்பொழுதுள்ளதுபோல் தொடர்ச்சியாக இருக்க வேண்டுமானால், இப்பொழுது நடைபெறும் மொழியிலேயே தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் ராஜாஜி கூறினார்.''

ராஜாஜி இலக்குமிபுரத்தில் பேசியதை ''மொழி வெறி'' என்னும் தலைப்புத் தந்து 'தினமணி' பிரசுரித்திருந்தது. ராஜாஜி கருத்தும், அதற்குத் 'தினமணி' தந்த தலைப்பும் தாய்மொழிப் பற்றுடையவர்களை அவமதிப்பதாகும் என்று நான் கருதினேன். அதனால், ''இந்தி எதிர்ப்பு தமிழ் எதிர்ப்பாகவும் மாறுகிறது!'' என்னும் தலைப்புத் தந்து 7-9-58 'செங்கோல்' இதழிலே ராஜாஜிக்குப் பதிலளித்து எழுதினேன். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''இந்தித் திணிப்பை, அந்த மொழியைப் பேசாத மக்கள் எல்லோருமே எதிர்க்கின்றனர். அவர்களில் பெரும் பாலோர், இந்தியின் தாக்குதலிலிருந்து தங்கள் தாய் மொழியைக் காப்பதற்காகவே இந்தித் திணிப்பை எதிர்க்கின்றனர். தமிழரசுக் கழகத்தார் இந்தித் திணிப்பை எதிர்ப்பதும் அந்த வகையைச் சார்ந்ததே. ஆனால், இந்தி எதிர்ப்பாளரில் சிலர், தங்கள் தாய்மொழியின் நலனுக்காக அல்லாமல், அம்மொழியை அடிமைப்படுத்தி, அதன்மீது ஆதிக்கம் செலுத்தும் ஆங்கிலத்திற்கு ஆதரவாகவே இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்துகின்றனர்.

''தலைவர் ராஜாஜி அவர்களிடம் தமிழரசுக் கழகத்தாருக்குள்ள மதிப்பு நாடறிந்ததாகும். ஆனால், இந்தி எதிர்ப்பு விஷயத்தில் ராஜாஜிக்கும், தமிழரசுக் கழகத்தாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கிறது. இதை வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள நாம் தயங்கவில்லை. ஆனால், இந்தநிலை நேர்ந்ததற்காக வேதனைப் படுகிறோம். துரதிர்ஷ்டவசமாக, இந்திக்கு எதிராக மட்டுமல்லாமல், தமது தாய்மொழியான தமிழுக்கும் எதிராகவே ஆங்கில ஆதரிப்பு இயக்கம் நடத்தி வருகின்றார் ராஜாஜி. இதைச் சொல்வதில் நமக்கு மகிழ்ச்சி

இல்லையென்றாலும், இதை மறைப்பது தாய் மொழிக்குச் செய்யும் கேடு என்றே நாம் கருதுகிறோம்.

''ராஜாஜியின் ஆட்சிமொழிக் கொள்கையைத் தமிழர் ஏற்பதானால் தமிழ்மொழி இன்றுள்ள அடிமைத் தனத்திலேயே என்றென்றும் இருந்துவர வேண்டியதுதான். இந்த நிலையே இனியும் காலவரையறையின்றி நீடிக்க வேண்டுமானால், அப்புறம் சுதந்திரம் பெற்றுத்தான் என்ன பயன்? ஆங்கில மொழிதான் எல்லா மாநிலங்களிலும் எல்லாத் துறைகளிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திவர வேண்டுமென்றால், ஆங்கிலேய சாதியாரின் ஆதிக்கத்தை வெளியேற்றியதில் அர்த்தமில்லையே!

''படித்தவர்கள் நாடாள வேண்டும் என்று பட்டவர்த் தனமாகக் கூறிவிட்டார் ராஜாஜி. 'படித்தவர்' என்ற சொல்லுக்கு 'ஆங்கில மொழிக் கல்வியில் பட்டம் பெற்றவர்' என்று பொருள் போலும்! மொழித் துறையில் கடந்த முப்பது ஆண்டுகளாக ராஜாஜியே கடைப்பிடித்து வந்த கொள்கைகளுக்கு இது முற்றிலும் விரோத மானதாகும்.''

இராஜாஜி 'செங்கோல்' இதழை வாரந்தோறும் படித்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். முதுமை காரணமாகப் படிக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்த போதும் முக்கியமான கட்டுரைகளை பிறர் படிக்கச் செய்து கேட்டறிந்தார். இதனை அவரே சொல்லி, அறிந்து கொண்டேன்.

### ராஜாஜியின் கடிதம்

தலைவர் ராஜாஜி 'செங்கோலி'ல் யான் எழுதியதைப் படித்துவிட்டு ஒரு கடிதத்தின் வாயிலாக எனக்குத் தெளிவு தர முயன்றார். அந்தக் கடிதத்தை அப்போது 'கல்கி'

பத்திரிகையில் துணையாசிரியராக இருந்து வந்த திரு. பகீரதன் அவர்கள் மூலம் கொடுத்தனுப்பினார். என் அருமைத் தலைவரின் கடிதம் முழுவதையும் இங்கு தருகிறேன்:

''செங்கோல்'' ஆசிரியர் அவர்களுக்கு மிக வணக்கத்துடன் எழுதுவதாவது:

''7-9-58 தலையங்கத்தைப் படித்தேன். ''தமிழகத்தில் தமிழும் இந்தியா முழுவதற்கும் ஆங்கிலமும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும்'' என்பதே என்னுடைய அபிப்பிராயம். ''இது ராஜாஜியின் எண்ணமல்ல'' என்று தாங்கள் எழுதியிருப்பது தவறு.

''அந்தந்தப் பிரதேச மொழிகளில் கல்வியும் சின்னப் படிப்பும் பெரிய படிப்பும் நடைபெற வேண்டும் என்பதே என்னுடைய கொள்கை. நான் இந்தியைப் பற்றிச் செய்து வரும் எதிர்ப்பும் ஆங்கிலம் மத்திய ஆட்சியின் மொழி யாகவும் ராஜதந்திர மொழியாகவும் இப்போதைய போலவே நடைபெற்று வரவேண்டும் என்றும் செய்து வரும் இயக்கத்திற்கு நான் மேலே கூறியிருப்பது முரண் இல்லை.

''ஒவ்வொரு பிரதேசத்திலும் படிப்பும் அரசியலும் பிரதேச பாஷைகளில் நடைபெற வேண்டிய நிலைமையை நான் ஒப்புக் கொள்கிறேன். அதன் விளைவு என்ன வென்பதையும் ஆராய வேண்டுமல்லவா? அதன் விளைவு பிரதேசங்களுக்குள் மொழி இணைப்பு இல்லாமல்போகும் என்பதை யாரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்தக் குறைக்கு மருந்து ஆங்கிலம் என்பதையும் இந்தி அல்ல வென்பதையும் வற்புறுத்தி வருகிறேன். படிப்பிலும் மத்திய ஆட்சியிலும், ராஜதந்திர போக்குவரத்துக்களிலும்

ஆங்கிலம் இருந்தே வரவேண்டும் என்பதுதான் என் கொள்கை.

''படித்தவர்கள்தான் நாடாள வேண்டும் என்ற என் கூற்றைத் தமிழாக்கியிருக்கிறீர்கள்; நாடாள்வது வேறு; நிர்வாகம் வேறு. மந்திரிசபைகளும், சட்டசபைகளும் நாடாள்கின்றன. நிர்வாகத்தை நிரந்தர உத்தியோகஸ்தர்கள் நடத்தி வருகிறார்கள். உத்தியோகஸ்தர்களைப் பற்றித்தான் நான் பேசியது. அவர்களுடைய படிப்பில் ஆங்கிலம் இருந்துதான் தீர வேண்டும். இல்லாவிடில் மற்ற ராஜ்யங்க ளோடும் மத்திய அரசாங்கத்தோடும் தொடர்பு வைத்துக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்படும்.

''தமிழ் மொழியின் அந்தஸ்துக்கு ஆங்கிலம் எந்தவிதமான அபாயமும் உண்டாக்காது. ஹிந்தி மொழிதான் அபாயம்.

**-இராசகோபாலாச்சாரி**

*8-9-58*

***பதில்:***

தலைவர் ராஜாஜி லட்சுமிபுரத்தில் நிகழ்த்திய சொற்பொழிவைத் தமிழாக்கியது நாமல்ல. 'தினமணி'யில் வெளியானது சரியாக இருக்குமென்று நம்பியே அதன்மீது நமது கருத்தை வெளியிட்டோம், உண்மைகளை உணர்த்தி ராஜாஜி நமக்குக் கடிதமெழுதியதற்காக மகிழ்ச்சி அடை கின்றோம். நமது பணிவான நன்றியறிதலையும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**-ம.பொ. சிவஞானம்**

*ஆசிரியர்.*

## போக்கு பிடிக்கவில்லை

ராஜாஜி அவர்கள் காங்கிரசை விட்டு விலகியபின், அந்த மாபெரும் கட்சிக்கு அனைத்திந்திய ரீதியில் வலிமை மிக்க வலதுசாரி எதிர்க்கட்சி ஒன்று இல்லாதது கண்டு கவலைப்பட்டார். அந்தச் சூன்யத்தைப்போக்க ''சுதந்திரா கட்சி'' என்னும் பெயரில் அனைத்திந்திய கட்சி ஒன்றையும் தொடங்கினார். ஆனால், அது தொடங்கப் படுவதற்கு முன்பே தனிப்பட்ட முறையில் காங்கிரஸ் ஆட்சியிடம் தாம் அவ்வப்போது கண்டு வந்த குறைகளை மிகவும் துணிவோடு எடுத்துக் கூறி வந்தார்.

''இந்திய ஆட்சி மொழியாகவும் தொடர்பு மொழி யாகவும் வரவேண்டியது இந்தியா? ஆங்கிலமா?'' என்னும் பிரச்சினையையும் ஒரு எதிர்க்கட்சிக்காரருக்குரிய உணர்வோடுதான் ராஜாஜி அணுகினார். இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு தமிழகத்திலேதான் வலிமை மிக்கதாக இருந்தது. அதுவும் திராவிடர் இயக்க சார்பில் நிகழ்ந்தது.

அதனால், 'எதிரியை சந்திக்க நேர்ந்தால் கிடைத்ததை எடுத்து அடித்து வெற்றிகொள்' என்னும் பழமொழிக் கேற்ப இந்தி எதிர்ப்பில் வெற்றி காணத் திராவிட இயக்கத் தாரின் துணையைப் பெற்றார் - ஏன்? அவர்களுக்குத் துணைபுரிந்தார் என்றும் சொல்லலாம்.

மத்தியில் இந்தி உடனடியாக - அதாவது, அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காலக் கெடுவான 26-1-65-இல் மத்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக்கப்படுவதை நானும் எனது தமிழரசுக் கழகமும் விரும்பவில்லை. அந்த வகையிலே ராஜாஜிக்கும் எனக்கும் இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலே உடன்பாடும் இருந்தது. ஆயினும், ஒரு

எதிர்க்கட்சித் தலைவருக்குரிய உணர்ச்சியோடு ராஜாஜி இந்தி எதிர்ப்பை அரசியல் ஆயுதமாகக் கொண்டு, காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்தது எனக்குப் பிடிக்கவில்லை. அதையும் தி.க.வினரோடும் தி.மு.க. வினரோடும் சேர்ந்து செய்தது அறவே பிடிக்கவில்லை. ஆயினும், அந்த விஷயத்தில் ராஜாஜியின் போக்கிலே அவரைவிட்டு விட்டேன். என் போக்கிலே அவரும் என்னை விட்டு விட்டார். இந்தி எதிர்ப்புப் பிரச்சினையிலே நாங்கள் மோதிக்கொள்வதில்லையென்று எழுதா உடன்படிக்கை ஒன்று எங்களிடையே நடைமுறையில் இருந்து வந்தது என்று சொல்லலாம்.

## ஆங்கிலச் சொல்லுக்கும் எதிர்ப்பு

இங்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்தியாக வேண்டும். ராஜாஜி, மத்தியில் காலவரம்பின்றி ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்று கூறியதோடு நின்றுவிடவில்லை. மத்தியில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும் காலம்வரை மாநிலங்களிலும் அதற்குள்ள ஆதிக்கம் நீடிக்க வேண்டுமென்ற யதார்த்த மான நடைமுறையை அவர் வலியுறுத்தினார். மற்றபடி, மாநிலங்களிலே - குறிப்பாக, தமிழகத்திலே ஆட்சி மொழியாகவும் கல்லூரிகளில் பாட போதனாமொழி யாகவும் ஆங்கிலம் என்றென்றுமே நீடிக்கவேண்டுமென்று அவர் சொல்லவில்லை. ஆம்; தமிழகத்தில் ஆங்கில ஆதிக்கத்தை அகற்றுவதிலே ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த கருத்து வேற்றுமை அணுகுமுறைபற்றியதுதான். கொள்கை ரீதியானது அல்ல. ஆங்கில ஆதிக்கத்தை அகற்றி, தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கே முதலிடம் தரவேண்டும் என்பதிலே அவருக்கிருந்த உறுதிப்பாட்டைப் புலப்படுத்த 1955 - இல் அவர்

நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றை இங்கு தருகிறேன், அது வருமாறு:

''ஒருவர் இன்னொருவருடன் சாதாரணமாகத் தமிழில் பேசும்போதுகூட ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசும் வழக்கத்துக்கு நாம் அடிமையாகிவிட்டது கண்டிக் கத்தக்கது.

''தமிழ் மொழி உயிர்க் களையுள்ளது. வளர்ந் தோங்கும் தன்மை வாய்ந்தது. இது குறித்துத் தமிழர்கள் பெருமையடையலாம். ஆனால், பேசும்போது அதில் ஏராளமான ஆங்கிலச் சொற்களைக் கலந்து விடுகிறோம். 'நேரம்' 'வேகம்' போன்ற வார்த்தைகளிருக்க, படிக்காத வர்கள்கூட 'டைம்' - 'ஸ்பீட்' என்று சொல்லத் தொடங்கி விட்டனர். இது உயிருள்ள மொழியின் அறிகுறியல்ல. தமிழ் மொழியின் வளர்ச்சி என்று இதனைக் கருத முடியாது. இது கோரமான ராட்சஸ வளர்ச்சிதான்.

''வெகு நாள்பட்ட நோயாளி அந்த நோய்க்கு பழக்கப்பட்டவனாகி விடுகிறான். அந்த வியாதியையே தனது உடலின் இயற்கை நிலை என்று கருதி விடுகிறான். தாய்மொழியுடன் ஆங்கிலத்தைக் கலந்து பேசுவது நாள்பட்ட நோயாகிவிட்டது. இந்த நோயை உடனே குணப்படுத்திக்கொள்ள வேண்டும்.

''மோட்டார்'' போன்ற சில வார்த்தைகளை நாம் ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. ஆனால், 'குளிக்கிறார்' என்பதற்கு 'பேத்திங் பண்ணுகிறார்' என்று சொல்வது ஆபாசமாக இருக்கிறது.

''நீங்கள் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியே போகும்போது உங்களுடைய சொந்தச் செருப்புக்களைத் தேடி மாட்டிக் கொண்டால்தான் பொருத்தமாக இருக்கும்.

பிறருடைய செருப்புக்களை உங்கள் கால்களில் மாட்டிக் கொண்டு நடந்தால் ஆபாசமாகத்தான் இருக்கும். அது போல, தமிழில் பேசும்போது கண்டபடி அந்நியச் சொற்களைக் கலந்துபேசுவதும் ஆபாசமாகும்.''

(சென்னை மாதவபுரம் இளைஞர் சங்க ஆண்டு விழாக் கூட்டம் 5-3-55 - இல் நடைபெற்றபோது, அதில் அறிஞர் உ.வே. சாமிநாதய்யர் உருவப்படத்தைத் திறந்து வைத்து ராஜாஜி பேசியது, 'தினமணி' 6-3-55 இதழில் வெளியானது.)

## இந்தியைக் கற்கவேண்டும்

ராஜாஜி, தமிழ் நாட்டவர் இந்தி மொழியைச் கட்டாய பாடமாகக் கற்க வேண்டும் என்ற கருத்திலே உறுதி காட்டி வந்தார். தி.க. - தி.மு.க. வினரைப்போல தமிழர் இந்தி மொழியைப் படிப்பதை அவர் எதிர்க்க வில்லை. சில கூட்டங்களிலே தி.மு.க. தலைவர்களை வைத்துக் கொண்டே தமிழர் இந்தியைக் கட்டாயமாகக் கற்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். போராட்டம் நடைபெறுவது இங்கிலீஷுக்கும் இந்திக்கு மிடையில்தான். இந்திக்கும் தமிழுக்குமிடையில் போராட்டம் நடைபெறுவதாகக் கூறாதீர்கள்'' என்று ராஜாஜி தி.மு.க. தலைவர்களுக்குக் கூறினார்.

திரு.பி.ஜி. கேர் தலைமையில் மத்திய அரசு நியமித்த ஆட்சிமொழிக் கமிஷன் 1956 ஜனவரியில் சென்னை வந்தபோது, அதனிடம் ராஜாஜியும் நானும் சாட்சியம் கொடுத்தோம். ராஜாஜி, ''இந்தியைத் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் கட்டாய பாடமாக்க வேண்டும்'' என்று உறுதியாகக் கூறினார்.

நான் 'விருப்பப் பாடமாகத்தான் வைக்க வேண்டும்' என்று கூறினேன். ஆனால், நாங்கள் இருவருமே

காலவரம்பின்றி மத்தியில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும் என்கிறோம்.

1968 - இல் தமிழ் நாட்டுப் பள்ளிகளிலிருந்து இந்திமொழிப் பாடத்தை அகற்றிவிடுவது - அதாவது, மும்மொழித் திட்டத்தைக் கைவிடுவது என்ற தீர்மானம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ராஜாஜி விரும்பியது, அரசியல் சட்டத்திலுள்ள ஆட்சி மொழிபற்றிய பகுதியிலே நேருஜி கொடுத்த உறுதி மொழியைச் சேர்க்க வேண்டும் என்பதாகும். அத்தகைய ஒரு திருத்தத்திற்கு மத்திய அரசை தமிழகத்திலுள்ள எந்த ஒரு கழகமும் கட்சியும் ராஜாஜி வாழ்ந்த காலத்தில் கட்டாயப்படுத்தவில்லை யென்பதை இங்கு நினைவூட்ட வேண்டும்.

இந்தி மொழித் திணிப்பு ஓரளவு தணிக்கைக் குட்பட்டிருக்கிற தென்றால், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தியதால் அல்ல; அந்தச் சட்டம் தருகிற சலுகையைப் பயன்படுத்தித் தனியாக ஆட்சி மொழிச் சட்டம் ஒன்று நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால்தான். இந்தச் சலுகை ராஜாஜிக்கு திருப்தியைத் தரவில்லை.

இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலே கொள்கையளவில் ராஜாஜிக்கும் எனக்கும் உடன்பாடுண்டு என்றாலும், அதற்காகக்கூட அவருடன் ஒரே மேடையில் நான் பேச வில்லை. அப்படிப் பேசுவதற்கு என் தலைவரும் வேறு சிலரும் விடுத்த அழைப்பை நான் ஏற்கவில்லை. இது விஷயத்திலே ராஜாஜி என்னை நன்கு புரிந்து கொண்டிருந்தார். அதனால்தான் என்மீது அவருக்குக் கோபமோ, வருத்தமோ ஏற்படவில்லை.

# சுதந்திரா கட்சிபற்றி மனம்விட்டுப் பேசினோம்!

அறிஞர் ராஜாஜி, 1954 -க்குப் பின் காங்கிரஸிலிருந்து சந்தடியின்றி ஒதுங்கிக்கொண்டுவிட்டார். ஆம்; காங்கிரசி லிருந்து ராஜிநாமா செய்யவுமில்லை; காங்கிரஸ் விதி முறைப்படி தமது உறுப்பினர் பொறுப்பை சந்தா செலுத்திப் புதுப்பித்துக் கொள்ளவுமில்லை. ஒதுங்கியபின் நடைமுறையில் தாமே ஒரு எதிர்க்கட்சிக்குரிய நிலையில் நின்று மத்தியிலும் தமிழ் மாநிலத்திலும் காங்கிரஸ் ஆட்சிகள் நடைமுறைப்படுத்தும் சட்டங்களிலும் திட்டங்களிலும் தமக்குப் பிடிக்காதவற்றை எதிர்த்துப் பிரசாரம் செய்து வந்தார்.

''உண்மையான ஒரு சத்தியாக்கிரகி பலம் பொருந் திய ஒரு ஸ்தாபனத்துக்கு நிகரானவர்'' என்று காந்தியடிகள் அடிக்கடி கூறுவதுண்டு. அதுபோல, காங்கிரசிலிருந்து ஒதுங்கிக் கொண்டபின், வேறு எந்தக் கட்சியையும் அவர் சார்ந்துவிடவில்லை. அவரே ஒரு எதிர்க்கட்சி போன்று இயங்கி வந்தார். அதற்காக அறிவும் ஆற்றலும் மக்கள் மத்தியில் செல்வாக்கும் அவருக்கு இருந்து வந்தன. ஆனால், அதிலே அவர் மனநிறைவு பெறவில்லை.

## கன்சர்வேடிவ் கட்சியா?

காங்கிரசுக்குப் புறம்பாக இயங்கி வந்த எதிர்க்கட்சி எதனிடமும் அவருக்குத் திருப்தி ஏற்படாததால், வலுவான

ஒரு எதிர்க்கட்சியைத் தோற்றுவிக்கப் போவதாக 1959 -ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அவர் அறிவித்தார். அது இங்கிலாந்திலிருப்பது போன்ற கன்சர்வேடிவ் கட்சியாக இருக்குமென்றும் தெளிவுபடுத்தினார்.

இது, எனக்குப் பிடிக்கவில்லை. காங்கிரசுக்கு அனைத்திந்திய ரீதியில் ஒரு எதிர்க்கட்சி தேவையென்பதிலே தலைவர் ராஜாஜியோடு எனக்குப் பரிபூரண உடன்பாடு இருந்தது. ஆனால், தொழில் முதலாளிகளையும் வர்த்தக முதலாளிகளையும் கொண்ட கன்சர்வேடிவ் கட்சியைத் தொடங்கப் போவதாக என் தலைவர் அறிவித்தது. எனக்குப் பிடிக்கவில்லை. அதனால், ''ராஜாஜியின் கன்சர்வேடிவ் கட்சி வேண்டுமா?'' என்னுந் தலைப்பிட்டு ''செங்கோல்'' (3-9-59) இதழிலே ஒரு சிறப்புக் கட்டுரை எழுதினேன். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''அகில இந்திய அடிப்படையில் கன்சர்வேடிவ் கட்சி ஒன்று அமைய வேண்டுமென்று தலைவர் ராஜாஜி கூறி வருகிறார். அந்தக் கட்சிதான் ஆளும் கட்சியான காங்கிரசுக்கு சரியான ஒரு எதிர்க்கட்சியாக இருக்க முடியுமென்றும் அவர் நம்புகிறார். கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு முதலிய கட்சிகள் இடதுசாரிகளால் நடத்தப் படுபவை; காங்கிரசை தீவிரப் போக்கில் இழுத்துச் செல்ல முயல்பவை. அதனால், தீவிரத்திற்கும் இல்லாமல் பிற்போக்குக்கும் இல்லாமல் மிதப் போக்கில் செல்லும் காங்கிரசுக்கு அறிவுரை கூற கன்சர்வேடிவ் கட்சி வேண்டுமென்கிறார்.

''பொதுவாக நோக்குமிடத்து, அகில இந்தியாவுக்கும் உரியதாகவும், இந்தியாவின் தேசிய ஐக்கியத்தை ஏற்கத் தக்கதாகவும், தேசியப் பண்பை பாதுகாக்கக்

கூடியதாகவும், வர்க்க பேதமின்றி மக்கள் எல்லோருக்கும் பிரதி நிதித்துவம் வகிக்கத் தக்கதாகவுமான ஒரு எதிர்க்கட்சி இந்தியாவில் இல்லையென்பதை யாரும் மறுப்பதற் கில்லை. அது காரணமாக, புதியதொரு எதிர்க்கட்சி தேவை என்பதை ஒப்புக் கொள்வோர் உண்டு. ஆனால், அப்படி ஒப்புக் கொள்வோர்கூட, கன்சர்வேடிவ் கட்சி வேண்டும் என்று கூறுவதில் கருத்து வேற்றுமை கொள்கின்றனர். 'கன்சர்வேடிவ்' என்ற சொல்லுக்கு 'மிதவாதம்' என்று மட்டுமே பொருள் கொள்வதற்கில்லை. சோஷலிசப் பாதையில் பாரதம் முன்னேறுவதற்கு முட்டுக்கட்டை போடும் ஒரு தத்துவமாகவே 'கன்சர்வேடி விசம்' கருதப்படும். அரசியல் சுதந்திரம் கிடைத்தும் பொருளாதாரச் சுகவாழ்வு கிடைக்காத பாரதத்தில், கன்சர்வேடிவ் கட்சிக்கு சாதாரண மக்கள் ஆதரவு அளிக்க மாட்டார்கள்; கடுமையான எதிர்ப்புக் காட்டுவார்கள் என்பதும் எதிர்பார்க்கக் கூடியதே.

''இங்கிலாந்தில் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி கரமாகச் செயல்பட்டு வருகிறது; உடைமையாளர் ஆதரவையேயன்றி, சாதாரண பொதுமக்களுடைய நல் லெண்ணத்தையும் அது பெற்றிருக்கிறது என்று கூறலாம். ஆனால், இந்தியா இங்கிலாந்து அல்ல. இங்கிலாந்தில் அரசியல் சட்டம் எழுதப்படாத சம்பிரதாயமாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலோ, எழுதப்பட்ட அரசியல் சட்டமும் ஆண்டுக்கொரு முறை திருத்தப்பட்டு வருகிறது. இப்படி சமுதாய வாழ்விலும் சரி; அரசியல் வளர்ச்சியிலும் சரி! இங்கிலாந்து வேறு இந்தியா வேறுதான்!

''அரசியல் ஞானமோ, சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ள மக்களுக்கு விட்டுக் கொடுத்து

அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெறும் பண்போ இங்கிலாந்தில் உள்ள கன்சர்வேடிவ்களுக்கு உள்ளது போன்று, இந்தியாவிலுள்ள கன்சர்வேடிவ்களுக்கு இல்லை யென்பது வெளிப்படை.

''இங்கிலாந்து, பல காலனி நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்தும் பேரரசு நாடு. பிரித்தாளும் தந்திரத்தாலும், பிற ராஜதந்திர சாகசங்களாலும் உலக மார்க்கெட்டில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது பிரிட்டன். அதனால், காலனி நாடுகளைச் சுரண்டியும், 'வாணிபம்' என்ற பெயரால் உலக நாடுகளைக் கொள்ளையடித்தும் பிரிட்டன் சுகபோக நாடாக வாழ முடிந்திருக்கிறது. அதனால் அங்குள்ள சாதாரண மக்கள் கன்சர்வேடிவ் கட்சியை ஆதரிக்கலாம்.

''இந்தியாவுக்கு காலனி நாடுகள் இல்லை. 'வர்த்தகம்' என்ற பெயரால் உலக நாடுகளின் செல்வத்தைச் சுரண்டிக் கொழுக்கும் சக்தியோ, சந்தர்ப்பமோ இந்தியா வுக்கு இல்லை. அதனால், சோஷலிச தர்மம் ஒன்றின் மூலம்தான் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. அதாவது, மேட்டை வெட்டி மண்ணை எடுத்து பள்ளத்தை அடைப்பது போல, தனிவுடைமையாளர்களின் சுகபோகங்களைக் குறைத்துத் தான் உழைப்பாளி மக்களுக்கு வாழ்க்கை வசதிகள் வழங்கவேண்டியிருக்கிறது. 'தனியுடைமை' என்பது தவிர்க்க முடியாத - தவிர்க்கவும் கூடாத தர்மம் என்று எண்ணுவதால், ஏழை - பணக்காரன் என்ற வேற்றுமை சாகாவரம் பெற்றுவிடும்.

''தரித்திரம் கொடியதுதான். அதைக்கூட, மக்கள் பொறுத்துக் கொள்வார்களானால், தனியுடைமையாளர்கள் அமைதியாக வாழமுடியும். ஆனால், இனியும் நீண்ட

நெடுங் காலத்திற்கு சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்கள் தனியுடைமையாளர்களின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டிருப்பார்கள் என்று நம்புவதற்கில்லை. மாமேதையான ராஜாஜி இதை அறியாதவர் அல்ல. அறிந்தே, தாம் பதவியில் இருந்த காலத்தில், உழவர் - குத்தகைதாரர் நலன் கருதிப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் முதலியவற்றைச் செயல்படுத்தினார். அந்தச் சட்டங்கள் எல்லாம் சாதாரண உழவர்களின் உரிமைகளை வளர்த்தன. அதே பாதையில் - சட்டங்களின் வாயிலாக சோஷலிச சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே எனது விருப்பம்.

''எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி, இந்தியாவில் காங்கிரசுக்கு எதிராக அமையும் ஒரு கட்சி கன்சர்வேடிவ் கட்சியாக இருப்பது சாத்தியமல்ல; அது நாட்டிற்கு நல்லதும் அல்ல.

''மக்களிடையே ஜனநாயக அறிவும், உரிமையுணர்வும் பெருகப் பெருக கன்சர்வேடிவ் அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் தொகுதி நாட்டில் ஒன்றுகூட இராது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தைப்போல, நிலச்சுவான்தார் தொகுதி, வர்த்தகர் தொகுதி என்ற தொகுதிகளை சிருஷ்டித்தால் மட்டுமே கன்சர்வேடிவ் கட்சியின் குரல் சட்டசபையிலே ஒலிக்க முடியும். ஆனால், இன்றைய நிலையில் சமுதாயத்தின் மேல்தட்டில் உள்ள கனவான்களைத் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளைச் சிருஷ்டிப்பது கொஞ்சம்கூடச் சாத்தியமில்லை.

''காங்கிரசுக்கெதிராக கன்சர்வேடிவ் கட்சி அமைவதற்குச் சந்தர்ப்பமில்லையென்றாலும் இந்தியா முழுவதற்கும் உரிய ஒரு எதிர்க்கட்சி அவசியம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.''

**'சந்திப்போமே!'**

''செங்கோலி''ல் வெளியான இக் கட்டுரையைப் படித்துவிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதினார் ராஜாஜி. அதிலே,

> ''செங்கோல்'' படித்தேன். இங்கிலாந்து கன்சர் வேடிவ் கட்சி பற்றித் தாங்கள் கொண்டுள்ள கருத்தை நான் மறுக்கவில்லை. இந்தியாவுக்கு ஏற்றவகையில் கன்சர்வேடிவ் கட்சி படைப்போமே! தாங்கள் நேரில் வந்தால் மனம் விட்டுப் பேசலாம்.''

என்று எழுதியிருந்தார். அப்போது தமிழ்நாடு காங்கிரசில் செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு தலைவரைப்பற்றி என் தலைவர் கடுமையாக தமது கடிதத்தில் விமர்சித்திருந்தார். எனக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் எனது ஒழுக்கத்தை நம்பி விஷயங்களை வெளிப்படையாகவே அவர் எழுதுவது உண்டு. அப்படித்தான் இந்தக் கடிதத்தையும் எழுதினார். அதனால் கடிதம் முழுவதையும் இங்கு தரவில்லை. எடுத்துக் கொண்ட விஷயத்திற்குச் சம்பந்தப் பட்ட பகுதியை மட்டும் எடுத்துக் காட்டினேன்.

ராஜாஜி அன்புடன் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டு நான் அவரது இல்லத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தேன். நாங்கள் இருவரும் மனம்விட்டுப் பேசினோம். தாம் தொடங்கவிருக்கும் புதிய கட்சிக்கு எனது ஆதரவைப் பெறுவதிலே அவருக்கு நம்பிக்கையிருந்தது. தமது கட்சியின் வளர்ச்சிக்கு எனது ஆதரவு இன்றியமையாததென்று அவர் கருதியதும் எங்களுடைய சந்திப்பிலே வெளிப்பட்டது. கன்சர்வேடிவ் கட்சி என்ற பெயரிலே அவர் பிடிவாதம் காட்டவில்லை. ஆயினும், எங்களிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

ராஜாஜி தாம் விரும்பியபடி புதிய கட்சியைத் தொடங்க, அனைத்திந்திய ரீதியில் புகழ் பெற்ற தலைவர்கள் கொண்ட ஆலோசனைக் கூட்டமொன்றைச் சென்னை நகரிலுள்ள பெரிய உணவுச்சாலை யொன்றில் நடத்தினார்.

## கன்சர்வேடிவ் அல்ல; சுதந்திரா!

முதுபெருந் தேசியத் தலைவர்களான திரு.என்.ஜி. ரங்கா, திரு.எம்.ஆர். மஸானி உட்படப் பலர் அதில் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்திலே, ''சுதந்திராக் கட்சி'' என்னும் பெயரிலே புதிய கட்சி தொடங்கப்பட்டு, அதன் தலைவராக திரு.என்.ஜி. ரங்கா தேர்ந்தெடுக்கப் பட்டார். வழி காட்டியாக ராஜாஜி ஏற்கப்பட்டார். எப்பொழுதுமே தலைமைப் பொறுப்பை ஏற்கும் வழக்கம் ராஜாஜியிடம் கிடையாது. அவர் காங்கிரசிலிருந்த போதும் ஒரு முறைகூட தலைமைப் பொறுப்பை ஏற்று வருடாந்தர மகா சபைக்குத் தலைமை தாங்கியதோ, வருடம் முழுவதும் காங்கிரசை நடத்திச் சென்றதோ இல்லை. காரணம், எதற்கும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் வழக்கம் இல்லாததுதான்.

புதிய கட்சியின் தொடக்கக் கூட்டத்திற்கு ராஜாஜி என்னை அழைக்கவில்லை. அது எனக்கு ஏமாற்றத்தைத் தரவில்லை. நாங்களிருவரும் சந்தித்துப்பேசியபோது எங்களிடையில் கருத்தொற்றுமை ஏற்படவில்லையல்லவா!

மற்றும், நானும் கழகத்தைக் கலைத்துவிட்டோ கைவிட்டோ வேறு அனைத்திந்தியக் கட்சி எதிலும் கலந்துவிடத் தயாராக இல்லை. அப்படிச் செய்வது, புதிய தமிழகம் படைக்கும் குறிக்கோளைக் குழி தோண்டிப் புதைப்பதாகி விடுமல்லவா!

ராஜாஜியின் புதிய கட்சிக்கு எதிர்ப்புக் காட்டும் எண்ணமும் எனக்கு இருக்கவில்லை. நாட்டில் ஜனநாயகம் தழைத்து வளர காங்கிரசுக்கு அனைத்திந்திய ரீதியில் வலுவான ஒரு எதிர்க்கட்சி அவசியமென்பதை நான் உணர்ந்தேன்.

''அறிவும் திறமையும் ஒழுக்கமும் உடைய ராஜாஜி புதிய எதிர்க்கட்சியைத் துவக்கியிருப்பதால் அதை நான் வரவேற்கிறேன்'' என்று பிரதமர் நேருஜி அறிக்கை விட்டார்.

## "செங்கோல்" கட்டுரை

ராஜாஜியின் சுதந்திராக் கட்சி சென்னை உணவு விடுதியொன்றில் பிறந்ததும் அதைப் பற்றி ''செங்கோல்'' (21-6-59) இதழில் ''சுதந்திராக் கட்சி'' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதினேன். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''அறிஞர் ராஜாஜியின் ஆசியோடு புதிய கட்சி ஒன்று பிறந்துள்ளது. ''சுதந்திராக் கட்சி'' என்ற பெயருடைய இந்தப் புதிய அமைப்பு, இந்தியா முழுவதிலும் இயங்கும் என்று தெரிகின்றது. கட்சியின் கொள்கைகளும் வேலைத் திட்டங்களும் இன்னமும் தெளிவுபடுத்தப் பெறவில்லை என்றாலும், ''தனி மனிதர்களின் சுதந்திரத்தைக் காப்பது கட்சியின் தலையாய கடமையாக இருக்கும்'' என்கிறார் ராஜாஜி.

''வாணிபம், தொழில், விவசாயம், இன்னபிற துறைகளில் அரசாங்கத் தலையீடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், அங்கெல்லாம் தனி மனிதர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறுகின்றார்.

''புதிய கட்சியினர் ஆட்சிமீதும் ஆளுங்கட்சி மீதும் கூறியுள்ள குறைகளோ, குற்றங்களோ பெரும்பாலும் உண்மையாக இருக்கலாம். அத்துடன், ஆளுங் கட்சியை அதட்டிக் கேட்க பலம் வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி தேவை என்பதையும், அக்கட்சி அகில இந்தியாவுக்கும் உரியதாக இருக்க வேண்டும் என்பதையும் மறுக்கவில்லை. தமிழரசுக் கழகம் தமிழகத்தில் மட்டுமே இயங்கக் கூடிய மாநில அமைப்பாக இருப்பதால், புதிய அகில இந்தியக் கட்சி அமைவது குறித்து நமது கழகம் கவலைப்படக் காரணம் இல்லை.

''வகுப்புத் துவேஷத்திற்கும் வர்க்க வெறிக்கும் அப்பாற்பட்ட ஓர் அகில இந்திய தேசியக் கட்சிதான் காங்கிரசுக்கு எதிர்க்கட்சியாக இருக்கமுடியும் என்ற வாதத்தில் பசையிருக்கலாம். ஆனால், புதிய கட்சியை சாதாரண மக்கள் ஆதரிப்பதற்கு அது மட்டுமே போதாது.

''புதிய கட்சியின் அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகள் யாவை? வாணிபம், தொழில், விவசாயம் முதலிய துறைகளில் ஈடுபட்டுள்ள உயர்தர - நடுத்தர வகுப்புகளைச் சார்ந்த நபர்களின் சுதந்திரம் பாதுகாக்கப் படுங்கால் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களின் சுகவாழ்வுக்கு உத்தரவாத மளிக்க புதியகட்சி வகுக்க விருக்கும் திட்டங்கள் யாவை?

''நிலப்பிரபுக்கள், தொழில் முதலாளிகள், பெரு வணிகர்கள் ஆகியவரிடையே நிலைபெற்றுவிட்ட கொள்ளைலாப மனப்பான்மையை மாற்ற புதிய கட்சி என்ன செய்யப் போகின்றது?

''ஒரு தீமையை எதிர்ப்பதற்காக, அதனினும் மோசமான இன்னொரு தீமையோடு கூட்டுச் சேரும்

போக்கு தமிழக அரசியலில் சகஜமாகிவிட்டது. அதன் பெயர் ''ராஜதந்திரம்'' என்றும் கூறப்படுகிறது. சுதந்திரக் கட்சியேனும் இந்த... தந்திரத்திற்கு விலக்காக தரும வழியில் செயல்படுமா?

''புதிய அமைப்பு, ''பொது மக்கள் கட்சி'' யாக இயங்கினால் மட்டுமே, அது காங்கிரசுக்கு மாற்றுக் கட்சியாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும். சாதாரண பொது மக்கள், அரசியல் சித்தாந்தங்களைப் பற்றியோ, ''இஸங்களை'' ப் பற்றியோ போதிய ஞானமில்லாதவர் களாக இருக்கலாம். ஆனால், தங்களுக்கு நன்மை பயக்கக் கூடியது எது என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது. வாட்டி வதைக்கும் வறுமை யிலிருந்து தங்களுக்கு விடுதலை அளிக்கக் கூடியது எந்தக் கட்சியானாலும், அதை ஏற்றுக் கொள்ளத் தயங்க மாட்டார்கள்.

''ஒரு கட்சியைத் திறம்பட வளர்ப்பதற்குத் தேவைப் படும் சக்திமிக்க சாதனங்களை யெல்லாம் புதிய கட்சியினர் பெற்றிருக்கலாம். ஆனால், வயது வந்தோர் வாக்குரிமை பெற்றுள்ள இந்நாளில், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாதாரண மக்களுடைய ஆதரவைப் பெறாவிடில் அந்தச் சக்திகள் மட்டுமே கட்சியை வளர்க்கப் பயன்படா.

''அறிவும் ஆற்றலும் ஒழுக்கமுமுடைய பெருந் தலைவரான ராஜாஜி புதிய கட்சியின் ஆரம்ப காலத் தலைவராக இருப்பதை, பிரதமர் நேருவைப் போலவே நாமும் வரவேற்கிறோம். ஆனால், மற்றவர்கள் யார்? இதெல்லாம் விரைவில் தெளிவுபடுத்தப்படும் என்று நம்புகிறோம்.''

## செல்வந்தர்களின் ஆதரவு!

சுதந்திரக் கட்சி தோன்றிய சில வாரங்களுக் குள்ளாகவே தொழில் முதலாளிகளும் வணிக முதலாளி களும் நிலப் பிரபுக்களும் ஏராளமாக அதில் சேர்ந்து வந்தனர். அவர்களில் திரு.எச்.பி மோடி போன்ற வடபுலத் தவரே மிகுதியாக இருந்தனர். தென்புலத்தில் புதிய கட்சிக்கு ஆதரவு ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தோடு நின்றுவிட்டது. 'செங்கோல்' இதழிலே சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் பற்றி விளக்கங்கள் தேவையென்று நான் எழுதியதனால்தானோ என்னவோ சிறு பிரசுரம் ஒன்றை ராஜாஜி எனக்கு அனுப்பி வைத்தார். அது டைப் செய்யப் பட்டதாகும், அதிலே அவருடைய கையொப்பமோ அவருடைய கட்சியின் பெயரோ காணப்படவில்லை. அதன்மூலம் எனக்குக் கிடைத்த விளக்கம் இவை:

''அரசாங்கத்தின் சோஷலிச பாணிக் கொள்கைகளில், வரிப்பளு அதிகரித்ததன்றி சாதாரண மக்களுடைய வாழ்க்கை வளம்பெறவில்லை.

''முடிந்துபோன முதல் ஐந்தாண்டுத் திட்டத்தாலும், முடியும் தறுவாயிலுள்ள இரண்டாவது திட்டத்தாலும் பாரதம் கடன்கார நாடானதன்றி, எந்தத் துறையிலும் உற்பத்தி பெருகி, நாட்டின் பற்றாக்குறை பூர்த்தியாக வில்லை. இந்த அவலநிலையில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பெயரால் இரண்டாயிரம் கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் வேறு வரப்போகின்றன.

''இன்றைய காங்கிரஸ், பிரதமர் நேருவால் ஆட்டி வைக்கப்படும் பதுமையாகவன்றி, அவர் தவறு செய்கிறபோது அவரை அதட்டிக் கேட்கும் ஜனநாயக அமைப்பாகச் செயல்படவில்லை.

''மாநிலங்களில் அதிகாரப் பதவிகளில் இருப்போர், மத்திய அரசினர் சொல்லுகிறபடியெல்லாம் ஆடுவதோடு கட்சி - கோஷ்டி - சுயநலவெறிகளுக்கு இரையாகி, நாட்டை நாசப் பாதையில் இழுத்துச் சென்று கொண்டிருக் கின்றனர்.

''கம்யூனிஸ்டு'' 'சோஷலிஸ்டு' போன்ற இடதுசாரிக் கட்சிகளின் கொள்கைகளை காங்கிரஸ் சுவீகரித்துக் கொண்டுவிட்டதால், அந்தக் கட்சிகள் வளர்ச்சியற்றுப் போய்விட்டன. அதனால், அகில இந்தியாவுக்குமான வலுவான எதிர்க்கட்சி ஒன்று தேவைப்படுகிறது.''

ராஜாஜி எனக்கு அனுப்பிவைத்த பிரசுரமானது புதிய கட்சியிடம் யான் பற்றுக் கொள்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை.

தாம் விரும்பிய புதிய கட்சியைத் தொடங்குவதற்கு சென்னையிலுள்ள பெரிய உணவுச்சாலை ஒன்றில் பிரமுகர்கள் கூட்டம் ஒன்றை ராஜாஜி நடத்தியதையும் அதற்கு அவர் என்னை அழைக்காததையும் ஏற்கெனவே குறிப்பிட்டேன்.

என்னை அழைக்காததற்குக் காரணம், எனது ஒத்துழைப்புத் தேவையில்லையென்று அவர் கருதியதல்ல. கன்சர்வேடிவ் என்னும் பெயரால் கட்சி தொடங்கப் படுவதை எதிர்த்து நான் ஏற்கெனவே 'செங்கோலி'ல் எழுதிவிட்டேனாதலால், அந்தக் கூட்டத்திலே நான் கலந்து கொண்டால், எனக்குள்ள கருத்து வேற்றுமைகளை நான் துணிவோடு வெளிப்படுத்துவேன் - என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அதைத் தவிர்ப்பதற்காகவே என்னை அவர் அழைக்கவில்லை. ஆயினும், கட்சியைத் தொடங்கிவிட்ட பின்னர், அன்புக்குக் கட்டுப்பட்டு எப்படியும் கட்சியில் நான் சேர்ந்து விடுவேன் என்று அவர் கருதினார்.

ஆனால், 'கன்சர்வேடிவ் கட்சி என்னும் பெயரில் கட்சி தொடங்கினால், வறுமை நிறைந்த இந்தியாவில் அதற்கு ஆதரவு கிடைக்காது' என 'செங்கோலி'ல் நான் எழுதியது அவருக்குச் சரியென்று தோன்றியதால் 'சுதந்திரக் கட்சி' என்னும் பெயரில் புதிய கட்சியைத் தொடங்கினார். இதனை, அவரே என்னிடம் கூறினார்.

**'சோஷலிசத்தின் எதிரி!'**

ராஜாஜியிடமிருந்து அரசியலிலே முற்றிலும் ஒதுங்கி விடுவதையோ, அவர் தொடங்கிய கட்சிக்கு எதிராகக் காங்கிரசிடம் சிக்கிக் கொள்வதையோ நான் விரும்ப வில்லை. முடிந்தவற்றில் எல்லாம் அக்கட்சிக்கு வெளியே இருந்தேனும் என் தலைவருக்கு ஒத்துழைப்புத் தருவது என்ற எண்ணம் எனக்கு இருந்தது. ஆனால், 'சோஷலி சத்திற்கு நான் முதல் நெம்பர் எதிரி'' என்று வெளிப் படையாகவே பொதுமேடையில் அவர் செய்த பிரகடன மானது, எனக்கு அதிர்ச்சியைத் தந்துவிட்டது!

சோஷலிசத்தை மார்க்சீய சித்தாந்தப்படியோ, ஜார் ருஷ்யாவிலே நடந்த வர்க்கப் புரட்சியின்போது தோழர் லெனின் கடைப்பிடித்த அணுகுமுறையின்படியோ ஏற்க ராஜாஜி மறுத்திருப்பாரானால், அது நான் புரிந்து கொள்ளக்கூடியதுதான். ஆனால், 'சமத்துவம்' - 'சமதர்மம்' என்னும் பொருளில், நிலப்பிரபுத்துவ - தொழில் முதலாளித்துவ - வணிக முதலாளித்துவ சக்திகளின் ஆதிக்கங்களிலிருந்து சமுதாயத்தை விடுவித்து, வறுமைக் கோட்டின் கீழேயுள்ள மக்களுக்கு சுக வாழ்க்கை அளிப்பதைக்கூடத் தாம் விரும்பாதவர் என்ற முறையிலே அரசியல் உலகுக்குத் தம்மை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டது எனக்குப் பிடிக்கவில்லை.

## சிறந்த சமதருமவாதி!

உண்மையில் அவர் அத்தகைய பிற்போக்காளர் அல்லர். உயர்வு தாழ்வோடு கூடிய சாதி வேற்றுமைகளை ராஜாஜி வெறுத்து வந்ததோடு, அந்தக் கொடுமையை ஒழிப்பதற்குத் தமக்கு வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் அவர் நடவடிக்கை எடுத்து வந்தவர். சேலம் நகர மன்றத்தின் தலைவராக இருந்தபோதும், பழைய பெரிய சென்னை மாகாணத்தில் இருமுறை முதலமைச்சர் பதவியை வகித்தபோதும் சமுதாயத்தில் சமத்துவத்தையும், பொருளாதார சமதருமத்தையும் ஏற்படுத்தக்கூடிய சட்டங்கள் பலவற்றை அவர் செய்ததை ஏற்கனவே எடுத்துக் காட்டினேன்.

தீண்டாமை ஒழிப்பிலும் மது ஒழிப்பிலும் தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழுக்கு முதலிடம் தருவதிலும் அவர் எடுத்த நடவடிக்கைகள் சரித்திரத்தில் பதிந்துபோய்விட்டன. தாமே படைத்துவிட்ட இந்தப் புனித சரித்திரத்திற்கு மாறாக சுதந்திரா கட்சியைத் தொடங்கிய பின்னர் அவர் பேசலானார்.

இன்னும் சொன்னால் 'அபேதவாதம் அல்லது பொதுவுடைமை என்னும் பெயரில் ராஜாஜி நூல் ஒன்றை வெளியிட்டதுமுண்டு. அந்நூல், சிறைச் சாலையில் மேல் வகுப்பு அரசியல் கைதிகளிடையில் அவர் நிகழ்த்தி வந்த தொடர் சொற்பொழிவாகும். நான் தமிழில் முதன் முதலில் படித்த சோஷலிச இலக்கியம் அதுதான். ஆனால் இதை எடுத்துக்காட்டி, ராஜாஜியின் போக்குக்கு நான் மறுப்பு கூறத் தொடங்கியபோது, தமது பெயரால் வெளியாகி யுள்ள அந்த நூல் தமது அனுமதி யைப் பெற்றதல்ல என்று கூறிவிட்டார்!

சுதந்திராக் கட்சியைத் தொடங்கிய பின்னரும் அவரும் நானும் அடிக்கடி சந்தித்து வந்தோம். தன் கட்சிக்குள் என்னை இழுத்துக் கொள்வதற்காக எனது இல்லத்திற்கு ஒருமுறை அவரே வந்து என்னுடன் பேசினார். அவரது இல்லத்தில் ஒருமுறை நாங்கள் சந்தித்தபோது, ''காந்திய சோஷலிசம் எனக்கு உடன்பாடு என்றேனும் தாங்கள் சொல்லலாமே'' என்று நான் கேட்டுக் கொண்டேன். அதற்கும் அவர் சம்மதிக்கவில்லை.

''காங்கிரஸ் ஆட்சியானது சமூக - பொருளாதாரத்துறைகளில் மிகவும் வேகமாகப் போகிறது. பிரேக் போட்டு அந்த வேகத்தைக் குறைக்கவே நான் முயன்று வருகிறேன்'' என்று ராஜாஜி ஒருமுறை கூறினார்.

தமிழ் நாட்டளவில் படித்தவர்களை யெல்லாம் தம் கட்சியில் சேர்த்துக்கொண்டு மாநில மட்டத்தில் இயங்கிய காமராசர் ஆட்சியை எதிர்த்துப் பிரசாரப் போர் நடத்தினார்.

கொள்கை ரீதியிலும் சரி; அணுகுமுறை அல்லது நடைமுறை ரீதியிலும் சரி; சுதந்திராக் கட்சிக்கு ஒத்துழைப்பு தருவது என்னால் இயலாத காரியம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். அதன்பின் என் தலைவரை அவர் போக்கில் விட்டுவிட்டு, என் கழகப் பணிகளில் முழு அளவில் கவனம் செலுத்தலானேன். ஆம்; சுதந்திராக் கட்சியை எதிர்ப்பதில் நான் ஈடுபடவில்லை. ஈடுபடுவதற்கான நிலையிலே தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் நல்லுறவு அமைந்திருக்கவுமில்லை.

## தொண்டர்களை இழுத்துக் கொண்டார்!

சென்னையில் தமது சுதந்திராக் கட்சியின் முதலாவது அனைத்திந்திய மாநாட்டை ராஜாஜி நடத்தினார். அதிலே

முதல் நாளில் ''இலக்கிய மாநாடு'' என்னும் பெயரில் தனிநிகழ்ச்சி ஒன்று அமைப்பதாகவும், அதிலே நான் தலைமை தாங்க வேண்டும் என்றும் ராஜாஜி கேட்டுக் கொண்டார். அதற்கும் நான் மறுத்துவிட்டேன். எனது நினைவிலுள்ளபடி, நான் மறுத்துவிட்டபின், அப்படி யொரு சிறப்பு நிகழ்ச்சி சுதந்திராக் கட்சி மாநாட்டில் நிகழவில்லை.

சுதந்திராக் கட்சிக்கும் தமிழரசுக் கழகத்திற்கும் இடையில் பூசலோ போராட்டமோ இல்லையென்றாலும் கழகத்திலிருந்து திறமைமிக்க தலைவர்களையும் தொண்டர்களையும் இழுக்க ராஜாஜி தீவிரமாக முயற்சி எடுத்தார்.

தொண்டர்களை இழுப்பதிலே மாவட்டந்தோறும் அவர் ஓரளவு வெற்றி பெற்றார் என்றே சொல்ல வேண்டும். ஆனால் தலைவர்களை இழுப்பதிலே வெற்றி பெறவில்லை.

ராஜாஜி சுதந்திராக் கட்சியைத் தொடங்கியபோது படித்த வகுப்பைச் சேர்ந்த இளைஞர்கள் எண்ணற்றோர் சென்னை நகரிலும் வெளி மாவட்டங்களிலும் கழகத்தின் முன்னணித் தொண்டர்களாக இருந்து வந்தனர். இழக்கக் கூடாத அளவுக்கு திறனுடைய செயல் வீரர்களாகவும் அவர்கள் திகழ்ந்து வந்தனர். அவர்களை இழந்ததால், எனது கழகம் சென்னை நகரில் சிறிது பலவீனப்பட்டது என்பதையும் நான் இங்கு சொல்லியாக வேண்டும்.

மருத்துவக் கல்லூரி மாணவர் சீர்காழி திரு.ஜி. சுவாமிநாதன் அப்போது திறமை மிக்க தொண்டர்களில் முன்னணியில் இருந்தார். அப்போதே சிறந்த பேச்சாள ராகவும் இருந்தார். அவர் ராஜாஜி விரித்த வலையில்

விழுந்துவிட்டார். அவர், கொள்கையளவில் சுதந்திராக் கட்சிக்கு நெருக்கமானவர்தான்! ஆம்; பெரிய நிலச்சுவான் தார் குடும்பத்தில் பிறந்தவர். அவரை இழந்ததில் எனக்கு வருத்தந்தான் என்றாலும் அது தவிர்க்க முடியாததென்பதை உணர்ந்து ஆறுதல் அடைந்தேன்.

## தலைவர்கள் தடம் புரளவில்லை!

திரு. சின்ன அண்ணாமலை, திரு.எஸ்.கே. பாலசுப்பிரமணியம், திருவல்லிக்கேணி வழக்கறிஞர் பட்சி ராசகோபாலன், மயிலை திரு.ம. சீ. கிருஷ்ணமூர்த்தி, ஔவை தி.க. சண்முகம் போன்றோர் தனிப்பட்ட முறையில் ராஜாஜியிடம் பக்தி கொண்டிருந்தனர். அதனைப் பயன்படுத்தி அவர்களைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ள ராஜாஜி பெரு முயற்சி செய்தார். ஆனால், அது சாத்தியப்படவில்லை. காரணம் கொள்கை ரீதியாக என்னிடமும் என் கழகத்திடமும் அவர்களுக்கிருந்த பற்றும் பாசமும்தான். ஒருமுறை ராஜாஜி தமது இல்லத்திற்கு அழைத்து கொஞ்சம் கண்டிப்பாகப் பேசி, தமது கட்சிக்கு என்னை இழுக்க முயன்றார்.

''எனக்கும் உங்களுக்கும் ஒரே வட்டாரத்தில்தான் நண்பர்கள் இருக்கின்றனர். நான் சுதந்திரக் கட்சியைத் தொடங்கிவிட்டதால், அவர்கள் எல்லோரும் என் கட்சியைச் சார்ந்துவிட்டனர். இருவரையுமே ஆதரிப்பது என்பது அவர்களுக்குச் சங்கடம். தாங்கள் தனிமைப் பட்டுவிடுவதை நான் விரும்பவில்லை. ''ராஜாஜியைப் பிரிந்திருப்பது என்னால் சாத்தியமில்லை. அதனால், நான் சுதந்திராக் கட்சியில் சேர்ந்துவிட்டேன்'' என்று அறிக்கை விட்டுவிடுங்கள். இன்று மாலை திருவல்லிக்கேணி துள்சிங்கப் பெருமாள் கோயில் தெருவிலுள்ள

தவனோற்சவ பங்களாவில் சுதந்திராக் கட்சியின் கூட்டம் நடக்கிறது. அதில் கலந்து கொண்டு, 'சுதந்திராக் கட்சியில் சேர்ந்துவிட்டேன்' என்று சொல்லிவிடுங்கள்'' என்று சொன்னார்.

இப்படிச் சொல்லி, அத்துடன் பேச்சை முடித்து விட்டு, எனக்கு விடைகொடுத்தனுப்பி விட்டார்.

அன்றுமாலை திருவல்லிக்கேணிக் கூட்டத்தில் நான் பேசப்போவதாகக் கூட்டம் நடந்த இடத்தில் விளம்பரப் பலகை எழுதி வைக்கப்பட்டிருந்ததாக அறிந்தேன். எனது அனுமதியின்றி என் பெயர் விளம்பரப் படுத்தப்பட்டதை அறிந்ததும் வியப்பும் வேதனையும் அடைந்தேன். எனது பெருமதிப்பிற்குரிய தலைவரின் இந்தப் போக்கு என் முந்தைய அனுபவங்களுக்கு முற்றிலும் முரணாக இருந்தது. அதனால், சுதந்திராக் கட்சிபற்றி என் மனத்தி லிருந்த ஊசலாட்டத்திற்கு முடிவு கட்டி, என் போக்கில் உறுதியாக செயல்படலானேன். அதாவது, காங்கிரஸ் - சுதந்திரா கட்சிப் போராட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டு, புதிய தமிழகம் படைக்கும் பணியில் தீவிரம் காட்டலானேன்.

# சோதனைகளுக்கிடையிலும் தோழமையைக் காத்தோம்!

**ரா**ஜாஜி தொடங்கிய சுதந்திரா கட்சிக்கு தொடக்க காலத்தில் அங்குமிங்குமாக சில மாநிலங்களில் கணிசமான அளவில் வரவேற்பு இருந்தது. 1962 - இல் நடந்த பொதுத் தேர்தலிலே போட்டியிடுவதற்கு வாய்ப்பிருந்த மாநிலங் களில் - தொகுதிகளில் எல்லாம் அக்கட்சி தன் வேட்பாளர் களை நிறுத்திப் போட்டியிட்டது. ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களிலே முதல்தரமான எதிர்க்கட்சியாக சட்டப் பேரவையில் இடம் பிடித்துக் கொண்டது.

பொதுத் தேர்தல் முடிந்ததும் - சிறிது இடை வெளிக்குப் பின்னர் என்று நினைக்கிறேன் - ஒரிசா மாநிலத்தில் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர் முதல் வரானார். சட்டப் பேரவையிலேயும் அக்கட்சிக்குக் கணிச மான பலம் ஏற்பட்டது. ஆனால், தமிழகத்திலே எதிர் பார்த்த அளவில் அது வளர்ச்சியடையவில்லை. தேர்தல் களத்திலே காங்கிரஸ் கட்சியின் முதல்தர எதிரி சுதந்திரா கட்சியா, தி.மு.க. வா? - என்பதை முடிவு செய்வதிலே பிரதமர் நேருவுக்கும் தமிழக முதல்வர் காமராசருக்கும் கருத்தொற்றுமை இருக்கவில்லை. ராஜாஜியின் சுதந்திரா கட்சியைத்தான் முதல் எதிரியாகக் காமராசர் கருதினார். அதனால், தேர்தல் பிரசாரத்திற்காக தமிழகத்திற்கு வந்த நேருஜியை, சுதந்திராக் கட்சியைத் தாக்கிப் பேசுவதிலேயே கருத்து செலுத்தச் செய்தார்.

## சுதந்திரா - தி.மு.க. உடன்பாடு?

அந்தத் தேர்தலிலேயே தி.மு.க. வுடன் கூட்டுசேரச் சுதந்திராக் கட்சி முயற்சித்தது. ராஜாஜியும் அண்ணாவும் சந்தித்துப் பேசி ஓரளவு தொகுதி உடன்பாடுகூட கண்டனர். ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதாகவும் நினைவிருக்கிறது. ஆனால், கையொப்பமிட்ட மை உலர்வதற்கு முன்பே ஒப்பந்தத்திலிருந்து தி.மு.க, விலகிவிட்டது. இது ராஜாஜிக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. தி.மு.க. பிரிவினை கோரும் கட்சியாக இருந்தும், தமக்கேவுரிய துணிச்சலின் காரணமாக அதனுடன் தொகுதி உடன்பாடு காண முயன்றார். பின், உடன்படிக்கையிலிருந்து அண்ணா விலகிக் கொண்டதற்கு ஏதேதோ காரணங்கள் பத்திரிகைகளில் வெளியாயின. பத்திரிகைகளில் வெளியாகாத காரணம் ஒன்றும் மக்கள் மத்தியில் வதந்தியாக உலவியது. எப்படியோ, சுதந்திரா - தி.மு.க. கூட்டு ஏற்படாதபடி தமது ராசதந்திரத்தைப் பயன்படுத்தி வெற்றி கண்டார் முதலமைச்சர் காமராசர். தனித்துப் போட்டியிட்டு சட்டப் பேரவையில் ஆறு இடங்களைக் கைப்பற்றியது சுதந்திரா கட்சி.

1957 - ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே 15 இடங்களையே பெற்ற தி.மு. கழகம் 1962 -ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் 50 இடங்களைப் பெற்றது. இது நேருஜிக்கு அதிர்ச்சியைத் தந்தது. முதலமைச்சர் காமராசருக்கும் அதிர்ச்சிதான். சுதந்திரா கட்சிதான் காங்கிரசின் முதல்தர எதிரி என்று காமராசர் மதிப்பிட்டது தவறாகப் போனது குறித்து அவர்மீது நேருஜிக்கு ஆத்திரம் ஏற்பட்டதாகக்கூடக் கேள்விப்பட்டேன்.

**எங்கள் உறவு நீடித்தது**

1960 தொடங்கி 1966 முற்பாதிக்காலம் வரையுள்ள ஆறாண்டுகளிலே ராஜாஜியும் நானும் தனிப்பட்டும், பொதுமேடைகளிலும் அடிக்கடி சந்தித்த வண்ணம் இருந்தோம். தமது கட்சியை நான் ஆதரிக்கவில்லையென்ற வருத்தம் ராஜாஜிக்கு இருந்ததென்றாலும், அதற்காக என் உறவை முறித்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. தனித்தும் மேடைகளிலும் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் பரஸ்பரம் மனம்விட்டுப் பேசி எங்களிடையே நிலவிய உறவை வளர்த்தும் வலுப்படுத்தியும் வந்தோம்.

ஆண்டுதோறும் டிசம்பர் இறுதியிலே ராஜாஜியின் பிறந்தநாள் விழாவையொட்டி சுதந்திரா கட்சி மேடைக்கு நான் அழைக்கப்படுவதும், ஆட்சேபனை சொல்லாமல் அழைப்பை ஏற்றுச் சென்று ராஜாஜிக்கு வாழ்த்தும் வணக்கமும் செலுத்துவதும் வழக்கமாக இருந்து வந்தது.

ராஜாஜி சுதந்திராக் கட்சியைத் தொடங்குவதற்கு முன் காங்கிரஸ் மேலிடத்துத் தலைவர்கள் சிலரும், காமராசரைத் தவிர தமிழக காங்கிரஸ் பிரமுகர்களிலே சிலரும் ராஜாஜியின் பிறந்த நாள் விழாவிலே கலந்துகொண்டு அவரை வாழ்த்திப் பேசி வந்தனர்.

அவர் சுதந்திராக் கட்சியைத் தொடங்குவதற்கு முந்தைய ஆண்டான 1958 டிசம்பரில் மத்திய உள்துறை அமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்தும், தமிழக அமைச்சர் எம். பக்தவத்சல முதலியாரும் மயிலை ரசிக ரஞ்சனி சபாவில் நடந்த ராஜாஜி பிறந்த நாள் விழாவிலே கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். வழக்கம்போல நானும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினேன்.

1959 ஜூன் திங்களின் தொடக்கத்திலே ர்ராஜாஜி சுதந்திராக் கட்சியைத் தொடங்கிவிட்டார். அந்த ஆண்டின் இறுதியிலே மயிலை ஆர்.ஆர். சபாவில் சுதந்திராக் கட்சி யின் சார்பில் நடந்த ராஜாஜியின் பிறந்த நாள் விழாவிலே காங்கிரஸ்காரர்களில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஆனால், நான் கலந்து கொண்டு பேசினேன். எனது பேச்சின் ஒரு பகுதி வருமாறு:

''ராஜாஜியின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு பேச வாய்ப்பளித்த நண்பர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நான் வருடந் தவறாமல் ராஜாஜி விழாவில் பேசி வருகின்றேன். ஆம்; வாடிக்கைக்காரன்! கடந்த ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் ராஜாஜி விழாக் கூட்டங்களில் யார் யாரெல்லாமோ கலந்து கொண்டு பேசினார்கள். அவர்களெல்லாம் இன்று இங்கு காணப்படவில்லை. இந்த ஆண்டில் அவர்கள் கலந்து கொள்ள முடியாதுதான். அந்த விபத்து எனக்கும் ஏற்படாம லிருந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

''ராஜாஜி சுதந்திராக் கட்சிக்குத் தலைவராக இருப்பதில் எனக்கொன்றும் குறையில்லை. சுதந்திராக் கட்சி மேடையில் நின்று அவரை வாழ்த்தவும் எனக்குத் தடையில்லை. ஆனால், கட்சி வேலிக்குள்ளேயே அவரது புகழை அடைத்து விடாதீர்கள். அதனால் அவருக் கொன்றும் நஷ்டமில்லை. தமிழகத்திற்குத்தான் நஷ்டம். கட்சி வேறுபாடின்றி பல தரப்பினரையும் அழைத்து ஆண்டுக்கு ஆண்டு சிறந்த முறையில் ராஜாஜியின் பிறந்த விழாவைக் கொண்டாடுங்கள். நானும் வருகிறேன்.''

*('செங்கோல்,' 27-12-59)*

வருடந்தோறும் மூதறிஞர் ராஜாஜியின் பிறந்த நாள் வரும் வாரத்திலே எனது செங்கோல் வார இதழிலே தலையங்கம் எழுதி எனது வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவிக்க யான் தவறியதேயில்லை. அதைப் படித்து விட்டு, ஒன்றிரு சந்தர்ப்பங்களில் ராஜாஜி நன்றி தெரிவித்து எனக்குக் கடிதம் எழுதியதும் உண்டு.

சுதந்திராக் கட்சியோடு நான் ஒத்துழையாமையைக் கடைப்பிடித்து வந்த போதிலும், எனது பிறந்த நாள் விழாக் கூட்டங்களிலும், வேறு வகையில் எனக்குச் சிறப்புச் செய்ய நடைபெற்ற கூட்டங்களிலும் தலைவர் ராஜாஜி தமிழரசுக் கழகத்தின் அழைப்பை ஏற்று அதன் மேடையில் நின்று என்னை வாழ்த்தியதும் உண்டு.

**பிறந்த நாள் வாழ்த்து**

26-6-60- இல் தியாகராய நகரில் உள்ள கிருஷ்ணகான சபை கலையரங்கில் எனது பிறந்த நாள் விழாவை தமிழரசுக் கழகத்தார் நடத்தியபோது அதில் கலந்து கொண்டு ராஜாஜி என்னை வாழ்த்திப் பேசினார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

''ம.பொ.சி.யுடன் நெருங்கிப் பழகியவர் களெல்லாம் அவரைப் போற்றிப் பேசினார்கள். நெருங்கிப் பழகினால் அன்பு வளர்கிறது. அன்பு வளர்ந்தால், நாம் பழகுபவருடைய அந்தரங்கம் தெரிகிறது. ஒருவரோடு நெருங்கிப் பழகாமல் (அவரைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்டு) பத்திரிகையில் படித்துத் தெரிந்து கொள்வோமா னால் அவர் எப்படிப்பட்டவர், அவர் உள்ளம் எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ள முடியாது.

''ம.பொ.சி.க்கு வயது 54 முடிந்து 55 ஆரம்பித் திருக்கிறது. அவர் பிறந்தபோதுதான் கல்கத்தாவிலே நடந்த

காங்கிரசுக்குப் போயிருந்தேன். அந்த ஆண்டிலேதான் ''சுயராஜ்யம் நமது பிறப்புரிமை'' என்று தாதாபாய் நௌரோஜி சொன்னார். அந்த ஆண்டிலே பிறந்தவர் இதற்குள் இவ்வளவு புகழ் பெற்றுவிட்டாரே என்று நினைக்கும் போது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவர்களிடத்தில் அன்பு, பண்பு, தெய்வ பக்தி எல்லாமிருக்கின்றன. அவற்றோடு இலக்கியத்தைச் சுவைக்கும் தன்மையும் இருக்கிறது. இலக்கியச் சுவை என்று சொன்னால் மட்டும் போதாது; இலக்கியக் காதல் என்றே சொல்லலாம். அத்துடன் அரசியலும் இருக்கிறது.

''சிலருக்கு அரசியல் தெரியும்; இலக்கியம் தெரியாது. தெய்வபக்தி அவர்களுக்குப் பிடிக்கவே பிடிக்காது. பலருக்கு இலக்கியம் மட்டும் தெரிந்திருக்கும்; அரசியல் தெரியாது. ஏதோ கட்டுரை எழுதவேண்டு மென்பதற்காக அரசியல் தெரிந்தது போலப் பாசாங்கு செய்வார்கள். 1905 - ஆம் ஆண்டிலே நடந்ததை 1915 - ஆம் ஆண்டில் நடந்ததாக எழுதுவார்கள். இன்னும் சிலரிடம் அன்பு இருக்கும். ஆனால், அவர்களுக்கு அரசியலோ, இலக்கியமோ தெரியாது. நமது ம.பொ.சி. அவர்களிடத் திலே அன்பு, பண்பு, அரசியல், இலக்கியம், தெய்வ பக்தி எல்லாமிருக்கின்றன.

''ம.பொ.சி. க்கு ஆசீர்வாதம் கூறும்படியாக என்னை அழைத்தார்கள். நான் இங்கு வந்ததில் ஏதேனும் 'சூழ்ச்சி' இருக்குமோ என்று யாரும் எண்ணவேண்டாம்.''

*('செங்கோல்' 10-7-60)*

## 'மதராஸ் மெயில்' தந்த தகவல்

ஒரு சமயம் சுதந்திரா கட்சியின் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்காகத் தலைவர் ராஜாஜி குடந்தை

நகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவர் தம் கட்சிக் கூட்டத்தில் பேசிய நாளிலே நகரின் வேறுபகுதியிலே தமிழரசுக் கழகத்தின் சார்பில் வடக்கெல்லை வெற்றி விழாவையொட்டி ஒரு கூட்டம் நடத்த ஏற்பாடாகி யிருந்தது. அதற்கு கழகத் தோழர்களால் ராஜாஜி அழைக்கப்பட்டார். அவரும் மனமுவந்து அழைப்பை ஏற்றுக் கொண்டு கூட்டத்தில் பேசினார். அதுபற்றி அப்போது சென்னையிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த 'மெட்ராஸ் மெயில்' என்னும் ஆங்கில நாளிதழில் *(18-1-60)* வெளியான செய்தியை, தமிழில் மொழி பெயர்த்து இங்கு தருகிறேன்:

''ஜனவரி 17 - ந் தேதியன்று கும்பகோணம் தமிழரசுக்கழகத்தினர் தமிழ்நாடு வடக்கெல்லை வெற்றி விழாவைக் கொண்டாடினர். கும்பேசுவரர் வடக்குத் தெருவில் நிகழ்ந்த அவ்விழாவின்போது ராஜாஜி சொற் பொழிவாற்றினார்.

''திரு.உ.கோ. சுப்பிரமணியம், புலவர் கீரன், திரு.கோ.கலிவரதன், மற்றுமுள்ள கழகத்தலைவர்கள் ராஜாஜியை வரவேற்றார்கள்.

''தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும், தமிழர் நலனுக்காகவும் தமிழரசுக் கழகம் புரிந்து வந்திருக்கிற பணியைப் பாராட்டிப் பேசினார் ராஜாஜி. அன்பையும் ஒற்றுமையையும் பரப்பும் முயற்சியை மேலும் தொடர்ந்து செய்து வரும்படி அவர் கூறினார்.

''ஆரிய பூமியில் வசிக்கும் அனைவரும் ஆரியர் களே; தமிழ்மொழி பேசுகிறவர் எல்லோரும் தமிழர்களே! நாட்டைத் துண்டு போடவேண்டும் என்று விரும்பு கிறவர்கள் இந்த நாட்டுக்கும் ஆண்டவனுக்கும் துரோகம் இழைப்வர்களேயாவர்'' என்று ராஜாஜி குறிப்பிட்டார்.

''தனிமனித சுதந்திரத்தை நிச்சயப்படுத்தவும், அரசாங்கத்தின் தலையீட்டை மிகவும் குறைந்த பட்ச நிலைக்குக் குறுக்குவதற்காகவுமே தாம் போராடிவருவ தாகவும், அதுவே தமது தற்போதைய குறிக்கோள் என்றும் ராஜாஜி அறிவித்தார்.''

26-6-60 - இல் தியாகராய நகர் கிருஷ்ணகான சபாவில் நடந்த எனது 55 ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவின்போது, இந்தியாவில் மூன்றாவது பொதுத் தேர்தல் நடப்பதற்கு 18 மாதங்களே இருந்தன. அதனால் தமிழரசுக் கழகத்தை அரசியல் கட்சியாகப் பிரகடனப் படுத்தி, பொதுத் தேர்தலில் அதனை ஈடுபடுத்த வேண்டு மென்று என்னைச் சூழ்ந்திருந்த கழக முன்னணித் தலைவர் களில் சிலர் என்னை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இது ராஜாஜிக்கும் தெரிந்திருந்தது. அதனால், எனக்காகப் பரிந்து பேசி, கழகத்தைக் கட்சியாக்க வேண்டாம் என்று அறிவுரை கூறினார். இதோ, ராஜாஜி பேசியது:

''ம.பொ.சி. அரசியல் கழகம் - தமிழரசுக் கழகம் ஆரம்பித்து நடத்திக் கொண்டு வருகிறார். ஒரு கட்சி என்று துவக்கியவுடனே அதற்குக் கொஞ்சம் பலம் வந்தவுடனே தேர்தலில் இறங்க வேண்டும் என்கிறார்கள். நான் நடத்தும் கட்சியிலும் சிலர் அப்படித்தான் செய்ய விரும்புகிறார்கள். அது, பிஞ்சு மாங்காயைப் பழுக்க வைப்பதுபோல. பிஞ்சு மாங்காய் பழுத்தது போலத் தெரியலாம். சுவை இருக் காது. காங்கிரசால் வெள்ளையரை வெளியேற்ற முடிந்த தென்றால், அது ரொம்ப நாளாகத் தேர்தலில் நிற்காததால் தான்.

''ம.பொ.சி. நடத்தும் தமிழரசுக் கழகத்திலேயும், 'நம் கழகமும் தேர்தலில் நிற்கவில்லையே' என்று சிலருக்கு வருத்தம் இருக்கலாம். தேர்தலில் நிற்காதது

மிகவும் நல்ல காரியம் என்பது என் அபிப்பிராயம். ஆகவே, தமிழரசுக் கழகத்திலுள்ளவர்களுக்கு நான் சொல்கிறேன், தேர்தலில் நிற்க ம.பொ.சி. அனுமதிக்க வில்லையே என்று வருத்தப்படாதீர்கள்.''

ராஜாஜியின் இந்த யோசனை என்னிடமும் என் தமிழரசுக் கழகத்திடமும் அவருக்கிருந்த உண்மையான அன்புணர்ச்சியைக் காட்டுவதாகும். ஆம்; நானும், என் கழகமும் சுதந்திரா கட்சிக்கு இசைவாக இல்லாத நிலையி லும் என்னிடமும், என் கழகத்திடமும் அவர் கொண்டிருந்த அன்பு கொஞ்சங்கூடக் குறைந்துவிட வில்லை.

**சுயாட்சியிலும் உடன்பாடு**

தமிழரசுக்கழகத்தின் உயிர் போன்ற கொள்கையாக வுள்ள ''மாநில சுயாட்சி''யிலேயும் ராஜாஜிக்கு முழு உடன்பாடு இருந்தது. அதனால், கழக மேடையில் நின்றே அதன் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு முழு அளவில் ஆதரவு தெரிவித்துப் பேசினார். இதோ, தியாகராயநகர் கூட்டத்தில் ராஜாஜி பேசுகிறார்:

''திருத்தணி, தென் குமரி ஆகியவற்றிற்காக பெரிய சண்டை பிடித்துச் சம்பாதித்தோம்'' என்று எனக்கு முன்னே எல்லோரும் மகிழ்ச்சியோடு பேசினார்கள். என் மனதில், 'இந்த ராஜ்யம் ஒரு ஜில்லா போர்டாக ஆகி விட்டதே' என்ற வருத்தம் நிறைந்திருக்கிறது. ராஜ்யங் களுக்கு அதிகாரம் கிடையாது. எல்லாவற்றிற்கும் வடக்கே யுள்ள டில்லியிடம் 'கடன் வேணும், பணம் வேணும்' என்று கேட்க வேண்டியிருக்கிறது. இது பிச்சை கேட்பது போலத்தான்!

''இதெல்லாம் சில்லறை விஷயங்கள்; இதைப்பற்றி நீங்கள் நினைக்கக் கூடாது'' என்று சொல்லுவார்கள் டில்லியில் உள்ளவர்கள். அதிகாரம் எங்கு குவிந்து கிடக்கிறதோ அங்கிருப்பவர்களுக்குத் திருப்தி ஏற்படலாம். அதிகாரத்தை இழந்த இடத்தில் இருப்பவர்களுக்கு அது குறையாகத்தான் இருக்கும். எல்லா மாநிலங்களுக்குமே அதிகாரம் இல்லையே என்ற குறை ஏற்பட்டிருக்கிறது.''

தியாகராஜ நகரில் எனது 55-ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா நடந்தபோது ''சென்னை ராஜ்யம்'' என்பதனைத் ''தமிழ் நாடு'' என்று மாற்றக் கோரி, அதற்காக மாநில - மத்திய அரசுகளுக்கெதிரான ஒரு போராட்டத்தில் ஈடுபடத் தமிழரசுக் கழகம் தயாராகிக் கொண்டு வந்தது. அதைப்பற்றியும் எனது பிறந்த நாள் விழாக் கூட்டத்திலே தமது கருத்தை வெளியிட்டார் ராஜாஜி. அது வருமாறு:

''ராஜ்யத்தின் பெயரை மாற்ற வேண்டாமென்று முன்பு நான்தான் யோசனை சொன்னேன். ஆந்திரம் பிரிய இருந்தபோது, மதராஸை இரண்டு ராஜ்யத்திற்கும் பொதுவாகச் செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டது. ஆந்திரம் பிரிந்துபோய் மதராஸ் பட்டணம் நமக்கே கிடைத்த பிறகும், பம்பாய் பட்டணத்தின் பிரச்சினை தீராமல் இருந்தது. குஜராத்துக்கும் மராட்டியத்திற்கும் பம்பாய் நகரம் பொதுவாக இருக்க வேண்டும் என்று சொல்லப் பட்டது. அந்தச் சிக்கல் தீரும்வரை மதராஸ் பட்டணத் திற்கும் அபாயம் இருக்கிறது என்று நான் நம்பினேன். அதனால் அப்போது ராஜ்யத்தின் பெயரை மாற்ற வேண்டாமென்று சொன்னேன். இப்போது பம்பாய் பிரச்சினையில் மராத்தியரும் குஜராத்தியரும் சமாதானம் செய்து கொண்டு விட்டார்கள். அந்தப் பிரச்சினை அடியோடு தீர்ந்து விட்டது. இனி, இந்த ராஜ்யத்தின்

பெயரை 'தமிழ்நாடு' அல்லது 'தமிழகம்' என்று மாற்றலாம்.''

ராஜாஜியின் பேச்சை இவ்வளவு விரிவாக இங்கு நான் எடுத்துக் காட்டக் காரணம் உண்டு.

சுதந்திராக் கட்சி தோன்றிய பின்னும், அதிலே இரண்டறக் கலந்துவிட என் தலைவரிடம் நான் மறுப்புத் தெரிவித்த பின்னும் அவர் மிகவும் பெருந்தன்மையோடு என்னிடமும், என் கழகத்திடமும் தனிப்பட்ட முறையிலும் கொள்கை ரீதியிலும் கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் நட்புணர்ச்சியையும் பொது மேடைகளில் வெளியிடத் தவறியதில்லை யென்பதே அந்தக் காரணம்.

# சீன ஆக்கிரமிப்பின்போது சோதனைக்காளானோம்!

1962 அக்டோர் 20-இல் பாரத தேசத்து இந்துக்களெல்லாம் தீபாளித் திருநாளைக் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருந்தபோது, சீனப் பெருநாடு வட இமயத்தின் மீது உரிமை கொண்டாடிப் படையெடுத்து.

## 'ஆக்கிரமிப்பு அல்ல!'

அற்றை நாள்வரை இந்த இரு பெரும் நாடுகளுக்கிடையில் நட்பே நிலவியது. பாரதப் பிரதமர் நேருவும் சீனப் பிரதமர் சூயென்லாயும் ஐந்து அம்சங்களைக் கொண்ட பஞ்சசீல உடன்படிக்கையும் செய்துகொண்டனர். ஆனால், பாரத - சீன எல்லையிலுள்ள சுதந்திர நாடான திபெத் மீது கலாசார ரீதியில் உரிமை கொண்டாடி அதனைத் தன் செல்வாக்கில் சீனம் எடுத்துக் கொண்டு விட்டது. இதனை எதிர்த்து திபெத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்ற இந்தியா பொறுப்பேற்கவேண்டுமென்று இந்தியாவிலே நேரு ஆட்சி வற்புறுத்தப்பட்டது. அதற்குப் பயன் கிடைக்கவில்லை. சீனத்துடன் தனக்குள்ள நட்பை காப்பாற்றிக் கொள்ள திபெத் விஷயத்தில் இந்தியா நடுநிலைமை வகித்தது.

நேருஜியே அதிர்ச்சியடையத்தக்க வகையில் சீனம் பாரதத்தின்மீது படையெடுத்து நாளுக்கு நாள் முன்னேறி வந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்திய - சீன எல்லையிலே 'மக்மகான் கோடு' வரம்பாக்கப்பட்டிருந்தது. அதனை ஏற்க மறுத்து அந்தக் கோட்டைக் கடந்து இந்தியாவிற்குள் புகுந்தன சீனப்படைகள். ''இது ஆக்கிரமிப்பு அல்ல; எல்லைத் தகராறுதான்'' என்றனர் சீனத் தலைவர்களான பிரதமர் சூயென்லாயும் அதிபர் மாசேதுங்கும். சீனப் படையெடுப்பை முறியடித்து நாட்டைக் காப்பதிலே ராஜாஜி அக்கறை காட்டினாரென்றாலும், அது விஷயத்தில் நேருஜி அரசு கடைப்பிடித்த அணுகுமுறையில் அதிருப்தி கொண்டார். அது, எங்கள் நட்புக்கு ஒரு சோதனையாக அமைந்தது.

## அமெரிக்கா சென்றார்!

சீனம் படையெடுத்த நேரத்தில் ராஜாஜி அமெரிக்காவில் இருந்தார். அவர் அமெரிக்கா சென்றதன் காரணத்தை இங்கு விளக்க வேண்டியது அவசியம்.

சேமிப்பிலுள்ள அணுகுண்டுகளைக் கடலில் எறிந்துவிட வேண்டுமென்றும், மேற்கொண்டு அணுகுண்டுகளைச் செய்வதில்லை என உறுதி கூறவேண்டுமென்றும் அதிபர் கென்னடியை கேட்டுக் கொள்வதற்காகத்தான் மூதறிஞர் ராஜாஜி அமெரிக்கா சென்றிருந்தார்.

1962 செப்டம்பர் இறுதியில் சென்னையிலிருந்து அமெரிக்கா புறப்பட்டார். அப்போது அவருக்கு வயது 84. டாக்டர் சத்திய நாராயணா அவர்கள் அவருக்குத் துணையாகச் சென்றார். மற்றும் திரு. ஆர். ஆர். திவாகர், திரு. பி. சிவராவ் ஆகியோரும் சென்றனர்.

ராஜாஜி புறப்பட்டபோது நானும் என் கழகத் தோழர்களும் மீனப்பாக்கம் விமான நிலையத்திற்குச்

சென்று வழியனுப்பி வைத்தோம். தமிழரசுக் கழகத்தின் சார்பில் மிகப்பெரிய அளவில் அவரால் தாங்கிக் கொள்ள முடியாத பூபாரத்தை அவர்மீது சுமத்தி நானும் என் கழகத் தோழர்களும் மகிழ்ச்சியடைந்தோம்.

புறப்படுமுன் என்னைத் தம் இருகரங்களாலும் கட்டியணைத்து மார்புறத் தழுவி ''உடம்பைச் சரியாகக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று எனக்கு அறிவுரை கூறினார். 84 வயதுடைய முதுமைப் பருவத்தில் நெடுந் தொலைவிலுள்ள அமெரிக்காவுக்குச் செல்லுகின்றாரே என்ற கவலை எனக்கிருந்தது. அந்தக் கவலை காரணமாக நான் அவருக்கு விட நினைத்த வேண்டுகோளை, வயிற்று வலியால் வருந்துபவன் என்ற காரணத்தால் எனக்கு அவர் அறிவுரையாகக் கூறினார்.

புறப்படுமுன், ''ஏதேனும் இலக்கிய நூல்களை எடுத்துச் செல்கிறீர்களா?'' என்று அவரைக் கேட்டேன். அவர் ''நீங்களே எனக்குள்ள ஒரே இலக்கிய நூல். நீங்கள் என்னுடன் வந்துவிட்டால், இன்பமாகப் பொழுது போக்க வேறு என்ன நூல் எனக்குத் தேவை'' என்று அன்பு ததும்பும் குரலில் கூறி என்னை மகிழ்வித்தார்.

ராஜாஜி அமெரிக்கா சென்றது இந்திய அரசாங்கத் தூதுவராக அல்ல. ஆயினும், பிரதமர் நேருஜியின் தார்மிக ஆதரவு அவருக்கு இருந்தது. காந்திஜி அமைதி நிலையத் தின் (காந்திஜி பீஸ் பவுண்டேஷன்) தூதுவராகவே அவர் சென்றார். அப்படிச் செல்வதற்கு, அவர் வாழ்ந்த காலத்திலே அவரைவிடத் தகுதி வாய்ந்தவர் வேறு யாரும் இருக்கவில்லையல்லவா!

## கென்னடியுடன் பேசினார்!

அமெரிக்கா சென்றதும், அந்த நாட்டின் தலைநகரான வாஷிங்டனிலே வெள்ளை மாளிகையில் உலகத்தார் அனைவருடைய கவனத்தையும் கவர்ந்த நிலையில் அதிபர் பதவியில் இருந்த கென்னடி அவர்களை சுதந்திர இந்தியாவின் கடைசி கவர்னர் - ஜெனரலாகப் பதவி வகித்த ராஜாஜி பேட்டி கண்டு பேசினார்.

அணுகுண்டு அபாயத்திலிருந்து உலகைக் காப்பாற்று வதற்கு உதவி புரியுமாறு உயிர்க் குலத்தின் சார்பில் அதிபர் கென்னடிக்கு வேண்டுகோள் விடுத்தார். அது அப் போதைக்குப் பலன் தரவில்லையென்றாலும், பிற் காலத்தில் அணுகுண்டு ஒழிப்பு இயக்கம் வலுப் பெறு வதற்கு அடித்தளம் இட்டுவிட்டதென்று சொல்லலாம்.

அதிபர் கென்னடியைக் கண்டு பேசியபின் ஐ.நா. மன்றத்திற்குச் சென்று அதன் அழகிய கட்டடத்தையும் பார்த்து மகிழ்ந்தார். ஐ. நா. பொதுச் செயலாளரும் பர்மாவாசியுமான ஊதாண்ட் அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

வாஷிங்டன், நியூயார்க் ஆகிய இரு நகரங்கள் தவிர அமெரிக்காவில் வேறெங்கும் ராஜாஜி செல்லவில்லை.

ராஜாஜி, 1962 நவம்பரில் டில்லி வழியாக சென்னை திரும்பினார். டில்லியில் ஒன்றிரு நாட்கள் தங்கி, வாஷிங்டனில் அதிபர் கென்னடியுடன் தாம் பேசியது குறித்த விவரங்களை பிரதமர் நேருஜியிடம் கூறினார். பிரதமர் நேருஜியைச் சந்தித்தபோது, அந்தப் பெருமகனார் சீன ஆக்கிரமிப்பை முறியடிப்பதிலே தம் கவனம் முழுவதையும் செலுத்திக் கொண்டிருந்தார்.

டில்லியிருந்து சென்னை திரும்பிய ராஜாஜிக்கு இங்குள்ள ராஜாஜி மண்டபத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவேற்புக் கூட்டம் சுதந்திரா கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டதென்று நினைக்கிறேன். மண்டபத்திற்குள்ளேயும் வெளியேயும் மக்கள் வெள்ளம் போல் கூடியிருந்தனர். இதற்கு, முதியவரான ராஜாஜி உடல் நலத்துடன் தாயகம் திரும்பியதால் மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி ஒரு காரணம் என்றாலும், சீனப்படை யெடுப்புபற்றி அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை நேரில் கேட்டறியவும் ராஜாஜி மண்டபத்தில் மக்கள் திரண்டிருந்தனர்.

**பரிந்து பேசினார்!**

அந்தக் கூட்டத்தில் நானும் கலந்துகொண்டு, ராஜாஜியின் அமெரிக்கத் தூதுபற்றி இலக்கியச் சான்றுகள் காட்டிப் பேசினேன். அதியமானுக்கும் தொண்டமானுக்கு மிடையில் நிகழவிருந்த போரைத் தவிர்க்க முன்னவன் சார்பில் பின்னவனிடம் ஔவையார் தூது சென்ற நிகழ்ச்சியை ராஜாஜி தூதுடன் ஒப்பிட்டுப் பேசினேன். எனக்குப் பின் பேசிய திரு. கே. பாசுப்பிரமணிய ஐயர் எம்.எல்.சி. அவர்கள், அனுமன் இலங்கைக்குத் தூது சென்றதைக் குறிப்பிட நான் தவறிவிட்டதாகச் சொன்னார். எங்களுக்குப்பின் பேசிய ராஜாஜி, ராமன் சார்பில் இராவண்னிடம் அனுமன் தூது சென்றதாக வால்மீகியோ, கம்பரோ கூறவில்லை என்று குறிப்பிட்டார். அவன் இராவணனைச் சந்தித்தது தூது முறையிலான் சந்திப்பாகாது என்றும் ராஜாஜி கூறினார். அத்துடன், அனுமன் அசோகவனத்தை எதிர்த்தது ஒரு தூதவனுக்குரிய செயலாகாது என்றும் ராஜாஜி குறிப்பிட்டார். ராஜாஜி இருக்கும் மேடையில் என்னைப்பற்றி யாரேனும் குறை

கூறிவிட்டால் எனக்காகப் பரிந்து பதில் கூற ராஜாஜி எப்போதும் தவறுவதில்லை. அதுபோல, என்னை மேடையில் வைத்துக்கொண்டு ராஜாஜியைக் குறை கூறியோருக்கு நானும் பதிலளிக்கத் தவறியதில்லை. அத்தகைய சம்பவங்கள் எத்தனையோ உண்டு. உரிய இடங்களில் அவற்றை விளக்குவேன்.

யாரும் எதிர்பாராத வகையிலே ர்ராஜாஜி சீனப் படையெடுப்பை அலட்சியப்படுத்திப் பேசினார் ராஜாஜி மண்டபத்திலே! கம்யூனிஸ்டு சீனாவை நம்பி, அதனுடன் பஞ்சசீல உடன்படிக்கை செய்து கொண்டது, நேருஜி தன் தாயகத்திற்கு இழைத்த பெரும் தீங்கு என்று ராஜாஜி சொன்னார். கம்யூனிஸ்டான திரு.வி.கே. கிருஷ்ண மேனனை தமது அமைச்சரவையில் வைத்துக்கொண்டு நேருஜி சீனாவை முறியடிப்பது சாத்தியமில்லை யென்றும் கூறினார்.

ராஜாஜி மண்டபத்தில் நடந்த வரவேற்புக் கூட்டத் திற்குப் பின்னும் நேருஜியுடன் தமக்குள்ள கருத்து வேற்றுமைகளை ராஜாஜி அடிக்கடி வெளியிட்டு வந்தார்.

இந்தியாவின் வடக்கெல்லையிலே சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்டபோது, தமிழகத்திலே ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழரசுக் கழகம் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தது.

''ஆங்கில ஆதிக்க எதிர்ப்பு'' என்னும் பெயரிலே மாவட்டங்களின் தலை நகரங்களிலும், மாவட்டங்களின் உட்பிரதேசங்களான பிரதான நகரங்களிலும், மாநாடுகளை நடத்தி, ஆங்கில ஆதிக்கத்தால் தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும் ஏற்படும் கேடுகளை விளக்கிப் பிரசாரம் செய்து வந்தது.

மற்றும், தமிழகத்தின் கல்வியமைச்சர் திரு. பக்தவத்சலனார், தமக்கு முன் கல்வி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம், கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குவதற்கு வகுத்திருந்த அனுபவ சாத்தியமான திட்டத்தைக் கைவிடப் போவதாக அறிவித்தார். மற்றும், ஆங்கிலமே பயிற்சிமொழியாக நீடிக்க வேண்டியதன் அவசியத்தைத் தாம் கலந்து கொள்ளும் கூட்டந்தோறும் கூறி வந்தார்.

இதனால், கல்வி அமைச்சர் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளிலே அவருக்கெதிராகக் கறுப்புக் கொடி காட்டுவதென முடிவெடுத்து, அதை நடைமுறைப்படுத்தி வந்தது தமிழரசுக் கழகம்.

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தும் தொண்டர்களைக் கைது செய்து, அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்து அவர்களை சிறைக்கனுப்பி வந்தது அரசு.

சீனப் படையெடுப்புக்குப் பின்னரும் கழகத் தொண்டர்களில் நூற்றுக்கணக்கானோர் சிறைகளில் அடைபட்டிருந்தனர். ஆம்; அவர்களை அரசு விடுதலை செய்யவில்லை.

திருச்சி நீதிமன்றத்திலே தற்போது புகழ்பெற்ற புராணப் பேச்சாளராக விளங்கும் புலவர் கீரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் பலர்மீது கறுப்புக் கொடி காட்டியதற்காக வழக்கு நடந்து வந்தது. புலவர் கீரன் தாமே எதிர் வழக்காடி, தமக்கு விடுதலை தேடிக் கொண்டதோடு, தம்முடன் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருந்த கழகத் தோழர்களும் விடுதலை பெற வாய்ப்புத் தந்தார்.

இப்படி, தமிழரசுக் கழகத்திற்கும் அரசுக்குமிடையே பகை இருந்த தென்றாலும், சீன ஆக்கிரமிப்புக் கெதிராக

மத்தியில் இயங்கிய நேருஜியின் அரசையும் தமிழகத்தில் இயங்கிய காமராஜ் அரசையும் முழு அளவில் ஆதரிப்ப தெனத் தமிழரசுக்கழகச் செயற்குழு அவசரமாகக் கூடி முடிவெடித்தது.

ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் பிரசாரத்தைத் தற்காலிக மாக நிறுத்தி வைப்பதென்றும், சீன ஆக்கிரமிப்பு முறியடிக்கப்படும்வரை தேச பாதுகாப்புப் பிரசாரத்தில் முழு அளவில் ஈடுபடுவதென்றும் கழகச் செயற்குழு முடிவெடுத்தது.

தமிழக அரசு ''தேசப் பாதுகாப்புக் குழு'' என்னும் பெயரில் மாநில மாவட்டத்தில் ஒரு குழு அமைத்தது. அதிலே, அனைத்துக் கட்சிகளின் தலைவர்களைச் சேர்த்துக் கொண்டது. அந்தக் குழுவில் தமிழரசுக் கழகத் தலைவன் என்ற முறையில் எனக்கும் இடம் தரப்பட்டது.

சீன ஆக்கிரமிப்பை முறியடிக்க நேருஜியின் ஆட்சிக்குத் தார்மிக ரீதியல் மூதறிஞர் ராஜாஜி ஆதரவு காட்டினார் என்றே சொல்லவேண்டும். ஆனால், நடைமுறையிலே நேருஜியிடமிருந்து வேறுபட்டார். அதனை மேடைப் பேச்சு வாயிலாகவும் அறிக்கைகள் வாயிலாகவும் வெளியிட்டு வந்தார்.

இந்திய - சீன எல்லைப் போர் தொடங்கியதும் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஆதிபத்திய வல்லரசுகள் எல்லாம் இந்தியாவுக்கு உதவிபுரிய போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்தன. ஆம்; கம்யூனிச எதிர்ப்புணர்ச்சி காரணமாக!

போருக்குத் தேவைப்படும் ஆயுதங்களை இலவச மாகவும், கடனுக்கும் கொடுத்து உதவிபுரியவும் முன் வந்தன. ''போர் விமானங்கள் மட்டும் கொடுத்தால்

போதுமா? அந்த விமானங்களைச் செலுத்தும் விமானி களும் தேவையா?'' என்று அமெரிக்கா கேட்டது.

நேருஜி ''விமானங்களைக் கொடுத்தாலே போதும்'' என்று சொன்னார். இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை களை வெறுத்துவந்த அமெரிக்காவும் பிரிட்டனும் சீனாவுக்கு எதிராக ஆயுத உதவி தர முன் வந்ததைக் காரண மாகக் கொண்டு நடுவுநிலைக் கொள்கையை இந்தியா கைவிட வேண்டுமென்று நேருஜியை வற்புறுத்தி ராஜாஜி அறிக்கை விட்டார்.

போர் முடியும்வரை ஐந்தாண்டுத் திட்டத்தை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கோரினார்.

இந்தக் கருத்துக்களை நேருஜி ஏற்க மறுத்தார். இதனால், சினங் கொண்டவராகி பிரதமருக்குரிய அதிகாரங்களை, போர்க் காலத்தில் குடியரசுத் தலைவரே ஏற்க வேண்டும் என்றும் ராஜாஜி அறிக்கை விட்டார்.

இப்படி, இன்னும் எத்தனையோ விஷயங்களில் நேருஜியின் அரசோடு என் தலைவர் ராஜாஜி கருத்து வேற்றுமை காட்டி அடிக்கடி அறிக்கைகளை வெளியிட்டு வந்தார். சீனப்படையெடுப்பு ஏற்பட்டதுமே நாட்டில் ''நெருக்கடி நிலை'' பிரகடனம் செய்யப்பட்டது என்பதை இங்கு நினைவூட்ட வேண்டும். அந்த நெருக்கடி நிலையிலும் ஆட்சியின் நடைமுறைத் திட்டங்களை எதிர்த்துப் பேசவும் அறிக்கைவிடவும் நேருஜியின் ஆட்சியால் ராஜாஜி அனுமதிக்கப்பட்டு வந்தார்.

என்னைப் பொறுத்தவரை ராஜாஜி போக்குக்கு எதிரான மனப்பான்மை கொண்டவனாகவே இருந்தேன். அதனால், நான் பேசும் மேடைகளிலே ராஜாஜிக்கு

பதிலளிக்கும் பொறுப்பை மேற்கொண்டேன். அடிக்கடி அறிக்கைகளும் வெளியிட்டேன்.

போர்க்காலமாதலால், நேருஜியின் ஆட்சிக்கு ஆதரவாக நான் விடுத்த அறிக்கைகளுக்கும் பேசிய பேச்சுகளுக்கும் தினசரிப் பத்திரிகைகள் நானே வியக்கும் வகையில் விளம்பரம் தந்தன.

நேருஜியின் அமைச்சரவையிலிருந்து கம்யூனிஸ்டான வி.கே. கிருஷ்ணமேனனை வெளியேற்ற வேண்டுமென ராஜாஜி அறிக்கை விட்டார்.

''வெளியேற்ற வேண்டியது மேனனை அல்ல; சீனனை'' என்று பதலளித்து நான் அறிக்கை விட்டேன்.

இந்தியாமீது சீனா படையெடுத்தபின் மூன்று வாரகாலம்வரை அப்போது சீனாவின் தோழமை நாடாக விளங்கிய சோவியத் ருஷ்யா சீனாவுக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ எதுவும் கூறாமல் நடுநிலை வகித்தது. இதற்குக் காரணம், இந்தியா போர்க்காலத்திலும் நடுவு நிலைக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்ததுதான். நேருஜி, ''எக் காரணத்தைக் கொண்டும் இந்தியா நடுவு நிலைக் கொள்கையைக் கைவிடாது'' என்று நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலும் பிரகடனம் செய்தார்.

சீனப் படையெடுப்பை முறியடிக்க இந்திய எல்லைக்குள்ளேயே நின்று தற்காப்பு முறையில் போராடி வந்தது இந்திய ராணுவம். இதற்கு மாறாக, ''சீனாவுக்குள்ளும் புகுந்து போரை விரிவுபடுத்த வேண்டும்; வெற்றிக்கு அதுதான் வழி'' என்றும் ராஜாஜி கூறினார். இதையும் ஏற்க மறுத்தார் நேருஜி.

இப்படி, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஆயுதப் போர் நடந்து வந்த நேரத்திலே, சுதந்திரா

கட்சியின் தலைவர் ராஜாஜிக்கும், தேசத்தின் பிரதமர் நேருஜிக்குமிடையே கருத்துப் போர் நடந்து வந்தது. இதனை, ஒரு துரதிர்ஷ்டமான நிலையாகவே நான் கருதினேன்.

## ருஷ்யாவின் நடுநிலை

இந்திய - சீன எல்லைப் போர் தொடங்கிய மூன்று வாரங்களுக்குப்பின் சோவியத் பாராளுமன்றத்தில் பிரதமர் குருஷ்சேவ் தமது கருத்தை வெளியிட்டார். அதிலே, பஞ்சசீல உடன்படிக்கை செய்துகொண்ட நட்பு நாடுகளிடையே போர் மூண்டது துரதிர்ஷ்டமானது என்று குருஷ்சேவ் கூறினார். சமரசப் பேச்சின் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய எல்லைப் பிரச்சினையை ஏகாதிபத்தியங் களுக்கு மகிழ்ச்சியைத் தரும் ஆயுதப் போராக மாற்றிய சீனாவின் நடவடிக்கையை குருஷ்சேவ் கண்டித்தார். இந்தியாவைப்பற்றி அவர் குறிப்பிட்டது வருமாறு:

''இந்திய - சீன எல்லைப்போர் சோவியத் அரசுக்குக் கவலையைத் தருகின்றது. ஒரு சோஷலிஸ்ட் நாட்டுக்கும், புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டிற்குமிடையில் நடைபெறுகின்ற முதற்போர் இது.

''இது பெரும் போராக மாறுவதற்கும் வாய்ப்பு உண்டு. ஏகாதிபத்தியவாதிகள் இதற்காகத்தான் காத்திருக் கிறார்கள். அதனாற்றான், இந்தியாவுக்குத் தயக்கமின்றி ஆயுதங்களை அவர்கள் உதவி வருகின்றார்கள்.

''மேலை நாடுகளின் ஆயுதங்களை ஏற்றுக் கொண்டு போர் செய்வது மேலை நாடுகளின் சுருக்குக் கயிற்றில் இந்தியா தலையை நுழைப்பதாக இருக்கும். அதன் விளைவாக அது தன் சுதந்திரத்தை இழக்க நேரிடும்.''

தமிழரசுக் கழகத்தின் சார்பில் தேசப் பாதுகாப்பை யொட்டிய பிரசாரக் கூட்டங்கள் தமிழ் நாடெங்கும் நடத்தப்பட்டன. நான் தொடர்ந்து ஒரு மாத காலம் சுற்றுலாச் செய்து கூட்டங்களில் பேசி வந்தேன்.

நேருஜியின் அரசு திரட்டும் யுத்த நிதிக்குப் பொருள் உதவி புரிந்தும், போர்ப் படையில் சேர்ந்தும், ரத்த தானம் தந்தும், விலைவாசிகளை உயர்த்தாமல் காத்தும் தேசப் பாதுகாப்புக்கு மக்கள் உதவிபுரிய வேண்டும் என்று கூட்டந்தோறும் பேசி வந்தேன்.

25-11-62-இல் சென்னை வானொலியில் ''எந்த நாளும் காப்போம்'' என்ற தலைப்பிலே தேசப் பாது காப்புக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று பேசினேன்.

## போர் நிறுத்தம்

திடீரென்று சீனப் பெருநாடு ஒதுதலைப் பட்சமாக போர் நிறுத்தப் பிரகடனம் செய்தது. அதிலே, ''1939 நவம்பர் 7-ஆம் தேதியன்று இருந்த எல்லைக் கோட்டை நடுவிடமாகக் கொண்டு, அதிலிருந்து பன்னிரண்டு மைல் தூரம் சீனா பின் வாங்கும். அதைப் போல இந்தியாவும் 12 மைல் பின்னே போக வேண்டும். சீனர் காலி செய்யும் இடத்தைக் கைப்பற்ற இந்தியா முயலக்கூடாது. முயன்றால் மீண்டும் போர்தான்'' என்று சீன அரசு அறிவித்தது.

இந்திய அரசு போர் நிறுத்தத்தை வரவேற்றது என்றாலும், எல்லைக்கோடு விஷயத்தில் சீனா விதித்த நிபந்தனையை ஏற்கவில்லை.

''1962 செப்டம்பர் 8-இல் நடைமுறையில் எது சீனத்தின் எல்லையாக இருந்ததோ, அந்த இடத்திற்கு சீனப்

படைகள் பின்வாங்க வேண்டும். அப்போதுதான் சமரசம் பேசமுடியும்.'' என்று நாடாளுமன்றக் கூட்டத்தில் பிரதமர் நேரு பிரகடனம் செய்தார். இதனால், சீனாவின் போர் நிறுத்தம் ஒருதலைப் பட்சமானதாகவே இருந்தது.

சீனம் விதித்த நிபந்தனையை இந்திய அரசு ஏற்க வில்லை யென்றாலும், இந்தியா மேற்கொண்டு வலுத் தாக்குதலில் ஈடுபடாமல் தன்னளவிலும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்தது. ஆயினும் எந்த நேரத்திலும் சீனா திரும்பவும் தாக்கக் கூடும் என்று கருதி தேசப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கைவிடாமல் அதிலே முழு மூச்சாக ஈடுபட்டு வந்தது இந்திய அரசு.

**பாரதியார் விழா**

சீனப் போர் தொடங்கிய ஒன்றரை மாதத்திற்குள் தமிழக அரசு மகாகவி பாரதியாரின் 80 -ஆம் ஆண்டு நிறைவு முத்து விழாவை மிகவும் சிறப்பாகக் கொண் டாடியது. ஆம்; மக்கள் உள்ளங்களின் அடித்தளத்திலிருந்து தேசபக்தியை மேலெழுப்பி, தேசப் பாதுகாப்புப் பணியில் அவர்களை ஈடுபடுத்துவதற்கென்றே தமிழக அரசு பாரதிக்கு விழா எடுக்க முன் வந்தது.

1962 டிசம்பர் 9, 10, 11 தேதிகளில் சென்னை நகரில் மட்டும் அந்த விழாவைக் கோலாகலமாகக் கொண் டாடியது. இந்தியாவின் முதுபெரும் அரசியல் ஞானியான சர். சி. பி. ராமசாமி ஐயர் முதல்நாள் காலை நிகழ்ச்சியை ராஜாஜி மண்டபத்தில் தொடங்கி வைத்தார்.

அன்று மாலை ராஜாஜி மண்டபத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, திருவல்லிக்கேணி திலகர் கூட்டத்தை அடைந்தது. அங்கு நடைபெற்ற

மாபெரும் கட்டத்திலே ஆந்திர முதல்வர் திரு. என். சஞ்சீவி ரெட்டி, கர்நாடக முதல்வர் திரு. அனுமந்தய்யா, கேரள முதல்வர் திரு. சங்கர், தமிழக முதல்வர் திரு. காமராஜ் ஆகியோர் பேசினர். தமிழரசுக் கழகத்தின் சார்பில் நானும் பேசினேன்.

டிசம்பர் 11-ஆம் நாளன்று மாலை இறுதி நிகழ்ச்சி யாக ராஜாஜி மண்டபத்தில் கூட்டம் நடந்தது. திரு.தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமை வகித்தார். ''பாரதியின் போர்க்குரல்'' என்னும் தலைப்பில் நான் பேசினேன். அந்தப் பேச்சு முழுவதும் ராஜாஜி நிலைபற்றி விமர்சிப்ப தாகவே இருந்தது.

## ராஜாஜிக்கு வேண்டுகோள்

கடற்கரைக் கூட்டத்திலும் ராஜாஜி மண்டபக் கூட்டத்திலும் பேசியபோது பிரதமர் நேருஜியின் ஆட்சிக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென என் அரசியல் குருவான ராஜாஜிக்கு உருக்கமாக வேண்டுகோள் விடுத்தேன்.

''சீனப் பெருநாடு இமயமலைப் பிரதேசம் தனக்கே சொந்தம் என்கிறது. சங்க காலத்திலே, தமிழ் நாட்டு மூவேந்தர்கள் தங்கள் தாயகம் இமயம்வரை பரந்து விரிந்து கிடப்பதாக் கருதினர். அதனால் சேரர் விற்கொடியையும், பாண்டியர் மீனக் கொடியையும், சோழர் புலிக் கொடியையும் இமயத்தின் நெற்றியிலே பொறித்துத் தமிழினத்துக்குள்ள உரிமையைப் பதிவு செய்தனர். அதனால் 'இமய வரம்பன்' என்னும் சிறப்புப் பெயர் மூவேந்தருக்கும் பொதுவாக இருந்துவந்தது. இது போன்று பண்டைய சீன மன்னர்களில் எவருக்கேனும் இமயவரம்பன் என்ற சிறப்புப் பெயர் இருந்ததுண்டா?'' எனக் கடற்கரைக் கூட்டத்தில் கூறினேன்.

ஆகவே, சீனாவின் ஆக்கிரமிப்பிலிருந்து தேசத்தைக் காக்கும் பொறுப்பிலே இந்தியாவிலுள்ள இதர மாநிலங்களுக்குள்ளதைவிட தமிழ் மாநிலத்தாருக்கே கடமை அதிகம் என்றும் கூறினேன். தமிழினத்தாருக்கு ராஜாஜி தலைமை தாங்க வேண்டும் என்றும் பணிவோடு வேண்டுகோள் விடுத்தேன். என் வேண்டுகோள் புறக்கணிக்கப் படவில்லை. டிசம்பர் 9-ஆம் தேதி கடற்கரைக் கூட்டத்திலும் 11-ஆம் தேதி ராஜாஜி மண்டபக் கூட்டத்திலும் நான் விடுத்த வேண்டுகோள் எல்லாப் பத்திரிகைகளிலும் பிரதான தலைப்புகள் தந்து பிரசுரிக்கப்பட்ருந்தன. என்னைப் போன்றே அவர்பால் பேரன்பு கொண்ட வேறு சிலரும் அவருக்கு வேண்டுகோள் விட்டனர்.

## ராஜாஜியின் பதில்

எங்களுக்கு பதிலளிக்க வேண்டுமென்ற நல்லுணர்ச்சி என் தலைவருக்கு ஏற்பட்டு, 16-12-62-இல் 'கல்கி' இதழிலே தமது சிறப்புக் கட்டுரை ஒன்று வெளிவரச் செய்தார். அதன் முக்கியப் பகுதிகள் வருமாறு:

''பிரமருடன் நான் ஒத்துழைக்க வேண்டும் என்று பல நண்பர்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். அவர்களுடைய அன்பையும் தேசபக்தியையும் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். பிரதமருடன் நான் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்வதால், நான் இப்போது செய்து வருவது அவருடைய பணிக்குத் தடங்கல் என்பது அவர்களுடைய கருத்து.

''என் சக்திக்கு இயன்றளவுக்குப் பிரமருடன் நான் ஒத்துழைத்தே வருகிறேன். சத்தியம் எது என்று மனச்சாட்சிப்படிப் பார்த்து, அதற்கேற்ற பகுத்தறிவுடன் நேருஅவர்களுக்கு என் ஒத்துழைப்பை அளித்தே வருகிறேன்.

சர்க்காருக்கு வெளியேயுள்ள ஒருவன் - சென்ற சில ஆண்டுகளாக சர்க்கார் செய்து வந்த அனேக காரியங்களை தவறு என்று உணர்ந்து வந்த ஒருவன் - இன்றைய சூழ்நிலையில் இதற்கு மேலாக எப்படி உதவியோ, ஒத்துழைப்போ தர முடியும்?''

எப்படியோ, சீனா ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்ததன் காரணமாக இந்தியாவிலே ராஜாஜிக்கும் நேருஜிக்குமிடையே நடந்து வந்த மனச்சாட்சிப் போரும் ஓய்ந்து விட்டது! ஆம்; இதுவும் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தந்தான். பரஸ்பர உடன்பாட்டின் பேரில் ஏற்பட்டதல்ல!

மூதறிஞர் ராஜாஜிக்கும் எனக்கும் இருந்த தொடர்பு குருவுக்கும் சீடனுக்கும் உள்ளது போன்றதாகும். இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் குருகுலத்திலே ராஜாஜி எனது குருநாதர்; காந்திஜி என் குருநாதருக்குக் குருநாதர் என்று சொல்வேன். இது மிகைப்பட்ட வருணனையன்று; வரலாற்று உண்மையாகும்.

## தளபதி ராஜாஜி

எனக்கு ராஜாஜியிடமுள்ள பக்தியை விடவும் காந்திஜியிடம் அதிக பக்தியுண்டு. ஆயினும், வாழ்க்கை நெறியாலும் சரி; வாழ்ந்த இடத்தாலும் சரி; எனக்கு நெடுந் தொலையில் காந்திஜி இருந்தார். இந்த இரண்டிலுமே ஓரளவு எனக்கு அணுக்கத்தில் இருந்தவர் ராஜாஜி. அதனால், காந்திய நெறிகளில் யான் பற்றுக் கொள்ளவும், ஏதேனும் ஒன்றில் ஐயம் ஏற்பட்டால் விளக்கம் பெறவும் எனக்கு மிகவும் நெருக்கத்தில் இருந்த ராஜாஜியே பயன்பட்டு வந்தார். நாடு சுதந்திரம் பெறுமுன்னர் இருந்த நிலை இது. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் எங்களிடையே

சிறிது இடைவெளி ஏற்பட்டது. முக்கியமாக மொழிப் பிரச்சினையிலே! விடுதலைப் போராட்ட காலத்திலே, நிலத்தாலும் மொழியாலும் அன்னியனரான ஆங்கிலேயர் இந்தியப் பெருநாட்டில் ஆதிக்கம் பெறுவதை எதிர்த்துப் போராடுகிற பாசறையின் அனைத்திந்தியத் தளபதியாக காந்தியடிகளும், தமிழகத் தளபதியாக ராஜாஜியும் விளங்கி வந்தனர். அந்த வகையில் விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒருவன் என்ற முறையில் ராஜாஜி எனக்குத் தலைவராக மட்டுமல்லாமல் தளபதியாகவும் இருந்து வந்தார்.

ஆங்கிலேயரை வெளியேற்றும்போது, அவர்களோடு சேர்த்து ஆங்கில ஆதிக்கமும் வெளியேற்றப்படும் என்ற நம்பிக்கையை எனக்குத் தந்தவர்களிலே காந்திஜிக்கு அடுத்தபடியானவர் ராஜாஜியே யாவார். இன்று, ''தமிழர் வாழ்விலே எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்'' என்று நான் கூறி வருகிறேனே, இந்த வாசகம் என்னுடையதுதானென்றாலும், இதன் பொருள் காந்திஜியிடமிருந்தும் ராஜாஜியிடமிருந்தும் பெற்றதாகும்.

விடுதலைப் போராட்ட கால இந்தியாவில் - ஏன்? விடுதலை பெற்ற இந்தியாவிலும், 1956-ஆம் ஆண்டுவரை ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிராகவும், தமிழர் வாழ்வில் தமிழுக்கே தலைமையிடம் தேடித் தருவதற்கு ஆதரவாகவும் மூதறிஞர் ராஜாஜி சொன்ன கருத்துக்கள் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

அவ்வளவு கடுமையாக ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து, மிகமிக உறுதியாகத் தமிழர் வாழ்வில் தமிழே தலைமை பெற ஆதரவு காட்டி வந்த ராஜாஜி, 1956லிருந்து தாம் வாழ்ந்த இளறுதி நாள்வரை ஆங்கில மொழியின்

ஆதிக்கம் நீடிக்க வேண்டும் என்பதற்கு நியாயம் கற்பித்துப் பிரசாரம் செய்யலானார்.

இந்திய தேசிய காங்கிரசானது, சுதந்திரம் பெற்ற இந்தியாவின் மத்தியில் ஆட்சி மொழியாகவும், மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கிடையிலும், ஒரு மாநில அரசுக்கும் இன்னொரு மாநில அரசுக்குமிடையிலும் தொடர்பு மொழியாகவும் இந்தி மொழிதான் இருந்துவரும் என்று தீர்மானித்தது. இதற்குத் தூண்டுதலாக இருந்தவர், குஜராத்தி மொழியினரான காந்தியடிகளே யாவார்.

**தலைவர்கள் கூட்டம்**

1956 ஜனவரி 28-இல் நுங்கம்பாக்கத்தில் பாங்கரான திரு. ஏ. சுப்பையா பிள்ளை என்பவர் வீட்டில் தமிழ் நாட்டின் முக்கிய தலைவர்கள் கூட்டம் ஒன்று இந்தியா வின் ஆட்சிமொழிப் பிரச்சனைபற்றி ஆலோசித்து முடிவெடுப்பதற்கு நடைபெற்றது. திரு. சுப்பையா பிள்ளையின் அழைப்பின் பேரில் இந்தக் கூட்டத்தில் ராஜாஜி, பெரியார் ஈ.வே.ரா., அறிஞர் அண்ணா, நாவலர் இரா. நெடுஞ்செழியன், நான் ஆகியோர் கலந்து கொண்டோம்.

ராஜாஜி தூண்டியதாலேயே இந்தக் கூட்டத்திற்குத் திரு. சுப்பையா பிள்ளை ஏற்பாடு செய்தாரென்பது அதில் கலந்து கொண்டபோதுதான் எனக்குத் தெரிய வந்தது. அற்றை நாள்வரை தமிழ் மொழிக்குப் பாதகம் ஏற்படும் வகையில் ஆங்கில ஆதிக்கத்தை ஆதரிக்கும் எண்ணம் ராஜாஜிக்கு இருக்கவில்லை.

இந்திய அரசியல் சட்டத்தின் 347 ஆவது விதியானது 1965 ஜனவரி 26 முதல் இந்தி யூனியன் அரசின் பிரதான

ஆட்சி மொழியாவதற்கு அனுமதிக்கிறது? இந்த விதி நடைமுறைக்கு வருமானால், இந்தி மொழி வழங்காத தமிழ் நாட்டாரின் உத்தியோக நலன்கள் பாதிக்கப்படு மென்று மூதறிஞர் ராஜாஜி அஞ்சினார். அதனால், 1965-க்குப் பின்னும் ஆங்கிலம் மத்தியில் ஒரே ஆட்சி மொழியாக நீடிப்பதற்கும் வழிசெய்வது அவசிய - அவரசப் பிரச்சனை என்று கருதினார். அதனாற்றான், இந்தக் கூட்டத்திற்குத் தூண்டுதலாக இருந்தார்.

1965-க்குப் பின்னும் காலங் குறிப்பிடாமல் மத்தியில் ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென் பதிலே ராஜாஜியுடனோ, வேறு யாருடனோ எனக்குக் கருத்து வேற்றுமை இருக்கவில்லை. அந்த நாளில் ராஜாஜியும் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் ஆங்கிலம் ஒன்றே ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமென்று கூறவுமில்லை.

நுங்கம்பாக்கம் கூட்டத்தில் ராஜாஜி, அண்ணா, நான் ஆகியோர் மொழிப் பிரச்சனையில் ஒத்த கருத்துடையவர் களாகவே இருந்தோம். பெரியார் ஈ.வெ.ரா. ஆங்கிலம் தமிழ் நாட்டிலும் ஆட்சி மொழியாகவும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாட போதனை மொழியாகவும் நீடிக்க வேண்டுமென்பதிலே தாம் உறுதியுடன் இருப்பதாகக் கூறினார். இத்துடனன்றி, ஆங்கிலமே தமிழர் வீடுகளில் பேசும் மொழியாகவும் ஆக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

## பெரியாருடன் கருத்துப் போர்

இதனால், பெரியாருக்கும் எனக்குமிடையில் சிறிது நேரம் கடுமையான விவாதம் நிகழ்ந்தது. ராஜாஜி அடிக்கடி தலையிட்டு எங்களை அமைதிப்படுத்த முயன்றார்.

''மாநிலங்களின் ஆட்சிமொழி பற்றியும் கல்லூரிகளில் போதனா மொழி பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கத் தேவையில்லை'' என்றும் கூறினார்.

மத்தியில் ஆட்சி மொழியாக 1965-க்குப் பின்னும் ஆங்கில மொழி ஒன்றே நீடிக்க வேண்டும் என்பதிலே நுங்கம்பாக்கம் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடையே பொதுவான கருத்து ஒற்றுமை ஏற்பட்டது.

இதன் அடிப்படையில் கூட்டறிக்கை தயாரிப்பது ராஜாஜியின் பொறுப்பில் விடப்பட்டது. பின்னர், ராஜாஜியின் கையொப்பத்தைப் பெற்ற கூட்டறிக்கையின் நகல் ஒன்று என் கையொப்பத்திற்காக அனுப்பப்பட்டது. நுங்கம்பாக்கம் கூட்டத்தில் நான் ஏற்காத சில கருத்துக்கள் அதில் இருந்தனவென்றாலும், பொதுக்கருத்துக்கள் அதில் இருந்தனவென்றாலும், பொதுக்கருத்து உடன்பாடு உறுதிப் படுத்தப்பட்டடிருந்ததால் நான் அதில் கையொப்ப மிட்டேன்.

நுங்கம்பாக்கம் கூட்டத்தில் பெரியாருக்கும் எனக்கு மிடையே நடந்த விவாதத்தின்போது, தமிழ்நாட்டளவில் ஆங்கில ஆதிக்கம் நீடிக்கக்கூடாது என்ற எனது கருத்துக்கு ராஜாஜி ஆதரவு அளித்தார். பெரியாரைப் பார்த்து, ''தங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ளும் தெளிவும் துணிவும் தமிழ் மக்களுக்கு ஏற்படுவது கஷ்டம்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

## ராஜாஜியின் தீர்க்கதரிசனம்

ராஜாஜி, எதிலும் தீர்க்கதரிசனத்துடன் செயல்படக் கூடியவர் என்பதிலே அவருடைய எதிரிக்குக்கூட ஐயம் ஏற்பட முடியாது. அவர், இந்தியாவின் பொது மொழி

விஷயத்திலும் ஆதிமுதல் தீர்க்கதரிசனத்துடனேயே செயல்பட்டு வந்தார் என்று சொல்ல வேண்டும். மத்தியில் ஆட்சிமொழியாக ஆங்கிலமே நீடிப்பதாயினும், பல்வேறு மொழிகள் வழங்கும் மாநிலங்களில் வாழும் பாரத மக்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்க, கற்பதற்கு ஆங்கிலத்தைவிடவும் எளிய மொழியாக உள்ள இந்திதான் பயன்படும் என்று அவர் நம்பினார்.

இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்று காந்திஜி கூறிவிட்டதனாலோ, இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை ஒரு தீர்மானத்தின் மூலம் பிரகடனப்படுத்தி விட்டதனாலோ, அந்த தீர்க்கதரிசி இந்திமொழியை ஏற்றுக்கொண்டார் என்று சொல்வதற்கில்லை. அப்படிச் சொல்வது அவரை அவமதிப்பதாகும். தம்முடைய மனச்சாட்சிக்கேற்பத்தான் இந்தியை இந்தியாவின் பொது மொழியாக ஏற்றார். மொழிவேறுபாடுடைய மக்களிடையே தொடர்பு ஏற்படுத்தும் பொதுமொழியாக இந்தியை ஏற்பது வேறு; மத்திய அரசின் ஆட்சி மொழியாக ஏற்பது வேறு.

துரதிர்ஷ்டவசமாக, தென் மாநிலங்களில் - குறிப் பாக, த்மது சொந்த மாநிலமான தமிழகத்திலே இந்தி மொழி வழக்கில் இல்லாததை உணர்ந்து தமிழரிடையிலும் இந்தி மொழியைப் பரப்ப தட்சண பாரத இந்தி பிரசார சபையைத் தோற்றுவித்து, அதன் தலைமைப்பொறுப்பைத் தாமே ஏற்று பல ஆண்டுக்காலம் நடத்தி வந்தார்.

*1937* - ஆம் ஆண்டு தம்மை முதல்வராகக் கொண்ட அமைச்சரவை சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட பொழுது, மாவட்டந்தோறும் குறிப்பிட்ட சில பள்ளி களிலே இந்தியைக் கட்டாய பாடமொழியாக்கினார். ஆனால், தமிழர் ஏற்றுக்கொள்ளவில்லை. கடுமையான

எதிர்ப்பு ஏற்பட்டு, காங்கிரஸ் ஆட்சியையே தள்ளாட வைத்தது. அதனால், இந்திமொழி கட்டாய பாடமாக இருந்ததை விருப்பப் பாடமாக மாற்ற ஆணை பிறப் பித்தார்.

அப்போது திரு.எஸ். சத்தியமூர்த்தியைத் தலைவ ராகக் கொண்ட சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு நான் செயலாளராக இருந்தேன். அந்தக் கமிட்டியானது, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இந்தியை விருப்பப் பாடமாகச் செய்யுமாறு ராஜாஜிக்கு வேண்டுகோள் விடுத்தது. இந்தத் தீர்மானம் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் மூலம் முதல்வர் ராஜாஜிக்கு என்னால் அனுப்பி வைக்கப்பட்டது. இதன் பின்னரே இந்தியை விருப்பப்பாடமாக்கி ஆணை பிறப்பித்தார்.

இரண்டாவது உலகப் பெரும்போர் காரணமாக, *1939* இல் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகியதால், விருப்பப்பாடம் என்ற நிலையிலிருந்தும் இந்தி மொழியை பாடத் திட்டத்திலிருந்து விலக்கியது வெள்ளையராட்சி.

அதன்பின்னரும், தேசம் சுதந்திரம் பெற்றதையடுத்து *1948* - இல் ஓமந்தூர் ரெட்டியாரை முதல்வராகக் கொண் டிருந்த காங்கிரஸ் ஆட்சியானது திரும்பவும் இந்தியை மாகாணம் முழுவதிலும் கட்டாய பாடமாகப் புகுத்தியது. அப்போதும் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது.

## தமிழரசுக் கழகத்தின் நிலை

இந்தியைக் கட்டாய பாடமாக வைப்பதை தமிழரசுக் கழகமும் விரும்பவில்லை. அதனால், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் தலைவாயிலில் நின்று மறியல் செய்ய கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தியின் தலைமையில்

தொண்டர்களை அனுப்பி, இந்தியை விருப்பப்பாட மாக்குமாறு தமிழக அரசை தமிழரசுக் கழகம் கோரியது. அதையும் 9 - வது வகுப்பு முதல் 11 - வது வகுப்பு வரை வைக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறியது.

அப்போதைய கல்வியமைச்சர் தி.சு.அவினாசி லிங்கனார், கழகத்தின் கோரிக்கையை ஏற்று, இந்தி மொழியை விருப்பப்பாடமாக மாற்றினார். துரதிர்ஷ்ட வசமாக, இந்தி எதிர்ப்பானது தமிழ்நாட்டின் கட்சி அரசியலாகி விட்டதால் விருப்பப்பாடமான பின்னும் இந்தி எதிர்ப்பு காங்கிரஸ் எதிர்ப்பாக மாறி, நீடித்தது.

இந்தச் சூழ்நிலையை நன்குணர்ந்தே ராஜாஜி மத்தியில் இந்தியை ஆட்சிமொழி யாக்குவதைக் காலவரை யறையின்றி ஒத்திபோட வேண்டுமென்ற கிளர்ச்சியைத் தொடங்கினார். அதற்கு இந்தி எதிர்ப்புப் பாரம் பர்யத்தினரின் ஒத்துழைப்பையும் பெறத் துணிந்தார். இதற் கான முதல் நடவடிக்கைதான் 1956 சனவரியில் நுங்கம் பாக்கத்தில் நடந்த தமிழகத் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம்.

1956 தொடங்கி 1965 முடியவுள்ள ஒரு கால கட்டத்திலே மொழிப் பிரச்சினை காரணமாக எனக்கு ராஜாஜியுடன் கருத்துப் பூசல் ஏற்பட்டது. அப்போது நான் மொழிப் பிரச்சினையிலே அவரது அணுகு முறையைக் கடுமையாக விமர்சிக்கலானேன். ''தமிழுக்குக்கேடு செய்யும் வகையிலே ஆங்கில ஆதிக்கத்தை எனது தலைவர் நிலைநிறுத்தப் பார்க்கிறார்'' என்ற பாணியில் நான் பிரசாரம் செய்தேன். ஆங்கில ஆதிக்கத்திற்கெதிராக 1962 -க்கு முன் அவர் எழுதியவற்றையும் பேசியுள்ள வற்றையும் தொகுத்துப் பிரசுரங்கள் வெளியிட்டேன்.

## ராஜாஜியின் கோபம்

அந்தப் பிரசுரங்களை ராஜாஜி பேசிய மாநாடுகளிலும் பொதுக் கூட்டங்களிலும் எனது தமிழரசுக் கழகத் தோழர்கள் வினியோகிக்கவும் ஏற்பாடு செய்தேன். ராஜாஜியின் அணுகுமுறையைக் கண்டிக்கும் வகையிலே, ''இன்பத் தமிழா, இந்தி - ஆங்கிலமா?'' என்னும் பெயரில் நூல் ஒன்றையும் வெளியிட்டேன். அந்த நூலை ராஜாஜியின் பார்வைக்கும் அனுப்பி வைத்தேன். 'கல்கி' இதழிலே அந்நூலுக்குக் கண்டன ரீதியில் மதிப்புரை எழுதப்பட்டது.

பச்சையப்பன் கல்லூரியிலும் லயோலா கல்லூரியிலும் 1962 நவம்பரில் தாம் நிகழ்த்திய இரண்டு சொற்பொழிவுகளிலே கடுஞ்சினத்துடன் என்னை விமர்சித்துப் பேசினார் ராஜாஜி. ''இந்தியை எதிர்த்து நான் மாநாடுகளும் கூட்டங்களும் நடத்துகிறேன் என்றால், என்னுடைய நண்பர் ம.பொ.சி. எனக்குப் போட்டியாக ஆங்கிலத்தை எதிர்த்து ஊர்தோறும் மாநாடுகள் நடத்திவருகிறார்'' என்று பேசினார்.

சேலம் நகரில் நடந்த சுதந்திரா கட்சி மாநாடு ஒன்றிலே என் கழகத் தோழர்கள் ராஜாஜியின் கருத்துக்களை எதிர்த்து 'செங்கோலி'ல் நான் எழுதிய கட்டுரைகளின் முக்கிய பகுதிகளைத் தொகுத்து அச்சுப் பிரசுரங்களாக்கி ராஜாஜி மேடையிலிருக்கும்போதே வினியோகித்தார்கள். இது, அவருக்கு சினத்தை மூட்டுவது இயற்கை. அப்போது ராஜாஜி பண்பட்ட வார்த்தைகளால் எனக்குப் பதிலளித்தார்.

ஏழாண்டுக் காலம் மொழிப் பிரச்சினையிலே நாங்கள் கடுமையாகப் போராடிவந்தோம் என்றாலும்,

அந்தக் கால கட்டத்திலும் வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் நாங்கள் சந்தித்துப் பழகி வந்தோம். மொழிப் பிரச்சினை சம்பந்தமில்லாத பல பொது மேடைகளிலே அடிக்கடி நாங்கள் பேசி வந்தோம்.

**ராஜாஜி - காமராஜ் சந்திப்பு**

*1964* - இல் என்னுடைய ஒரே மகன் திருநாவுக் கரசுக்கு, தேனாம்பேட்டை ஆபட்ஸ்பரி திருமண மாளிகை யில் யான் நடத்திய திருமணத்திற்கு ராஜாஜி வருகை தந்தார். சுமார் இரண்டு மணி நேரம் திருமண மண்ட பத்தில் தங்கியிருந்து என்னோடும், அதில் கலந்து கொண்ட அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்த திரு. காமராசரோடும் அளவளாவிப் பேசினார்.

அதற்கு முன்பு **1964** சனவரியில் நான் மலேசியா வுக்குச் சென்றபோது மயிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் எனக்கு நடத்தப்பட்ட விருந்துபசாரக் கூட்டத்திலேயும் ராஜாஜியும் கலந்து கொண்டு, எனக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பினார். அந்தக் கூட்டத்திலே திரு. காமராசரும் கலந்து கொண்டார்.

*1966* - இல் ஏ.வி.எம். இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற எனது மணிவிழாவிலும் அதே மண்டபத்தில் *1967* - இல் நடைபெற்ற என் மூத்த மகள் கண்ணகியின் திருமணத்திலும்கூட ராஜாஜியும் காமராச ரும் சந்தித்து அளவளாவினர் என்பதை இங்கு நினைவூட்ட வேண்டும்.

அரசியலிலே சந்திக்க முடியாத இருவேறு துருவங் களைப்போல இருந்த ராஜாஜியும், காமராசரும் என் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில்தான் சந்தித்துப் பேசுவது

வழக்கமாக இருந்தது. மூதறிஞர் ராஜாஜி, எங்களிடையில் மொழிப்பிரச்சினை காரணமாக கருத்துப்போர் நிகழ்ந்து வந்த காலத்திலேயும் எனது பிறந்த நாள் விழாவை யொட்டி ஆண்டுதோறும் வாழ்த்து அனுப்பிவந்தார்.

சென்னை கோகலே மன்றத்தில் இன்ப நிலையத்தின் சார்பில் நடந்த ''வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்னும் நூலின் இரண்டாவது பதிப்பு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு, கேட்போர் மனமுருகும்படி என்னைப் பெருமைப்படுத்திப் பேசினார்.

மொழிப் பிரச்சினையிலே ராஜாஜிக்கும் எனக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதும், அதையொட்டி நாங்கள் பரஸ்பரம் விமர்சித்துக் கொண்டதும் இந்தி சம்பந்தப் பட்டதல்ல; ஆங்கில ஆதிக்கம் சம்பந்தப்பட்டதுதான். இந்திப் பிரச்சினையிலே எனக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்படவில்லை - குறிப்பாக, திராவிட இயக்கத்தினரின் இந்தி எதிர்ப்பானது எங்கள் இரு வருக்குமே விருப்பமில்லாததாக இருந்தது.

## இந்தியைக் கற்க ஆதரவு

''இந்தி வந்தால் தமிழ்மொழி அழிந்தேவிடும்'' என்று அந்நாளிலும் தி.மு.க.வினர் கூறியதை ராஜாஜி ஏற்கவில்லை. ''மொழிப்பிரச்சினை இந்தியும் தமிழும் சம்பந்தப்பட்டதல்ல. போராட்டம் நடப்பது, இந்திக்கும் இங்கிலிஷுக்கும்தான்'' என்று ராஜாஜி அடிக்கடி கூறிவந்தார். தி.மு.க. தலைவர்களோடு சேர்ந்து பேசிய ஒன்றிரு கூட்டங்களிலேயும் இந்தக் கருத்தை அவர் துணிவோடு வெளியிட்டார். இன்னொரு விஷயத்திலும் திராவிட இயக்கத்தினருடன் ராஜாஜிக்குக் கருத்து வேற்றுமை இருந்தது. இந்தி மொழியைப் படிக்கக்கூடாது

என்பது அந்நாளிலும் திராவிட இயக்கத்தினரின் கொள்கை யாக இருந்தது. இந்திமொழி பாடமாக வைக்கப்பட்ட பள்ளிகளின் முன்பு அவர்கள் மறியல் செய்தார்கள். இது ராஜாஜிக்கு உடன்பாடல்ல.

இந்தி மொழியைக் கட்டாய பாடமாகவே ஏற்றுத் தமிழர் படித்தாக வேண்டும் என்பதிலே ராஜாஜியின் கருத்தில் எந்த நாளிலும் சருக்கல் ஏற்பட்டதில்லை. ''நான் சொன்ன காலத்திலேயே தமிழர் இந்தியைப் படிக்கத் தொடங்கியிருந்தால் இதற்குள் ஆங்கில ஆதிக்கம் அகன்றிருக்கும். சென்னையில் தமிழும், டில்லியில் இந்தியும் ஆட்சி மொழியாகியிருக்கும். என் பேச்சை ஏற்று தமிழர் இந்தி படிக்கத் தவறியதால் அவர்களுடைய உத்தியோக நலன்களைக் காக்க வேண்டி நான் மத்தியில் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்க்கிறேன்'' என்று ராஜாஜி அடிக்கடி கூட்டங்களில் கூறினார்.

## இருவிதமான முட்டாள்தனம்!

''சிலர் உணர்ச்சிவயப்பட்டு இந்தி மொழிமீது துவேஷத்தை வளர்த்துக்கொண்டு ''இந்தி ஒழிக'' என்று கூச்சலிடுகின்றனர். அதை நான் ஆதரிக்கவில்லை. இந்தத் துவேஷம் பல தவறான எண்ணங்களை ஏற்படுத்தி யிருக்கிறது. நமது வாணிபம் அண்டை ராஜ்யங்களின் மொழிகளில் நன்றாக நடைபெறுவதற்கு நாம் இந்தி மாத்திரமன்றி, நமது அண்டை ராஜ்யங்களின் மொழி களையும் கற்பது அவசியம். இந்தியை முட்டாள்தனமாக எதிர்க்கும் கோஷ்டியையும், அதைக் கட்டாயமாக ஆட்சி மொழியாகத் திணித்துவிட முடியுமென்று முட்டாள் தனமாக நினைக்கும் கோஷ்டியையும் எடுத்துக்கொண் டால், இரண்டாவது கோஷ்டியைத்தான் அதிக முட்டாள் தனமானவர்கள் என்றுகூற வேண்டும். ஏனெனில் முந்திய

கோஷ்டியினர் தங்களுக்கு மட்டுமே தீமை விளைவித்துக் கொள்கின்றனர். பிந்திய கோஷ்டியினர் பிறருக்குத் தீமை விளைவிக்கின்றனர்.''

*(மயிலாப்பூர் யுவர் கலாச்சார சங்க ஆதரவில் சஞ்சீவிகாமத் ஹாலில் 23-10-57 - இல் நடைபெற்ற கூட்டத்தில் ராஜாஜி பேசி 24-10-57 ''தினமணி'' இதழில் வெளியானது.)*

1967 நவம்பரில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே டாக்டர் ஏ. லட்சுமண சாமி முதலியார் ''ஆங்கிலப் பாதுகாப்பு மாநாடு'' என்னும் பெயரிலே ஒரு மாநாட்டை நடத்தினார். அந்த நூற்றாண்டு விழா மண்டபத்தின் நுழைவாயிலில் என் தலைமையில் தமிழரசுக் கழகத் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அந்த மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய ராஜாஜி என் பெயரை வெளிப்படையாகச் சொல்லி, ''என்றென்றும் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. உரிய காலத்தில் ஆட்சி மொழியாகவும் படிப்புக்கான பயிற்சி மொழியாகவும் தமிழே வரும் என்று என் நண்பர் ம.பொ.சி.க்கு உறுதி கூறுகிறேன்'' என்று பேசினார்.

ராஜாஜிக்கும் எனக்குமிடையில் மொழிப் பிரச்சினை காரணமாக ஏற்பட்ட பூசலை இங்கு விளக்குவது மகிழ்ச்சியோடு அல்ல. அத்தகைய நிலையிலும்கூட நாங்கள் தோழமையைக் காத்து வந்தோம் என்பதனை இன்றைய தலைமுறையினருக்கும் எதிர்காலத் தலை முறையினருக்கும் நினைப்பூட்டத்தான்.

ராஜாஜியுடன் நான் கருத்து வேறுபட்டுப் போராடியது எனது மனச்சாட்சியை ஒட்டித்தான். இதனை

அவரும் உணர்ந்திருந்ததால், எங்கள் போராட்டத்திற் கிடையேயும் அவர் என்பால் பேரன்பு செலுத்தினார்.

*1944* தொடங்கி *1946* வரை தமிழ் நாட்டில் காங்கிரஸ்காரர்களிடையில் ராஜாஜிபற்றி குழுச்சண்டை நடந்தபோது, நான் ராஜாஜி சார்பில்தான் இருந்தேன் என்பதைத் தமிழக மக்களுக்கு இங்கு நினைவூட்டத் தேவையில்லை. ஆனால், அப்போதுகூட நான் ராஜாஜியிடம் கருத்து வேறுபாடு கொண்டு ஒத்துழைக்க மறுத்த சந்தர்ப்பங்களுண்டு.

**சீர்காழி சம்பவம்**

*1946* - இல் அப்போதைய பெரிய சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு பொதுத்தேர்தல் நடந்தது. அதிலே, ராஜாஜி குழுவினரை திரு.கு. காமராசரின் தலைமையைப் பெற்றிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பழிவாங்கி விடுமென்ற அச்சம் ஏற்பட்டது. அப்படி எதுவும் நேர்ந்துவிடாதபடிப் பாதுகாக்க காங்கிரஸ் மேலிடத்தவரின் தலையீட்டைக் கோர தம்மை ஆதரிக்கும் காங்கிரஸ் காரர்களின் கூட்டம் ஒன்றை 29-11-45-இல் ராஜாஜி சீர்காழியில் கூட்டச் செய்தார். எனக்கும் சீர்காழியிலிருந்து அழைப்பு வந்தது. ஆனால், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள நான் விரும்பவில்லை. அதனால், வர இயலாமை தெரிவித்துக் கடிதம் எழுதிவிட்டேன்.

ராஜாஜி அனைத்திந்திய தேசியப் பெருந்தலைவர் களில் ஒருவர். அவரது தலைமையை தமிழ் நாட்டார் ஏற்கும்படி செய்ய மேலிட (வடபுல)த்துத் தலைவர் களிடம் தமிழ் நாட்டார் அடைக்கலம் புகுவதை நான் விரும்பவில்லை. தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களே முயன்று பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்பது என்

கருத்தாக இருந்தது. அதனால், சீர்காழியில் ஏற்பாடு செய்யப்பட்ட ராஜாஜி கோஷ்டியின் கூட்டத்தில் கலந்துகொள்ள மறுத்துவிட்டேன்.

முதலில் சீர்காழியில் தாலுக்கா அரசியல் (காங்கிரஸ்) மாநாட்டிற்குத்தான் ஏற்பாடாகியிருந்தது. அதனை வாய்ப் பாகக் கொண்டு, ராஜாஜியை ஆதரிப்போர் தனியே கூடி, சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தங்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதுபற்றி ஆலோசிக்கலாமென பேச்சு அடி பட்டது. அதற்கு அரைமனதுடன் நானும் ராஜாஜியிடம் இசைவு தெரிவித்தேன். ஆனால், பின்னால் மாநாட்டை ஏதோ காரணத்தால் தள்ளிப்போட நேர்ந்ததால், கோஷ்டிக் கூட்டத்தை மட்டும் தனியே நடத்த ராஜாஜி இசைந்தார். இப்படி, அதுவரை ''ராஜாஜி கோஷ்டி'' என்று விளம்பரப் படுத்திக்கொண்டு அவரை ஆதரிப்போரின் ஆலோசனைக் கூட்டம் தனியாக நடைபெற்றதில்லை.

## அன்புக்குப் பணிந்தேன்

ராஜாஜியின் பெயரால் தமிழ்நாடு காங்கிரசில் கோஷ்டிப்பூசல் ஏற்பட்டதை ஒரு துரதிருஷ்டமான நிகழ்ச்சியாகவே நான் கருதினேன். அந்த நாள் அரசியலில் மிதிலை மன்னன் ஜனகனைப் போன்றவர் என்று அவருடன் நெருங்கிப் பழகிய அறிஞர்கள் சொல்லுவ துண்டு. நானும் அதை நம்புபவன். அதனால், ராஜாஜியின் முன்னிலையில் தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களில் ஒரு கோஷ்டியார் தனியே கூடி, மற்றொரு கோஷ்டியாருக்கு எதிராக மேலிடத்தாருக்கு மனுப்போடுவதுபற்றி ஆலோசிப்பதென்பது அவரைப் பெருமைப்படுத்துவ தாகாது என்று நினைத்து, சீர்காழிக் கூட்ட அழைப்பை ஏற்க மறுத்தேன்.

ஆனால், ராஜாஜி, தமக்காக அல்லாமல், தம்மை ஆதரிப்பவர்களைப் பொதுத்தேர்தல் காலத்திலே தமிழ்நாடு காங்கிரஸ் பழிவாங்குவதைத் தவிர்க்கும் குறிக்கோளுடன் சீர்காழிக் கூட்டத்தை நடத்துவதிலே உறுதி காட்டினார். அக்கூட்டத்தில் நான் கலந்து கொள்வது அவசியமென்று அவர் கருதினாராதலால் எனக்கு ஒரு கடிதம் எழுதி அஞ்சலில் அனுப்பினார். அது வருமாறு:

60 பஸ்லுல்லா ரோடு,<br>
தியாகராய நகர்<br>
சென்னை<br>
*24-11-45*

நமஸ்காரம்

சீர்காழியில் சில காரணங்களினால் தாலுகா அரசியல் மாநாட்டை ஒத்திப் போட்டிருக்கிறார்கள். ஆனாலும் 29 வியாழக்கிழமை, முன் எழுதியிருந்தபடி நண்பர்களின் ஆலோசனைக் கூட்டம் சீர்காழியில் நடைபெறுகிறது. தாங்களும் அவசியம் வரவேண்டும். முக்கியமான யோசனைகள் செய்து முடிவு செய்யவேண்டும். ஸ்ரீ.ஆர். கோவிந்தசாமி பிள்ளை, தாலுகா காங்கிரஸ் காரியதரிசி சீர்காழி என்ற விலாசமிட்டு தங்கள் வரவைத் தெரியப்படுத்தும்படி கோருகிறேன். இடவசதி முதலியது செய்வார்கள்.

இங்ஙனம்<br>
இராசகோபாலாச்சாரி

என் தலைவரின் அன்புக் கடிதம் கிடைத்த பின்னர், அதற்கு மதிப்பளித்து, சீர்காழிக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்திற்கு 'சீர்காழியில் ராஜாஜி கோஷ்டியாரின் சதிக் கூட்டம்' எனத் தலைப்புத் தந்து,

ராஜாஜியின் தலைமையை விரும்பாத நாளேடுகள் செய்தி பிரசுரித்தன. சீர்காழிக் கூட்டத்திலே கலந்து கொண்டேன் என்றாலும், அதில் எடுக்கப்பட்ட முடிவுக்கு என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள மறுத்துவிட்டேன்.

## தூதுசெல்ல மறுத்தேன்

சீர்காழியில் நாங்கள் கூடிய ஒரு வாரத்திற்குப்பின் கல்கத்தா நகரில் அனைத்திந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் மௌலானா ஆஸாத் தலைமையில் கூட இருந்தது. காந்திஜிகூட அதில் கலந்து கொண்டார் என்று நினைவிருக்கிறது. அந்தக் கூட்டத்தின்போது காங்கிரஸ் தலைவரையும் காரியக் கமிட்டி உறுப்பினர் களையும் நேரில் சந்தித்துப் பேச ஐவர் கொண்ட தூதுக் குழு ஒன்று சீர்காழிக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதிலே ஒருவனாக இருக்க நான் கேட்டுக் கொள்ளப் பட்டேன். ஆனால், தமிழ் நாட்டவர் தங்களுக்குள் பூசலிட்டுக் கொண்டு மேலிடத்தாரின் மத்தியஸ்தத்திற்கு மனுப் போடுவதை விரும்பாததால், நான் மறுத்து விட்டேன். ராஜாஜி, எனது நிலையை ஆதரித்தார். தூதுக் குழுவில் சேரும்படி என்னை வற்புறுத்த வேண்டாமென்று தம் நண்பர்களைக் கேட்டுக் கொண்டார்.

திட்டமிட்டபடி, சீர்காழியில் ராஜாஜியை ஆதரிப் போரின் சார்பில் ஐந்து தலைவர்களைக் கொண்ட தூதுக்குழு கல்கத்தா சென்று எழுத்து மூலமான மனு ஒன்றைக் காங்கிரஸ் தலைவர்களிடம் கொடுத்தது.

பொதுத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர் களைத் தேர்ந்தெடுக்கும் பார்லிமெண்டரி போர்டில் ராஜாஜிக்கும் இடமிருக்க வேண்டுமென்பதும், போர்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை இரு குழுக்களுக்கும் சம

அளவில் இருக்க வேண்டுமென்பதும் தூதுக்குழு தந்த மனுவின் பிரதான அம்சங்களாகும்.

இயற்கையாகவே தமிழ்நாட்டில் ஏற்பட்ட கோஷ்டிப் பூசலைத் தீர்த்து வைக்கவேண்டுமென்ற ஆர்வம் காங்கிரஸ் மேலிடத்தாருக்கும் இருந்ததால், தூதுக் குழுவினரின் கோரிக்கையை காங்கிரஸ்காரியக் கமிட்டி ஏற்றுக்கொண்டு ஜவகர்லால் நேருவை மத்தியஸ்தராக சென்னைக்கு அனுப்பி வைப்பதென்று தீர்மானம் நிறை வேற்றியது.

இதனை கல்கத்தா சென்ற தூதுக்குழு அடைந்த மகத்தான வெற்றியாகக் கருதி, ராஜாஜி ஆதரவாளர் மகிழ்ச்சியுற்றனர். ஆனால், என்ன காரணத்தாலோ காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்த முடிவுப்படி நேருஜியை அனுப்பாமல், காரியக் கமிட்டி உறுப்பினர்களில் ஒருவரான ஜனாப் அசப் அலியை அனுப்புவது என்று காங்கிரஸ் தலைவர் மௌலானா ஆசாத் முடிவு செய்தார்.

ஒருகால், மத்தியஸ்த நிலையை மேற்கொள்ள நேருஜி மறுத்திருக்கலாம். ஆம்; ராஜாஜியிடம் நேரு ஜிக்குப் பெருமதிப்பு உண்டு. அதனால், அவரது தலைமை யை தமிழ்நாட்டார் ஏற்கும் விஷயத்தை மத்தியஸ்தத்திற்கு விடும் நிலைமை வந்ததை அவர் விரும்ப வில்லையென்று பின்னால் அறிந்தேன்.

ஜனாப் அசப் அலி மத்தியஸ்தராக வருவார் என்று மவுலானா ஆசாத் அறிவித்ததும், தமிழ் நாட்டில் உருவாகி யுள்ள இரு கோஷ்டியினருக்குமிடையில் ஒரு கோஷ்டி யுடன் தம்மை சம்பந்தப்படுத்தி ஜனாப் அசப் அலி விசாரணை நடத்துவதைத் தாம் விரும்பவில்லையென்று ராஜாஜி அறிக்கை விடுத்தார். இது விஷயத்தில் அவர்

என்னுடன் முன்கூட்டி கலந்து ஆலோசிக்கவில்லை. ஆயினும், அறிக்கை எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. தம்மை சம்பந்தப்படுத்தாமல் ஜனாப் அசப் அலி தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களிடையே மத்தியஸ்தம் செய்து வைக்க முயல்வதைக்கூட ராஜாஜி விரும்ப வில்லை. ஆனால், நான் கேட்டுக் கொண்டதன் பேரில் அது விஷயத்தில் அவர் எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தார். திட்டமிட்டபடி, ஜனாப் அசப் அலி சென்னைக்கு வருகை தந்தார்.

சென்னை சென்டிரல் ரெயில்வே நிலையத்தில் அவர் சிறப்பாக வரவேற்கப்பட்டார். திரு.கு. காமராசரும் சென்டிரல் ஸ்டேஷனுக்கு வருகை தந்து காங்கிரஸ் மேலிடத்து மத்தியஸ்தரை வரவேற்றார். சென்னை ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி என்ற முறையில் வரவேற்புக்கான முழுப் பொறுப்பையும் நானே ஏற்றேன்.

சென்னை காஸ்மாபாலிடன் ஓட்டலில் அசப் அலி தங்குவதற்கு ஏற்பாடு செய்து வைத்திருந்தேன். ஆம்; அவரே விரும்பியபடி! அந்த ஓட்டலுக்குச் சென்று அசப் அலியைச் சந்தித்துப் பேசி, மத்தியஸ்த முயற்சியில் தம்மை சம்பந்தப்படுத்த வேண்டாமென்று ராஜாஜி கேட்டுக் கொண்டார். அவரும் சம்மதித்தார்.

### மனுக்கொடுக்கவும் மறுத்தேன்

ஒரு வார காலம் அசப் அலி சென்னையில் தங்கி, பூசலிட்ட இரு கோஷ்டியாரையும் மாவட்ட வாரியாக தனித் தனியே அழைத்துப்பேசி, அவர்களுடைய பலா பலத்தை அறிய முயன்றார். தமிழ் நாடெங்கணும் இருந்து இருதரப்பாரையும் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் சென்னை யில் குவிந்தனர்.

சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் என் தலைமையில் ராஜாஜியை ஆதரிக்கும் குழுவினர் அசப் அலியிடம் மனுக்கொடுக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. ஆனால், அப்படி ஒரு கோஷ்டிக்குத் தலைமை வகித்து, அசப் அலியிடம் மனுக்கொடுக்க என்மனம் இசையவில்லை. அதனால், நான் மறுத்துவிட்டேன்.

ஆனால், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் திரு.கே. வெங்கடசாமி நாயுடு தலைமையில் ஒரு குழுவை அனுப்பி, அசப் அலியிடம் மனு அளிக்கச் செய்தேன். நாயுடு ஆகஸ்டு தியாகி அல்ல.

ஜனாப் அசப் அலி தாம் வந்த வேலையை முடித்துக் கொண்டு சென்னையைவிட்டுச் சென்ற பின்னர், அவரிடம் சாட்சியம் அளிக்க மறுத்த எனது தன்மான நிலையை பல நண்பர்கள் தம்மைச் சூழ்ந்துகொண்டிருந்தபோது ராஜாஜி மனம் திறந்து பேசிப் பாராட்டினார். இதற்கு முன்பு நடந்த மற்றொரு சம்பவத்தையும் இங்கு நினைவூட்ட விரும்பு கிறேன். மௌலானா அசாத் சிறையிலிருந்து மீண்டு கல்கத்தாவில் தங்கி ஓய்வு பெற்று வந்தார். 1942 - இல் காங்கிரசிலிருந்து ராஜாஜி ராஜிநாமாசெய்தது அகிலம் அறிந்ததாகும்.

பின்னர், ''ராஜாஜியின் தலைமை வேண்டும்'' என்று தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களில் என் போன்ற ஆகஸ்டு தியாகிகள் உள்ளிட்ட கணிசமான ஒரு கூட்டத்தார் விரும்பி னர். அதனால், திரும்பவும் காங்கிரசில் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ள ராஜாஜி முன்வந்தார்.

சங்கடம் என்னவென்றால், காங்கிரஸ் கமிட்டிகள் அனைத்தும் சட்ட விரோதமான ஸ்தாபனங்களாக அறி விக்கப்பட்டிருந்த நேரமாக இருந்ததால், சம்பிரதாயப்படி

சென்னை வாசியான ராஜாஜி தாம் வாழும் தமிழ் நாட்டில் காங்கிரஸ் கமிட்டி எதனிடமும் தம்மை அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ள இயலாத நிலை இருந்தது.

அதனால், கல்கத்தாவில் இருந்த காங்கிரஸ் தலைவர் மௌலானாவுக்கு எழுதி, தம்மை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அசாதும் கடித மூலம் ஒப்புதல் அளித்தார். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ்காரர்களிலே சிலர் இதுபற்றி ஐயத்தை எழுப்பி அசாத் சம்மதம் அளித்ததாகச் சொல்வது தவறு என்று பிரசாரம் செய்தனர்.

## தந்தியால் வந்த தகராறு

என் அரிய நண்பர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி என் பெயரில் அசாத்துக்கு ஒரு தந்தி அனுப்பி, ''ராஜாஜியை காங்கிரஸ் அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டீர்களா?'' என்று கேட்டுத் தகவலறிய முயன்றார். ஆனால், இதுபற்றி எனக்குத் தெரியாது. கொள்கையளவில் இதிலே எனக்கு உடன்பாடு உண்டாகையால், அனுமதியைப் பெறாமலே என் சம்மதம் இருக்குமென்று நம்பி அவர் என் பெயரில் அசாதுக்குத் தந்தி கொடுத்துவிட்டார். ஆங்கிலத்தில் பத்து வரிகளைக் கொண்ட பதில் தந்தி எனக்குக் கிடைத்தது.

''ராஜாஜியை நான் காங்கிரஸ் அங்கத்தினராகச் சேர்த்துக் கொண்டு விட்டேன். அதனை யாரும் ஆட்சேபிக்க முடியாது; ஆட்சேபிக்கவும் கூடாது'' என்பது அதன் சுருக்கம்.

எனது வீட்டு விலாசமிட்டு, அசாத் தமது பதில் தந்தியை எனக்கு அனுப்பியிருந்தார்.

அப்போதுதான் என் பெயரில் மௌலானா அசாத்துக்குத் தந்தி அனுப்பப்பட்டிருந்தது எனக்குத் தெரிய வந்தது.

அசாத் தந்தி மூலம் அனுப்பப்பட்ட பதில் எனக்குப் பெருமை தந்ததோடு, மகிழ்ச்சியும் தந்தது. ஆயினும், என் முன் அனுமதி பெறாமல் என் பெயரில் மிகப்பெரிய பதவியில் இருந்த மௌலானா அசாத்துக்கு விவாதத்திலிருந்த ஒரு விஷயம்பற்றி தந்தி அனுப்பப்பட்டது எனக்கு எரிச்சலைத் தந்தது. இதனால், அனுப்பியவர் மீது எனக்கு மனத்தாங்கல் ஏற்பட்டது.

இதுபற்றி ராஜாஜி அறிந்தபோது, ''ம.பொ.சி.யிடம் நாஸுக்காக நடந்து கொள்ளவேண்டும். அது உங்களால் முடியாது. இனி, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டாம்'' என்று சம்பந்தப்பட்டவரை எச்சரித்தார்.

## வறுமையிற் செம்மை

நான் எத்தகைய பெருந் தலைவரோடு பழகினாலும், எந்தக் கட்சியோடு அல்லது கழகத்தோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தாலும், என்னை அடிமையாக நடத்த நான் யாரையும் அனுமதித்ததில்லை. என் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள விரும்பி, நானாக யாருக்கும் அடிமைப் பட்டதுமில்லை. ஆனால், அதே நேரத்தில் என்பால் பேரன்பு காட்டி, என் வளர்ச்சிக்குக் கைகொடுப்பவர்களிடம் நன்றியுடையவனாக நடந்துகொள்ள நான் தவறியதேயில்லை.

இந்தப் பண்பு காரணமாகத்தான் கடுமையான பல சோதனைகளுக்கிடையேயும் ராஜாஜிக்கும் எனக்குமிடையே நிலவிய நட்பு நீடித்தது; நிலைத்தது.

ராஜாஜிக்கும் எனக்குமிருந்த தொடர்பு புனிதமானது. அவரிடம் எதையும் நான் எதிர்பார்த்ததோ, அது கிடைக்காமல் ஏமாந்ததோ கிடையாது. ''உண்பது நாழி; உடுப்பவை இரண்டே'' என்னும் பொன்மொழி ஒன்று 'புறநானூறு' என்னும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. எனது 80 ஆண்டு வாழ்க்கையிலே முதற் பகுதியான அரை நூற்றாண்டுக் காலத்தில் புறநானூறு சொல்லும் நாழி உணவுக்கும் கஷ்டப்பட்டிருக்கிறேன். இரண்டாடைக்கும் வழியின்றியிருந்த நாட்களிலே பொதுக் கூட்ட மேடைக்குச் செல்லத் தவறிய சந்தர்ப்பங்களும் உண்டு. இதற்கு என்னைப் பிடித்திருந்த வறுமைதான் காரணம் என்றாலும், அந்த வறுமைக்குக் காரணம் நான் கடைப்பிடித்த ஒழுக்கம்தான்.

''ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை''.

என்பது வள்ளுவர் வாய்மொழி.

உண்மையில் ஈன்றாளின் பசிகண்ட வேளைகள் பலவாயினும் அப்போதெல்லாம் சான்றோர் பழிக்கும் நிலையில் பொருள்தேடி ஈன்றாளின் பசிதீர்க்க நான் முயன்றதில்லை.

## பழி சுமந்தேன்

பிற்காலத்தில் மனைவி மக்களோடு வாழ நேர்ந்த போதும், பசியின் 'ருசி'யை அவர்களும் அனுபவிப்பது கண்டு யான் வருந்தியது உண்டு. அவர்களுக்காகவும் ஒழுக்கங்கெட்ட வழியில் பொருள்தேடி வாழ நான் முயன்றதில்லை.

என் தலைவர் ராஜாஜியோடு 1944 - 46 - ஆம் ஆண்டுகளிலே தமிழ் நாடெங்கணும் சுற்றுலாச் செய்தபோது நான் பட்டபாட்டை விளக்குவதற்கு விரும்புகிறேன் என்றாலும் வெட்கம் தடைசெய்கிறது.

தலைவர் ராஜாஜியை ஆதரித்து பட்டி - தொட்டிகளிலெல்லாம் பிரசாரம் செய்தபோது, ''பார்ப்பனர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு ஒரு பார்ப்பனத் தலைவனைப் பதவியில் அமர்த்த ம.பொ.சி. பாடுபடுகிறான்'' என்று தேசிய விரோதிகளில் சிலர் எழுதியதும் பேசியதும் உண்டு. ஏன், காங்கிரசாரிலேயும் பலர் பழித்ததுண்டு. ஆனால், எத்தகைய கைம்மாறும் கருதாது நான் ராஜாஜியின் தலைமையைத் தமிழினத்தார் ஏற்கும்படிச் செய்யப் பாடுபட்டேன் என்பதை என் உள்ளம் அறியும்; என்னைப் படைத்த இறைவன் அறிவான்.

மூதறிஞர் ராஜாஜியுடன் அகலாது அணுகாது தீக்காய்வார் போலத்தான் நான் தொடர்பு கொண்டிருந்தேன். உடைக்குப்பட்ட கஷ்டங்களை என் தலைவரின் கண்கள் கண்டிருக்கும், அவரது உள்ளமும் உணர்ந்திருக்கும். அந்த நிலையிலும் அவரிடமிருந்து உதவி எதுவும் எனக்குக் கிடைத்ததில்லை; நானும் கேட்டதில்லை. தவறான வழிகளில் பொருள் திரட்டி அந்தப் பொருளைக் கொண்டு கோஷ்டி அரசியல் நடத்தியதில்லை ராஜாஜி.

என் குடும்பத்தைப் பட்டினியில் தவிக்க விட்டு விட்டு, நான் தலைவர் ராஜாஜியுடன் சுற்றுலாச் சென்ற நாட்களும் உண்டு. இந்த அளவுக்கு அவருக்குத் தோள் கொடுத்து யான் தொண்டாற்றியதற்குக் காரணம், தமிழினத்திற்குத் தெய்வம் தந்த தலைவராக அவரை நான் கருதியதுதான்.

## 'கல்கி'க்குத் தந்த கட்டுரை

சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே ''ராஜாஜியின் தலைமை வேண்டாம்'' என்னும் குரல் தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலே ஒலித்தது. அது கண்டு என் மனம் அதிர்ச்சியடைந்தது. ராஜாஜியின் தலைமையை இழப்பதால் சுதந்திர இந்தியாவில் தமிழகம் எத்தகைய நலன்களை இழக்கும் என்பதை எடுத்துக்காட்டி 'கல்கி' *14-10-45* இதழிலே ஒரு கட்டுரை எழுதினேன். அதனை இங்கு அப்படியே தருகிறேன்:

''தமிழ் நாட்டின் தனிப்பெருந் தலைவரான ஸ்ரீ.ச. இராசகோபாலாச்சாரியார் மீண்டும் காங்கிரசில் சேர்ந்து விட்டார். இதை ஆனந்தத்துடன் வரவேற்கின்றனர் பலர். நான் வரவேற்கும் கோஷ்டியைச் சேர்ந்தவன்.

''தலைமை தாங்கும் தகுதியானது கடையில் வாங்கும் சரக்கல்ல; பிறர் கொடுத்துப் பெறுவதுமன்று. ஒழுக்கம், அறிவு, ஆற்றல், ஆண்மை, தியாக உணர்வு ஆகிய அனைத்தும் ஒருங்கே பெற்றவர்களே தலைமைப் பதவிக்குத் தகுதியுடையவர்கள்.

''தமிழ் நாட்டில் மேற்சொன்ன தகுதிவாய்ந்த ஒருவர் உண்டென்றால், அவர் ராஜாஜிதான். அவரைப் போன்ற தலைவர்களை நாம் நினைத்த மாத்திரத்தில் சிருஷ்டித்து விட முடியாது. பல தலைமுறைகளுக்கு ஒரு தடவைதான் அத்தகையவர்கள் தோன்றுகின்றனர். காலம்தான் அவர் களை நமக்குத் தருகின்றது.

''எனவே, ராஜாஜி நம் தமிழகத்திலே தோன்றி, நம்மிடையே வாழ்வது, இந்தத் தலைமுறையினரான நமது புண்ணியவசமேயாகும். மீண்டும் பெறுதற்கரிய அத்தகைய தலைவரை நாம் மனமார வரவேற்று அவரது

சேவையை நாட்டின் நன்மைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய, பாழாக்கக்கூடாது. அப்படிச் செய்வது மனித சமுதாயத்துக்குத் தீங்கு செய்வதாகும். அன்று ராஜாஜி காங்கிரசைவிட்டு விலகி நின்றதற்குக் காரணமென்ன?

''இந்து - முஸ்லிம் ஒற்றுமையை முன்னிட்டு மாகாணங்களின் சுய நிர்ணய உரிமையை காங்கிரஸ் அங்கீகரிக்கவேண்டும்'' என்று ராஜாஜி கூறினார்.

''அதை அப்போது காங்கிரஸ் நிராகரித்தது. தமது கொள்கையைப் பிரசாரம் செய்யும் உரிமைக்காக ராஜாஜி காங்கிரசை விட்டு விலகினார். இன்று சுயநிர்ணயக் கோரிக்கையைக் காந்தியடிகள் ஏற்றுக் கொண்டதோடு, ''ராஜாஜி இந்தக் கொள்கையிலிருந்து மாறிவிட்டாலும் நான் மாறப்போவதில்லை'' என்று கூறிவிட்டார்.

''பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும் மேற்படி சுயநிர்ணயக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்டது.

''இந்நிலையில் காங்கிரசுக்கும் நமது தலைவர் ராஜாஜிக்கும் இருந்த வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஏற்பட்டு விட்டது. அதனால்தான் அவர் மீண்டும் காங்கிரசில் சேர்ந்து கொண்டார்.

''ராஜாஜி காங்கிரசுக்குப் புதியவரல்ல. அவர் கட்டி வைத்த மாளிகைதான் தமிழ்நாட்டுக் காங்கிரஸ். அதில் அவர் பிரவேசிப்பதைத் தடுப்பது நீதியற்ற செயல்; மன்னிக்க முடியாத குற்றம்:

''இன்று நாம் காணும் ராஜாஜி குற்றவாளியல்ல; தீர்க்கதரிசி. இந்நிலையில் நாம் அவரை நிராகரித்தால் அது அவரது தீர்க்கதரிசனத்திற்கு விதித்த தண்டனையாகும்.

''இதெல்லாம் ஒருபுறமிருக்க, எதிர்காலத்தில் நம் முன்னர் மகத்தான பிரச்சினைகள் நிற்கின்றன. ராஜாஜி யின்றித் தேர்தலை நடத்திவிடலாம். புதிதாக மந்திரி சபையும் அமைத்துவிடலாம். அந்த மந்திரிசபை பின் கண்ட காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிற தென்பதனை நாம் மறக்கக்கூடாது.

''யுத்த சேவையிலிருந்து திரும்பும் ஐந்து லட்சம் சென்னை மாகாணவாசிகளுக்கு வேலை தருவது. யுத்தம் முடிந்ததன் விளைவாகப் பல்வேறு தொழிற்சாலைகளி லிருந்து தள்ளப்படும் லட்சக்கணக்கான தொழிலாளருக்கு நிவாரணம் தேடுவது.

''யுத்தப் பிற்காலப் புனருத்தாரணத் திட்டத்தைத் திறம்பட நடத்தல்: நாட்டின் முக்கிய தொழில்களை யெல்லாம் தேசிய மயமாக்குதல்.

''மேற்சொன்ன காரியங்கள் காலாகாலத்தில் திறமை யுடன் ஊழலின்றி உறுதியுடன் நடைபெறாவிடில் நாட்டில் பஞ்சந்தோன்றி உள்நாட்டுக் குழப்பம் ஏற்படலாம்.

''இதுதவிர தமிழ்நாட்டின் தனிப் பிரச்சினைகள் பல உண்டு. விரைவில் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்படும் அல்லவா? அப்போது தமிழ் நாட்டின் எல்லை வடவேங்கடம் முதல் தென்குமரி வரை என்று முடிவு செய்யப்பட வேண்டும். தமிழர் மீண்டும் பழைய புகழுடன் புது வாழ்வெய்தத் திட்டம் போட வேண்டும்.

''இத்தகைய பெரும் காரியங்களை ராஜாஜியைப் போல் திறம்பட நிறைவேற்ற வல்லவர் தற்சமயம் வேறுயாரும் இல்லையென்று துணிந்து கூறுவேன்.

''சோதனைக்குரிய இச்சந்தர்ப்பத்தில் அகில இந்திய புகழ் வாய்ந்த ஒரு தமிழ்நாட்டுத் தலைவரை நிராகரிக்க

முயல்வது தவறு. தமிழர்களின் எதிர்காலத்தைப் பாழாக்கவோ அல்லது தமிழர்களின் எதிர்கால நலன்களைப் பிறரிடம் பறிகொடுக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது. அதைத் தமிழர்கள் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

''ராஜாஜியை காங்கிரஸ் தலைவர் வரவேற்கிறார். ''நீங்கள் பிரிந்திருந்த காலம் எங்களுக்கு வேதனையை அளித்தது. அதை மறந்து விடுவோம்'' என்று ராஜாஜிக்கு எழுதினார் அசாத்.

''அவரது பொன்மொழியைப் பின்பற்றுவோம், மற்றவர்களின் புன்மொழியைப் புறக்கணிப்போம்.''

ராஜாஜியின் தலைமையை ஆதரித்து யான் பிரசாரம் செய்த காலத்திலேயே குமரிமுனையைத் தெற்கெல்லையாகவும், சென்னையைத் தலைநகராகவும் கொண்ட புதிய தமிழகம் படைக்கவேண்டும் என்ற ஆவல் என் உள்ளத்தில் அரும்பெடுத்திருந்தது. அதனை நிறைவேற்றித் தரும் ஆற்றல் தமிழகக் காங்கிரஸ் தலைவர்களிலே ராஜாஜி ஒருவருக்குத்தான் இருக்கிறது என்று நான் நம்பினேன்.

நான் விரும்பியபடி நாடு சுதந்திரம் பெற்ற நேரத்திலே தமிழகத்தைத் தன்னுட் கொண்ட பழைய சென்னை மாகாணத்தின் முதல்வராக ராஜாஜி வருவது சாத்தியமில்லாமல் போய்விட்டதாயினும், 1946 - இல் எனக்கு ஏற்பட்ட ''தோல்வி'' யானது நானே எதிர்பாராத வகையில் 1952 - இல் வெற்றியாக மாறியது!

பதவியிலிருப்போருக்குப் பல்லாண்டு பாடிப் பிழைக்கும் அரசியல் எனக்குத் தெரியாது. நான் ராஜாஜி தலைமை நிலைபெறப் போராடியது, அவர் எந்தப் பதவியிலுமில்லாதபோதுதான்.

காங்கிரஸ் ஸ்தாபனம் பதவிப் பொறுப்பிலில்லாத காலத்திலேதான் அதில் சேர்ந்து, தொடர்ந்து 20 ஆண்டு காலம் தேச விடுதலைப் போரில் ஈடுபட்டேன்.

காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலத்திலேயே புதிய தமிழகம் படைக்கும் போராட்டத்தைத் தொடங்கினேன்.

அரசியல் தீர்க்கதரிசனத்தின் காரணமாக நான் தமிழகம் ராஜாஜியின் தலைமையை ஏற்க வேண்டுமென்று, தேசம் சுதந்திரத்தை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்திலே விரும்பினேன். அப்போது என்னை எதிர்த்தவர்கள் 1952 - இல் சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக வலுவில் சென்று ராஜாஜியை அழைத்து சென்னை மாகாணத்தின் முதல்வர் பீடத்தில் அமர்த்தினர்.

அவருடைய தலைமையில் அமைந்த ஆட்சியைப் பயன்படுத்திக் கொண்டு 1953 - இல் ஆந்திரம் தனியரசு மாநிலமாவதற்குத் தூண்டுதலாக இருந்தேன். ஆம்; சென்னை நகரம் இல்லாத ஆந்திரம் அமையப்பெறும் சூழ்நிலையை முதல்வர் ராஜாஜியின் துணைகொண்டு உருவாக்கினேன்.

''சென்னை நகரில் ஆந்திர அரசுக்கு இடம் தருவதாயின், முதலமைச்சர் பதவியில் நான் நீடிக்க முடியாது; வேறு நபரைத் தேடிக் கொள்ளுங்கள்'' என்று டில்லிக்கே சென்று பிரதமர் நேருவிடம் சொல்லிவிட்டு வரும் துணிவு ராஜாஜியிடம் இருந்ததை நாடு கண்டது.

1953 - இல் நான் வடக்கெல்லைத் தமிழர்களின் துணையைப் பெற்று தமிழரசுக் கழகத்தின் சார்பில்

வடக்கெல்லைக் கிளர்ச்சியை நடத்தியபோது, ''தமிழக - ஆந்திர எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தனியாக ஒரு எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும்'' என்ற உறுதி மொழியை நேருஜியிடமிருந்து பெற்றுத் தந்ததும் முதலமைச்சர் பதவியிலிருந்த ராஜாஜிதான்.

இப்படி, புதிய தமிழகம் படைக்கும் முயற்சிக்கு எத்தனையோ வகையில் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தபோதும் அதற்கு முன்னும் பின்னும் மூதறிஞர் ராஜாஜி எனக்கு உதவிபுரிந்திருக்கிறார்.

## அறுபதாண்டு பொது வாழ்க்கை

நான் எந்த ஆட்சியிலும் பதவியைத் தேடியலைந்து, அதை அனுபவித்து இன்பம் பெற வேண்டுமென்ற எண்ண முடையவன் அல்ல. என் குருநாதர் ராஜாஜியைப் போல எனது பொதுவாழ்வும் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடு வதிலேதான் ஆரம்பமானது. சர்வ வல்லமை படைத்த சாம்ராஜ்யத்தை எதிர்க்கத்தான் நாங்கள் பொது வாழ்வில் புகுந்தோம். அந்த வகையிலும் ராஜாஜியை என் குருநாதராகக் கருதுகிறேன்.

அறுபது ஆண்டுக்கால பொது வாழ்க்கையிலே சரியாக இருபது ஆண்டுக் காலம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்க்களத்தில் ஒரு சோல்ஜராக நின்று தேச சுதந்திரத்திற்காகப் போராடினேன், ஆறுமுறை சிறை புகுந்தேன். பாரத தேசம் முழுவதையும் விடுவிக்கும் போர்க்களத்தில்தான் நின்றேன் என்றாலும், எனது தியாகம் அதிக அளவுக்குப் பயன்பட்டது தமிழகத்தின் விடுதலைக் காகத்தான்.

# என்னை வாழவைக்க ராஜாஜி எடுத்த முயற்சிகள்

தலைவர் ராஜாஜி நானும் என் குடும்பமும் வறுமையில் வாடுவதை நன்கு உணர்ந்திருந்தார். பொது வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்டுள்ள பெருமைக்குக் குறைவு ஏற்படாத வகையில் வறுமையிலிருந்து என்னையும் என் குடும்பத்தையும் மீட்கவேண்டுமென்ற எண்ணமும் அவருக்கு இருந்தது. இதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சான்று காட்டலாம். ஆனால், விரிவஞ்சிப் பலவற்றை விடுத்து சிலவற்றைமட்டும் இங்கு எடுத்துக் காட்டுகிறேன்.

## முதல் முயற்சி

*1946* - இல் திரு. சின்ன அண்ணாமலை நடத்தி வந்த தமிழ்ப் பண்ணையில் என்னை பதிப்பாசிரியர் வேலைக் கமர்த்தி எனக்கு வாழ்க்கை வசதியைத் தேடித்தர ராஜாஜி முயன்றார். அப்போது சின்ன அண்ணாமலையுடன் எனக்கிருந்த தொடர்பு சகோதர காங்கிரஸ்காரர் என்ற அளவில்தான். ராஜாஜியின் வற்புறுத்தலுக்கிணங்கி அவரும் எனக்கு வேலை தர இணங்கினார். நானும் வாய் மூலம் அண்ணாமலை விடுத்த அழைப்பை ஏற்று, மாத ஊதியம் இவ்வளவென்று தெரியாத நிலையிலேயே பண்ணைக்குச் சென்றேன். ஆனால், முதல் நாளிலே அண்ணாமலை என்னை வரவேற்றது எசமானப் பாணியில் இருந்ததால் மறுநாள் நான் செல்லவில்லை. இதுபற்றி அறிந்தபோது, அண்ணாமலை மீது ராஜாஜி மிகவும் கோபப்பட்டார்.

பிற்காலத்தில் திரு. சின்ன அண்ணாமலை தமிழரசுக் கழகத்தில் இணைந்து என் தலைமைக்குக் கட்டுப்பட்டு விசுவாசத்துடன் நடக்கும் தோழராகப் பல ஆண்டுக்காலம் செயல்பட்டாரென்பதை நான் சொல்லியாகவேண்டும்.

## இரண்டாவது முயற்சி

''தமிழ்ப் பண்ணை''யில் என்னை அமர்த்த முடியா மற் போன பின்னர், ''கல்கி''யில் துணையாசிரியராக என்னை அமர்த்தி ஊதியம் தந்து உதவி புரியுமாறு அதன் ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தியிடம் ராஜாஜி கூறினார். அவரும் இணங்கி, என்னை அழைத்துப் பேசினார். அந்தப் பணி எனக்குப் பிடித்திருந்த தென்றாலும், அப்போது நான் ''தமிழ்முரசு'' என்னும் பெயரில் மாதப் புத்தகம் வெளியிடத் தொடங்கி முதற் புத்தகம் வெளிவந்து விட்டது. அதனால், ''கல்கி''யில் பணிபுரிய இயலாதவன் ஆனேன்.

## மூன்றாவது முயற்சி

பின்னர், 1955 - இல் கல்கி ஆசிரியர் திரு. கிருஷ்ண மூர்த்தி காலமானபோது, அதுவரை அவர் வகித்து வந்த ஆசிரியப் பொறுப்பை ஏற்குமாறு ராஜாஜி என்னைக் கேட்டுக் கொண்டார். இந்தச் சமயத்தில் எனக்குள்ள எழுத்தாற்றல் விளம்பரமாகியிருந்ததால் ''கல்கி'' யின் பிரதான நிர்வாகியான திரு.எஸ். சதாசிவமும் என்னை ஏற்றுக்கொள்ள இசைவு தெரிவித்து அழைப்பு அனுப்பி னார்.

நானும் ''கல்கி'' ஆசிரியர் பதவியை பெருமைக் குரியதாகக் கருதி, ஏற்க மனமுடையவனாகவே இருந் தேன். ஆயினும், அப்போது தமிழரசுக் கழகத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து கொண்டு புதிய தமிழகம்

படைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தேன். அந்த இயக்கத்தைக் கைவிடத் தேவையில்லையென்று ராஜாஜி கூறினார் என்றாலும், தமிழ் மக்களிடையில் மிகுந்த செல்வாக்குப் படைத்த கல்கியின் ஆசிரியர் பொறுப்பை ஏற்பதால் தமிழரசு இயக்கத்தில் எனக்குள்ள அந்தஸ்து இரண்டாந்தரமானதாகி விடுமென்று அஞ்சி அதனை நான் விரும்பவில்லை. ஆகவே, ராஜாஜியின் விருப்பத்தை நிறைவேற்ற இயலாமையை வருத்தத்துடன் அவரிடம் தெரிவித்துவிட்டேன்.

## நான்காவது முயற்சி

இதற்கு முன்னர், எனது கொள்கைக் கேற்ற பணி யொன்றைத் தேடித் தந்து, என் குடும்பத்தை வறுமையி லிருந்து மீட்க ராஜாஜி முயன்றார்.

*1946* - இல் சென்னை மாகாணத்தில் ''ஆந்திர கேசரி'' பிரகாசம் தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை ஏற் பட்டது. அது, முதல் காரியமாக சேலம் மாவட்டத்தில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்தியது.

அதற்கு வெற்றி கிடைக்க சேலம் மாவட்டம் முழுவ திலும் மதுவிலக்குப் பிரசாரத்தில் என்னை ஈடுபடுத்த முழுநேர பிரசாரகனாக என்னை அமர்த்தி, எனக்கு உதவி புரியுமாறு முதலமைச்சர் திரு. பிரகாசத்திற்கு என் அனுமதியைப் பெறாமலே ராஜாஜி கடிதம் எழுதினார்.

திரு. பிரகாசம், தமது சக அமைச்சரும் எனது சிறைச் சாலைத் தோழருமான திரு. ராகவமேனனை ராஜாஜியின் கடிதத்துடன் என் இல்லத்திற்கு அனுப்பி என் கருத்தறிய விரும்பினார்.

அரசாங்கத்திடம் மாத ஊதியம் பெறும் பணியை ஏற்க என் மனம் இசையவில்லை. அதனால் என் அரசியல்

வளர்ச்சி பாதிக்குமென்று அஞ்சினேன். முதலமைச்சரை நேரில் சந்தித்து மதுவிலக்குப் பிரசாரகர் பணியை ஏற்க இயலாமைக்குச் சமாதானம் கூறித் தப்பினேன்.

## ஐந்தாவது முயற்சி

*1960* - இல் சுதந்திராக் கட்சியின் தமிழ் மாகாண கமிட்டித் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு ராஜாஜி என்னை வற்புறுத்தினார். ''அலவன்ஸ்'' என்னும் பெயரால் மாதந்தோறும் பெரிய அளவில் பொருளுதவி கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும், கட்சிக்குச் சொந்தமான ஒரு 'பியட்' மோட்டாரும், ஒரு ஜீப்பும் என் வசத்தில் இருக்குமென்றும் கூறினார்.

சுதந்திராக் கட்சியின் வளர்ச்சிக்கு என்னைப் பயன் படுத்தும் நோக்கத்துடனும் அவர் அழைப்பு விடுத்தா ரென்றாலும், அத்துடன் என்னையும் என் குடும்பத்தையும் வறுமையிலிருந்து விடுவிக்கும் நல்லெண்ணத்துடனும் அழைத்தாரென்பதில் எனக்கு ஐயமிருக்கவில்லை.

இந்தச் சமயத்திலேயும் ராஜாஜி தாமே விரும்பித் தந்த உதவியை ஏற்க மறுத்தேன்.

காரணம், சுதந்திரா கட்சியிடம் எனக்குக் கொள்கை ரீதியான உடன்பாடு இல்லாததுதான். தமிழரசு இயக்கத்தை நடத்திக் கொண்டே சுதந்திரா கட்சியின் மாகாணத் தலைவராக இருந்து வரலாம் என்றும் என்தலைவர் கூறினார். அவர் என்பால் காட்டிய அன்பு என் மனத்தை உருக்கியதென்றாலும் கொண்ட கொள்கையிலிருந்து பிறழ்ந்து சுகவாழ்வு நடத்த விரும்பாதவனானேன். எனது மறுப்பு காரணமாக மனம் நொந்தவராகி, 'கஷ்டப்படு வதையே கலையாகக் கொண்டுவிட்டீர்களே!' என்று அவர் கூறியது இன்னமும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்

கிறது. அப்போது அவர் முகம் எனது சொந்த வாழ்க்கையை வளப்படுத்துவதில் தாம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததனால் ஏற்பட்ட வேதனையைக் காட்டுவதாக இருந்தது.

**பத்திரிகை நடத்த உதவினார்!**

என் குடும்பத்திற்குப் பொருள் தேடுவதிலே ராஜாஜி வலுவில் செய்ய முன்வந்த உதவிகளை ஏற்கவில்லையென்றாலும் புதிய தமிழகம் படைப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகளிலே எத்தனையோ சந்தர்ப்பங்களில் யான் அவருடைய ஆசியையும் ஆதரவையும் பெற்றதுண்டு.

தமிழரசுக் கழகத்தைத் தொடங்குவதற்கு முன்னோடியாக "தமிழ் முரசு" என்னும் பெயரில் மாதப் புத்தகம் ஒன்றை வெளியிடத் தொடங்கினேன். அப்போது புதிதாக பத்திரிகை தொடங்குவதற்கு மத்திய அரசிடமே அனுமதி பெற வேண்டியிருந்தது. பத்திரிகை காகிதத்திற்குப் பஞ்சம் ஏற்பட்டிருந்ததால் மத்திய அரசு புதிதாக பத்திரிகை தொடங்க அனுமதிக்காத நிலை இருந்தது. அதனால், மாதப் புத்தகம் என்ற பெயரிலே பத்திரிகை நடத்துவது வழக்கமாக இருந்தது. அதனையே நானும் செய்தேன். ஆனால், மாதத்திற்கு ஒன்றாக ஆறு புத்தகங்களை வெளியிட்ட பின்னர், பத்திரிகையாக ஆக்க முயன்றேன். மாதப் புத்தகங்களிலே அறிஞர் பலரிடம் கட்டுரைகளைப் பெற்று வெளியிடுவதையே வழக்கமாகக் கொண்டிருந்தேன். நானும் சிறப்புக் கட்டுரைகளை எழுதி, அதையே வாசகர்கள் தலையங்கமாகக் கருதும்படி செய்து வந்தேன்.

திரு.வி.க., டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசனார், டாக்டர். தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்

ஆகிய பெரும் புலவர்களும்; பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் போன்ற கவிஞர்களும் கட்டுரைகளும் கவிதைகளும் வழங்கினர்.

ராஜாஜி இடைக்கால மத்திய அரசில் அமைச்சராவதற்கு முன்பே 'தமிழ் முரசு' முதல் புத்தகம் வெளியாகிவிட்டது. அதன் முதல் பிரதியை ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று அவரிடம் கொடுத்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றேன்.

அப்போது அவர், ''ஏற்கெனவே சோற்றுக்கு இல்லாமல் கஷ்டப்படுகிறீர்கள். இந்த நிலையில் மாதப் புத்தகம் என்னும் பெயரிலே பத்திரிகையை நடத்துவது துன்பத்தை அதிகப்படுத்திக் கொள்வதிலே உங்களுக்குள்ள திறமையைக் காட்டுகிறது, இதுதான் என் ஆசீர்வாதம்'' என்று சொல்லிவிட்டுக் கலகலவெனச் சிரித்தார். ஆனால் முதல் புத்தகத்திலே ''தமிழகத்தில் தமிழரசு'' என்னும் தலைப்பிட்டு யான் எழுதியிருந்த கட்டுரையை மேற்போக்காகப் படித்துவிட்டு, எனக்குள்ள எழுத்தாற்றலையும், கருத்துச் செறிவையும் பாராட்டினார். என் கட்டுரையின் சில பகுதிகளை அவரே வாய்விட்டுப் படித்து, அவற்றின் சிறப்பையும் பாராட்டினார். ஆயினும், ''தமிழ் முரசை''த் தொடர்ந்து நடத்த என்னால் இயலாதென்று என் தலைவர் கூறினார்.

### காகிதம் தந்தார்

இதற்குப் பின்னர், ஆறு மாதங்கள் கழித்து, புது டில்லிக்கே சென்று மத்திய இடைக்கால அமைச்சரவையில் தொழில் துறையை நிர்வகித்து வந்த அமைச்சர் ராஜாஜியைச் சந்தித்து 'தமிழ் முரசு' புத்தகத்தை மாதமிரு முறைப் பத்திரிகையாக மாற்றுவதற்குத் தேவைப்படும்

காகிதத்தைக் கொடுத்து உதவுமாறு வேண்டினேன். பத்திரிகைத் தொழிலில் யான் ஈடுபடுவது வாழ்க்கைத் துன்பத்தை அதிகப்படுத்திக் கொள்வதாகும் என்று மற்றொரு முறையும் கூறி என்னை எச்சரித்தார். ஆயினும், பத்திரிகை காகிதத்திற்கு அனுமதி தருவதாக உறுதி கூறி, எழுத்து மூலம் யான் கொடுத்த மனுவை ஏற்றுக் கொண்டார்.

யான் டில்லியிலிருந்து திரும்பிய சில நாட்களுக்குப் பின்னர், மத்திய அரசின் தொழில் துறையிடமிருந்து பத்திரிகைக் காகிதத்திற்கு அனுமதி தரும் கடிதம் ஒன்று கிடைத்தது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தின் நகல் வருமாறு:

*Member of Council, Industries & Supplies*

*New Delhi,*
*19th February 1947.*

நமஸ்காரம்

*Your letter dated 8-2-47*

*From 1-4-47 you are at liberty to use newsprint and you are at liberty to increase number of copies of your journal. No permits are necessary.*

*Yours sincerely,*
**C. Rajagopalachari**

அதிகார பூர்வமாக ராஜாஜி நிர்வகிக்கும் துறையிட மிருந்து எனக்குக் கடிதம் கிடைப்பதற்கு முன்னர் தொழில் துறை அமைச்சர் என்ற முறையில் எனக்குத் தமிழிலும் ஒரு கடிதம் எழுதினார். அதன் நகல் வருமாறு:

தில்லி 18-2-47

நமஸ்காரம்,

தங்களுடைய 14-2-47 கடிதம் வந்தது. அதே தேதியில் பொது உத்தரவு பிறப்பித்தாயிற்று. அதாவது, 1-4-47 முதல் எவ்வளவு வேணுமானாலும் ''நியூஸ் ப்ரிண்ட்'' தாங்கள் உபயோகித்துக் கொள்ளலாம். எவ்வளவு பிரதிகளானாலும் அச்சிடலாம். வேறு விஷயங்களைப் பற்றி எழுதவில்லை. உடல்நலம் கவனித்துக் கொள்ளுங்கள்.

இங்ஙனம்,
-இராசகோபாலாச்சாரி

ராஜாஜியின் உதவியோடு 'தமிழ் முரசு' மாதப் புத்தகத்தை மாதமிருமுறைப் பத்திரிகையாக மாற்றி அதன் முதல் பிரதியை அப்போது தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்த திரு.கு. காமராசரைக் கொண்டு வெளியிடச் செய்தேன். அந்த வெளியீட்டு விழாவுக்கு தமிழ்த்தென்றல் திரு.வி.க. தலைமை தாங்கினார். ராஜாஜியும் வாழ்த்துச் செய்தி அனுப்பியதாக நினைவில் இருக்கிறது. ஆனாலும் அந்தக் கடிதத்தைப் பாதுகாக்கத் தவறி விட்டேனாதலால் அதனை இங்கு தர இயலவில்லை.

## என் கழகத்திற்கு வாழ்த்துக் கூறினார்

''தமிழ் முரசு'' மாதம் இருமுறைப் பத்திரிக்கையின் முதல் பிரதி வெளியான பின்னர் 14-1-47- இல் பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடினேன். தமிழ நாடெங்கணும் அந்த விழா நடைபெற்றது. தமிழரசுக் கழகத்தின் பெயரால் முதன்முதலில் நடந்த பொது நிகழ்ச்சி இந்த விழாதான்.

பொங்கல் விழாவைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடுமாறு தமிழ் மக்களுக்கு வானொலி மூலம்

வேண்டுகோள் விடுமாறு மத்திய தொழில் அமைச்சர் ராஜாஜிக்குக் கடிதம் எழுதினேன். சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெறும் தமிழர் திருநாள் கூட்டத்திற்குச் செய்தி அனுப்புமாறும் அந்தக் கடிதத்தில் கேட்டிருந்தேன். அதன்படி ராஜாஜி அனுப்பியிருந்த செய்தியை இங்கு அப்படியே தருகிறேன்:

தில்லி,<br>
*12-1-47*

ம.பொ.சி. அவர்களுக்கு அன்புடன் எழுதியது. உங்கள் கடிதம் இன்று ஊருக்கு திரும்பியதும் பார்த்தேன். உள்ளக் களிப்புடன் இருப்பேன் என்று நம்புவதாக எழுதி யிருக்கிறீர்கள். உள்ளக் களிப்பு இல்லை; முடியவில்லை.

ஆயினும் தமிழர்கள் பொங்கல் அன்று மகிழ்ச்சி யுடன் விழாவை நடத்துவார்கள் என்று கருதுகிறேன்; கருதி திருப்தி அடைகிறேன். எல்லாரும் ஒத்து வேலை செய்து நாட்டை சிறப்புறச் செய்யுங்கள். நீங்களே தமிழ் முரசு. வேறு என்ன முரசு வேண்டும்? என் செய்தி ஒன்று ரேடியோவில் சொல்லவேண்டும் என்கிறீர்கள். இனி அதற்கு அவகாசம் இல்லை. பம்பாயில் இருந்து இன்று தான் விமானத்தில் வந்து இறங்கினேன்.

தங்கள் பிரசங்கமே என் செய்தி என்று வைத்துக் கொண்டு பேசக் கோருகிறேன். அப்படியே கேட்பவர் களும் எண்ணிக் கேட்க வேண்டும்.

இங்ஙனம்,<br>
-இராசகோபாலாச்சாரி.

# ராஜாஜி தந்த ஆதரவு

தலைவர் ராஜாஜி யான் தமிழரசுக் கழகம் தொடங்குவதற்கு முன்பிருந்தே புதிய தமிழகம் படைக்கும் பணிகளிலே எனக்கு ஒத்துழைப்புத் தந்து வந்தார்.

*1946* ஜனவரி *14* - இல் தான் முதன் முதலாக எனது சொந்தப் பொறுப்பில் கல்லூரி மாணவர்களாயிருந்த திரு. கொ.மோ. ஜனார்த்தனம், திரு.சி. வேங்கடசாமி, திரு.மா.ரா.போ. குருசாமி ஆகியோரைக் கொண்டு பொங்கல் விழாவைத் தமிழர் திருநாள் என்னும் பெயரிலே சென்னை கோகலே மன்றத்தில் கொண்டாடச் செய்தேன்.

அப்போது எதிர்ப்பாரற்ற நிலையிலே ஆந்திரர்கள் ''மதராஸ் மனதே'' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அதற்குத் தமிழர் சார்பில் எதிர்ப்புக் குரல் கொடுத்த இந்த விழாவில் ''சென்னை தமிழருடையதே'' என்னும் பாட்ஜுகளைத் தயாரித்து, பாட்ஜ் ஒன்றுக்கு ஓரணா விலை வைத்து விற்று, அதனைக் கூட்டத்திற்கு வந்த அனைவரும் தங்கள் மார்பகத்தில் அணிந்து கொள்ளச் செய்தேன். எனது அழைப்பின் பேரில் ராஜாஜியும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

''சென்னை தமிழருடையதே'' என்னும் பாட்ஜை அவர் மார்பில் பொருத்த நானும் என் மாணவ நண்பர்களும் தயங்கினோம். ராஜாஜி, அதை தாமே விரும்பி வாங்கி, தமது மார்பில் அணிந்துகொண்டு பேசினார்.

முதன் முதலாக ராஜாஜி சென்னை பற்றிய பிரச்சினையிலே ஆந்திரரின் கூச்சலைக் கண்டித்துப் பேசியது இந்தக் கூட்டத்தில்தான்!

இதன் பின்னர் சரியாக ஆறாண்டுகள் கழித்து, அவரே சென்னை மாகாண முதல்வர் பொறுப்பில் இருந்து கொண்டு சென்னை நகரத்தைக் காப்பதிலே எனக்கு வெற்றி தேடித் தந்தது நாடறிந்ததாகும்.

## ராஜாஜி - ஈ.வே.ரா. வாழ்த்து

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளுக்குத் தமிழரசுக் கழகம் 1950 சித்திரா பௌர்ணமியில் சென்னை செயின்ட் மேரிஸ் மண்டபத்திலே முதன் முதலாக விழா நடத்தியபோது, அதற்கு வாழ்த்துச் செய்தியனுப்பி என்னை மகிழ வைத்தார்.

ராஜாஜி அனுப்பிய வாழ்த்துச் செய்தி வருமாறு:

## அன்பும், பணிவும்!

பெரியோர்கள் சேர்ந்து நடத்தும் இளங்கோவடிகள் விழாவுக்கு என் வாழ்த்துக்கள்.

அறமும், அறத்தைச் சார்ந்த பொருளும், இன்பமும், வீடும், இவற்றைக்கோரும் மக்களுக்கு எல்லாச் சமயங்களும் ஒன்றே. சைவம், வைஷ்ணவம், பௌத்தம், ஜைனம் அனைத்தும் அறத்தின் வழி நடக்கும் மார்க்கங்கள். இந்த இளங்கோவடிகள் விழா சிறப்பாக நடைபெற்று இலக்கிய இன்ப உணர்ச்சியும் பக்தியும் ஒன்றுகூடி ஆண்டவன் திருவடிகளுக்கு தமிழ் மக்களை இட்டுச் செல்வதாக! அந்த வழியில் இடையே அனைத்தையும் பெறலாம்.

21-4-56 -இராசகோபாலாச்சாரி.

ராஜாஜியின் அரிய நண்பர் பெரியார் ஈ.வே.ராவும் வாழ்த்துச் செய்தி அனுப்பியதை இன்று நினைத்தாலும் என் மனம் மகிழ்ச்சியடைகின்றது. அந்தச் செய்தி வருமாறு:

அன்புள்ள நண்பர் திரு.ம.பொ. சிவஞானம் அவர்களுக்கு ஈ.வெ. ராமசாமி வணக்கம்.

தாங்கள் அன்புடன் அனுப்பித் தந்த சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் விழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி. மேற்படி இளங்கோ விழா சீரும் சிறப்புமுற நடைபெற வேண்டும் என்ற ஆசையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

20-4-50 ஈ.வெ. ராமசாமி.

நெல்லை மாவட்டத்திலுள்ள ''பாஞ்சாலங்குறிச்சி'' என்னும் பாளையத்தின் மன்னன் வீரபாண்டியக் கட்டபொம்மன் புகழ் பரப்பும் பணியை யான் தொடங்கிய போது பல திசைகளிலிருந்தும் என் பணிக்கு எதிர்ப்பு ஏற்பட்டதைத் தமிழின மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட நாளான அக்டோபர் 16 - இல் ராஜாஜி மண்டபத்தின் பின்புறத்திலுள்ள பூங்காவில் தமிழரசுக் கழகம் 1950 - இல் விழாக் கொண்டாடியது.

''வீரபாண்டியக் கட்டபொம்மன்'' என்னும் பெயரில் யான் எழுதிய நூல் இன்ப நிலையத்தாரால் இந்தக் கூட்டத்தில் வெளியிடப்பட்டது.

அப்போது, அறிஞர் ராஜாஜி மத்திய அரசில் அமைச்சராகப் பதவி வகித்தார். எனது வேண்டுகோளுக் கிணங்கி, கட்டபொம்மன் விழாவுக்குத் தம் கையாலேயே வாழ்த்து எழுதி அனுப்பி வைத்தார். அந்தக்கடிதம் வருமாறு:

தில்லி, 28-9-50

ஆசீர்வாதம். உங்களுடைய 27 - ஆம் தேதி கடிதம் பார்த்தேன். கட்டபொம்மன் விழாவுக்கு என் மனமார்ந்த ஆசிகள். நம் தமிழர் தம் பெருமையை அறிந்து பெருந்தன்மை வழிகளில் நடக்க எண்ணம், பேச்சு, செயல் இவை எல்லாவற்றையும் பழக்குவதில் என்னைவிட யாருக்கு மகிழ்ச்சி தரும்?

இங்ஙனம்
-இராசகோபாலாச்சாரி

**'நம்ம கிராமணியார்...'**

இதற்கு முன்பே, கவர்னர் ஜெனரல் பொறுப்பில் இருந்துகொண்டு ''வி.ஓ. சிதம்பரம்'' என்னும் கப்பலை தூத்துக்குடிக் கடலில் மிதக்கவிடும் பொருட்டு ராஜாஜி தூத்துக்குடிக்குச் சென்றபோது வழியில் பாஞ்சாலங் குறிச்சியை அவர் பார்க்கநேர்ந்தது. அவருடன் சென்ற அரசாங்க அதிகாரிகள் அதன் வரலாற்றைக் கூறினர்.

அப்போது, ''நம்ம கிராமணியார் கூறுகிறாரே, அந்தக் கட்டபொம்மன் ஆண்ட ஊர் இதுதானா?'' என்றா ராம் ராஜாஜி. ''ஆம்'' என்று உடன் வந்த அதிகாரிகள் பதிலளித்தபோது, நெல்லை மாவட்ட ஆட்சியாளரை அழைத்து, ''நான் டில்லிக்குச் சென்றதும் இதுபற்றி எனக்கு எழுதுங்கள்'' என்றாராம்.

இதன்பின்னர், கவர்னர் ஜெனரல் ராஜாஜியின் எழுத்து மூலமான ஆணையின் பேரில் பாஞ்சாலங் குறிச்சிப் பிரதேசத்தை மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டதாக எனக்குத் தெரிய வந்தது. இதை அறிந்தபோது, எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

''நம்ம கிராமணியார் சொல்லுகிற கட்ட பொம்மனா?'' என்னும் வாசகமானது என் பிள்ளை பிள்ளைத் தலைமுறைதோறும் எண்ணி எண்ணிப் பூரிக்கத் தக்கதல்லவா!

பிற்காலத்தில் பாஞ்சாலங்குறிச்சிப் பிரதேசம் மத்திய தொல்பொருள் துறையிடமிருந்து தமிழக அரசின் தொல்பொருள் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. அங்கு அகழ்வாராய்ச்சியும் நடைபெறுகிறது. மற்று, அதன் அருகில் கட்டபொம்மன் நினைவாலயமும் நிறுவப் பட்டுள்ளது. இது, ராஜாஜிக்கும் எனக்குமிருந்த உறவின் நினைவுச் சின்னமென்றும் சொல்லலாம்.

பல சந்தர்ப்பங்களிலே பொது வாழ்க்கையில் எனக்குக் கடுமையான எதிர்ப்புகள் ஏற்பட்டபோது என்னைத் தாங்கி நின்று ராஜாஜி பேசியதுண்டு. அதிலே, கட்டபொம்மன் சம்பந்தப்பட்ட எதிர்ப்பும் ஒன்றாகும்.

திரு. தமிழ்வாணன் என்பவர், தமது ''கல்கண்டு'' என்னும் வார இதழிலே, ''கொள்ளைக்காரன் கட்ட பொம்மன்'' என்னும் தலைப்பிட்டு, 'ஆராய்ச்சி' என்னும் பெயரில் வாரந்தோறும் எது எதையோ எழுதி வந்தார். அதைத் தொடங்குமுன் நாளிதழ்களில் மிகப் பெரிய அளவில் விளம்பரம் கொடுத்தார். ''கட்டபொம்மன் கொள்ளைக்காரன் - தமிழ்வாணன் எழுதும் ஆராய்ச்சித் தொடர் கட்டுரை - 'கல்கண்டு' பத்திரிகையை வாரந் தோறும் தவறாமல் படியுங்கள்'' என்னும் வாசகங்களைக் கொண்ட மூவண்ணச் சுவரொட்டிகளை நாடெங்கும் பரப்பினார். அப்போது தி.மு.கவிலிருந்த கவிஞர் கண்ண தாசன் அவர்களும் தமது ''தென்றல்'' வார இதழிலே தமிழ்வாணனைத் தாங்கி எழுதினார்.

''தினத்தந்தி'' ஆசிரியரும் அப்போது ''நாம் தமிழர்'' இயக்கத்தை நடத்தி வந்தவருமான என் அரிய நண்பர் திரு.சி.பா. ஆதித்தனாரும், நான் போற்றிவரும் கட்ட பொம்மனைத் தூற்றும் பிரச்சாரத்திற்குத் தம்முடைய காலை - மாலை நாளிதழ்களிலே விளம்பரம் தந்து வந்தார்.

அவரேயும் கட்டபொம்மனைப் பழிக்கும் வகையிலே அவனுக்குப் போட்டியாக 'நெற்கட்டுஞ் செவ்வல்' என்னும் பாளையத்தின் மன்னனும் மறவர்குலத் திலகமுமான பூலித்தேவன் என்பவனுடைய நாடகத்தைத் தயாரித்து, அதனைத் தமிழ் நாட்டிலுள்ள மாவட்டத் தலைநகரந் தோறும் தமது 'நாம்தமிழர்' இயக்கத்தின் சார்பில் நடத்தி வந்தார்.

பிரபல திரைப்பட நடிகர் திரு. சகாதேவனை ''பூலித் தேவன்'' வேடத்தில் நடிக்க வைத்து திரைப்படம் ஒன்றைத் தம் சொந்தச் செலவில் தயாரித்து நாடெங்கும் திரையிடச் செய்தார். என் மனம் வருந்துமளவுக்கு நாடெங்கும் கட்டபொம்மனுக்கு எதிராகப் பிரசாரப் போர் நடத்தப்பட்டது.

இப்படி ஒரு போர் உருவானதற்கு, நடிகர் திலகம் சிவாஜி கணேசனை கட்டபொம்மனாக நடிக்கவைத்து, பத்மினி பிக்சர்ஸ் அதிபர் திரு.பி.ஆர். பந்துலு திரைப்படம் ஒன்றைத் தயாரித்து வெளியிட முற்பட்டதும் ஒரு காரணமாகும்.

நடிகர் திலகத்தின்மீது பொறாமை கொண்டவர் களும் கட்டபொம்மனுக்கு எதிராக உருவான கிளர்ச்சிக்குக் கை கொடுத்தனர். கட்டபொம்மனைப் போற்றியும் தூற்றியும் நடந்த பிரசாரத்திலே பேச்சாலும் எழுத்தாலும் ஈடுபடாத அரசியல் தலைவரோ, எழுத்தாளரோ இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக, என் மனம் பெரிதும் புண் பட்டிருக்கும் என்பதனை ராஜாஜி உணர்ந்தார். எதிர்ப் பிரசாரங்களை முறியடிக்கும் வகையில் ''சுதந்திர வீரன் கட்ட பொம்மன்'' என்னும் தலைப்பிட்டு, 'செங்கோல்' பத்திரிகையில் வாரந்தோறும் தொடர் கட்டுரை ஒன்றை யான் எழுதி வந்தேன். அதைப் படித்தும் என் மன வேதனையை உணர்ந்து கொண்டார்.

## "சுயராஜ்யா" வில் கட்டுரை

நான் அவரைக் கேட்டுக் கொள்ளாமலே, ''கட்ட பொம்மன் சுதந்திர வீரன்தான்'' என்பதனை வலியுறுத்தி அப்போது தாம் நடத்தி வந்த ஆங்கில வாரப் பத்திரிகை யான ''சுயராஜ்யா'' (8-3-58) இதழிலே, ''முட்செடிகள்'' என்ற தலைப்பிட்டுச் சிறப்புக் கட்டுரை ஒன்றை எழுதினார்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தோன்றிய வேறு ஒன்றிருவரைக் கட்டபொம்மனுடன் சேர்த்து, அவர்கள் எல்லாம் பிரிட்டிஷ் ஆட்சிக் கெதிரான 'முட் செடிகள்' என்று ராஜாஜி தமது சிறப்புக் கட்டுரையில் வருணித்தார். அதிலே, கட்ட பொம்மனைப் பற்றிய பகுதி வருமாறு:

''...அத்தகைய வைரம் பாய்ந்த மற்றுமொரு முட்செடிதான் கட்டபொம்மு. திப்பு சுல்தானும் அப்படிப் பட்டவன்தான். ''நாகரிகத்தின் பாதையில் இத்தகைய 'முட்செட்கள்' பல ஓங்கி நின்றிருக்கின்றன. காந்தியடி கள்கூட, அவர் வெற்றிபெற்று 'ஞானி' என்றும், 'வீரர்' என்றும் எல்லா நாடுகளாலும் போற்றிப் பாராட்டப்படும் வரையில், இந்தியாவின் வைசிராய் பிரபுக்களால் இத்தகைய முட்செடியாகவே கருதப்பட்டார்.''

இப்படி, தமது 'சுயராஜ்யா'வில் கிராமணியாரின் கட்டபொம்மனைப் போற்றி எழுதியதோடு ராஜாஜியின் மனம் ஆறுதலடையவில்லை. வெளிப்படையாகவே மேடையேறிக் கட்ட பொம்மன் விஷயத்தில் யான் கொண்டிருந்த கொள்கையை ஆதரித்துப் பேச வேண்டுமென்று அவர் மனம் விரும்பியது.

## கழக மேடையில் ராஜாஜி

*16-10-58* - இல் கட்ட பொம்மன் நினைவு நாளை சென்னை செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் சென்னை மாவட்டத் தமிழரசுக் கழகம் கொண்டாடியது. அன்று சென்னை நகரில் பெரு மழை; கடுங்குளிர் வேறு. அவற்றைப் பொருட்படுத்தாமல், நான் அழைக்காத நிலையிலேயே என் தலைவர் கட்டபொம்மன் விழா மேடையில் பேச விரும்பித் தாமாகவே வந்துவிட்டார். அந்தப் பெருந்தன்மையை இன்று நினைத்தாலும் என் இரு கரங்களும் தாமாகவே சேர்ந்து அவரை வணங்குகின்றன. கூட்டத்தில் கட்ட பொம்மனைப்பற்றி அவர் பேசியது வார்த்தைக்கு வார்த்தை வருமாறு:

''நான் வந்தது விழாவில் கலந்துகொள்ளவே; பேசுவதற்காக அல்ல. பேசுகிறவர்கள் வேண்டியபேர் இருக்கிறார்கள்; விஷயங்களை ஆராய்ந்து ஆராய்ந்து பேசுகிறவர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்த பிறகுதான் இங்குவரத் தீர்மானித்தேன்.

''இன்று எனது உடல் சரியாக இல்லை. ஆயினும், விழாவுக்கு வராமலிருந்தால் நானும் அந்த எதிர்க்கட்சியில் சேர்ந்து விட்டதாக எண்ணி விடுவார்களே என்று பயந்து, மழையாயிருந்தாலும் சரி; ஜுரமாயிருந்தாலும் சரி என்று வந்து சேர்ந்தேன்.

''கட்டபொம்மனைப் பற்றிய விவாதம் எனக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. இந்த மாதிரி விஷயத்தில் யாராவது ஒரு விவாதத்தைக் கிளப்புவார்கள் என்று வேறு எந்த நாட்டிலும் எதிர்பார்க்க மாட்டார்கள். என்ன காரணத்தினாலோ இங்கு கிளம்பியிருக்கிறது. ம.பொ.சி. அவர்களுடைய ஜாதகம்தான் இதற்குக் காரணம். கட்டபொம்மனுடைய ஜாதகம்கூட அல்ல. அதைப் பெரிதாக நினைத்து இவ்வளவு நேரம் பேசினார்களே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. அந்தப் பத்திரிகைகளையெல்லாம் நான் படிக்கிற வழக்கம் கிடையாது. அதனால், என்ன எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. இங்கு ம.பொ.சி. பேசியதிலிருந்து அந்தப் பத்திரிகைகள் எழுதிய விஷயங்கள் அவர்களுக்கு ரொம்ப வருத்தத்தைத் தந்ததாகத் தெரிகிறது. இல்லா விட்டால், அதைப்பற்றி இவ்வளவு நேரம் பேசியிருக்க மாட்டார்கள்.

''கட்டபொம்மனுக்கு சிறப்புச் செய்வதை யாரோ ஆட்சேபிக்கிறார்கள். ஆட்சேபிப்பதில் ஏதாவது பிரயோ சனம் உண்டா? உபமானம் நினைவுக்கு வருகிறது. சொன்னால் கோபித்துக் கொள்வார்கள். சந்திரனுக்கு ஏதாவது குறையுண்டாகுமா, நாய் அதைப் பார்த்து சப்தம் போடுவதால்?

''சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட ஒரு தேச பக்தனை, கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இறந்து போன ஒருவனை, சுதந்திரம் வந்துள்ள இப்போ தாவது பாராட்டவேண்டாமா? கட்டபொம்மன் எந்த ஆட்சியை எதிர்த்தானோ அந்த ஆட்சி நேற்றுவரை இங்கே இருந்து வந்திருக்கிறது. அது முடிந்துவிட்ட இப்போது அந்த ஆட்சியை எதிர்த்த முன்னோர்களை ஒருவர்பின்

ஒருவராகக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறோம். இதற்கு யாராவது ஆட்சேபனை சொல்வார்களா? தமிழ் நாட்டில் தான் இந்த மாதிரியெல்லாம் நடக்கிறது.

''கட்டபொம்மன் நம்முடைய தேசத்தைச் சேர்ந்தவன். நம்முடைய ஊரின் புறக்கடையிலே கோட்டை கட்டி வாழ்ந்தவன். அப்படிப்பட்டவனை நாம் போற்றக் கூடாதென்று யாராவது தடுத்தால் அது பைத்தியக் காரத்தனம். அந்தச் செயல் நம் நாட்டின் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்ப்பைப்பற்றி இனி நீங்கள் யோசனை செய்யவேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கெள்கிறேன். ஆராய்ச்சியை விட்டுத் தள்ளுங்கள். செய்ய வேண்டியதைச் செய்து கொண்டு போக வேண்டியது நமது கடமை.''

*('செங்கோல்' 26-10-56 இதழில் வெளியானபடி)*

## ம.பொ. சிக்கு ஆறுதல் கூறினார்

மேலே தந்துள்ள ராஜாஜியின் பேச்சைத் திரும்பத் திரும்பப் படித்தால் அவருடைய வாய் பேசவில்லை; இதயமே பேசியது என்பது புலனாகும்.

> ''இன்று என் உடல் சரியாக இல்லை. ஆயினும், விழாவுக்கு வராமல் இருந்தால் நானும் அந்த எதிர்க் கட்சியில் சேர்ந்து விட்டதாக எண்ணிவிடுவார்களே என்று பயந்து மழையாய் இருந்தாலும் சரி; ஜுரமாயிருந்தாலும் சரி என்று வந்து சேர்ந்தேன்.''

என்று தமது பேச்சைத் தொடங்கியவர், அதனை முடிக்கும்போது, என்னுடைய முகத்தைப் பார்த்து,

''எதிர்ப்பைப் பற்றி நீங்கள் யோசனை செய்ய வேண்டாம் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆராய்ச்சியை விட்டுத்தள்ளுங்கள். செய்ய வேண்டியதைச் செய்துகொண்டு போவது நமது கடமை.''

என்று சொல்லி, தமது இதயபூர்வமான பேச்சை முடித்தார்.

**சிதம்பரனாரின் தீரம்!**

சென்னை அரண்மனைக்காரன் தெருவிலுள்ள செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் நடந்த கட்டபொம்மன் விழாவிலே பேசிய ராஜாஜி அவர்கள் என் மனத்திற்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும் என்பதற்காகக் கப்பலோட்டிய தமிழர் பற்றியும் தம் கருத்தை வெளியிட்டார். அது வருமாறு:

''சிதம்பரம் பிள்ளை காலத்திலே தேச பக்தர்களைத் தூக்கில்தான் போடுவார்கள். ரொம்ப கேட்டுக் கொண்டால், ஆயுள் பரியந்தம் ஜெயிலில் வைப்பார்கள்! நம்முடைய சிதம்பரம் பிள்ளை அவர்களை எதற்காகத் தண்டித்தார்கள்? ஒன்றுமில்லை, இப்பொழுது தினமும் தெருவில் பேசுகிறார்களே அந்தமாதிரி ''நமக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது பிரியமில்லை; நாம் முப்பது கோடி மக்கள்; நாம் மனம் வைத்தால் இந்த ஆட்சியை அகற்றிவிடலாம்'' என்று சொன்னார். மற்றபடி ஒரு கத்தி எடுத்தது கிடையாது; ஒரு தடியைக்கூட எடுத்ததில்லை. அப்படியிருந்தும், சிதம்பரம் பிள்ளைக்கு மரண தண்டனை கொடுக்கும் நோக்கத்துடன் விசாரித்தார்கள்; ஏதோ

'தயவு' செய்து இரண்டு ஆயுள் தண்டனை கொடுத்தார்கள். ஆனால், அவருக்கிருந்தது ஒரே ஆயுள்! ஆதலால், அந்த ஆயுளில் எப்படியோ தப்பித்துக் கொண்டார். அனேக வருடங்கள் ஜெயிலில் இருந்தார். 'ஆயுள் தண்டனை' என்றால், 12 வருஷம் ஜெயிலில் இருந்தால் பிறகு விடுதலை செய்து விடலாம் என்று புத்தகத்தில் எழுதியிருப்பார்கள். ஆனால், மனதிலே ஆயுள் பரியந்தம் சிறையில்தான் இருக்கப் போகிறோம் என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அப்படி தீர்மானித்துக் கொண்டுதான் தைரியமாகச் சிறையிலிருந்தார் சிதம்பரம் பிள்ளை.''

*(16-11-58 'செங்கோல்' இதழில் வெளியானபடி)*

தமிழரசுக் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த ஔவை தி.க. சண்முகம் அவர்கள் தம்முடைய நாடகக் குழுவைக் கொண்டு, ''தேசபக்தர் சிதம்பரனார்'' என்னும் நாடகத்தை நடத்தினார். அதிலே, சிதம்பரம்பிள்ளையாக டி.கே. பகவதியும், சுப்பிரமணிய சிவாவாக டி.கே. சண்முகமும் நடித்தார்கள்.

## 'தேசபக்தர் சிதம்பரனார்'

ஔவை சண்முகம் நாடகக் குழுவிடம் அறிஞர் ராஜாஜிக்கு அலாதியான மதிப்பு! ராஜாஜியைச் சந்திக்க அவருடைய இல்லத்திற்கு நான் சென்ற பல சந்தர்ப்பங்களிலே ஔவை சண்முகத்தையும் நான் அழைத்துச் சென்றதுண்டு. அழைத்துச்செல்லாத சந்தர்ப்பங்களிலே, ''எங்கே ஔவையாரைக் காணோமே?'' என்று அன்பு ததும்பிய குரலில் கேட்பார். ஆம்; சண்முகத்தைக் குறிப்பிடும்போது, 'ஔவையார்' என்றுதான் சொல்வார். ஔவையார் வேடத்திலே நாடக மேடையில்

சண்முகத்தைப் பார்த்து ராஜாஜிக்கு ஏற்பட்ட கவர்ச்சியே இதற்குக் காரணமாகும்.

டி.கே.எஸ். சகோதரர்கள் நடத்திய 'தேசபக்தர் சிதம்பரனார்' நாடகத்தைக் காண்பதற்கு ஔவை சண்முகத் துடன் சென்று ராஜாஜியை அழைத்தேன். நாடகங்களைப் பார்க்க அவர் செல்வதில்லை. நண்பர்களின் வற்புறுத்தலுக் கிணங்கி அரிதாக எப்போதேனும் சென்றாலும் மேடை யேறிப் பேசமாட்டார். நாடகம் பார்க்க தாம் வருவதை விளம்பரம் செய்யக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டு, கொட்டகையில் முன்வரிசையில் அமர்ந்து நாடகத்தைப் பார்ப்பார்.

'தேசபக்தர் சிதம்பரனார்' நாடகத்தைப் பார்க்க நான் அழைத்தபோது, ''என்னுடைய நண்பர் சிதம்பரனாரைப் பற்றிய நாடகமா? சரி வருகிறேன்'' என்று ஒப்புக் கொண்டார்.

நாடகத்தைப் பார்த்துவிட்டு, மேடையேறிப் பேசி னார். சிதம்பரனார், சிவா ஆகியோரின் தியாகங்களைப் பாராட்டினார். ஔவை சண்முகம் உள்ளிட்ட நாடகக் குழுவினரையும் பாராட்டினார்.

## 'சிவாஜி' யின் கட்டபொம்மன்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தம்முடைய நாடகக் குழுவினருடன் ''வீரபாண்டியக் கட்டபொம்மன்'' நாடகத்தை நடத்தி, அந்த மாவீரனின் புகழைப் பரப்புவதிலே எனக்குத் துணைபுரிந்தார். அந்த நாடகத்தை ராஜாஜி பார்க்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ராஜாஜியும் வருகை தந்தார்.

இடை வேளையில் மேடையேறிப் பேசியபோது, நடிகர் திலகத்தை வெகுவாகப் பாராட்டிவிட்டு, கட்ட

பொம்மன் புகழைப் பரப்பியதற்காக என்னையும் பாராட்டி னார். தியேட்டரில் இருந்தவர்களிலே அங்கொருவர் இங்கொருவராகக் கைதட்டினார்கள். அப்போது தமது பேச்சை கணநேரம் நிறுத்திவிட்டு, கை தட்டுவதில் கருமித்தனம் எதற்கு? நீங்கள் எல்லோருமே கைதட்டிப் பெருமைப்படுத்துவதற்கான தகுதி படைத்தவர் ம.பொ.சி.'' என்று கூறினார்.

பின்னர், தியேட்டரில் இருந்தவர்கள் அவ்வளவு பேரும் கைதட்டியதோடன்றி, அவர்களிலே சிலர் என் பெயரைச் சொல்லி வாழ்த்தும் கூறினர். இத்தனைக்கும் நான் தியேட்டரில் இல்லை.

ராஜாஜி திரைப்படங்களைப் பார்ப்பதற்கு ஆர்வ மில்லாதவர். திரைப்படங்களால் நாட்டுக்கு நன்மையை விட தீமையே அதிகம் என்னும் கருத்துடையவர். படத்தை எடுத்தவர்கள் ஸ்டூடியோவில் போட்டுக் காட்டி பார்ப்பதற்கு அவரை அழைத்தபோதுகூட, பிடிவாதமாக மறுப்புத் தெரிவித்திருக்கிறார்.

## ஏ.பி. என். ராமாயணம்

தமிழரசுக் கழகக் கலைஞரான ஏ.பி. நாகராசன் திரைப்பட கதை - வசனம் எழுதி, கழகப் பொருளாளராக இருந்த எம்.ஏ. வேணு அவர்களின் எம்.ஏ.வி. பிக்சர்சாரால் தயாரிக்கப்பட்ட ''சம்பூர்ண ராமாயணம்'' படத்தைப் பார்க்க ராஜாஜியை நான் அழைத்தேன். ராஜாஜி பார்ப்பதற் கென்றே கோடம்பாக்கத்திலுள்ள 'விஜயா கார்டனி'ல் திரையிடப்பட்டது. நானும் ராஜாஜியும் அருகருகே அமர்ந்து பார்த்தாம்.

அப்போது திராவிடர் கழகம் முழு வேகத்துடன் ராமாயண எதிர்ப்புப் பிரசாரம் நடத்திக் கொண்டிருந்தது.

அந்த இயக்கத்தைச் சேர்ந்த நடிகர் எம்.ஆர். ராதா அவர்கள் தம் நாடகக் குழுவின் சார்பில் ராமனையும் சீதையையும் பழிக்கும் வகையிலே நாத்திகப் பிரசாரத்தைத் தமிழ்நாடு முழுவதிலும் நடத்திக் கொண்டிருந்தார். அதற்கு எதிர்ப் பிரசாரமாக அல்லாமல் ராமாயணத்திற்கு மக்களிடம் நிலவிவரும் மதிப்பைக் காப்பதற்காக ஆக்க வழிபட்ட பிரசார ரீதியில் கலைஞர் ஏ.பி.என். அவர்களும், எம்.ஏ. வேணு அவர்களும் ''சம்பூர்ண ராமாயணம்'' படத்தை எடுத்தனர்.

நானும் தமிழரசுக் கழகப் பேச்சாளர்களும் தி.க. வினரின் ராமாயண எதிர்ப்புக்கு எதிர்ப்புக்காட்டி கழக மேடைகளில் பேசி வந்த காலம் அது.

''இலக்கியங்களின் எதிரிகள்'' என்னும் பெயரிலே தி.க.வுக்குப் பதிலளிக்கும் பிரச்சார நூலையும் அப்பொழுதுதான் வெளியிட்டேன்.

மற்றும், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அப்போது தான் தி.மு.க. விலிருந்து வெளியேறி தெய்வ பக்தராகவும் தேசபக்தராகவும் மாறியிருந்தார். இராமாயண திரைப் படத்திலே நடிகர் திலகம் பரதன் வேடத்தை ஏற்றுக் கொண்டு அற்புதமாக நடித்திருந்தார்.

''இராமாயண படம் திரையிடப்படும் தியேட்டர்கள் கொளுத்தப்படும்'' என்றுகூட திராவிட இயக்க மேடைப் பேச்சாளர்கள் பயமுறுத்திக் கொண்டிருந்தனர்.

இந்தச் சூழ்நிலை காரணமாக, ''சம்பூர்ண ராமாயணம்'' படத்தைக் காண்பதற்கு நான் விடுத்த அழைப்பை ஏற்று, ராஜாஜி வருகை தந்து பார்த்தார். ஏ.பி.என். அவர்களின் இதயங்கவரும் தமிழ் நடையிலான

வசனமும் நடிகர் திலகத்தின் அற்புதமான குணச்சித்திர நடிப்பும் ராஜாஜியைக் கவர்ந்தன.

மேடையேறித் தம் கருத்தைக் கூறுமாறு என் தலைவரை அழைத்தேன். அவர் இசையமாட்டார் என எண்ணினேன். என்றாலும் மரியாதைக்காக அழைத்தேன். ஆனால், மறுப்புக் கூறாமல் மேடையேறி, ''படத்திற்கும் வாழ்த்து; பரதனுக்கும் வாழ்த்து'' என்று கச்சிதமாகச் சொல்லிவிட்டு மேடையிலிருந்து இறங்கிவிட்டார்.

இப்படி, நாடக - திரைப்பட உலகம் சம்பந்தமாக ராஜாஜியோடு எனக்கேற்பட்ட அனுபவங்களை இங்கு விவரித்துச் சொல்வது, யான் தொடர்பு கொண்ட துறைகளில் எல்லாம் அவர் எனக்குத் துணை நின்றார் என்பதை உணர்த்துவதற்காகத்தான்!

## தியாகி நிலம்

ராஜாஜி என் குடும்பத்தை வாட்டி வந்த வறுமையைப் போக்குவதற்குத் தாமே கைப்பொருளை உதவவோ, தமக்கு நண்பர்களாகவுள்ள செல்வந்தர்களிடம் பொருளுதவி தேடித் தரவோ நினைத்ததில்லை. நானும் அது போன்ற உதவிகளை அவரிடமிருந்து பெற நினைத்ததுமில்லை. பொருள் விஷயத்திலே என் தலைவரின் ஒழுக்கத்தை நான் அறிவேன். அதனால், அவர்மீது நான் குறைபட்டுக் கொண்டதில்லை.

தலைவர் ராஜாஜியோடு எனக்கிருந்த ஆத்மார்த்த மான நட்பைப் பணவருவாய்க்கோ, பதவி லாபத்திற்கோ பயன்படுத்திக் கொள்ள நான் விரும்பாததால்தான் எங்கள் நட்பு புனிதமானதாக அமைந்தது. கொள்கைப் போராட்டங்களுக்கிடையேயும் நலியாமலிருந்தது.

ராஜாஜியால் எனக்குப் பொருளிழப்பு ஏற்பட்ட துண்டு. தியாகிகளுக்கு நிலமான்யம் வழங்கப்பட்டபோது எனக்கும் ஏழரை ஏக்கர் நிலம் சென்னைக்கு அடுத்துள்ள பாலூர் கிராமத்திலே அரசாங்கத்தாரால் ஒதுக்கப்பட்டு என்மீது பட்டாவும் செய்யப்பட்டு உரிமைப்படுத்தப் பட்டுவிட்டது.

ஆனால், நிலமான்யம் கிடைக்காத தியாகிகள் மதுரையில் முதல்வர் பொறுப்பிலிருந்த ராஜாஜிக்கு எதிராக ''தியாகிகளுக்கு நிலம் கொடு; இல்லையேல், முதல்வர் பதவியை ராஜிநாமா செய்!'' என்று கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். ராஜாஜியை முதல்வர் பதவியிலிருந்து வெளியேற்ற விரும்பிய ஒரு கோஷ்டியினர் தியாகிகளைப் பயன்படுத்தி நடத்திய ஆர்ப்பாட்டமிது.

இதனால் கோபமடைந்த ராஜாஜி ''தியாகத்திற்கு விலையாக நிலமான்யம் கோருவது அவமானம். அரசு, இனி யாருக்கும் நிலமான்யம் கொடுக்காது; இதுவரை நிலமான்யம் பெற்றுள்ளவர்கள் அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் மகிழ்ச்சியடைவேன்'' என்று மதுரைப் பொதுக் கூட்டத்தில் பேசினார்.

அதைப் பத்திரிகைகளில் படித்ததும் யான் பெற்றிருந்த நிலமானியத்தை அரசுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டேன். இதுபற்றி ராஜாஜியிடம்கூட நான் கலந்து ஆலோசிக்கவில்லை. பத்திரிகைகளுக்கும் செய்தி அனுப்பவில்லை. ஒன்றரையாண்டு கழித்து பேச்சுப் போக்கில் ஒருமுறை 'கல்கி' கிருஷ்ணமூர்த்தியிடம் சொன்னேன். அவர் ராஜாஜியிடம் சொன்னதாகவும், அவர் எனக்கேற்பட்ட நஷ்டத்திற்கு வருத்தப்பட்டதாகவும் அறிந்தேன்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட ராஜாஜி - காமராசர் கோஷ்டிப் பூசல் காரணமாக, தமிழ்நாடு காங்கிரஸ் எனக்கு இழைத்த நஷ்டங்கள் எத்தனை எத்தனையோ! அவற்றைத் தவிர்க்க விரும்பி ராஜாஜியுடன் உள்ள தொடர்பைத் துண்டித்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பத்தில்கூட நான் நினைத்ததில்லை. அனைத்திந்திய அரசியலிலே தமிழ்நாடு தலைமை பெறவேண்டுமென்பதற்காகவே நான் ராஜாஜி யின் அடிச்சுவட்டில் முடிந்தவரை நடைபோட்டேன்.

## தவறான செய்திக்கு மறுப்பு

ராஜாஜி, பொது வாழ்க்கையில் யான் புகழ்பெற்று விளங்க வேண்டுமென்பதிலும், யான் பெற்றுள்ள சிறப்பிற்குக் களங்கம் ஏற்படக் கூடாதென்பதிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

ராயபுரம் ம.பொ.சி. மன்றத்தில் ஒருமுறை தாம் பேசியது ''தினமணி'' பத்திரிகையில் தவறாகப் பிரசுரிக்கப் பட்டபோது, அவர் மிகுந்த வேதனையடைந்தார். அதற்குத் தாமதமின்றி மறுப்பெழுதி பிரசுரிக்கச் செய்தார். அந்த மறுப்புடன் ''தினமணி'' 19-2-56 இதழில் வெளியான செய்தி வருமாறு:

''சென்ற ஞாயிற்றுக்கிழமை ராயபுரம், கல்மண்ட பத்தில் ம.பொ.சி. மன்றத்தில் ஒரு நூல் நிலயத்தைத் திறந்து வைத்து ராஜாஜி பேசினார். அதுபற்றி, 'தினமணி' யில் பிரசுரிக்கப்பட்டுள்ள விவரங்கள் தனது கருத்துக் களையும், தொனியையும் சரியாக எடுத்துக் காட்டவில்லை என்று ராஜாஜி நமக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தை அப்படியே கீழே பிரசுரிக்கிறோம்.

''ம.பொ.சி. தனித் தமிழ் ராஜ்யம் கேட்பதாக நான் சொல்லவில்லை. திரு. கிராமணி அவர்களுடைய

கட்சியையும், கொள்கைகளையும் நான் நன்கு அறிவேன். அவர் கேட்பது தமிழகம் பாரதத்தினின்று பிரிவது அல்ல என்பது எனக்கு நன்கு தெரியும். பேசுவது கஷ்டம்; ரிப்போர்ட்டு செய்வது அதைவிடக் கஷ்டம். ஆயினும், கூட்டத்தில் இருந்த மக்கள் நான் சொன்னதைச் சரியாகவே தெரிந்து கொண்டார்கள் என்பதைக் கண்டேன். ரிப்போர்ட்டில் தவறுகள் இருப்பதற்கு வருந்துகிறேன். ம.பொ.சி. அவர்களுக்கும், எனக்குமுள்ள அன்பு, பரஸ்பர மதிப்பு, நம்பிக்கை இவற்றைப் பற்றியெல்லாம் அதிகமாகப் பேசப்பட்டது. அது ஒருவரியும் வரவில்லை.''

இதிலே, ராயபுரம் கூட்டத்தில் என்னைப் பெருமைப்படுத்திப் பேசியது 'தினமணி'யில் பிரசுரிக்கப் படாதது குறித்து ராஜாஜி வருத்தந் தெரிவித்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## மாணவர் பேச்சுக்கு மறுப்பு

*1967* - இல் சென்னை சட்டக் கல்லூரியில் மாணவர் மன்றத்தின் சார்பில் இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்த ஆண்டில்தான் தமிழக முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்த அறிஞர் சி.என். அண்ணாவும் ராஜாஜியும் அக்கூட்டத்தில் பேசினர்.

மாணவர் மன்றச் செயலாளர் பேசுவதற்கு என்னையும் அழைத்தார். ஆனால், மொழிப் பிரச்சினை யின் அணுகுமுறையிலே எனக்கும் ராஜாஜிக்கும் வேறு பாடு இருந்ததால், அழைப்பை ஏற்க மறுத்துவிட்டேன். அதனால், என்மீது கோபமடைந்த மாணவர் மன்றச் செயலாளர், சட்டக் கல்லூரிக் கூட்டத்திலே வரவேற்புரை நிகழ்த்தியபோது, கண்டன ரீதியில் என்னைப் பற்றித் துடுக்காக ஏதோ சொல்லிவிட்டார். அதைப் பொறுத்துக்

கொள்ள இயலாமல், அந்த மேடையிலே மறுப்பு தெரிவித்துப் பேசினார் ராஜாஜி.

''ம.பொ.சி. இந்தித் திணிப்பை ஆதரிக்கிறார் என்று மாணவர் தவறாக எண்ணிக்கொண்டு அவரைப் பற்றிக் கோபமாகப் பேசினார். ம.பொ.சி. இந்தித் திணிப்பை ஆதரிப்பவர் அல்ல. என்னையும் அண்ணாத்துரையையும் போல எதிர்ப்பவரே. ஆனால், எங்களுடைய இந்தி எதிர்ப்பானது ஆங்கில ஆதிக்கத்திற்கு உதவி புரிவதாக இருக்கிறது என்று ம.பொ.சி. கருதுகிறார். அந்தக் கருத்தைக் கட்டபொம்மன் பாஷையிலே வெளியிடுகிறார்.''

என்பது ராஜாஜி தந்த மறுப்புரையாகும். இப்படி எத்தனையோ மேடைகளிலே எனக்காகப் பரிந்து ராஜாஜி பேசியது உண்டு. ராஜாஜி இல்லாத மேடைகளில் யாரேனும் அவரைக் குறைகூறிப் பேசிவிட்டால் அவருக்குப் பரிந்து பேச நானும் தவறியதில்லை.

## எழுத்தாளர் மாநாடு

*1956* - இல் கல்கத்தாவில் அனைத்திந்திய எழுத்தாளர் மாநாடு நடைபெற்றது. அதிலே தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பிரதிநிதியாக நானும் கலந்துகொள்ள நேர்ந்தது. ஆனால், மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியானது, ''இந்தியாவின் மொழிப் பிரச்சினை'' என்னும் தலைப்பை யொட்டிய கருத்தரங்காக அமைந்தது. தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளின் சார்பில் நான் ஒருவன் மட்டுமே அதில் பேச அழைக்கப்பட்டேன்.

எனக்கு முன் பேசிய இந்தி மொழி வழங்கும் மாநிலங்களின் பிரதிநிதிகளிலே ஒன்றிருவர் ராஜாஜியைக்

குறைகூறினர். அவரை இந்தி மொழி படிப்பதையே விரும்பாதவராக வருணித்துக் கண்டித்தனர்.

எனது பத்து நிமிடப் பேச்சிலே ராஜாஜியின் நிலையை விளக்குவதற்கும் முயன்றேன். யான் தெரிவித்த கருத்து வருமாறு:

''இந்தி மொழியைத் தமிழர்களாகிய நாங்கள் முன்பே ஏற்றுக் கொண்டோம். ஆனால், உத்தியோக மொழியாக அல்ல; உறவு மொழியாக! தேசிய மொழியாக அல்ல; பொது மொழியாக! ஒரு மொழி தேசிய மொழியாக ஏற்கப்பட வேண்டுமாயின், அது தேசம் முழுவதிலுமுள்ள மக்களால் பேசப்படும் மொழியாக இருக்க வேண்டும். இந்திக்கு அந்த அந்தஸ்து இல்லை.

''நான் சக்கரவர்த்தி ராசகோபாலாச்சாரியாரைப் பின்பற்றுபவர்களிலே முக்கியமானவன் - முதல்வனுங் கூட! அந்த உரிமையோடு, ராஜாஜியின் நிலையை விளக்குவது எனது கடமை என்று கருதுகின்றேன்.

''ராஜாஜி, 1937 - ஆம் ஆண்டில் சென்னை ராஜ்ய முதலமைச்சராக வந்தபோது, உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். அதற்காக, தமது சொந்த ராஜ்யத்தைச் சேர்ந்த மக்களாலேயே அவர் வெறுக்கப்பட்டார். அவர்களுடைய கடுமையான எதிர்ப்புக்கும் இரையானார் என்பதை இந்தி மொழி பேசும் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். தமிழர் எல்லோரும் இந்தி படிக்க வேண்டும்; அதையும் கட்டாயப் பாடமாகக் கற்கவேண்டும் என்ற தமது பழைய கருத்தை ராஜாஜி இப்போது மாற்றிக் கொள்ள வில்லை; வற்புறுத்தி வருகிறார். இந்தியை அரசாங்க மொழியாகத் திணிப்பது ஒன்றைத்தான் அவர் எதிர்க்கிறார்.

''நண்பர்களே! மீண்டும் சொல்லுகிறேன்; இந்தி மொழியை அரசாங்க மொழியாக்க அவசரப்படாதீர்கள். தமிழ்நாட்டவராகிய நாங்கள், இந்தியை நன்றாகப் பயிலும்வரை காத்திருங்கள். அதிசீக்கிரத்திலே நாங்கள் இந்தி கற்று, உங்களைவிடப் புலமை பெறுவதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். வேண்டியது அவகாசம்தான். இன்றுகூட, வடமொழியில் மிகத் தேர்ந்த புலமை பெற்றவர்கள் தெற்கேதான் இருக்கிறார்கள். அவசரப்பட்டு நமக்குள்ளே இருந்து வரும் உறவைக் கெடுத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

*('செங்கோல்' 29-12-57 இதழில் வெளியானபடி)*

எனது தமிழ்ப் பேச்சை தமிழ் எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகளில் ஒருவராக வந்திருந்த பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

கல்கத்தா மாநாட்டில் நான் பேசியதற்கு மறுநாள் பிரதமர் நேருஜி மாநாட்டை முடித்து வைத்துப்பேசினார். மத்திய கலாச்சார அமைச்சர் ஹுமாயூன் கபீர் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தார்.

பொதுவாழ்வில் யான் முன்னேறிய போதெல்லாம் அதைக் கண்டு மகிழ்ந்து எனக்கு வாழ்த்துக் கூற ராஜாஜி தவறியதே இல்லை. 1955 - இல் நான் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டபோது சங்க வருடாந்திர மாநாட்டுக்கு அவர் அனுப்பிய செய்தி வருமாறு:

''தமிழ் எழுத்தாளர்களுக்குத் தலைவராக என்னுடைய நண்பர் சிவஞானம் அமைந்து இந்த ஆண்டு அலுவல்களை நடத்தப் போகிறார்கள். நல்ல எழுத்தும், நல்ல பண்பும் பெற்ற ஒருவர் தலைமை வகிக்க வருவது

எழுத்தாளர்களுடைய அதிருஷ்டம். ஒரு மொழியின் இலக்கியம் நல்ல துறையை விட்டுத் தாழ்ந்த வழியில் சென்றால், மக்கள் கெட்டுப் போவது நிச்சயம். மக்களின் மனம் கெட்டால் வேறு எவ்வளவு இருந்தும் பயனில்லை. பத்திரிகை விளம்பரங்களும், சினிமாப் படங்களும், அரசியல் விஷயங்களும் எப்படி இருந்தபோதிலும் தமிழில் வரும் கட்டுரைகளும், கவிதைகளும், பாட்டு களும் தெய்வத்தை மனதில் வைத்து எழுத வேண்டும். உள்ளத்தில் தெய்வத்தை நிறுத்திக் கொண்டால்தான் நல்ல எழுத்து காகிதத்தின் மேல் ஏறும்.''

தலைவர் ராஜாஜி எனது உடல் நலத்தில் மிகுந்த அக்கறை காட்டினார். ஆகஸ்டுக் கிளர்ச்சியில் சிறைப் பட்டதன் விளைவாக, ''குடற்புண்'' என்னும் கொடிய நோய்க்கு ஆளானேன். 1942 ஆகஸ்டு 13 - இல் நான் சிறைப்பட்டபோது எனது உடல்நிறை 119 பவுண்டாக இருந்தது. பதினைந்து மாத காலம் சிறைவாழ்க்கை நடத்தியதனால் 6-11-43 - இல் மருத்துவ காரணத்திற்காக அரசாங்கம் தானே விரும்பி என்னை விடுதலை செய்த போது, எனது உடல் நிறை 88 ஆகக் குறைந்திருந்தது. ஆம்; 31 பவுண்டு தசை குறைந்துவிட்டது.

## ''கிராமணியார் வரவில்லையா?''

நான் சிறை மீண்டபின், இராயபுரத்தில் தாழ்த்தப் பட்டோர் வாழும் சேரியொன்றில் நடந்த ராஜாஜி மன்ற ஆண்டு விழா மேடையில்தான் ராஜாஜியும் நானும் முதன் முதலாகச் சந்தித்தோம். அவர் கூட்டத்தின் தலைவர்; நான் பேச்சாளன். ராஜாஜி மேடைக்கு வந்தபோது, நான் அங்கு அமர்ந்திருந்தேன்.

தலைவர் மேடையை அடைந்தபோது, நான் எழுந்து நின்று ''வணக்கம்'' என்று சொன்னேன். அவர் என்னைக்

காணாததுபோல இருந்துவிட்டார். காரணம், அவர் அடையாளந் தெரிந்து கொள்ளாதபடி நான் இளைத் திருந்ததுதான். பேச்சாளர்களில் ஒவ்வொருவர் பெயரையும் சொல்லிச் சொல்லி அழைத்துப் பேச வைத்தார். என் பெயரைச் சொல்லி அழைக்க வேண்டிய நேரம் வந்த போது, நான் மேடையில் இல்லையென்று நினைத்துக் கொண்டு மன்றச் செயலாளரைப் பார்த்து, ''கிராமணியார் வரவில்லையா?'' என்று கேட்டார். அவரது அருகில் அமர்ந்திருந்த நான் மிகுந்த பணிவுடன் எழுந்து நின்று, ''இதோ இருக்கிறேன்'' என்றேன்.

என்னைப் பார்த்ததும் ஒரு நிமிட நேரம் அவர் திகைப்பெய்தியவராக மௌனத்துடன் இருந்துவிட்டு ''ஏன் இப்படி ஆனீர்கள்? உடம்புக்கு என்ன?'' என்று மிகுந்த அன்போடும் அனுதாப உணர்வோடும் கேட்டார்.

''பதினைந்து மாத சிறைவாசக் கொடுமையின் விளைவு'' என்று பதில் சொன்னேன். ''உங்களை எங்கோ வடநாட்டுச் சிறையில் கொண்டுபோய் அடைத்துவைத் தார்கள் என்று கேள்விப்பட்டேன்; அப்படித்தானே?'' என்று மிகுந்த இரக்க உணர்ச்சியோடு என் தலைவர் கேட்டார்.

''ஆமாம். மத்தியப் பிரதேசத்திலுள்ள அமராவதிச் சிறையில் அடைந்து வைத்தார்கள். பருவ வேறுபாடும் உணவு வேறுபாடும் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாமல் குடற்புண் ஏற்பட்டுவிட்டதால், போதுமான அளவில் உணவு உண்ண முடியாமல் அவஸ்தைப்பட்டேன். உடல் நிறையில் 31 பவுண்டு குறைந்துவிட்டது'' என்று சொன்னேன்.

எங்களிடையே நடந்த இந்த உரையாடலை மேடை யில் எங்களைச் சுற்றியிருந்த காங்கிரஸ்காரர்களும்,

கூட்டத்திற்கென வந்திருந்த ஒரு பகுதியினரும் கூர்ந்து கவனித்து என்பால் அனுதாபம் காட்டினர். பின்னர், கூட்டத் தலைவர் ராஜாஜியின் ஆணைப்படி சொற்பொழி வாற்றினேன்.

கூட்டம் முடிந்ததும், ''நாளை காலை என் வீட்டிற்கு வருகிறீர்களா?'' என்று கேட்டார். ''வருகிறேன்'' என்றேன். ''தவறக்கூடாது. கட்டாயம் வரவேண்டும்'' என்று மீண்டும் ஒருமுறை வற்புறுத்திச் சொன்னார்.

**உயிர் பிழைக்க உதவினார்!**

மறுநாள் காலை ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்றேன். அப்போது சென்னை அரசாங்கப் பெரிய மருத்துவ மனையில் டாக்டர் சீனிவாசன் என்பவர் மருத்துவராகப் பணிபுரிந்து வந்தார். அவர் முன்னாள் அட்வகேட் ஜெனரல் திரு.வி.பி. ராமன் அவர்களின் சிறிய தந்தையாவார். அவருக்குத் தம் கைப்பட எழுதிய கடிதம் ஒன்றை என் கையில் கொடுத்து, ''நாளை தள்ளிப் போடாமல் உடனே போய் பெரிய மருத்துவமனையில் டாக்டர் சீனிவாசனிடம் என் கடிதத்தைக் கொடுத்து அவர் சொல்கிறபடி நடந்துகொள்ளுங்கள்'' என்றார்.

இதைச் சொன்னபின் ஒரு கணம் மௌனத்தில் ஆழ்ந்து, என் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, ''எப்படி யும் நீங்கள் பிழைத்தாக வேண்டும். டாக்டர் சொல்கிறபடி நடந்து கொள்ளுங்கள்'' என்று சொல்லி என்னை அனுப்பி விட்டார்.

அவர் சொன்னபடி பெரிய மருத்துவமனைக்குச் சென்று டாக்டர் சீனிவாசனிடம் கடிதத்தைக் கொடுத்த போது, அவர் பொது வார்டில் என்னைச் சேர்த்து சிகிச்சையைத் தொடங்கினார். ராஜாஜியின் அன்புக்

கட்டளைக்குப் பணிந்து, தொடர்ந்து பத்து நாட்கள் மருத்துவமனையில் தங்கி குடற் புண்ணுக்குச் சிகிச்சை பெற்றேன்.

அப்போது கம்யூனிஸ்டுத் தலைவர்களிடம் ராஜாஜிக்கு நெருக்கமான நட்பு இருந்தது. அதன் காரணமாக, திரு.பி. ராமமூர்த்தி அவர்களை அழைத்துப் பேசி, என்னைக் காப்பாற்றுவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லி வைத்தார். அவரும் உடன் பிறவாச் சகோதரர் போல நான் மருத்துவமனையில் இருந்த காலத்திலே நாள்தோறும் வந்து என்னைக் கவனித்துச் செல்வார். எனக்கு சிகிச்சையளித்த டாக்டர் சீனிவாசன் திரு. ராமமூர்த்திக்கும் நண்பராதலால், அவரிடம் தமக்கிருந்த நட்பைப் பயன்படுத்தி என்னைக் காப்பாற்ற திரு.பி.ஆர் முயன்றார். எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கை ஏற்படும் வகையில் என் உடம்பு தேறியது.

**சட்டையைப் பிடித்திழுப்பார்!**

ராஜாஜியும் நானும் சேர்ந்து பேசிய மேடைகளிலே நான் ஆவேசமாகப் பேசுவதைத் தடுக்க முயல்வார். நான் குரலை உச்சஸ்தாயியில் எழுப்பிப் பேசும்போது, அருகிலிருக்கும் ராஜாஜி என் சட்டையைப் பிடித்திழுத்து, என் ஆவேசத்தைக் குறைக்க முயல்வார். இது, நாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு மேடையிலும் தவறாமல் நடந்து வந்தது.

''எதிரே ஒலிபெருக்கி இருப்பதைக்கூட மறந்து சப்தம் போட்டுப் பேசுகிறீர்களே; குடற்புண் அதிகப்பட்டு, இரத்தம் வெளிப்படும் அபாய நிலை வந்துவிடுமே'' என்று சொல்லி எத்தனையோ முறை என்னை எச்சரித்திருக்கிறார்.

குடற்புண் அதிகப்பட்டு வயிற்றுவலி என்னை அதிகமாக வாட்டத் தொடங்கும்போது அடிக்கடி பெரிய மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவது வழக்கமாக இருந்தது. அந்த வழக்கப்படி ஒருமுறை நான் பெரிய மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறலானேன். இதனைப் பத்திரிகை வாயிலாக அறிந்த ராஜாஜி, மருத்துவ மனை உயர் அதிகாரி(டீன்) அவர்களுக்குப் போன் செய்து மிகுந்த கவலையோடு எனது உடல்நிலை பற்றி விசாரித்தறிந்தார். எனக்கு இந்தச் செய்தி கிடைத்ததும், ''பயப்பட வேண்டாம்; உடல்நிலை தேறி வருகிறது'' என்று என் தலைவருக்கு ஆறுதல் கடிதம் எழுதினேன். பதிலுக்கு அவர் எழுதிய கடிதம் வருமாறு:

நௌரோஜி ரோடு,<br>கீழ்ப்பாக்கம்.<br>சென்னை.<br>9-12-65.

அன்பு கடிதம் வந்தது. உங்கள் உடல் நிலையை ஏன் இன்னும் சரிப்படுத்திக் கொள்ளாமல் இருந்து வருகிறீர் கள்? ஆசீர்வாதம்.

ச. இராசகோபாலாச்சாரி.

ஒரு சமயம் ஏதோ ஒரு விஷயம்பற்றி ராஜாஜிக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தின் நகல் என் கைவசமில்லை. எதுபற்றி எழுதினேன் என்பதும் நினைவில் இல்லை. ஆனால் ராஜாஜி எழுதிய பதில் கடிதம் என் கைவசம் இருக்கிறது. அது வருமாறு:

நமஸ்காரம். *28-9-65*

*24*-ஆம் தேதி கடிதம் எதிர்பாராத மகிழ்ச்சிப் பொருள். ''கடிதத்தில் பிழையிருப்பின் மன்னிக்க வேண்டும்'' என்று எழுதியிருக்கிறீர்கள். என்பால் காட்டும் அன்பு தவிர வேறு எந்த பிழையும் இல்லை.

உண்மை அன்பும் ஆசியும்.

*ச. இராசகோபாலாச்சாரி*

என்னைப் பார்க்கும் போதெல்லாம், ''குடற் புண்ணுக்கு அறுவை சிகிச்சை செய்வதை ஏன் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறீர்கள்? வயதாகிவிட்டால் அப்புறம் செய்து கொள்ள முடியாது'' என்று சொல்லிய வண்ணமிருந்தார்.

அவர் மறைந்த பின்னர் *1981* நவம்பரில் நான் சென்னை பெரிய மருத்துவமனையில் குடற் புண்ணுக்கு டாக்டர் மதனகோபால் அவர்கள் தூண்டுதலால் டாக்டர் சரத்சந்திராவிடம் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். அப்போது ''ராஜாஜி இருந்தால் மகிழ்ச்சி அடைவாரே!'' என்று என் மனம் எண்ணியது. ஆனால் அவரது ஆன்மா மகிழ்ந்திருக்கும்.

*1964* - ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மொழிப் பிரச்சினை காரணமாக ராஜாஜிக்கும் எனக்கும் வெளிப் படையாகக் கருத்துப் போர் நடைபெற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது. அதனால்கூட எங்க ளிடையே நட்பு நலியவில்லை.

## நண்பரா? தலைவரா?

*19-1-64*-இல் நான் மலேசியாவுக்குப் புறப்பட விருந்தேன். ஒரு மாதகாலம் அங்கு சுற்றுலாச் செய்து

தமிழர் மத்தியிலே தமிழ்த் தொண்டாற்றத் திட்டமிட்டிருந்தேன். 18-1-64-இல் சென்னை மாவட்ட தமிழரசுக் கழகம் மயிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் என்னை வழியனுப்பி வைக்க, விருந்துக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து இருந்தது. அந்தக் கூட்டத்திற்கு ராஜாஜியை அழைக்க வேண்டுமென்று விரும்பினேன். அன்றிருந்த விவாதச் சூழ்நிலையிலே அழைத்தால் வருவாரா என்ற ஐயப்பாடு என் கழகத்தின் முன்னணித் தலைவர்களுக்கு இருந்தது. அதனால் நான் கடிதம் தந்தால் தாங்கள் சென்று நேரில் அழைப்பதாக அவர்கள் சொன்னதன் பேரில் கடிதம் தந்தேன். ராஜாஜியும் வர இசைவு தெரிவித்தார். என் கடிதத்திற்குப் பதில் கடிதமும் போட்டார்.

நான் அவரிடமிருந்த நட்பைக் கைவிட்டுவிட்டதாக ஒரு ஐயப்பாடு அவருக்கு ஏற்பட்டதோ என்னவோ; அவர் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து எனக்கு இந்த ஐயப்பாடு ஏற்பட்டது. அந்தக் கடிதம் வருமாறு:

15-1-64

அன்பு நிறைந்த சிவஞானம் அவர்களுக்கு,

அன்புடனும், போற்றுதற்குரிய பொறுமையுடனும் என்னை ஒரு நண்பனாக மதித்து வருவதற்கு நன்றி. கடிதம் வந்தது. வணக்கம்.

இராசகோபாலாச்சாரி.

அவர் எழுதிய மேற்கண்ட கடிதத்திலுள்ளபடி அந்த மூதறிஞரை என் நண்பராக அல்லாமல், என் அரசியல் தலைவராக, பொதுவாழ்க்கையில் யான் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளைத் தன்னுடைய வாழ்க்கை மூலம் காட்டி, என்னை வழிநடத்திச் செல்லும் ஞான

குருவாகக் கருதி வந்திருக்கிறேன். ஆயினும், மொழிப் பிரச்னையால் எங்களிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைக்கிடையிலும் நான் அவரை கடிதம் எழுதி அழைத்ததால், அதற்காக நன்றி கூறி அவர் ஆறுதலடைந் தார் போலும்! அவருடைய கடிதத்திற்கு,

''அன்புடைப் பெரியீர்,

வணக்கம். தங்கள் *15-1-64* கடிதம் கிடைத்தது. அக்கடிதத்திலே ''என்னை ஒரு நண்பனாக மதித்து வருவதற்கு நன்றி'' எனக் குறிப்பிட்டிருந்தது என்மனத்திற்கு வருத்தத்தைத் தந்தது. எனக்கு மொழிப் பிரச்சினையில் தங்களுடன் எவ்வளவுதான் கருத்து வேற்றுமையிருப்பினும், எனது சொந்த வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் தங்களை என் குருவாக மதித்து ஒழுக்க நெறிகளைப் பயின்று வருகிறேன். நன்றி.''

என்று பதில் எழுதினேன்.

**மலேயா தமிழருக்கு...**

மயிலை உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடந்த விருந் துபசாரக் கூட்டத்திலே அப்போதைய தமிழக முதல்வர் திரு.எம். பக்தவத்சலனாரும், அனைத்திந்திய காங்கிரசின் தலைவராக இருந்த திரு.கு. காமராசரும் ராஜாஜியுடன் சேர்ந்து கலந்துகொண்டு எனக்கு வாழ்த்துக் கூறினர். விருந்துக் கூட்டத்திலே ராஜாஜி பேசியது வருமாறு:

''ம.பொ. சிவஞானம் மலேசியாவுக்குப் போகிறார். மலேசிய சர்க்காரும் மக்களும் தற்போது தொந்தரவில் உள்ளனர். *1946* - ஆம் வருடத்தில் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது நாம் மகிழ்ச்சி அடைந்தது போல

மலேசிய நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டிய காலம் இது. ஆனால் ஆபத்தான விரோதிகளால் போர் வருமோ என்ற சங்கடத்தில் மலேசியா மக்கள் தற்போது உள்ளனர்.

''இந்தச் சமயத்தில் தமிழ் நாட்டின் பிரதிநிதியாக மலேசியாவுக்குப் போகிறார் ம.பொ.சி. அந்தத் தேச சர்க்காருக்கு திருப்தி அளிக்கும் வகையில் வேலை செய்ய வேண்டும். தமிழ் பயிலவேண்டும் என்று ம.பொ.சி. அங்கு போய்ப் பேசினால் பயனில்லை. பணம் சம்பாதிப் பதற்காகத் தமிழர்கள் மலேசியாவுக்குப் போனார்கள். அங்கு பணம் சம்பாதித்து அங்கேயே செலவு செய்ய வேண்டிய நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மலேசியாவுக்கு ஆபத்து ஏற்படும் சமயத்தில் அந்த நாட்டுக்குப் பக்கபலமாக அங்குள்ள தமிழர்கள் நிற்க மாட்டார்கள் என்ற தவறான கருத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ம.பொ.சி.க்கு நான் யோசனை கூறுகிறேன். 'மலேசியா தேசத்து மக்களாகிய நீங்கள் உங்களில் குறைந்த பட்சம் 100 பேர்களாவது மலேசியர் ராணுவத்தில் சேர வேண்டும்' என்று அங்கு தமிழர்களை ம.பொ.சி. வற்புறுத்த வேண்டும். வெறும் பணம் சம்பாதிப்பதோடு நில்லாமல் மலேசியா நாட்டின் கூட்டாளிகளாகவும் நடந்துகொண்டு அந்த நாட்டிற்காக உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை அங்கு ஏற்படச் செய்ய வேண்டும். 'தமிழர்கள் வீரர்கள்' என்று பேசுவதில் பயனில்லை. மலேசியா அன்னிய நாடாச்சே, நாம் எதிலும் கூட்டுச் சேராதவர் ஆச்சே... என்று கருதி, பணம் சம்பாதிப்பதில் மட்டும் அக்கறை செலுத்தினால், மலேயா தமிழர்களுக்கு மரியாதை இல்லாமல் போய்விடும்.

''இதன் அவசியம் நான் சொல்லாமலே ம.பொ.சி.க்குத் தெரியும். நான் வயது முதிர்ந்தவன் என்ற முறையில் ஆசிர்வாதத்தையும், நண்பன் என்ற வகையில் சில ஆலோசனைகளையும், அன்பு கொண்டவன் என்பதால் அவரது பயணம் வெற்றியுடன் அமையவும் பிரார்த்திக்கிறேன்.''

**காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் வாழ்த்து**

''ஸ்ரீமான் சிவஞான கிராமணியார் தமிழுக்காகப் பாடுபட்டவர். இப்போதும் பாடுபடுபவர். இனியும் பாடுபடுவார். அவரது வாழ்நாள் முழுவதும் தமிழ்மொழி ஒன்றுக்காகவே பாடுபடுவார். மொழித் துறையில் அவரோடு கருத்து வேறுபாடு இருக்கலாம். இருக்கத்தான் செய்யும். அது அரசியல் விஷயம். ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு அவர் செய்துவரும் தொண்டுயாராலும் மறுக்க முடியாததாகும். மலேயாவில் உள்ள தமிழர்கள் இயற்கையாகவே தமிழார்வம் உள்ளவர்கள். அவர்களுக்கு கிராமணியாரின் சொல்வன்மை மேலும் ஆர்வத்தை வளர்க்கும். அவர் வெளிநாடு செல்வது இதுதான் முதல் தடவை அல்ல. முன்னர் பர்மா போன்ற நாடுகளுக்கும் அவர் போயிருக்கிறார். இன்னும் பல நாடுகளுக்குச் சென்று தமிழ்ப் பண்பை வளர்க்க வேண்டுமென்பது என் ஆசை. ஏனென்றால் உலக மக்களும் தமிழ் மக்களும் ஒருவரோடொருவர் பிணைந்துள்ளனர். தமிழ் மக்கள் தனித்து வாழ முடியாது. ஆகவே பலமொழிகளைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. என்றாலும் தாய் மொழிக்கு விசேஷ அந்தஸ்து கொடுக்க வேண்டியது நமது கடமை. மலேயா செல்லும் அவர் ஆரோக்கியத்துடனும் வெற்றியுடனும் திரும்ப வாழ்த்துகிறேன்.''

## முதலமைச்சர் எம். பக்தவத்சலனார் வாழ்த்து

''திரு.ம.பொ.சி. தமிழ் மொழியில் அளவற்ற பற்றுக் கொண்டவர். தமிழுக்காக அவர் அரும்பாடுபட்டு வருகிறார். கன்னித் தமிழ் என்று சொல்கிறோமே அதன் சுவை அனைத்தையும் நன்கு அறிந்தவர் திரு.ம.பொ.சி. இந்த நாட்டிலுள்ள மக்களுக்குத் தமிழ்ப்பற்றை ஊட்டவும், தமிழ் நெறியை - பண்பைப் பரப்பவும் அவர் அரும்பாடுபட்டு வருகிறார். அவரது உடல் ஆரோக்கியத் துடன் இல்லை என்றாலும், தம் மனத்திலே அவர் கொண்டுள்ள கொள்கைத் தெம்பு அவருக்கு ஆரோக்கி யத்தை அளித்து வருகிறது. அவர் வெற்றியுடன் தமது பயணத்தை முடித்துவரப் பிரார்த்திக்கிறேன்.''

## நாஸிக் சம்பவம்

எத்தனையோ சோதனைகளை வென்று ராஜாஜி யிடம் பற்றும் பாசமும் காட்டி வந்த நான்கூட, சில சந்தர்ப்பங்களில் அவரைத் தவறாக உணர்ந்து, அவர்பால் வருத்தங்கொள்ள நேர்ந்தது. அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் வருத்தம் ஏற்பட்டதற்கான காரணத்தை அவருக்கு எழுதி, உண்மை நிலையை அறிந்து ஆறுதல் அடைந்த துண்டு. அவற்றுள் ஒரு சம்பவத்தை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

*1950* - இல் ராஜாஜி மத்திய அரசில் அமைச்சராக இருந்தார். ஆம்; கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின். இரண்டாவது முறையாக மத்திய அமைச்ச ரவையில் சேர்ந்திருந்த நேரம் அது.

மகாராஷ்டிரத்திலுள்ள நாஸிக் நகரில் காங்கிரஸ் வருடாந்திர மகாசபை பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன் தலைமையில் நடந்தது. நான் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளில்

ஒருவனாகச் சென்று, அதில் கலந்துகொண்டேன். மூன்று நாட்கள் மகாசபை நடந்தது. ஒருநாள் மாலை பிரதிநிதிகள் தேனீர் அருந்துவதற்காக மகாசபை அரைமணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது.

## ஆறுதல் மொழி

காரியக் கமிட்டி உறுப்பினர்கள் தேநீர் அருந்தும் தனியிடத்திற்குத் திரு. காமராசர் என்னை அழைத்துச் சென்றார். அவர் காரியக் கமிட்டி உறுப்பினராக இருந்தார். நாங்கள் சென்ற நேரத்தில், சர்தார் வல்லபாய் படேல், பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு ஆகியோர் அங்கு தேநீர் அருந்திக் கொண்டிருந்தனர். ராஜாஜியும் அங்கு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டதும் அருகில் சென்று, ''வணக்கம்'' என்று சொன்னேன். அவர் என்னைக் கண்டுகொள்ளாதவர் போல அப்பால் சென்றுவிட்டார். என் பக்கத்திலிருந்த திரு. காமராசர் இதைக் கவனித்துக் கொண்டிருந்தார். என் மனம் பெரிதும் வேதனைப்பட்டது. என் தலைவர் வேண்டுமென்றே என்னைப் புறக் கணித்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை யென்றாலும், காரணத்தை அவர் மூலமே அறிய விரும்பி, நாஸிக்கிலிருந்து சென்னை திரும்பியதும் அவருக்குக் கடிதம் எழுதினேன். இதற்காக மட்டுமே எழுதவில்லை. கட்டபொம்மன் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி கேட்டு எழுதிய கடிதத்திலே, நாஸிக் சம்பவத்தால் ஏற்பட்ட மனவேதனையையும் குறிப்பிட்டு எழுதினேன். ராஜாஜி உடனே தம் கையாலேயே பதில் எழுதினார். அதனை இங்கு அப்படியே தருகிறேன்.

திலலி,
28-9-50

ஆசீர்வாதம்.

உங்களுடைய 27 - ந் தேதி கடிதம் பார்த்தேன். நாஸிக் கூட்டத்தில் நீங்கள் இருந்ததாகக் கனவிலும் எண்ணவில்லை. இதை அறிந்திருந்தால் ஒருகாலும் சந்திக்காமலிருந்திக்கமாட்டேன். யாரும் சொல்லவில்லை.

கட்டபொம்மன் விழாவுக்கு என் மனமார்த்த ஆசிகள். நம் தமிழர்தம் பெருமையை அறிந்து பெருத் தன்மை வழிகளில் நடக்க எண்ணம், பேச்சு, செயல் இவை எல்லாவற்றையும் பழக்குவதில் என்னைவிட யாருக்கு மகிழ்ச்சி தரும்?

இங்ஙனம்
இராசகோபாலாச்சாரி.

பெருந்தலைவர்களோடு அடிக்கடி கடிதப் போக்கு வரத்து நடத்தும் வழக்கம் என்னிடம் இல்லை. என்னுடைய இந்தப் பழக்கத்திற்கு ராஜாஜியும் விலக் கல்ல. அவருக்கு எப்போதோ ஒருமுறைதான் கடிதம் எழுதினேன். அப்போதெல்லாம் அவர் தவறாமல் பதில் எழுதிவந்தார். ஒரு சந்தர்ப்பத்தில்கூட அவர் பதில் எழுதத் தவறியதே இல்லை. நாங்கள் சென்னையிலேயே வாழ்பவர்களாதலாலும், அவசியமேற்பட்டபோது நேரில் சந்தித்துப் பேச முடிந்ததாலும், கடிதம் மூலம் தொடர்பு கொள்வதற்கான சந்தர்ப்பம் மிகவும் குறைவாகவே ஏற்பட்டது.

# ராஜாஜியிடமிருந்து பிரிந்து நிற்க விரும்பினேன்!

தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலே பிரசித்தி பெற்ற திருப்பரங்குன்றம் நிகழ்ச்சியின்போதும், ராஜாஜியின்பால் யான் வருத்தங்கொண்டு கடிதம் எழுத நேர்ந்தது.

திருப்பரங்குன்றத்தில் 1945 அக்டோபர் இறுதியில் நடந்த தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலே, ராஜாஜியை ஆதரிப்போருக்கும், அவரை எதிர்க்கும் காமராசர் கோஷ்டியாருக்குமிடையில் கடுமையான பலப்பரீட்சை நடந்தது. திருப்பரங்குன்றத்தில் மாகாணக் கமிட்டி உறுப்பினரேயன்றி, உறுப்பினரல்லாத காங்கிரஸ் ஊழியர்களும், மாகாணத்தின் பல மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கில் திரண்டு வந்து திருப்பரங்குன்றத்தை ஒரு போர்ப்பாசறையாகவே மாற்றிவிட்டனர்.

## திருச்செங்கோடு தேர்தல்

திருச்செங்கோட்டிலிருந்து ராஜாஜி தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட முறையை ஆட்சேபித்து அந்தத் தேர்தல் செல்லாதென்று த.நா.கா.க. தலைவர் திரு. காமராசர் அறிக்கை விட்டி

ருந்தார். அதுபற்றி விவாதித்து முடிவு செய்யத்தான் திருப்பரங்குன்றத்தில் மாகாண கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. திருச்செங்கோட்டில் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டது செல்லத்தக்கதே என்ற முடிவுடன் மாகாணக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்னையிலிருந்து ராஜாஜி மதுரைக்கு வந்தார்.

அப்போது அவரை வரவேற்று மதுரை நகரில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்கு முந்திய நாளில் நான் பேசுவதற்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் எதிர்தரப்பினரான காங்கிரஸ் சகோதரர்கள் குழப்பம் செய்தனர். மறுநாள் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய ராஜாஜி என்னைப் பற்றிக் கூறியது வருமாறு:

''என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாகக் கிராமணியாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணம் உண்டு. கிராமணியார் வீரஅபிமன்யு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து என்னை அவர் உள்ளே அழைத்துச் செல்கிறார். அதனால் என்னை எதிர்ப்பவர்கள் அவர்மீது அதிகமாக ஆத்திரப்படுகிறார்கள். என்னைத்தான் ''ஆகஸ்டுத் துரோகி'' என்கிறார்கள். கிராமணியார் ஆகஸ்டுத் தியாகியாயிற்றே! அவரது உடம்பே சொல்லுமே அவர் ஆகஸ்டுத் தியாகி என்று.''

## திருப்பரங்குன்றம் ''பாசறை''

மதுரைக்கூட்டத்தில் என்னைப் பற்றியே ராஜாஜி நெடுநேரம் பேசினார். எதிர்தரப்பினர் என்மீது காட்டிய

வஞ்சினம் அந்த அளவுக்கு அவர் என்மீது அன்பு காட்டும் படிச் செய்துவிட்டது. ராஜாஜி பேசுவதற்கு முன் அக்கூட்டத்தில் நானும் பேசினேன்.

ராஜாஜி சென்னையிலிருந்து மதுரைக்கு வருகை தந்த அன்று பிற்பகலில் திரு. வைத்தியநாத ஐயர் வீட்டில் அவரை ஆதரிப்போரில் முக்கியஸ்தர்கள் கூடி மேல் நடக்க வேண்டியது பற்றி ஆலோசித்தோம். அக்கூட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர், மாகாணக் கமிட்டிக் கூட்டத்திற்கு த.நா.கா.க. தலைவர் ராஜாஜிக்கு அழைப்பு அனுப்பாதது காங்கிரஸ் விதிமுறைக்கு விரோதமானது என்று கூறினர். திருச்செங்கோட்டிலிருந்து மாகாணக் கமிட்டி உறுப்பினராக ராஜாஜி தேர்ந்தெடுக்கப் பட்டது. த.நா.கா.க. வின் விதிப்படியேயாதலால், அவர் திருப்பரங்குன்றம் கூட்டத்தில் கலந்துகொள்ளத்தான் வேண்டும் என்று வாதாடினர். மற்றொருசாரார், இதனை எதிர்த்து வாதாடினர். நானும் ராஜாஜிக்கு அதிகார பூர்வமாக அழைப்புவராத நிலையில் அவராக வலுவில் சென்று கூட்டத்தில் கலந்து கொள்ள முயல்வதால் மோச மான எதிர் விளைவு ஏற்படக்கூடுமென்றும், அதனால் பிளவுபட்ட கோஷ்டிகளிரண்டும் என்றுமே ஒன்றுபடுவது சாத்தியமில்லாமல் போய்விடக்கூடுமென்றும் சொல்லி எச்சரித்தேன். மாகாணக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும் போது அவர் மதுரையிலிருக்கக் கூடாதென்றும் கூறினேன்.

மாகாண கமிட்டிக் கூட்டத்தில் வலுவில் சென்று கலந்து கொள்ளும் நோக்கத்துடன்தான் ராஜாஜி மதுரை வந்தாரென்றாலும் நானும் வேறு சில பிரமுகர்களும் அதனைத் தவிர்க்குமாறு கோரியதால் அவரை திருக்குற்றாலத்திற்கு அனுப்பிவிட முடிவாயிற்று.

மதுரையைவிட்டுப் புறப்படும்போது எங்கள் குழுவி லிருந்த பிரமுகர்களில் சிலரைப் பார்த்து, ''கிராமணி யாரைத் திரும்பவும் உயிரோடு நீங்கள் என்னிடம் ஒப்புவிக்க வேண்டும்'' என்று சொன்னார். என்னைப் பார்த்து, ''திருப்பரங்குன்றம் கூட்டம் முடிந்ததும் திருக் குற்றாலம் வந்து என்னுடன் தங்குங்கள்'' என்றார். நானும் இசைவு தெரிவித்தேன்.

இதன் பின்னர், ராஜாஜி மீது வருத்தங்கொண்டு, அவரது கோஷ்டியிலிருந்து விலகுவது என்ற முடிவுக்கு நான் வருவதற்கான சூழ்நிலை மதுரையில் உருவாகி விட்டது.

திருப்பரங்குன்றம் நிகழ்ச்சி பற்றி ''எனது போராட் டம்'' என்னும் எனது சுயசரிதை நூலில் *(பக்கம் 312 - 329)* விரிவாகக் கூறியுள்ளேன். ராஜாஜி கோஷ்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அவருக்கு தந்திகொடுத்து சம்பந்தமான பகுதிகளை மட்டும் அந்நூலிலிருந்து எடுத்து இங்கு தருகிறேன். அது வருமாறு:

''ராஜாஜி திருக்குற்றாலம் செல்லப் புறப்பட்டபோது நான், மதுரை ஏ. வைத்தியநாத ஐயர், திருச்சி இரத்தின வேலுத்தேவர், டாக்டர் டி.எஸ்.எஸ். ராசன், பட்டுக் கோட்டை என். நாடிமுத்துப் பிள்ளை, டாக்டர் ப. சுப்பராயன், முகையதீன் மரைக்காயர் ஆகிய எழுவரும் ஒரு குழுவாக இருந்து ஆலோசித்துச் செயல்பட வேண்டுமென்று ராஜாஜி கூறினார்.

''ராஜாஜி சென்ற பிறகு திடீரென்று எனக்கு ஒரு புதுவழி தோன்றியது. திருப்பரங்குன்றத்தில் மறுநாளைக்கு மாகாண காங்கிரஸ் கமிட்டிகூடும் வரையில் காத்திராமல்

மதுரையில் திரண்டுள்ள மாகாணக் கமிட்டி அங்கத்தினர் களிலே ஒவ்வொருவரையும் தனித்தனியே அணுகி, திருச்செங்கோடு தேர்தல் முடிவுக்கு ஆதரவாக அவர் களுடைய கையெழுத்துக்களைப் பெறுவதென்பதே எனக்குத் தோன்றிய யோசனை. கட்சிக்குள் தோன்றும் கோஷ்டிப் பூசலிலே கையெழுத்து வேட்டையாடும் 'திருப்பணி'யை முதன் முதலில் தொடங்கி வைத்தவன் நான்தானோ என்னவோ!

''இதன்படி கையெழுத்து வேட்டையில் வேறு சில சகாக்களையும் சேர்த்துக்கொண்டு இறங்கினேன். வியப் பென்னவென்றால் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்களுடைய ஒப்புதல் கையெழுத்துக்களைப் பெற முடிந்ததுதான்.

''அன்றிரவு எட்டு மணிக்குத் திருப்பரங்குன்றத்தில் முகாம் செய்திருந்த திரு. காமராசரை அணுகி, திருச்செங் கோட்டிலிருந்து ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததை ஆதரித்துக் கையெழுத்துப் பெற்றிருந்த கடிதத்தை அவரிடம் கொடுத்தேன்.

''அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கம் வர வில்லை. ஆம்; திருச்செங்கோடு தேர்தலுக்கு ஆதரவாக மாகாண காங்கிரஸ்கமிட்டி உறுப்பினர்களில் பெரும் பாலோருடைய கையெழுத்துக்களைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சிதான். மகிழ்ச்சி மிகுதியாகிவிட்டாலும் தூக்கம் வராதல்லவா! ஆனால், என் மகிழ்ச்சி இருபத்து நான்கு மணி நேரம்கூட நீடிக்கவில்லை.

‘‘திருச்செங்கோடு தேர்தலுக்கு ஆதரவாக மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களில் பெரும்பாலோர் கையொப்பமிட்டிருப்பதை அறிந்த காமராசர், அதன் விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் திரைமறைவில் தந்திரங்களைக் கையாண்டார்.

‘‘எங்கள் கோஷ்டியினரான கே. சடகோபன், தூத்துக்குடி கிட்டு ஆகிய இருவரையும் தனியே அழைத்துப் பேசி,

‘‘ராஜாஜி திரும்பவும் காங்கிரசில் சேர்ந்ததை என் இரு கைகளையும் நீட்டிப் பெரு மகிழ்வுடன் வரவேற்பதாக மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கூட்ட ஆரம்பத்திலேயே நான் கூறிவிடுகிறேன். அத்துடன், வரப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் களைத் தேர்ந்தெடுப்பதில் ராஜாஜி கலந்து கொள்ளப் படுவார் என்றும் உறுதி கூறுகிறேன். திருச்செங்கோடு தேர்தல்பற்றி இரண்டு தரப்பிலும் கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். சச்சரவுக்கு முடிவுகட்டி, இரு தரப்பினரும் சமரசமாகப்போக இதுதான் வழி.’’ என்ற கருத்தடங்கிய கடிதம் ஒன்றை அவர்கள் கையில் கொடுத்து, குற்றாலத்தில் தங்கியிருந்த ராஜாஜி யிடம் அவர்களைத் தூதனுப்பினார் கு. காமராசர்.

‘‘எங்கள் கோஷ்டியிலே இருவர் எதிர்க் கோஷ்டித் தலைவரால் தூண்டப்பட்டு திருக்குற்றாலத்திற்குத் தூது சென்றது அவர்கள் திரும்பும் வரையில் எனக்குத் தெரியாது. அப்படித் தெரியாமல் வைத்திருக்க வேண்டும்

என்பது முன் ஏற்பாடு. ஆனால், எங்கள் கோஷ்டியினரிலே திரு.ஏ. வைத்தியநாத ஐயருக்கு மட்டும் இது முன்னதாகவே தெரியும் என்பதைப் பிறகுதான் அறிந்தேன்.

''தன்னிடம் தூது வந்தவர்களிடம் 'இது கிராமணியாருக்குத் தெரியுமா? அவர் இதற்கு இசைவு தெரிவித்தாரா?'' என்று ராஜாஜி கேட்டதாகப் பின்னர் எனக்குத் தெரியவந்தது. ஆனால், எனக்குத் தெரியாமல் இந்த ஏற்பாடு திரைமறைவில் நடந்திருக்கிறது என்பதைத் தூதுவரிடமிருந்து தெரிந்துகொண்ட பின்னும் காமராசர் கடிதத்தை ராஜாஜி ஏற்றுக் கொண்டார்.

''திருக்குற்றாலத்திற்குத் தூது சென்றவர்கள் மதுரை திரும்பிய பின்னர்தான் திரு. காமராசரால் பிரரேபிக்கப் பட்டு ராஜாஜியால் ஆமோதிக்கப்பட்ட சமரசத் திட்டம் என்னிடம் அவர்களால் காட்டப்பட்டது. அதைப் பார்த்தபோது நான் ஆத்திரம் அடைந்ததோடு, அவமானமும் அடைந்தேன். யாருக்காக என் உயிரையே பணயம் வைத்துக் காமராஜ் கோஷ்டியாருடன் போராடிக் கொண்டிருந்தேனோ, அவரும், அவரது அந்தரங்க சகாக்களில் சிலரும் என்னைப் புறக்கணித்துவிட்டுத் திரு. காமராசரோடு சமரசம் செய்துகொண்டது என்னை வெட்கத்தில் ஆழ்த்தியது. அந்தச் சமரசம் நிலைக்காது; அதை ஏற்றுக் கொண்ட ராஜாஜி ஏமாற்றப்படுவார் என்பதை உணர்ந்தபோது, என் மனவேதனை அதிகரித்தது.

''அக்டோபர் *30* - ஆம் தேதி காலை தமிழ் மாகாண காங்கிரஸ் காரியக் கமிட்டி திருப்பரங்குன்றத்தில் கூடிச் சில தீர்மானங்களை நிறைவேற்றி அதைப் பத்திரிகை

களுக்கு அனுப்பாமல் மறைத்து வைத்திருந்தது. நிருபர்கள் கேட்டதற்கு ''காரியக் கமிட்டி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. அவை மாகாணக் கமிட்டி முன்பு வைக்கப்படும்'' என்று கூறினார் காமராசர்.

''திருச்செங்கோடு தேர்தல்பற்றி ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா?'' என்று நிருபர்கள் கேட்டதற்கு, ''இன்று மாலைவரை பொறுத்திருங்கள்'' என்று கூறி மழுப்பிவிட்டார்.

''திருப்பரங்குன்றத்தில் மாகாண காங்கிரஸ் கமிட்டி கூடியது. மாகாணக் கமிட்டியின் தலைவர் என்ற காரணத்தால் திரு.கு. காமராசரே தலைமை வகித்தார். முன்னுரையாக மூன்று நிமிடநேரம் பேசினார். தமது பேச்சிலே, ராஜாஜி காங்கிரசுக்குத் திரும்பியதை மிகுந்த மகிழ்ச்சியோடு தாம் (தம்முடைய இரு கரங்களையும் நீட்டிக் காட்டி) வரவேற்பதாகக் கூறினார். அத்துடன், 1946 - இல் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதிலும் ராஜாஜியின் ஆலோசனை கோரப்படும் என்றும் உறுதி கூறினார்.

தலைவரின் முன்னுரைக்குப்பின், முன்னரே காரியக் கமிட்டி நிறைவேற்றியிருந்த தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆகஸ்டுக் கிளர்ச்சியில் கலந்துகொண்டு ஆவி நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துவது போன்ற கருத்து வேற்றுமைக்கு இடமில்லாத சம்பிரதாயமான தீர்மானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்டன. பின்னர், 'திருச்செங்கோடு தேர்தல் செல்லாது' என்ற தீர்மானம் மிகுந்த பரபரப்புக்கிடையே முன் மொழியப்பட்டது.

''ராஜாஜிக்கும் காமராசருக்கும் ஏற்பட்ட- எழுதப் பட்ட ஒப்பந்தத்திலே, திருச்செங்கோடு தேர்தல்பற்றி இருதரப்பினரும் கொடுத்துள்ள உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படவேண்டும் என்ற வாசகம் இருந்ததால், 'திருச்செங்கோடு தேர்தல் செல்லாது' என்ற தீர்மானம் காரியக் கமிட்டியின் சார்பில் பிரரேபிக்கப்படும் என்று மாகாணக் கமிட்டி உறுப்பினர் களில் பலர் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்தனர். திருச்செங்கோடு தேர்தல் பற்றிய உத்தியோகப்பற்றற்ற தீர்மானங்கள் கைவிடப்பட வேண்டுமென்றால், உத்தியோக சார்பிலும் அதுபற்றிய தீர்மானம் இருக்காது என்று ராஜாஜி குழுவிலிருந்தவர்கள் நம்பினர்.

''ராஜாஜி - காமராசர் ஒப்பந்தத்தில் 'உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள்' என்றுள்ள வாசகத்தின் உட் பொருளை 'சமரசம் விரும்பிகள்' தங்கள் பலவீனத்தின் விளைவாக உணரத் தவறிவிட்டனர். தலைசிறந்த ராஜதந்திரியான ராஜாஜியே உணரத் தவறினார் என்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?

''திருச்செங்கோடு தேர்தல் பற்றிய உத்தியோகச் சார்புடைய தீர்மானம் முன்மொழியப்பட்டதும், மாகாணக் கமிட்டிக் கூட்டத்தில் அமைதி குலைந்தது. இரு தரப்பினரிடையேயும் வாதம் நடைபெறுவதற்குப் பதிலாக, வசைமொழிகள் வழங்கிக் கொள்ளப்பட்டன.


''கூச்சலுக்கும் குழப்பத்திற்குமிடையே தீர்மானத்தை ஆதரித்தும் எதிர்த்தும் இருதரப்பிலும் சிலர் பேசினர். இறுதியில் கூட்டத் தலைவர் காமராசர் தீர்மானத்தின்மீது

வாக்கெடுப்பு நடத்தினார். 'தீர்மானத்தை ஆதரிப்போர் கைகளை உயர்த்துங்கள்' என்றார். சிலர் உயர்த்தினர். 'எதிர்ப்பவர்கள் கைகளை உயர்த்துங்கள்' என்றார். பலர் உயர்த்தினர். தீர்மானத்தை ஆதரிப்பவர்களைவிட எதிர்ப்ப வர்களே அதிகமென்பது தெரிந்த பின்னரும், 'பெரு வாரியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது'...என்று அறிவித்துவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றார். 'போல்', 'போல்' (உறுப்பினரில் ஒவ்வொரு வரையும் பெயர் கூறி வாக்குகளை எண்ணும் முறை)என்று ராஜாஜியின் ஆதரவாளர்கள் குரல் கொடுத்தனர். எதிர்த்தும் குரல்கள் எழுந்தன. மீண்டும் குழப்பம்! 'தீர்மானத்தை ஆதரிப்போர் அதிகம் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டதால் 'போல்' தேவையில்லை யென்று காமராசர் கூறிவிட்டார்.

''ராஜாஜி கோஷ்டியினர் கைக்குக் கிடைத்த வெற்றியைத் தங்கள் திறமையின்மையால் தோல்வியாக மாற்றிக்கொண்டு வெட்கமும் வேதனையும் அடைந்தனர். திரு. காமராசரின் சமரச முயற்சியை எனக்குத் தெரியாமல் சிலர் மறைத்ததும், அதற்கு ராஜாஜியும் உடந்தையாக இருந்ததும் என் மனத்தைப் புண்படுத்திவிட்டன.

''இந்நிலையில், நவம்பர் 1-இல் திருக் குற்றாலத்தில் ராஜாஜி என்னை எதிர்பார்த்துக் கொண் டிருந்தார். ஆனால், திருப்பரங்குன்றம் தோல்வி என் மனதைப் பெரிதும் பாதித்துவிட்டதால் நான் சென்னை திரும்பி விடுவதென முடிவு செய்தேன். அதனை குற்றாலத்திலிருந்த ராஜாஜிக்குத் தந்தி மூலமாக அறிவித்தேன்.

''என்னுடைய தந்தி கிடைத்தவுடனே அவசரம் அவசரமாக ராஜாஜி எனக்குப் பதில் தந்தி கொடுத்தார். அதன் நகல் வருமாறு:



O OD
Tenkasi 2 14/20 13
Sivagnanagramani
madras 5
Thanks letter dont fail see me sunday morning
= Rajagopalachari

TRIPLICANE (MADRAS) TEL. 2 NOV 45
41

''ராஜாஜி திருக்குற்றாலத்திலிருந்து அவசரமாக ரெயிலில் சென்னை திரும்பினார். எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நேராக கிருஷ்ணாம்பேட்டையிலுள்ள எனது வீட்டிற்கு வந்து, தம்முடன் தியாகராய நகரிலுள்ள தமது வீட்டிற்கு வருமாறு அழைத்தார். 'ஊடல்' காட்டி முதலில் மறுத்தேன். பின்னர், அவருடன் சென்றேன். அன்று தீபாவளி நாளானதால், தமது இல்லத்தில் சுவையான காப்பி தந்து உபசரித்தார். திருப்பரங்குன்றத்தில் நடந்த சமரச நாடகத்தின் முடிவு தமக்கும் அதிர்ச்சியைத் தந்ததாகவும், அது விஷயத்தில் நான் புறக்கணிக்கப்பட்டது

காலங் கடந்து தமக்குத் தெரிந்ததாகவும் சமாதானம் கூறினார். அவரது சமாதானம் எனக்கு மன நிறைவைத் தரவில்லையென்றாலும், ராஜாஜியைக் கைவிடுவது என்னால் சாத்தியமில்லாதிருந்ததால், அவருடைய சமாதானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியவனானேன். 'தோழமை' என்று ஏற்பட்டுவிட்டால், அதனை எளிதில் துண்டித்துக் கொள்வது எப்படி? அதிலே நான் ராமாயணத்தில் வரும் குகன் போன்றவன்.''

'எனது போராட்டம்' என்னும் என் சுயசரித்திலிருந்து மேலே நான் எடுத்துக் காட்டியுள்ள நீண்ட பகுதியானது 'செங்கோல்' பத்திரிகை 28-11-71 இதழில் வெளியான தாகும். அப்போது மூதறிஞர் ராஜாஜியும், பெருந்தலைவர் காமராசரும் உயிரோடிருந்தனர். 'செங்கோல்' படிப் பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ராஜாஜியுடன் நான் தொடர்பு கொண்ட பின்னர், அந்தத் தொடர்பைத் துண்டித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எப்போதேனும் எனக்கு ஏற்பட்டதென்றால், அது திருப்பரங்குன்றச் சம்பவத்தின் போதுதான். அதற்குப் பின்னரும் எங்கள் தொடர்பு துண்டுபடவில்லை. தொடர்ந்தது!

## காந்தியடிகளுக்கு அறிமுகப்படுத்தினார்

பொது வாழ்க்கையில் யான் பெற்ற பேறுகளிலே, அண்ணல் காந்தியடிகளைச் சந்தித்துப் பேசி மகிழ நேர்ந்ததை மிகச் சிறந்ததாகக் கருதுகிறேன். அச்சுத் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய என்னை அரசியல்வாதியாக்கியது அடிகளாரின்பால் எனக்கேற் பட்ட பக்திதான். அத்துடனன்றி, அவர் போதித்த அகிம்சை

- மனிதாபிமானம் - சத்தியாக்கிரகம் ஆகியவற்றிலே ஐயந்திரிபற எனக்கேற்பட்ட அனுபவ அறிவும் எனது வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டு என்னை முழுமனிதன் ஆக்கியதென்று சொல்வேன்.

அந்த உலகப் பெரியாருக்கு என்னை அறிமுகப் படுத்தி வைக்க ராஜாஜி தாமே விரும்பி, 1946 ஜனவரியில் அதனை நிறைவேற்றி வைத்தார். அண்ணலார் ஒருநாள் மாலை தியாகராய நகரில் பிரார்த்தனை முடிந்து தாம் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார். பிரார்த்தனைக் கூட்டத் திலே நாள்தோறும் ராஜாஜியுடன் சென்று மேடையருகே அமர்ந்து நானும் கலந்து கொள்வது வழக்கமாக இருந்து வந்தது. ஒரு நாள் பிரார்த்தனை முடிந்ததும் ராஜாஜி என் கையைப் பிடித்துக்கொண்டு காந்திஜியின் விடுதிக்கு அழைத்துச் சென்றார். எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி காந்தியடிகளைப் பார்க்க நேர்ந்ததிலே!

தியாகராய நகரில் காந்தியடிகள் தங்கியிருந்த பங்களாவுக்குச் சென்றார். பங்களாவின் மேல்மாடிக்கு இராஜாஜியைப் பின்பற்றிச் சென்றேன். அங்கே அகாதா ஹாரிசன் என்ற மூதாட்டியுடன் உரையாடிய வண்ணம் உலாவிக் கொண்டிருந்த காந்தியடிகள், இராஜாஜியைப் பார்த்ததும் மிகுந்த ஆர்வத்துடன், ''ராஜாஜி ஆயியே'' (ராஜாஜியே வாருங்கள்) என்று இந்தி மொழியில் பேசி வரவேற்றார். நான், அடிகளாருக்குச் சற்றுத் தொலைவில் அவரது பார்வையில்படும் இடத்தில் நின்று கொண்டேன்.

அடிகளாரை நெருங்கியதும் கைகாட்டி அவரது அருகில் என்னை அழைத்தார் ராஜாஜி. நானும் சென்றேன்.

என்னை அடிகளாருக்குக் காட்டி, ''இவர் கள்ளிறக்கும் சாதியைச் சார்ந்தவர்'' என்று சொல்லி அறிமுகப் படுத்தினார். தாம் சாதிபற்றிக் குறிப்பிட்டதை நான் தவறாகக் கருதி விடுவேன் என்று எண்ணியோ என்னவோ, ''நான் சொன்னது சரிதானே?'' என்று என்னைக் கேட்டார். நான் 'சரிதான்' என்றேன். பின்னர் அவர், ''இவர் கள்ளிறக்கும் சாதியைச் சேர்ந்தவரானாலும் தங்களைப் போலக் கள்ளுக்கு முதல் நெம்பர் விரோதி'' என்றார் இராஜாஜி. அடிகளார் ஒரு வினாடியும் தாமதிக்காமல், ''தப்பு, தப்பு. நான் மொத்தமாகக் கள்ளுக்கு விரோதி யல்ல; தித்திப்புக் கள்ளுக்குச் சிநேகிதன்; புளிப்புக் கள்ளுக்குத்தான் விரோதி! இவர்கூட ரொம்ப இளைத் திருக்கிறார். தித்திப்புக்கள்ளு சாப்பிட்டாரானால் உடம்பு ஆரோக்கியமாகிவிடும். மக்களிடம் இவர் சொல்லலாம், 'காந்தியே என்னை தித்திப்புக் கள்ளுக் குடிக்கச் சொன்னார்' என்று. இதிலே கஷ்டமென்னவென்றால், தித் திப்புக் கள்ளு இறக்குவதாகச் சொல்லிவிட்டு, கள்ளைப் புளிக்கவைத்துக் குடிப்பார்கள்'' என்றார் அடிகளார்.

எங்கள் உரையாடல் மேலும் தொடர்ந்தது. அப்போது சிறை வாழ்க்கை காரணமாக எனது உடல் ரொம்ப மோசமாக மெலிந்திருந்தது. அதனால், ''இவர் ஏன் இப்படி இளைத்திருக்கிறார்?'' என்று ராஜாஜியைப் பார்த்துக் கேட்டார் அடிகளார். அதற்கு ராஜாஜி, ''உங்கள் ஆகஸ்டுப் புரட்சியில் ஈடுபட்டதன் விளைவு'' என்று சொன்னார்.

ஆகஸ்டுப் புரட்சி ராஜாஜிக்கு உடன்பாடல்ல ஆதலால் அவர் அப்படிச் சொன்னார். மேலும் ராஜாஜி,

"இவர் என் கோஷ்டிக்கு வக்கீல்'' என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார். 'களுக்' கென்று சிரித்த காந்திஜி. "அதனால்தான் அவரைத் தனியாகப் பேட்டிக்கு அழைத்து வந்திருக்கிறீர்கள்'' என்று கூறினார்.

இதற்குள் திரு. ஜம்னாலால் பஜாஜ் மகன் கமலநயன பஜாஜ் அவர்கள், காந்தியடிகளுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியைக் கொண்டுவந்தார். ஆம்; அன்று டில்லி இந்திய சட்டசபையிலே சபாநாயகர் தேர்தல். காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மையில்லாத அந்தச் சபையிலே காங்கிரஸ் வேட்பாளராகத் திரு. மாவ்லங்கர் நிறுத்தப்பட்டார். அரசாங்க நியமன அங்கத்தினர் சிலருடைய ஆதரவோடு திரு. மாவ்லங்கர் வெற்றி பெற்றார்.

கமலநயன பஜாஜ் மிகுந்த பரபரப்புடன் எங்கள் பேச்சுக்கிடையே குறுக்கிட்டு, "மாவ்லங்கர்ஜி வெற்றி பெற்றுவிட்டார்'' என்று மிகுந்த பூரிப்போடு இந்தியில் கூறினார். அதைக்கேட்ட காந்தியடிகளும் சிறிது பரபரப் படைந்தவராகி, 'மாவ்லங்கர்ஜி வெற்றி பெற்று விட்டாரா? ஓட்டு வித்தியாசம் எத்தனை?'' என்று கேட்டார். அதற்கு, பஜாஜ் "ஒரே ஒரு ஓட்டு'' என்று இந்தியில் கூறினார்.

இந்த நிலையில் இராஜாஜி என்னைப் பார்த்து, "சரி, நிலைமை மாறிவிட்டது. நீங்கள் விடைபெற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார். என் கையிலிருந்த கதர் மாலையைக் காந்தியடிகளுக்கு அணிவித்து விடை பெற முயன்றேன். அவர் பலவந்தமாக என் கையைப் பற்றிக் கொண்டதோடு, என் கையிலிருந்த கதர் மாலையையும் பறித்துக்கொண்டுவிட்டார். நான் அவர் காலில் விழுந்து

வணங்க முயன்றபோது, தடுத்து என் கைகளைப் பிடித்து எழுப்பிவிட்டார்.

திரு. கமலநயன பஜாஜ் குறுக்கிடாமல் இருந் திருந்தால், தமிழ் மொழி வளர்ச்சிபற்றி அடிகளாரிடம் சிறிது நேரம் இராஜாஜியின் துணையோடு உரையாடி யிருப்பேன். அது முடியாமற் போய்விட்டது.

இராஜாஜியவர்கள், நானே நினைக்காத ஒரு நேரத்தில், தாமாகவே நினைத்து அடிகளாரிடம் என்னை அழைத்துச் சென்றதனை இன்றளவும் மிகுந்த நன்றி யுணர்வோடு போற்றி வருகின்றேன்.

சமுதாயத்திலுள்ள பெரியோர்களைச் சந்தித்துப் பழகவேண்டுமென்ற விருப்பம் எனக்கு உண்டென்றாலும் நானாக அணுகுவதற்கு நாணப்படுவேன். இந்த நாணத்தால் பண்டித ஜவகர்லால்நேரு உள்ளிட்ட பல பெருந் தலைவர் களை நெருங்கிப் பழகும் வாய்ப்பினை எத்தனையோ முறை தவற விட்டேன்.

காந்தியடிகள் *1934* - இல் சென்னைக்கு வந்தபோது வடசென்னையில் அவரை வரவேற்றுப் பேசவும், சென்னைக் கடற்கரையில் அவர் பேசிய மேடையில் நின்று அவருக்கு மாலையணிவித்து மகிழவும் வாய்ப்புப் பெற்றேன் என்றாலும், தனியாகச் சந்தித்து ஐயனின் ஆசியைப் பெறும் வாய்ப்பை எனக்கு முதன் முதலாகத் தேடித் தந்தவர் தென்னாட்டுக் காந்தி ராஜாஜிதான்!

**ராஜ்பவனில் சந்தித்தேன்!**

தேசத்தின் மிகப் பெரிய பதவியாகக் கருதப்படத் தக்க கவர்னர் ஜெனரல் பதவியை வகித்தபோது இருவேறு

சந்தர்ப்பங்களில் அவர் என்னை மிகவும் அன்போடு நடத்தியதை என்னால் என்றுமே மறக்க முடியாது. கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றபின் முதன்முதலாகச் சென்னை நகருக்கு அவர் வருகை தந்தபோது, அவரை சென்னை ராஜ்பவனில் சந்திக்க வேண்டுமென்ற பேராவல் எனக்கிருந்தது. ஆனால், அந்நாளில் கவர்னர் ஜெனரலைப் பேட்டி காண்பது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை. அவரைக் கண்டு பேசுவதற்கான வழிமுறைகள் பற்றிக் கிண்டி ராஜ்பவனிலிருந்து வெளியான அறிக்கை என்னைப் பெரிதும் பயமுறுத்திவிட்டது. ராஜாஜிக்கு முன்பு ஆங்கிலேயர்களே அந்தப் பதவியிலிருந்தனர். அந்தப் பதவியை வகித்த முதல் இந்தியர் அவராகவே இருந்தார். அதனால், ஆங்கிலேயராட்சிக் காலத்துக் கெடுபிடிகள் நீடித்தன.

கவர்னர் ஜெனரல் ராஜாஜிக்கு நடந்த சிறப்புகளைப் பத்திரிகைகளில் படித்து மகிழ்வதோடு மனநிறைவு பெற்றேன். அப்போது தி.மு.க. வினரும் தி.க.வினரும் போட்டி போட்டுக்கொண்டு அவர் செல்லும் வழிகளிலே கருப்புக்கொடி காட்டி, ''ஆச்சாரியாரே, திரும்பிப் போ!'' என்று குரல் கொடுத்து, முதல் முதலில் மிகப்பெரிய ஒரு பதவியை அடைந்த போற்றத்தக்க தமிழரான அவரைத் தூற்றி மகிழ்ந்தனர். அதை எதிர்த்து எனது 'தமிழ் முரசு' பத்திரிகையில் தலையங்கம் எழுதி ஆறுதல் அடைந்தேன்.

## குசேலன் நிலையில்...

''ராஜாஜி வேண்டாம்'' என்று குரல் கொடுக்க ஒரு இயக்கத்தையே நடத்திய தலைவர்களெல்லாம் அணி அணியாகச் சென்று ராஜாஜியை ராஜ்பவனில் சந்தித்துப்

பேசிவருவதைப் பத்திரிகைகளில் படித்துப் படித்துப் பெருமூச்சுவிட்டேன். அதிகார அரசியலின் உயர்மட்டத்தை எட்டித் தொடமுடியாதபடிக்குக் குசேலன் நிலையிலிருந்தேன்.

அப்போது நான் சென்னை மாநகராட்சியில் ஆல்டர்மேன் பதவியில் இருந்தேன். ஒருநாள், மேயர் பதவியிலிருந்த எஸ். ராமசாமி நாயுடு, என்னை ரிப்பன் கட்டடத்தில் சந்தித்து, தாம் ராஜாஜியைப் பார்த்ததாகவும், அவர் என்னைப் பார்க்கத் துடித்துக் கொண்டிருப்பதாகவும், அவரைப் பேட்டி காண்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து தரும்படி அவர் தம்மிடம் கூறியதாகவும் தகவல் தந்தார். அதைக்கேட்டு, என் மனம் பூரித்தது.

மறுநாள் காலையே ராஜபவனுக்குச் சென்று கவர்னர் ஜெனரலைக் காண்பதற்கு மேயர் அனுமதி பெற்றுத் தந்தார்.

கிண்டி ராஜ்பவனுக்குச் செல்வதற்காக எனக்குக் கார் கொடுத்து உதவும்படி 'கல்கி' அலுவலகத்துக்கு ராஜாஜியிடமிருந்து தகவல் வந்திருப்பதாக அந்த அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவர் என் இல்லத்திற்கு வந்து என்னிடம் சொன்னார். அதன்படி, 'கல்கி' அலுவலக மோட்டார் காரிலே, மறுநாள் காலை 8 மணிக்கு ராஜ்பவனுக்குச் சென்றேன். எனக்கு முன்னே சென்னை ஷெரீப், சுப்ரீம் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி, மற்றும் பல கனவான்கள் ராஜ்பவனில் கவர்னர் ஜெனரலைப் பேட்டி காணக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களின் எண்ணிக்கை எட்டுக்கு மேலிருக்கும்.

**''கர்மணி எங்கே?''**

கவர்னர் ஜெனரலின் உயர் அலுவலர் ஒருவர் ராஜ்பவன் கட்டடக் கீழ்ப்பகுதியில் காத்துக் கொண்டிருந்த கனவான்களிடமிருந்து அவர்களுடைய 'விசிட்டிங் கார்டுகளை'ச் சேகரித்தார். என்னிடம் அச்சடித்த விசிட்டிங் கார்டு இல்லாததால், என் பெயரை ஒரு துண்டுச் சீட்டில் ஆங்கிலத்தில் எழுதி அவரிடம் கொடுத்தேன். அவர் தமிழ் அறியாத பஞ்சாபி. என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, நான் தந்த முகவரிச் சீட்டை வாங்க மறுத்து விட்டார். ''இன்றைக்கு முக்கிய பிரமுகர்களுக்குத்தான் பேட்டியளிப்பார்'' என்று சொல்லிக்கொண்டே எனக்குத் தன் முதுகைக் காட்டியவண்ணம் மேல் மாடிக்கு விரைந் தார். அப்போது என் பக்கத்தில் அமர்ந்துகொண்டிருந்த திரு.கே.எஸ். ராமானுஜம் (திரு.கே. சந்தானம் அவர்களின் மகன்) அந்த பஞ்சாபி அதிகாரியை அணுகி, ராஜாஜிக்கும் எனக்கும் உள்ள நெருக்கத்தைப் பற்றிச் சொல்லி, என்னிடமிருந்து அடையாளச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுமாறு மன்றாடினார். அதன்பின்னர், அந்த பஞ்சாபி அதிகாரி வேண்டா வெறுப்பாக முகத்தைச் சுளித்துக்கொண்டு, என்னிடமிருந்து சீட்டைப் பெற்றுச் சென்றார்.

ஐந்து நிமிடத்திற்குள் ''வேரீஸ் மிஸ்டர் கர்மணி?'' ''வேரீஸ் மிஸ்டர் கர்மணி?'' என்று பரபரப்புடன் பேட்டிக்குக் காத்திருந்த பெரிய மனிதர்களை அணுகிக் கேட்டார். ''கிராமணி'' என்பது அவரது வாயில் ''கர்மணி''யாக நடனமாடியது. நானே சென்று அவரிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்ட பின்னர், ராஜ்

பவனத்தில் கவர்னர் ஜெனரல் தங்கியிருந்த மேல் மாடிக்கு அவர் என்னை அழைத்துச் சென்றார்.

ராஜாஜி என்னைக் கண்டதும் வழக்கம்போல், தாம் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து கொஞ்சம் எழுந்து, என் வணக்கத்தை ஏற்று, பதிலுக்குத் தாமும் வணக்கம் செலுத்தி இன்முகம் காட்டி என்னை வரவேற்றார். நெடுநேரம் என்னிடம் தமிழ்நாட்டின் அரசியல்பற்றிய விவரங்களை அறியும் வகையில் உரையாடினார்.

''வயிற்றுவலி எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுவிட்டு, வழக்கம்போல, ''அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள ஏன் பயப்படுகிறீர்கள்?'' என்றும் கேட்டார்.

நெடுநேரம் என்னிடம் பேசிக் கொண்டிருந்ததால், கீழே பெரிய மனிதர்கள் பலர் அவரைப் பேட்டிகாணக் காத்துக்கொண்டிருப்பதை நினைவூட்டி, நானாகவே விடைபெற்றுத் திரும்ப முயன்றேன். என் தலைவர், ''அவர்களெல்லாம் யார் கவர்னர் ஜெனரலாக வந்தாலும் பேட்டி காண்பதை வழக்கமாகக் கொண்டவர்கள். நீங்கள் அப்படியல்லவே! நானே விரும்பியல்லவா உங்களை அழைக்க வேண்டியிருந்தது'' என்று சொல்லி வாய்விட்டுச் சிரித்தார்.

நான், ஆளுநர் பெருமானின் கோயிலான கிண்டி ராஜ்பவனத்திற்குள் சென்றது அதுதான் முதல் முறையாகும். துவாரகை சென்ற குசேல முனிவர், கண்ண பெருமானுடைய மாளிகைக் காவலர்களிடம் பட்ட அல்லல்களையும், பின்னர் கண்ணபெருமானால் அவர் கௌரவிக்கப்பட்டதையும் புராணத்தில் படித்திருக்கிறேன்.

நாடகங்களிலும், திரைப்படங்களிலும் பார்த்திருக்கிறேன். அந்தக் குசேல முனிவரின் அனுபவத்தையே கிண்டி ராஜ் பவனத்தில் யானும் பெற்றேன்.

## 'கல்கி' தந்த விருந்து

கவர்னர் ஜெனரல் பதவிக்கான காலம் முடிவுக்கு வந்துகொண்டிருந்தபோது, கடைசிப் பயணமாக 1950 சனவரியில் ஒருமுறை ராஜாஜி சென்னைக்கு வந்தார். அப்போது திரு.ரா. கிருஷ்ணமூர்த்தியும், திரு.டி. சதாசிவமும் அவருக்கு ஒரு இரவில் தங்கள் 'கல்கி' அலுவலகத்தில் விருந்து அளித்தனர். அழைப்பிதழ் அச்சிட்டு, ராஜாஜியின் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்ற கனவான்களுக்கெல்லாம் அனுப்பியிருந்தனர். எனக்கு அழைப்பு வராததால், என்மனம் பெரிதும் வருந்தியது. ஆனால், விருந்து நடைபெற்ற நாளன்று இரவு 8 மணிக்குக் 'கல்கி' அலுவலகத்திலிருந்து மோட்டார் காருடன் ஒரு நண்பர் எனது இல்லத்திற்கு வந்து, ராஜாஜிக்கு நடைபெறும் விருந்தில் கலந்துகொள்ள வருமாறு அழைத்தார். காலத்தோடு அழைக்காததற்காகக் கோபித்துக் கொண்டு அவருடன் செல்ல மறுத்தேன்.

''விருந்துக்கு ராஜாஜி வந்துவிட்டார். அங்கு நீங்கள் இல்லாததை அறிந்ததும் கார் அனுப்பி அழைத்து வரும்படி கட்டளையிட்டார்'' என்று வந்த நண்பர் தகவல் கொடுத்தார். அதன்பின் அவருடன் சென்று விருந்தில் கலந்துகொண்டேன்.

''கல்கி'' அலுவலக விருந்துக்கு ராஜாஜி வந்ததும், அங்கிருந்தவர்களை ஒருமுறை பார்த்துவிட்டு, ''கிராமணியார் எங்கே?'' என்று கேட்டாராம். ''அவர் இப்போது

எங்களோடு அதிகமாகத் தொடர்பு கொள்வதில்லை. அதனால், அழைப்பு அனுப்பவில்லை'' என்று 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி சொன்னாராம். என் தலைவர், ''யோக்கியர்கள் ஒதுங்கித்தான் இருப்பார்கள்'' என்று சினத்துடன் சொல்லிவிட்டு, ''கார் அனுப்பி அழைத்துவரச் செய்யுங்கள்'' என்றாராம். விருந்துக்கு நான் சென்றதும், ராஜாஜிக்கு அருகில் ஒரு இலை எனக்காகக் காத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சியோடு அழைத்து, தமக்கு அருகில் இருக்கும் இலையருகில் அமருமாறு சொன்னார். த.நா.கா.க. தலைவர் திரு.கு. காமராசர், அமைச்சர் திரு.எம். பக்தவத்சலம் ஆகியோருட்படப் பிரமுகர் பலர் அன்றைய விருந்தில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சி ராஜாஜியின்பால் எனக்கிருந்த நியாய மான பக்தியை அதிகரிக்கச் செய்துவிட்டது! இதுவும் இந்தக் குசேலனுக்கு அந்த கிருஷ்ண பரமாத்மாவிடம் கிடைத்த மற்றொரு அனுபவமாகும்.

# சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் போட்டியிடத் தூண்டினார்!

*1967* பிப்ரவரியில் நான்காவது பொதுத் தேர்தல் நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் கமிஷன் அதிகார பூர்வமாக அறிவித்ததையொட்டித் தமிழகத்தில் காங்கிரசும், காங்கிரசல்லாத கட்சிகளும் தேர்தல் களத்திற்குச் செல்லத் தயாராகி வந்தன.

## தேர்தல் கூட்டணி

தமிழரசுக் கழகமும் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டுமென்று எனது மணிவிழாவுக்கு முன்பே குடந்தையில் கூடிய தமிழரசுக் கழகப் பொதுக் குழுவானது தனது உணர்ச்சியை வெளிப்படுத்தியது. இது எனக்குப் பிடிக்கவில்லையென்றாலும், அக்குழுவின் உணர்ச்சியை எதிர்த்துப் போராட நான் முயலவில்லை, தேர்தலிலே கழகம் தனித்து நிற்பதா? காங்கிரசல்லாத கட்சிகளோடு கலந்து போட்டியிடுவதா? - என்பதைக் குடந்தைப் பொதுக் குழு தெளிவுப்படுத்தவில்லை. அதை என் பொறுப்பில் விட்டுவிட்டது.

இதனிடையிலே சுதந்திராக் கட்சியும், தி.மு.க.வும் காங்கிரசுக்கெதிராக அணிவகுத்துத் தேர்தல் களத்தில் தோளொடு தோள் சேர்த்து நிற்பதென அதிகாரபூர்வமாக முடிவெடுத்துவிட்டன. இந்தப் பொதுத் தேர்தலுக்குரிய அதிகாரபூர்வமான அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே

தி.மு. கழகம் திராவிடத் தனிநாடு கோரிக்கையை - அதாவது, பாரதத்தைத் துண்டாடும் கொள்கையைக் கைவிட்டு விட்டதாக அறிவித்துவிட்டது. அதற்கு மாறாக, எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குக் கூடுதல் அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கோருவதே தனது கொள்கை என்று தி.மு. கழகப் பொதுக்குழு ஒரு தீர்மானத்தின் மூலம் அறிவித்ததோடு, அதனைக் கழகத்தின் சட்ட திட்டத்திலும் சேர்த்துவிட்டது.

## தி.மு.க.வின் கொள்கை மாற்றம்!

பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட தி.மு.க. தமிழரசுக் கழகம் கோரும் மாநில சுயாட்சியை அங்கப்பழுதின்றித் தனது அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ளவில்லை. மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் கிடைத்தால் போதும் என்றது. அந்த அதிகாரங்கள் இன்னின்னவையென்று அது விளக்கவில்லை.

இந்தப் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை யென்றாலும், தேசத்தைத் துண்டாடும் பிரிவினைக் கோரிக்கையைத் தி.மு.க. கைவிட்டதற்காக நான் மகிழ்ச்சியடைந்ததோடு, அந்தக் கொள்கை மாறுதலை வரவேற்றுப் பத்திரிகைகளிலும் அறிக்கைவிட்டேன்.

தி.மு.க பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டது - பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றும், முடிந்தால் காங்கிரசிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்றும் அது விரும்பியதால்தான், அப்போது பிரிவினை கோருவோர் தேர்தலில் நிற்பதைத் தடை செய்யும் வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மத்திய அரசு மாறுதலைச் செய்திருந்தது.

பிரிவினைக் கோரிக்கையை தி.மு. கழகம் கைவிட்டு விட்டதால், அதனோடு தேர்தல் களத்தில் கூட்டுச் சேருவதற்கு எனக்கோ, தமிழரசுக் கழகத்திற்கோ அரசியல் ரீதியான தடை எதுவும் இருக்கவில்லை. இதைச் சுட்டிக்காட்டி, சுதந்திரா - தி.மு.க. கூட்டணியில் தமிழரசுக் கழகமும் இணையவேண்டும் என்று என் தலைவர் ராஜாஜி வற்புறுத்தினார்.

தமிழரசுக் கழகம், *1956* நவம்பர் *1* - இல் தமிழகத் தில் தமிழரசைக் கண்டுவிட்டது; குமரி முனையைத் தெற்கெல்லையாக்கும் முயற்சியிலும் வெற்றி கண்டு விட்டது; *1961* ஏப்ரலில் திருத்தணிகையை ஆந்திரத்தி லிருந்து பிரித்தெடுத்துத் தமிழகத்தோடு இணைப்பதிலே யும் கழகம் வெற்றி கண்டுவிட்டது. இனி, மாநில சுயாட்சிக் கொள்கை அடிப்படையில் தமிழக அரசுக்குக் கூடுதல் அதிகாரங்கள் தேடுவதும், தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதன்மை பெறச் செய்வதுந்தான் கழகத்திடம் எஞ்சியிருந்த கடமைகளாகும்.

### தி.மு.க. கூட்டணியில் த.அ.க.

இதனை நிறைவேற்றுவதற்குத் தமிழக சட்ட மன்றத்தைப் பயன்படுத்துவது அவசியம் என்ற முடிவுக்கு நான் வந்தேன். அதற்காக சட்டமன்றத்திற்குக் கழகத்தின் சார்பில் இரண்டொருவரை அனுப்பவும் விரும்பினேன். அதனால், குடந்தையில் எனது கழகப் பொதுக்குழு செய்திருந்த தீர்மானத்தின்படி, தமிழரசுக் கழகத்தைத் தி.மு.க. வின் தலைமையில் அமைந்த காங்கிரசல்லாத கூட்டணியில் இணைத்தேன்.

தி.மு.க.வுடன் தொகுதி உடன்பாடு காண்பதற்கு ராஜாஜி எனக்கு உதவி புரிந்தார் என்று சொல்ல வேண்டும். சுதந்திராக் கட்சியின் தமிழ் மாகாணத் தலைவரான காரைக்குடி திரு.சா. கணேசன் மூலமாக, ''ம.பொ.சி. நமக்குக் கிடைத்துள்ள சொத்து. அவருக்கு எப்படியும் சென்னை நகரில் ஒரு தொகுதியைக் கொடுத்தாக வேண்டும். எந்தத் தொகுதி என்பதை அவருடன் பேசி முடிவு செய்து கொள்ளட்டும். தி.மு.க. - சுதந்திரா தேர்தல் உடன்பாட்டுக்கு உள்பட்ட விஷயம் இது.'' என்று அறிஞர் அண்ணா அவர்களை ராஜாஜி வற்புறுத்தினார்.

என் விஷயத்தில் ராஜாஜி காட்டிய அக்கறையானது - ஏன், பிடிவாதமானது தி.மு.க. தலைவரையும் வியப்பிலாழ்த்தியது. 8-12-66 அன்று சென்னை பீப்பிள்ஸ் பார்க்கிற்கு அருகிலுள்ள கண்ணப்பர் திடலில் சென்னை சுதந்திராக் கட்சியின் சார்பில் நடந்த ராஜாஜி பிறந்த நாள் விழாக் கூட்டத்திலே, ''ராஜாஜி மீது என் நண்பர் ம.பொ.சி. பெற்றுள்ள செல்வாக்கு கண்டு நான் பொறாமைப்படுகிறேன்'' என்று அண்ணா கூறினார். அனைத்திந்திய சுதந்திராக் கட்சியின் தலைவர் பேராசிரியர் என்.ஜி. ரங்காவும், நானும் அந்தக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினோம்.

தி.மு.க. தலைவர்களுடன் நான் நடத்திய பேச்சு வார்த்தையின் முடிவாக சென்னையில் தியாகராய நகர் தொகுதியையும், செங்கல்பட்டு மாவட்டத்தில் திருத்தணி தொகுதியையும் தமிழரசுக் கழகத்திற்கு ஒதுக்குவது என்று உடன்படிக்கை ஏற்பட்டது. அதுகுறித்து ராஜாஜி பெருமகிழ்ச்சியடைந்தார். நான் தியாகராய நகர்

தொகுதியிலும், வேலூர் வி.கே. குப்புசாமி தணிகைத் தொகுதியிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தோம்.

**'என் இதயத்தைத் திறந்து வைக்கிறேன்!'**

தேர்தலிலே நான் வெற்றி பெறுவதற்கு மூதறிஞர் ராஜாஜி இயன்ற வகையில் எல்லாம் உதவி புரிந்தார். தியாகராயநகர் தொகுதியில் எனது தேர்தல் அலுவலகத்தைத் தொடங்கி வைக்குமாறு நான் விடுத்த அழைப்பை ஏற்று, தொடங்கி வைத்துப் பேசினார்.

''நான் திறந்து வைப்பது என்னுடைய நண்பர் ம.பொ. சியின் தேர்தல் அலுவலகம் என்பது சம்பிரதாய வார்த்தைதான். உண்மையில் எனது இருதயத்தையே இங்கு திறந்து வைக்கிறேன். அண்ணாவுக்கும் ம.பொ.சி.க்கும் என் வாழ்த்துக்கள். அவர்கள் வெற்றி பெறுவார்கள்'' என்று மனம் திறந்து அகத்தில் பொங்கியெழுந்த அன்புணர்ச்சியை முகத்தில் காட்டிப் பேசினார்.

நான் போட்டியிட்ட தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதியையும் கொண்ட தென் சென்னைக்கான நாடாளுமன்றத் தொகுதியிலே அறிஞர் அண்ணா அவர்கள் போட்டியிட்டார். அவருக்கும் எனக்குமாகத்தான் தியாகராயநகரில் தேர்தல் அலுவலகத்தை அமைத்தேன்.

என் தொகுதியின் நிலவரத்தை அறிவிப்பதற்காக ஒருநாள் ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று, அவருடன் உரையாடியபோது, ''உங்கள் தொகுதியில் ஒரு கூட்டத்தி லேனும் நான் உங்களை ஆதரித்துப் பேச வேண்டாமா? பேசாவிடில் எதிரிகள் எனது உண்மையான ஆதரவு உங்களுக்கு இல்லையென்று பிரசாரம் செய்வார்கள் அல்லவா?'' என்று கேட்டார்.

**'தி. நகர் தொகுதியின் அதிர்ஷ்டம்!'**

அதுவரை என் தொகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுமாறு ராஜாஜியை நான் அழைக்க வில்லை. அழைப்பதற்காகத்தான் அன்று அவரைச் சந்தித்தேன். ஆனால், நான் அழைப்பதற்கு முன்னர் அவரே வருவதற்குத் தமது விருப்பத்தை வெளியிட்டார். அதன்படி, தியாகராயநகர் பேருந்துத் திடலில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் கூட்டத்தில் ராஜாஜி பேசினார். அவரது பேச்சு சுருக்கமாக வும், உருக்கமாகவும் இருந்தது. அதன் ஒரு பகுதி வருமாறு:

''தியாகராயநகர் தொகுதி வாக்காளர்கள் அதிருஷ்ட சாலிகள். மற்ற 233 தொகுதிகளுக்குக் கிடைக்காத ஒரு சிறந்த அபேட்சகர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறார். சாஸ்திரம் படித்தவர். யோக்கியதைக்கு ஒன்றும் குறைவு கிடையாது.''

ராஜாஜி, தம்முடைய பக்தர்களான திரு.எஸ் வேங்கட சுப்பிரமணியம் (எஸ்.வி.எஸ்.), மாம்பலம் கல்யாணி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. கல்யாணசுந்தர நாடார் ஆகியோரை அழைத்துப் பேசி, தம்பால் பேரன்பு கொண்ட படித்த வகுப்பாரின் இல்லங்களுக்குச் சென்று நான் வெற்றி பெறுவதில் தமக்குள்ள அக்கறையை எடுத்துச் சொல்லுமாறு தூண்டினார். அவர்களும் அப்படியே செய்தனர். அவர்கள் மட்டுமல்லாமல் ராஜாஜியின் சுதந்திராக் கட்சி ஊழியர்கள் அனைவரும் இரவு பகலாக என் வெற்றிக்காக உழைத்தனர்.

தேர்தல் முடிவிலே சுமார் பத்தாயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றி பெற்றேன். ஆனால், என் கழகத்தின் சார்பில் தணிகைத் தொகுதியில் போட்டியிட்ட திரு.வி.கே. குப்புசாமி 900 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

தேர்தலில் நான் வெற்றி பெற்ற செய்தி கிடைத்ததும், முதன்முதலாக ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு மாலை அணிவித்து நன்றி தெரிவித்தேன். ராஜாஜியின் பிடிவாதமான வற்புறுத்தல் இருந்தில்லை யானால், நான் பார்லிமெண்டரி அரசியலில் புகுந் திருக்கவே மாட்டேன். சட்டமன்றத்திற்கு வெளியி லிருந்தே என் வாழ்நாள் முழுவதும் தமிழுக்கும், தமிழினத் திற்கும், என் தாய்நாடான பாரதத்திற்கும் தொடர்ந்து பணியாற்றி வந்திருப்பேன். ஆனால், ராஜாஜி என்மீது வெற்றி கண்டுவிட்டார்!

தியாகராயநகர் சட்ட மன்றத் தொகுதியில் நான் வெற்றி பெற்ற செய்தி கிடைத்ததையடுத்துத் தமிழ் நாடெங்கணும் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுவரும் செய்திகள் கிடைத்த வண்ணம் இருந்தன. ஆட்சியானது காங்கிரசிடமிருந்து தி.மு.க. கூட்டணிக்கு மாறுவது அனேகமாக உறுதி என்பது தெரிந்த நிலையில்தான் நான் ராஜாஜிக்கு நன்றி தெரிவிக்க என் கழகத் தோழர்களுடன் அவரது இல்லத்திற்குச் சென்றேன்.

**'ம.பொ.சி. கவலைப்படுகிறாரே!'**

என்னைக் கண்டதும் தன் உதவியாளரைப் பார்த்து, ''ம.பொ.சி.க்கு சந்தன மாலை வைத்திருந்தேனே, அதைக்

கொண்டுவா!'' என்றார். உதவியாளர் கொண்டுவந்த மணங்கமழும் சந்தன மாலையை எனக்கு அணிவித்து, தம் இரு கரங்களாலும் என்னைக் கட்டி அணைத்து ஆசி கூறி மகிழ்ந்தார். எனக்கும் மகிழ்ச்சி தந்தார்.

நாற்பதாண்டுகாலப் பொதுவாழ்வுக்குப்பின் முதன் முதலாக எம்.எல்.ஏ. பதவி பெற்றதற்காக நான் பெருமகிழ்ச்சியுடன் இருப்பேன் என்று என் தலைவர் எதிர் பார்த்திருப்பார். ஆனால், 'ஆட்சிபீடத்தில் கட்சி மாறுவதால் நாட்டின் எதிர்காலம் என்ன ஆகுமோ?' என்று என் அகத்திலேற்பட்ட கவலையை கூர்த்த மதியினரான ராஜாஜி என் முகத்தில் கண்டு கொண்டார்.

என் அருகிலிருந்த ஔவை தி.க. சண்முகத்தைப் பார்த்து, ''சண்முகம், ம.பொ.சி.யின் முகத்தைப் பார்த் தீர்களா? ஜெயித்து விட்டோமே என்று அவர் கவலைப் படுகிறார்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார். நான் எனது மனக்கவலையை எடுத்துச் சொல்லத் துணிவின்றி மௌனம் சாதித்தேன்.

தேர்தல் முடிவு ராஜாஜிக்குப் பெருமகிழ்ச்சியை அளித்ததால் அவர் எங்களிடம் உற்சாகத்துடன் பேசினார். அவர் மகிழ்ச்சியடைந்தது, தி.மு.க. ஆட்சி பீடத்திலேறு வதற்காக அல்ல; காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடத்திலிருந்து இறக்கப்படுவதற்காகத்தான்!

தி.மு.க கூட்டணிக்கு சட்டமன்றத்தில் பெரு பான்மை கிடைக்கும் என்பது தெரிந்ததுமே, ''தி.மு.க. தனித்து நின்று ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்'' என்று ராஜாஜியின் ஆதரவைப் பெற்று அண்ணா செய்தி யாளர்களிடம் அறிவித்தார்.

தேர்தலில் அனைத்துத் தொகுதிகளின் முடிவுகள் தெரிந்த பின்னர் ஒருமுறை ராஜாஜியின் இல்லத்திற்குச் சென்றேன். அவர், சட்ட மன்றத்தில் தி.மு.க. கூட்டணி எம்.எல்.ஏக்கள் அனைவரும் ஆளுங் கட்சிக்குரிய வரிசையில் அமரவேண்டும் என்றார். அது எனக்குப் பிடிக்கவில்லை. தமிழரசுக் கழகம் எதிர் வரிசையில்தான் இடம் கோரும் என்று சொன்னேன். அவர் தமது கருத்தில் பிடிவாதம் காட்டினார். நானும் எனது நிலையில் உறுதிகாட்டினேன். ஆயினும், ''தி.மு.க. அரசுக்குத் தமிழரசுக் கழகம் பக்கபலமாக இருக்கும்'' என்றேன்.

## ராஜாஜியுடன் கருத்துவேறுபாடு

புதிய சட்டமன்றம் கூடும் தேதி அறிவிக்கப் பட்டதும், 'சபாநாயகர் யார்? என்ற பிரச்சினை எழுந்தது. ராஜாஜி, சுதந்திரா கட்சிக்கு அந்தப் பதவியைத் தருமாறு தி.மு.க. தலைவரைக் கேட்டார். அவர் உறுதியாக மறுத்துவிட்டதுடன், தி.மு.க. வேட்பாளராக 'தினத்தந்தி' திரு.சி.பா. ஆதித்தனாரை நிறுத்தி வைக்கப்போவதாக அறிவித்தார். ஆதித்தனாரிடம் ராஜாஜிக்கு நல்லெண்ணம் இருக்கவில்லை.

அதனால், அவருக்கு எதிராக வேட்பாளரை நிறுத்தி வைக்க முடிவு செய்தார். சமரச ஏற்பாடாக என் பெயரை சபாநாயகர் பதவிக்கு தி.மு.க. தலைவரிடம் பரிந்துரைத் தார். அவர், ''சிறந்த பேச்சாளரான ம.பொ.சி.'யைப் பேச முடியாத சபாநாயகர் பதவியில் அமர்த்துவது சரியல்ல'' என்றார். ''அண்ணா சொல்வது எனக்கும் உடன்பாடே'' என்று செய்தியாளரிடம் யான் கூறினேன்.

ராஜாஜி என்னை விடுவதாக இல்லை. டில்லி யிலிருந்த வண்ணம் சுதந்திராக் கட்சியின் தமிழ்நாட்டு நிர்வாகிகளுக்கு, ''சபாநாயகர் தேர்தலில் ம.பொ.சி. யை நிறுத்தி வையுங்கள்'' என்று தந்தி கொடுத்திருந்தார். அவர்கள் அந்தத் தந்தியுடன் என்னை அணுகினர். நான் மறுத்ததால், சுதந்திராக் கட்சியின் சார்பில் ஒருவரை நிறுத்தி வீம்புக்காகப் போட்டியிட முடிவெடுத்தனர். சட்டப் பேரவையில் சுதந்திராக் கட்சியில் 13 பேர் இருந்தனர்.

''சபாநாயகர் பதவிக்கான தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை எதிர்த்துச் சுதந்திராக் கட்சி தனது வேட்பாளரை நிறுத்துவதால் சட்டமன்றக் கூட்டத்தின் முதல் நாளிலேயே தி.மு.க. கூட்டணியில் பிளவு ஏற்படு வதை நான் விரும்பவில்லை'' என்று செய்தியாளர்களிடம் கூறி, எனது ஆதரவு தி.மு.க. வேட்பாளருக்குத்தான் என்பதை மறைமுகமாக அறிவித்தேன்.

இது, ராஜாஜிக்குப் பிடிக்கவில்லை. என்னைப் பொறுத்தவரையில் தமிழர் வாழ்வில் ஆங்கில மொழி பெற்றுள்ள ஆதிக்கத்தை அடியோடு அகற்றி, எங்கும் எதிலும் தமிழே வாழ்வு பெறப் பாடுபடவேண்டுமென்ற குறிக்கோளுடனேயே தமிழக சட்டமன்றத்திற்குச் சென்றேன். அந்த விஷயத்திலே ராஜாஜியை விடவும் தி.மு.க. தலைவர் முதலமைச்சர் அண்ணா எனக்கு உதவிபுரியக் கூடிய நிலையில் இருந்தார். ஆகவே, தி.மு.க. அரசோடு ஒத்துழைத்து, அதனுடைய ஒத்துழைப்பையும் பெற்று, சட்டமன்றத்தில் செயலாற்ற விரும்பினேன். அதனால்தான் சபாநாயகர் தேர்தலில் சுதந்திராக் கட்சி

நிறுத்தி வைத்த வேட்பாளருக்கெதிராக தி.மு.க. நிறுத்தி வைத்த வேட்பாளருக்கு ஆதரவளிக்கலானேன். தி.மு.க. நிறுத்திவைத்த ஆதித்தனாரே வெற்றி பெற்றார். சட்ட மன்றப் பேரவையிலிருந்த காங்கிரஸ் உறுப்பினர் 50 பேரும் சபாநாயகர் தேர்தலில் வாக்கொடுப்பில் கலந்து கொள்ளவில்லை. சுதந்திரா உறுப்பினர்கள் எதிர் வரிசை யில்தான் அமர்ந்தனர்.

## ''டமில் நாட்'' கோரினார்!

'சென்னை ராஜ்யம்' எனத் தமிழிலும், ''மெட்ராஸ் ஸ்டேட்'' என ஆங்கிலத்திலும் நம் தாயகமான தமிழகத்தின் பெயர் அரசாங்க நிர்வாகத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தன. அரசமைப்புச் சட்டத்திலே ''மெட்ராஸ்'' என்னும் இடம் பெற்றிருந்தது.

தி.மு.க. அரசு ராஜ்யத்தின் பெயரை மாற்றுமாறு மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை அதிகார பூர்வமாக சட்டமன்றத்தில் முன்மொழிந்தது. அதிலே தமிழில் ''தமிழ்நாடு'' என்னும் பெயர் இடம் பெறவும், சென்னை ராஜ்யம் அல்லது சென்னை மாகாணம் என்னும் பெயர் கைவிடப்படவும் வழிவகுக்கப்பட்டது. ஆனால், அரசமைப்புச் சட்டத்திலே *MADRAS* என ஆங்கிலத்தி லிருப்பதை *TAMIL NAD* என மாற்றும்படித் தீர்மானம் கோரியது. *NAD* என்பது தமிழ் ஒலியல்ல. நாடு என்பதன் பொருள் எதுவோ அது *NAD* என்னும் ஆங்கிலச் சொல்லில் வெளிப்படவில்லை. அதனால், *TAMIL NAD* என்ற அரசின் தீர்மானத்திற்கு *TAMIL NADU*என்று நான் திருத்தம் கொடுத் தேன். முதலமைச்சர் அண்ணா என்னை அழைத்துப் பேசினார். தாம் *NADU* என்பதையே விரும்புவதாகவும்,

ஆனால் தலைவர் ராஜாஜி *NAD* என ஆங்கில வழக்கிலுள்ளபடி அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று விரும்பியதாகவும், அதைத் தாம் ஏற்று ராஜாஜி விரும்புவதை ம.பொ.சி. ஆட்சேபிக்கமாட்டார் என்று அவர் கருதினார். ஆனால், என் தலைவர் ராஜாஜியிடம் எனக்குள்ள மதிப்பையும் அன்பையும் விடவும் என் தாய்மொழியான தமிழிடமுள்ள மதிப்பும் அன்பும் கூடுதலானவையாகும். ஆகவே, என் திருத்தத்தை நான் வற்புறுத்தினேன். அண்ணாவின் தமிழ் உள்ளம் எனது திருத்தத்தை ஏற்றுக் கொண்டது. அதன்படி, *TAMIL NADU* என அரசமைப்புச் சட்டத்திலே திருத்தங்காணும் தீர்மானத்தை சட்டமன்றம் நிறைவேற்றி வைத்தது.

## தமிழரசுக் கழகத்தின் வெற்றி!

இந்தப் பிரச்சனையிலே நான் ராஜாஜிக்கு எதிராக நடந்த கொண்டதுபற்றி அவர் நேரடியாக என்னிடம் எதுவும் சொல்லவில்லை. ''இந்தச் சிறிய விஷயத்தில்கூட ம.பொ.சி. என்னுடன் போராட வேண்டுமா?'' என்று அவர் ஒருவரிடம் சொன்னதாகப் பின்னாளில் கேள்விப் பட்டேன். ஆனால், தமிழ் மொழியில் மாநிலத்தின் பெயர் அமைவதைச் சிறிய விஷயமாக நான் கருதவில்லை. அதனால்தான் ''தமிழ்நாடு'' என்று பெயர் மாற்றம் கோரி 1961 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தமிழ்நாடெங்கணும் போராட்டம் நடத்தி என் கழகத் தோழர்களில் ஓராயிரத்திற்கு மேற்பட்டவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பினேன். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் ராஜ்யத்தின் பெயரை மாற்றுவது தி.மு.க. வின் தவிர்க்க முடியாத கடமையாக இருந்தது. ஆனால், ஆட்சியுடன்

போராடிப் பெயர் மாற்றக் கோரிக்கைக்கு வெற்றி தேடிய பெருமை தமிழரசுக் கழகத்திற்கே உண்டு. கழகம் பெயர் மாற்றம் கோரிப் போராடியபோது ''தமிழ்மொழியளவில் 'சென்னை ராஜ்யம்' என்பதைக் கைவிட்டு 'தமிழ்நாடு' என்பது நடைமுறைக்கு வரும்'' என்று திரு. காமராசரை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரஸ் ஆட்சி ஆணை பிறப்பித்தது. அதனை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்த பெருமை தி.மு.க. அரசுக்கே உரியதாகும்.

# ராஜாஜி வருணாசிரமியல்ல!

**ரா**ஜாஜிக்கும் எனக்குமிடையே சரியாக நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிய நட்புறவை விவரிக்கும் போது, அதே கால கட்டத்தில் தமிழகத்தில் வலுத்திருந்த வகுப்புவாதக் கிளர்ச்சியையும் சிறிதளவேனும் சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் இருக்கிறது.

நான் ராஜாஜியிடம் தனிப்பட்ட முறையில் பக்தி கொண்டிருந்ததோடல்லாமல்,தமிழ் மக்களிடம் அவருக்கு இருந்த தலைமையை நிலைநிறுத்தவும் பாடுபட்டேன். அதனால், ''பிராமணரல்லாதார்'' என்னும் பாசறைப் பெயரின் பலத்தைக் கொண்டு நடந்துவந்த திராவிட இயக்கத்தாரின் வெறுப்புக்கு ஆளானேன்.

**காங்கிரசார் நிலை**

பிறப்பால் பிராமணர் என்பதற்காகவும் ராஜாஜியின் தலைமைக்குத் தமிழ்நாட்டில் கடுமையான எதிர்ப்பு இருந்து வந்தது. 1942 -க்குப் பின் இந்த வகுப்புவாதமானது தமிழ்நாடு காங்கிரஸ் வட்டாரத்திலும் புகுந்துவிட்டது. அந்த வட்டாரத்தில் முன்னணியில் இருந்த சில தலைவர்களும், அடுத்த அணியில் இருந்த சில பேச்சாளர்களும் வெளிப்படையாகவே பிராமண வெறுப்புணர்ச்சியைக் காட்டி, ராஜாஜியை எதிர்த்தனர். அதிலே அவர்கள் திராவிட இயக்கத்தாரையும் விஞ்சிவிட்டனர். ராஜாஜியின்

தலைமையை விரும்பியதற்காக அந்தணச் சாதிக்கு அடிமையாகிவிட்டேன் என்று என்னையும் ஏசினர்.

ராஜாஜிக்கு சுயசாதிப்பற்று இருந்ததா, இல்லையா என்பது ஒரு பிரச்சினையல்ல. இருந்திருந்தாலும், அதைக் குற்றமாகவோ, குறையாகவோ நான் கருதுவதற்கு இல்லை. ஆனால், பிராமண 'வருணாசிரமத்'தில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனப்படும் நால் வருணத்தாரிலே அந்தணரே உயர் வருணத்தார் என்று சொல்லப் படுவதைத்தான் ''வருணாசிரம வாதம்'' என்கின்றனர் சீர் திருத்தவாதிகள். என்னைப் பொறுத்தவரையில் ஆசார ரீதியில் ஒருவர் பிராமணராக வாழ்வாரானால், அதனை நான் வரவேற்கிறேன். வள்ளுவரும், ''அந்தணர் என்போர் அறவோர்'' என்று சொல்லி, 'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்' என்றும் ஆசார வழியிலான அந்தண்மைக்கு ஆசி கூறுகிறார்.

காந்தியடிகளும் நால்வருணப் பாகுபாட்டில் தமக்கு நம்பிக்கை உண்டென்று எத்தனையோ முறை எழுதியும் பேசியும் இருக்கிறார். ஆனால், தொழில் வழிப்பட்ட முறையிலன்றி, உயர்வு தாழ்வோடுகூடிய பிறப்பு வழிப்பட்ட முறையில் காந்தியடிகளும் வள்ளுவரும் நால்வருணப் பாகுபாட்டை ஏற்கவில்லை. ராஜாஜியின் நிலையும் அதுதான் என்பதைச் சத்தியம் செய்து சொல்வேன்.

## தாழ்குலத்தார் வீட்டிலும் தங்கினோம்!

பாரதியாரும், ''நாலு குலங்கள் அமைத்தான் அதை நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்'' என்று பாடி, தொழில்

வழிப்பட்ட நால்வருணப் பாகுபாட்டில் தனக்குள்ள நம்பிக்கையை வலியுறுத்திவிட்டு, அந்த வருணாசிரமம் புதுப்பிக்க முடியாதபடி அழிக்கப்பட்டுவிட்டது என்று கூறுகிறார். இந்தக் கருத்து ராஜாஜிக்கும் உடன்பாடாகும். தமிழ் நாட்டிலுள்ள ''சீர்திருத்தக்காரர்கள்'' என்போர், பிராமணர்களைத் துவேஷிப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கிருந்த பிராமணத் துவேஷமானது பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரிக்குமளவுக்கு அவர்களைக் கொண்டு சென்றது. விடுதலைப் போருக்கு எதிராகவும் செயல்பட அவர்கள் தயங்கவில்லை.

புரட்சிகரமான சமய - சமூக சீர்திருத்தவாதியாகிய பாரதியாரையும் பிறப்பால் அவர் பிராமணர் என்பதற்காக பழிக்கலாயினர். காந்தியடிகளையும் அப்பட்டமான வருணாசிரமவாதி என்று வருணிக்கலாயினர். ஆகவே, அந்தச் சீர்திருத்தக்காரர்கள், தலைவர் ராஜாஜியையும் உயர்வு மனப்பான்மையுடைய வருணாசிரமியாக வருணித்தது காலத்தின் கொடுமையாகும். பிற்பட்ட சாதிகளிலே கடைப்பட்ட சாதியில் பிறந்த ''பெருமை'' எனக்கு உண்டு. ஆயினும், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் என் மனம் வருந்தும்படியாக உயர்சாதி மனப்பான்மையை என்னிடம் அவர் வெளிப்படுத்தியதில்லை. எல்லா வகையிலும் என்னைத் தமக்குச் சமமாகவே அவர் நடத்தினார். 1944 தொடங்கி 1946 - ஆம் ஆண்டின் முற்பாதிக் காலம் வரையில் நாங்கள் மிகவும் நெருங்கிப் பணிபுரிந்தோம். தமிழ் நாட்டிலுள்ள அத்தனை மாவட்டங்களிலும் சுற்றுலாச் செய்தோம். பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று, பொதுக்கூட்டங்களில் பேசினோம். ரயிலிலும், மோட்டாரிலும் - ஏன்? மாட்டு வண்டியிலும்கூட அந்தக்

காலத்தில் பயணம் செய்திருக்கிறோம். பல ஊர்களிலே மிகமிகப் பிற்பட்ட சாதி நண்பர்களின் இல்லங்களிலே இராப்பகலாக நாங்கள் தங்கியிருந்தது உண்டு. அந்தக் காலங்களிலே அவரிடம் வருணாசிரம உயர்வு மனப் பான்மையை நான் கண்டதில்லை.

## அரிசனர்களிடம் அன்பு

தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த திரு.வி.ஐ. முனுசாமிப் பிள்ளை, திரு.ஜே. சிவசண்முகம் பிள்ளை ஆகியோரிடம் ராஜாஜி பேரன்பு வைத்திருந்தார். அவர்களை மிகவும் மதிப்போடு நடத்தினார். அவர் களுக்குப் பதவிகள் கொடுத்து, அவர்களது உயர்வுக்கு உதவினார்.

இந்தியாவின் கவர்னர் - ஜெனரலாகப் பதவி வகித்த காலத்திலே தமக்கு உதவியாக 'ஏ.டி.சி' என்னும் உயர் பதவியில் ஒரு அரிசனரையே ராஜாஜி நியமித்துக் கொண்டார். சென்னை மாகாணத்தில் இருமுறை முதலமைச்சர் பதவியை வகித்தபோது, அவர் கொண்டு வந்த சமூக - சமய - பொருளாதாரச் சட்டங்களும் திட்டங் களும் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும், மிகமிகப் பிற்பட்ட சாதியினருக்கும் நன்மை செய்பவையாக இருந்தன. ஆலயப் பிரவேசச் சட்டம், மதுவிலக்குச் சட்டம், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், தஞ்சை பண்ணையாள் - உழவர் பாதுகாப்புச் சட்டம், அரைநாள் கல்வித் திட்டம் ஆகியவை பிராமணரல்லாதார் எனப்படுவோருக்கே - அவர்களிலும், பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கே நன்மை செய்பவையாக இருந்தன. ''எல்லோருக்கும் கல்வி'' என்ற கொள்கையை

அடிப்படையாகக் கொண்டது ராஜாஜி கொண்டுவந்த அரைநாள் கல்வித் திட்டம்.

உண்மையில், தமிழ் நாட்டில் சீர்திருத்தவாதிகள் பிராமணத் துவேஷமின்றிச் செயல்பட்டிருந்தால், தேச சுதந்திரப் போரின் இரண்டாவது முனையாக அதை ராஜாஜி ஏற்றிருப்பார்.

## போலித்தனமான மொழிப்பற்று

தமிழ் நாட்டிலே ஒரு சாரார், ''பிராமணர் தமிழரல்லர்; தமிழருக்கு அன்னியரான ஆரியரே'' என்று பிரசாரம் செய்தது, தலைவர் ராஜாஜிக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. பிராமணர் - பிராமணரல்லாதார் என்னும் வேற்றுமையைப் போக்குகின்ற குறிக்கோளுடன் தான் தமிழர் என்ற இன உணர்ச்சியை நான் வலியுறுத்துகிறேன் என்பதில் ராஜாஜிக்கு ஐயமிருக்கவில்லை. ஆயினும், எனது இயக்கத்தையும் புறங்காணும் வகையிலே தமிழ் இன உணர்ச்சியைப் பிராமண எதிர்ப்புணர்ச்சியாக வளர்க்கும் ஒரு இயக்கம் நாட்டில் இருப்பதைக் கண்டு அவர் வருந்தினார். அதுபற்றி அவர் வெளியிட்ட கருத்து வருமாறு:

''நமது நாட்டில் சாதிப் பிரிவினை இருப்பதோடுகூட இப்போது புதிதாக மொழிவாரிப் பிரிவினை தலைதூக்கியிருக்கிறது. ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறான மொழிகளைப் பேசுகின்றனர். மொழிப்பற்று உணர்ச்சிகள் மேலோங்கினால் ஒரு விதத்தில் அது நல்லதாக இருக்கும். சாதி வெறியை அது தணிக்கும். ஆனால், நாம் அவ்வளவு அதிர்ஷ்டம் படைத்திருக்கவில்லை. பாஷை பற்றிய பேச்சு மேலெழுந்தவாரியாகத்தான் காணப்படுகிறது.''

இது, *13-3-56* அன்று மயிலை ரசிக ரஞ்சனி சபை மண்டத்தில் ராஜாஜி பேசி, *14-3-56* ''தினமணி'' இதழில் வெளியானதாகும்.

## நம்புவதே வெற்றிக்கு வழி

நல்லவேளையாக, ''பிராமணரல்லாதார்'' எனப்படுவோரின் பாசறையாக விளங்கிய திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்தவர்கள் அமைத்த தி.மு.க. தேர்தல் களத்தில் புகுந்த பின்னர், தமிழ்நாட்டில் வகுப்புவாத இயக்கம் வலுவிழந்தது. ஆரம்பத்தில் தி.மு.க. தலைவர்களுடைய மனமாற்றத்தை நான் நம்பவில்லை. ஆனால், ராஜாஜி நம்பினார். நம்பவேண்டும் என்று என்னையும் வற்புறுத்தினார். பிராமணர் விஷயத்தில் தி.மு.க. வின் மனமாற்றத்தை ஐயுற்று, 'செங்கோல்' இதழில் யான் எழுதியதற்குப் பதிலளிக்கும் வகையில் 'கல்கி' *(21-4-53)* இதழில் கருத்து வெளிவரச் செய்தார். அது வருமாறு:

''முன்னேற்றக் கழகத்தாருடைய மனமாறுதலைப் பற்றித் தலைவர் ம.பொ.சி. அவர்கள் சந்தேகத்துடன் வரவேற்பு அளித்து எழுதியிருக்கிறார். ஐயப்படுவது இயற்கை. எந்தக் கட்சியினரும் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளும்போது சந்தேகங்களையும் குற்றங்களையும் பிறர் காண்பது இயற்கை. இது வாழ்க்கை நியதி. ஆனால், அறிவும் நாட்டின் நன்மையில் ஆசையும் கொண்டவர்கள் எல்லோரும் ஒரே முடிவுக்குத்தான் வரவேண்டும் என்பது உண்மையாயினும், பலர் பல வழியாகவும் படிப்படியாகவும்தான் வந்து சேருவார்கள். நாம் கோரும் அபிப்பிராய மாறுதலை எதிர்க்கட்சியாளர்கள் ஒப்புக் கொள்ளும்போது அந்த மனமாறுதலுக்கு உற்சாகமும்

உதவியும் நாம் தரவேண்டும். சந்தேகப்பட்டும் பழைய நிகழ்ச்சிகளைக் குத்திக்காட்டியும் வந்தால் நாம் விரும்பும் முடிவுகளை நாமே தள்ளிப் போடுவதாகும். பல காரணங்களினால் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாக நடைபெற்று வரும் எதேச்சாதிகாரப் போக்கைச் சட்ட சபையில் புகுந்திருக்கும் காங்கிரசைச் சேராத கட்சியாளர்கள் எதிர்த்து வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இதற்கு ஜனநாயக உணர்ச்சியுள்ளவர்கள் அனைவரும் மனமுவந்து உதவவேண்டியது முக்கியமான கடமையாகும்.''

தி.மு.க. தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள், திராவிடர் கழகம் தமிழர்களிடையே வளர்த்த வகுப்புவாத உணர்ச்சியின் வேகத்தைக் குறைத்து, அதனுடைய விஷத்தன்மையை அழித்தார் என்று சொல்லவேண்டும். அந்த வகையில் அண்ணாவை 'நஞ்சுண்ட கண்டர்' எனலாம். ராஜாஜிக்கும் அண்ணாவுக்கும் இடையில் ஏற்பட்ட உறவானது, தமிழரிடையே நான் விரும்பிய ஒருமைப்பாட்டுணர்ச்சியை உருவாக்கப் பயன்பட்டது.

## 'கல்கி' யுடன் நட்பு

ராஜாஜியுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டபின்னர், அவருடைய பரம பக்தரான 'கல்கி' திரு.ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடனும் நட்பு ஏற்பட்டது. புதிய தமிழகம் படைக்க யான் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு, திரு.ரா. கிருஷ்ணமூர்த்தி ஆரம்பம் முதலே தமது 'கல்கி' பத்திரிகை வாயிலாகப் பேராதரவு தந்து வந்தார்.

*1946* - இல் நான் ''தமிழ் முரசு'' மாதப் பத்திரிகையின் முதல் இதழை வெளியிட்டபோது, அதற்குச் சிறந்த

முறையில் 'கல்கி' யில் மதிப்புரை எழுதினார் நண்பர் ரா.கி. 'முரசு' இரண்டாவது இதழுக்கும் மதிப்புரை எழுதினார். 'முரசு' இரண்டு இதழ்களிலேயும் யான் எழுதிய ''தமிழகத்தில் தமிழரசு,'' ''தமிழருக்கும் சுயநிர்ணயம்'' என்னும் இரு கட்டுரைகளுக்கும் ஆதரவு காட்டி 'கல்கி' யில் எழுதினார்.

பல சந்தர்ப்பங்களிலே தமிழரசுக் கழக மேடை களிலும் அவர் பேசினார். ராஜாஜிக்கும் எனக்குமிடையே இருந்த ஆத்மார்த்தமான நட்பை உறுதிப்படுத்துவதிலே 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி மிகுந்த அக்கறை காட்டி வந்தார். ''மொழிவாரி பிரதேச உணர்ச்சி காட்டுமிராண்டிகளின் நாகரிகம்'' என்று ஒருமுறை ராஜாஜி சொன்னபோது, அந்த வாசகமானது எனது மனத்தைப் புண்படுத்தும் என்பதைத் தாமாகவே உணர்ந்து, யான் கொண்டுள்ள மொழிவழி இனவுணர்ச்சியை ஆதரித்தும், ராஜாஜி சொன்ன வாசகத்திற்குச் சமரச ரீதியில் வியாக்யானம் செய்தும் 'கல்கி' யில் எழுதினார்.

## கைகொடுத்தார் 'கல்கி'

*1953* - இல் ஆந்திரம், சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து சென்றபோது, சென்னை நகரத்தின்மீது ஆந்திரர் கோரிய உரிமை மத்திய அரசு அரசமைப்புச் சட்டத்தில் செய்த திருத்தத்தால் நிராகரிக்கப்பட்டது. சென்னை நகரம் தமிழகத்திற்கே உரிய தலைநகரம் என்பது உறுதிப்படுத்தப் பட்டது.

என்பால் அன்புகொண்ட பலர் சென்னை நகரத்தைக் காப்பதற்கு நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டினர். சில நாளிதழ்களும், வார இதழ்களும்

என்னைப் பாராட்டின. ஆனால், **1954** சனவரி **17** - இல் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் அருகில் தமிழரசுக் கழகத்தின் சார்பில் நடந்த தமிழர் திருநாள் கூட்டத்திலே ராஜாஜி அமைச்சரவையில் கல்வித்துறையை நிர்வகித்து வந்த என் அரிய நண்பர் திரு.சி. சுப்பிரமணியம் என்பால் அன்புடையவர்கள் மனம் புண்படும் வகையில் ஒரு கருத்தைக் கூறினார்.

''சென்னையைக் காத்தது ம.பொ.சி. என்று சிலர் நினைக்கிறார்கள். அது வெறும் மாயை. ராஜாஜிதான் சென்னையைக் காத்தார்'' என்று பேசினார். கூட்டத்திலிருந்த இளைஞர்கள் சினங்கொண்டவர்களாகி, சலசலப்பு செய்தனர். அவருக்குப் பின் பேசிய 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி.

> ''முதலமைச்சர் பதவியில் இருந்ததனால் சென்னையைக் காக்கும் பொறுப்பு தலைவர் ராஜாஜிக்கு ஏற்பட்டது. அந்த வகையிலே அவர் தமது முதல்வர் பதவியையும் துறக்கத் துணிந்து சென்னைக்காக வாதாடினார். இதனை ம.பொ.சி.யும் மறுக்கவில்லை. ஆனால், ஆந்திரர்கள் எப்பொழுது ''மதராஸ் மனதே'' என்று குரல் கொடுத்தார்களோ, அப்பொழுதிருந்தே ''சென்னை தமிழருடையதே'' என்று இடையறாது எதிர்க்குரல் கொடுத்து வந்தார் ம.பொ.சி. சென்னையைக் காப்பாற்றவதற்குத் தமிழ் மக்களிடையே எழுச்சி ஊட்டினார். சென்னைக் கார்ப்பொரேஷனில் 'சென்னை தமிழருடையதே' என்ற தீர்மானத்தை முன்மொழிந்து, அது நிறைவேறச் செய்தார். காலத்தோடு அவர் அப்படிச் செய்தில்லையானால், முதலமைச்சர் ராஜாஜியாலும்

சென்னைப்பட்டணத்தைக் காப்பாற்றியிருக்க முடியாது.''

என்று உறுதிதோய்ந்த குரலில் பேசினார்.

## ராஜாஜியின் பாராட்டு

இந்தக் கூட்டத்தில் ராஜாஜியும் கலந்துகொண்டு பேசினார் என்பது சுவாரஸ்யமான விஷயமாகும். திரு.சி.எஸ். எழுப்பிய பிரச்சினையானது, என் தலைவர் ராஜாஜியைச் சங்கடத்தில் வைத்திருக்க வேண்டும். ஆனால், நேரடியாக அவர் அதில் புகவில்லை. மாறாக, என்னை மகிழ்விக்கும் வகையிலே பேசினார். அதனை ''தினமணி'' 18-1-54 இதழிலே வெளியானபடி அதில் தரப்பட்ட தலைப்புகளோடு அப்படியே இங்கு தருகிறேன்:

## ''ம.பொ.சி.யின் எண்ணம் பூர்த்தியாக வேண்டும்'' தமிழர் திருநாளில் ராஜாஜியின் பிரார்த்தனை

''நமது பண்டைய பெருமைகளை ஸ்ரீ.ம.பொ.சி. எடுத்துரைத்தார். ஏன்? - நாமும் அம்மாதிரி ஆகவேண்டும் என்பதற்காகத்தான்! அது சாத்தியமானதே. தைரியமாக அதற்காகப் பாடுபட வேண்டும். எடுத்த காரியத்தை ஊக்கத்துடனும் தைரியத்துடனும் முனைந்து செய்து பூர்த்தியாக்க வேண்டும். இதைத்தான் ஸ்ரீ.ம.பொ.சி. சொன்னார்.

''ஸ்ரீ ம.பொ.சி.க்கு உள்ள தமிழ்ப்பற்று, தமிழ் ஆர்வத்தை ராஜாஜி வெகுவாகப் புகழ்ந்தார். ''அதே கவலை, அதே கனவாக, அதுவே வீரமாகவும் கொண்டுள்ளார் அவர்'' என்றார்.

''தென்புலத்தார், தெய்வம், ஒக்கல், விருந்து, தான் என உற்பத்தியாவதை, உற்பத்தி செய்பவர் - ஐந்தாகப்

பிரித்து, சமூகத்தை நடத்தி வந்த பண்டைய தமிழர்களின் பெருமையை ஸ்ரீ.ம.பொ.சி. பேசியதுபற்றிக் குறிப்பிட்டு, 'இம்மாதிரி மீண்டும் ஏற்பட்டுவிட்டால் நாடு முன்னேற கஷ்டம் ஏது?' என்று குறிப்பிட்டார். 'விருந்தையும் ஒக்கலையும் மறக்காமல் இருக்க வேண்டும்' என தமிழ் மக்களை ராஜாஜி கேட்டுக்கொண்டார்.''

இப்படிக் கூறிவிட்டு, அவருக்கு அருகில் அமர்ந்திருந்த என் தலையில் தமது வலது கரத்தை வைத்து ஆசி கூறினார். எதிரே, புகைப்படக் கருவியுடன் நின்றிருந்தவரைப் பார்த்து, 'உம், எடுங்கள்' என்றார்.

அவர் காட்டிய இந்தப் பண்பானது கூட்டத்தினருக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்ததால், கைதட்டி ஆரவாரம் செய்தனர். ராஜாஜியின் பெயரையும் என் பெயரையும் சொல்லி வாழ்த்தொலி எழுப்பினர். ''கல்கி''யும் ராஜாஜியும் என்பால் கொண்டிருந்த பேரன்புக்கு இந்த நிகழ்ச்சி ஒரு சிறந்த சான்றாகும்.

## ''கல்கி'' யார் மறைந்தபோது...

''கல்கி'' ரா. கிருஷ்ணமூர்த்தி தலைவர் ராஜாஜியிடம் எல்லையற்ற பக்தி வைத்திருந்தார். அவருக்காக, எத்தகைய துன்பத்தையும் ஏற்கத் துணிவு கொண்டிருந்தார். அதிலே அவர் எனக்கு வழிகாட்டி எனலாம்.

ராஜாஜியை ஆதரித்து ''கல்கி'' பத்திரிகையில் அவர் எழுதிய சந்தர்ப்பங்களிலே அந்தப் பத்திரிகைக்கு எதிராகத் தமிழ் நாட்டின் பல ஊர்களிலே எதிர்ப்பு எழுந்தது. ''கல்கி'' பத்திரிகையைப் பொதுமக்களின் மத்தியிலே தீயிட்டுக் கொளுத்தும் நாச வேலையும் நடந்தது. அதற்கெல்லாம் ரா. கிருஷ்ணமூர்த்தி அஞ்சவில்லை.

ராஜாஜியும் ரா. கிருஷ்ணமூர்த்தியைத் தம்முடைய சொந்த மகன்போலக் கருதி அன்பு செலுத்தினார். 'ராகி'

உயிர் துறந்த நாளிலே, அந்தச் செய்தியறிந்ததும், சென்னை அடையாறு காந்தி நகரிலுள்ள அவரது இல்லத்திற்கு விரைந்து வந்தார். தம்முடைய ஆப்த நண்பர் பிணமாகக் கிடப்பதைக் கண்டபோது, எதற்கும் கலங்காத அவருடைய கண்கள் கலங்கின. நீர்த்துளிகளைச் சிந்தின. மறுகணமே, ''ம.பொ.சிக்குத் தகவல் சொல்லி விட்டீர்களா?'' என்று கேட்டு, 'தொலைபேசி மூலம் சொல்லியாகிவிட்டது' என்ற பதிலைப் பெற்றார். நான் சென்றதும், என்னைப் பார்த்து, ''இன்றிலிருந்து கிருஷ்ணமூர்த்தி நம்மோடு இருக்கமாட்டார்'' என்று கண் கலங்கிக் கூறினார். நான் கதறியழுதேன். என்னைத் தழுவிக் கொண்டு ஆறுதல் கூறினார்.

பிரேத ஊர்வலத்திலே ராஜாஜியும் நானும் ஒரே காரில் அமர்ந்து சென்றோம். மயானத்தில் நடந்த கூட்டத்தில் ராஜாஜி பேசவில்லை. நான் பேசினேன். ''கல்கி'' கிருஷ்ணமூர்த்தியின் மறைவால் கலைமகள் தன் எழுதுகோலை இழந்துவிட்டாள். அவளது வீணையின் நாதம் நின்றுவிட்டது'' என்று கூறினேன். இந்தப் பேச்சு ராஜாஜியைப் பெரிதும் கவர்ந்தது. பிற்காலத்தில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் அந்தப் பேச்சை நினைப் பூட்டி, அவர் என்னைப் பாராட்டினார்.

''கல்கி'' மறைந்த நாளன்று மாலை ராஜாஜியும் நானும் சென்னை வானொலி நிலையத்தாரால் அழைக்கப் பட்டு, இருவரும் ஒரே காரில் சென்று, மறைந்த எங்கள் நண்பரைப் பற்றிப் பேசினோம்.

அன்று பகல் முழுவதும் ராஜாஜியை விட்டு நான் பிரியவில்லை. தம்முடைய சீடரின் மறைவால் அவர் அடைந்த வேதனையைக் குறைக்கும் வகையிலே அவருடன் இருந்து உரையாடினேன். வானொலி நிலையத்திலிருந்து திரும்பியதும் சிறிது நேரம்

கடற்கரையில் அமர்ந்து 'கல்கி'யைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தோம்.

அன்று மாலை 6 மணிக்கு சைதையிலே தமிழரசுக் கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடாகி யிருந்தது. கழகக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற் காகத்தான் அந்தக் கூட்டம் போடப்பட்டது. ஆனால், 'கல்கி'யின் மறைவையொட்டிய அனுதாபக் கூட்டமாக என்னால் மாற்றப்பட்டது. ராஜாஜியும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்து எனது பேச்சைக் கேட்டார். அன்று ராஜாஜியிடம் வெளிப்பட்ட சோகத்தை நான் என்றும் மறக்க முடியாது.

# வாழ்க, ராஜாஜியின் புகழ்!

தலைவர் ராஜாஜி அவர்கள் இடைவிடாது என்னை வற்புறுத்தி வந்ததால்தான் 1967 - ஆம் ஆண்டு பார்லி மெண்டரி அரசியலில் நேரடியாகக் கலந்து கொண்டேன் என்பதை மீண்டும் ஒருமுறை நான் கூறியாக வேண்டும். அவர் எனக்கு உதவியது சட்டப் பேரவையில் அங்கம் பெற மட்டும்தான் என்றாலும், அதுவே பிற்காலத்தில் சட்ட மன்ற மேலவையில் தொடர்ந்து ஆறு ஆண்டுக் காலம் துணைத் தலைவராகவும், அதனையடுத்துத் தொடர்ந்து ஒன்பதாண்டுக் காலம் தலைவராகவும் பதவி கள் பெறக் காரணமாக இருந்தது. இதனை நன்றியுணர் வோடு போற்றி வருகிறேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியின் ஆதரவோடு சட்டமன்ற மேலவையில் துணைத் தலைவர் பதவியை ஏற்றபோது என்னை வாழ்த்துவதற்கு ராஜாஜி வாழ்ந்திருந்தார். துணைத் தலைவர் பதவியானது தமிழ் மக்கள் மத்தியில் எனக்குள்ள மதிப்புக்குத் தாழ்வானது: துணை அமைச்சர் பதவி போன்றது - என்று அவர் தன்னுடைய நெருங்கிய சகாக் களிடம் கூறி என்மீது குறைபட்டுக் கொண்டார் என்றா லும், முதன்முதலாகப் பெரு மதிப்பையும், வாழ்க்கை வசதிகளையும் நான் அடைந்ததிலே அவருக்கும் மகிழ்ச்சி தான்.

1978 - இல் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆதரவோடு சட்டமன்ற மேலவையின் தலைவர் பதவியை நான் அடைந்தபோது என்னை வாழ்த்துவதற்கு ராஜாஜி வாழ்ந் திருக்கவில்லை. ஆனால், அமரருலகில் இருந்து கொண்டு அந்தப் புனிதரின் ஆன்மா என்னை வாழ்த்தியதாகவே நான் கருதினேன். 'தமிழையே தலைவர் ஆசனத்தில் அமர்த்தி யிருக்கிறோம்' என்று பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். மேலவையில் கூறினாரே, அதை ராஜாஜி கூறியதாகவே கருதினேன். அந்தத் தகுதி புரட்சித் தலைவருக்கு உண்டு.

**திப்புசுல்தான் பற்றி ராஜாஜி**

யான் பெற்றுள்ள எழுத்தாற்றலையும், பேச்சாற்றலை யும் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் வாயாரப் புகழ்வதிலே என் தலைவர் ராஜாஜி தயக்கம் காட்டவில்லை. நாங்கள் இரண்டு பேரும் சேர்ந்து பேசிய மேடைகளிலே எனக்குப் பின் அவர் பேசிய போதெல்லாம் எனது பேச்சுத் திறமையைப் புகழ அவர் தவறியதில்லை. யான் பெற்றுள்ள எழுத்தாற்றலைக் கண்டும் அவர் மகிழ்ந்தது உண்டு.

டாக்டர் அம்பேத்கர் ஒரு முறை சென்னைக்கு வந்திருந்தபோது, காந்தியடிகளை அளவுக்கு மீறிக் கண்டித்துப் பிரசாரம் செய்தார். கடுமையான வார்த்தை களைப் பயன்படுத்தினார். அதனால் சினங்கொண்ட ராஜாஜி அவருக்குப் பதிலளிக்கும் வகையிலே ஆங்கில மொழியில் நூல் எழுதிவெளியிட்டார். அதனைத் தமிழில் மொழி பெயர்த்துத் தரும் பணியை நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளையிடம் ஒப்புவித்தார்.

கவிஞரும் நூல் முழுவதையும் மொழி பெயர்த்துக் கொடுத்தார். ஆனால், கவிஞரின் தமிழ் நடையில் வேகம் இல்லையென்று கருதி, அதனை என்னிடம் தந்து எனது தமிழ் நடையிலே திருத்தித் தருமாறு என் தலைவர் பணித்தார். ஆனால், நான் திருத்திக் கொடுப்பதற்கு முன்னர் தமிழ்மொழி பெயர்ப்பை வெளியிடும் யோசனையைக் கைவிட்டுவிட்டார்.

வீரபாண்டியக் கட்டபொம்மன் நூலை யான் எழுதிவெளியிட்டதால் அம்மாவீரனின் புகழ், கொடி கட்டிப் பறப்பதைப் பார்த்த ராஜாஜி, ''வீரன் திப்பு சுல்தானின் வரலாற்றையும் உங்களுடைய வீரத் தமிழிலே எழுதிவெளியிட்டால், சாமான்ய மக்களும் அம்மாமன்னனை அறிந்து கொள்வார்கள்'' என்று ராஜாஜி ஒருமுறை என்னிடம் சொன்னார். அவருடைய ஆணையை நிறைவேற்றும் விருப்பம் எனக்கு இருக்கிறதென்றாலும், காலம் இதுவரை கைகொடுக்கவில்லை.

மிகமிகப் பிற்பட்ட சாதியில் பிறந்து, 'வறுமைக் கோட்டின் கீழே உள்ளவர்கள்' என்று ஏழை மக்களை வருணிக்கிறார்களே, அதைவிடவும் கொடுமைமிக்க நிலையிலே வறுமைக் குழியிலேயே விழுந்து தவித்த பரம ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த யான் உலகறிந்த பெருந் தலைவரும், பேரறிஞருமான ராஜாஜியின் தோழமையைப் பெற்றதை என் வாழ்க்கையில் யான் அடைந்த பெருஞ்செல்வமாகக் கருதுகிறேன்.

**காசா சுப்பாராவ் முயற்சி**

*1952* - இல் அப்போதைய சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக ராஜாஜி வந்தபோது, அவரது

அமைச்சரவையில் யான் இடம் பெற வேண்டுமென்று ஆங்கில வார இதழான 'சுயராஜ்யா'வின் ஆசிரியர் திரு. காசாசுப்பாராவ் பெரிதும் விரும்பினார். என்னை நேரில் கண்டு அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ராஜாஜியை யான் வற்புறுத்த வேண்டு மென்று தூண்டினார். திரு. காசா சுப்பாராவ் ஆந்திரரா யினும், சென்னை நகரப் பிரச்சனை மீது ஆந்திர மாநிலத் தாருடன் நான் போராடிக் கொண்டிருந்த நிலையிலும் என்னிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். ஆனால் அவர் வற்புறுத்தியதுபோல நான் ராஜாஜியிடம் அமைச்சர் பதவி கேட்கவில்லை.

1946 - இல் அரசியல் நிர்ணய மன்றத்திற்கு சென்னை மாகாண சட்டமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலே யானும் ஒருவனாக இருக்க வேண்டும் என்று திரு. சுப்பாராவ் பெரு முயற்சி செய்தார். தமது கருத்தைக் கடிதத்தின் மூலம் ராஜாஜிக்கும் தெரிவித்தார். ஆனால், அவர் நினைத்தது நடக்கவில்லை.

காஸா சுப்பாராவைப் போலவே டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், மதுரை ஏ. வைத்தியநாத ஐயர் ஆகியோர் அ.நி. மன்ற உறுப்பினர்களில் ஒருவனாக என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்று ராஜாஜியை வற்புறுத்தினர்.

ஐந்து எம்.எல்.ஏக்களுக்கு ஒருவராக அ.நி. மன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ராஜாஜியின் சார்பில் 25 எம்.எல்.ஏக்கள் இருந்தனர். அதனால், அவர்களடங்கிய கூட்டம் நடைபெற்றது. தம் சார்பில் ஐவர் பெயர்ப்பட்டியலைத் தயாரித்தது. என் பெயரையும்

அதிலே ராஜாஜி சேர்த்தார். பின்னர், மற்றொரு முக்கியஸ்தருக்காக, என்னைக் கைவிட்டார்.

மூதறிஞர் ராஜாஜி என்னைப் பெருமதிப்புடன் நடத்தினார் என்றாலும், ஆங்கில மொழியில் எனக்குப் போதிய புலமை இல்லாததை ஒரு பெரும் குறையாகக் கருதினார் என்பதை நான் மறைப்பதற்கில்லை. அவர் நமது மாகாணத்தில் பெரும் பதவிகளை வகித்த காலத்திலே நான்கு மொழிப் பிரதேசங்களைக் கொண்டதாக சென்னை ராஜ்யம் இருந்தது. அதனால், ஆங்கில மொழியில் போதிய புலமை பெறாத ஒருவர் அமைச்சர் பொறுப்பை ஏற்று சென்னை மாகாண சட்டமன்றத்திலே செயல்படுவதில் கஷ்டம் இருந்தது. அதனால், ஆங்கில மொழிக்கு ராஜாஜி தந்த முக்கியத்துவத்தை நான் குறை சொல்வதற்கில்லை. ஆயினும், 1952 - இல் அவர் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோது, சட்டமன்ற மேலவையின் துணைக்கொறடா பதவியை எனக்குத் தந்தார். அப்போது, திரு. காமராசர் அவர்களுடைய தூண்டுதல் காரணமாக சட்டமன்ற மேலவையில் நான் அங்கம் வகித்ததை மீண்டும் இங்கு நினைப்பூட்ட வேண்டும். அந்நாளிலே சட்டமன்றக் கொரடாவுக்கோ, துணைக்கொரடாவுக்கோ வாழ்க்கை வசதி எதுவும் அரசால் தரப்படவில்லை. இப்போது தரப்படுகிறது. ஆனால், துணைக் கொரடா பதவி எடுபட்டு விட்டது.

சட்டமன்ற மேலவையிலிருந்து சென்னைப் பல்கலைக் கழக செனட்சபை உறுப்பினராக யான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ராஜாஜி நான் கேட்காமலே உதவி புரிந்தார். அந்தப் பொறுப்பைத் திறம்பட

வகிப்பதற்கும் அந்நாளில் ஆங்கில மொழி ஞானம் தேவைப்பட்ட தென்றாலும், அதிலே என் தலைவர் எனக்கு விதிவிலக்குத் தந்தார்.

## மலேசியா செல்ல உதவி

*1964* - இல் இந்திய அரசு சார்பில் மலேசிய நாட்டிற்கு இந்திய - மலேசிய நட்புறவுத் தூதுக்குழு ஒன்றை அனுப்ப டில்லியில் முயற்சி எடுக்கப்பட்டது. மூவரைக் கொண்ட அந்தக் குழுவிலே யான் இடம் பெறுவதற்கு முதலமைச்சர் பொறுப்பிலிருந்த ராஜாஜியும் முயற்சி எடுத்தார். அந்தக் குழு மலேசியா புறப்படவிருந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார். அவரையடுத்து, அந்தப் பொறுப்புக்கு வந்த பெரியவர் ஏதேதோ காரணங்களைச் சொல்லி, தூதுக்கு மலேசியா செல்வதைக் கைவிடும்படிச் செய்துவிட்டார். சரியாகப் பத்தாண்டு கழித்து 1964 சனவரியில் அப்போது பினாங்கு நகரில் வாழ்ந்த வள்ளல் அரங்கசாமிப் பிள்ளை அவர்களின் முயற்சியால் யான் மலேசியாவுக்குச் செல்ல நேர்ந்தது. செல்லுமுன் சென்னையில் ஒரு பெரிய ஓட்டலில் நடந்த வழியனுப்பு விருந்துபசாரக் கூட்டத்திலே ராஜாஜியும் காமராசரும் சென்னை மாகாண முதலமைச்சர் பொறுப்பில் இருந்த திரு. பக்தவத்சலமும் கலந்துகொண்டு என்னை வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். இதுபற்றி ஏற்கெனவே விரிவாகக் கூறியுள்ளேன்.

பொதுவாக, ராஜாஜி அவர்கள் காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக யான் போற்றிவரும் பெருந் தலைவராவார். ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளிலே அவரது

இல்லத்திற்குச் சென்று அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வது வழக்கம். இதனை 1956 டிசம்பரில் தான் முதன் முதலாகத் தொடங்கினேன். அதே ஆண்டு சூன் திங்களில் எனக்கு நடந்த பொன்விழாவிலே கலந்து கொள்ள என் தலைவர் மறுத்தார் என்பதை இங்கு நான் மீண்டும் சொல்லியாக வேண்டும். அந்த ஆண்டிலே அவர் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு நான் மாலை அணிவித்தபோது, ''நீங்கள் கூடவா இப்படிச் செய்ய வேண்டும்?'' என்று கேட்டுவிட்டு, 'நான் உங்களை விடவும் வயதானவனாதலால் உங்களிடம் வாழ்த்துப் பெறுகின்ற நேரத்திலே உங்களையும் வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்று சொல்லி, என் தலைமீது தம் இரு கரங்களையும் வைத்து ஆசி கூறினார். அவர் என்னை விடவும் 27 வயது மூத்தவர். அதனால், அவருக்குப் பின்னும் வாழ்கின்ற பேற்றினை யான் பெற்றிருக்கிறேன்.

**கடைசி வாழ்த்து!**

ராஜாஜி மறைவதற்கு முன்பு வந்த அவரது பிறந்த நாளிலே அவருக்கு மாலையணிவித்து வாழ்த்தவும், அவரிடம் வாழ்த்துப் பெறவும் அவரது இல்லத்திற்குச் சென்றேன். அப்போது, அவருடைய இல்லத்திலே சுதந்திரா கட்சித் தோழர்கள் நிறைந்திருந்தனர். யான் மாலையணிவித்து முடிந்ததும், என்னைத் தமது அருகில் அமரச் செய்து, தமது வலது கரத்தால் என்னைத் தழுவிக் கொண்டார். அப்போது அங்கிருந்த தம் கட்சித் தோழர்களைப் பார்த்து, ''உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ராஜாஜியும் ம.பொ.சி.யும் பல விஷயங்களில் ஒத்துப் போகாமல் இருந்தும், நேரில்

சந்தித்துவிட்டால் இப்படிக் குழைகிறார்களே என்று நினைக்கிறீர்கள் அல்லவா? எங்களுடைய உணர்ச்சி பூர்வமான நட்பை உங்களால் புரிந்துகொள்ள முடியாது'' என்று சொன்னார். அதுதான் நான் அவரிடம் கடைசியாகப் பெற்ற வாழ்த்து! கடைசியாகக் கேட்ட குரல்!

மூதறிஞர் ராஜாஜியின் வாழ்க்கை வரலாறு தமிழ் நாட்டுக்குக் கிடைத்த பெருஞ் சொத்து. தமிழர் அவரை என்றென்றும் தங்கள் இதயத்தில் வைத்துப் போற்றிவர வேண்டும்.


வாழ்க, மூதறிஞர் ராஜாஜியின் புகழ்!

# புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | டாக்டர் ம.பொ.சி. | 100-00 |
| விடுதலைப் போரில் தமிழகம் (இரு தொகுதிகள்) | ,, | 250-00 |
| விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு | ,, | 85-00 |
| புதிய தமிழகம் படைத்த வரலாறு | ,, | 150-50 |
| தமிழகத்தில் பிற மொழியினர் | ,, | 70-00 |
| சிலப்பதிகார ஆய்வுரை | ,, | 90-00 |
| சிலப்பதிரத் திறனாய்வு | ,, | 75-00 |
| தமிழும் சமஸ்கிருதமும் | ,, | 20-50 |
| ஆங்கிலம் வளர்த்த மூட நம்பிக்கை | ,, | 20-00 |
| காந்தியடிகளும் ஆங்கிலமும் | ,, | 20-00 |
| தமிழா ஆங்கிலமா? | ,, | 25-00 |
| கம்பரிடம் யான் கற்ற அரசியல் | ,, | 36-00 |
| திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும் | ,, | 28-00 |
| மாநில சுயாட்சிக் கிளர்ச்சியின் வரலாறு | ,, | 20-00 |
| சட்டமன்றத்தில் சுயாட்சிக் குரல் | ,, | 18-00 |
| வள்ளலாரும் பாரதியும் | ,, | 15-00 |
| எம்.ஜி.ஆருடன் எனக்கிருந்த தொடர்பு | ,, | 25-50 |
| எழுத்துச் சீர்திருத்தம் தேவையா? | ,, | 10-00 |
| சிலப்பதிசகாரத்தில் யாழும் இசையும் | ,, | 5-00 |
| நாடகப் பேராசிரியர் சதாவதானி கிருஷ்ணசாமிப் பாவலர் வாழ்க்கை வரலாறு | ,, | 9-00 |
| அமெரிக்காவில் மூன்று வாரம் | ,, | 18-00 |

| | | |
|---|---|---|
| சிலம்பில் ஈடுபட்டதெப்படி? | ,, | 12-00 |
| கிரீஸ் வாழ்ந்த வரலாறு (முதல் பாகம்) வெ. சாமிநாத சர்மா | ,, | 80-00 |
| கிரீஸ் வாழ்ந்த வரலாறு (இரண்டாம் பாகம்) | ,, | 75-00 |
| வெ. சாமிநாத சர்மாவின் இரு நாடகங்கள் | ,, | 50-50 |
| வெ. சாமிநாத சர்மாவின் பாரத மாதாவின் கடிதங்கள் | ,, | 25-00 |
| பிளேட்டோவின் கடிதங்கள் | ,, | 40-00 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஓர் தீர்க்கதரிசி | | 35-00 |
| புராதன இந்தியாவில் அரசியல் | ,, | 75-00 |
| நாடாண்ட நங்கையர் | ,, | 20-00 |
| அவள் பிரிவு | ,, | 35-00 |
| பாரதியியல் கட்டுரைகள் (முதல் பாகம்) | பெ.சு.மணி | 75-00 |
| பாரதியியல் கட்டுரைகள் (இரண்டாம் பாகம்) | ,, | 75-00 |
| பக்தி இயக்கங்கள் வழியே சமூக சீர்திருத்தம் ஓர் அறிமுகம் | ,, | 75-00 |
| இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்ற நூல்) | ,, | 65-00 |
| தமிழ்ப் புலவர் மரபும் பாரதி மரபும் | ,, | 55-00 |
| தமிழகத்தில் பிரம்ம சமாஜம் | ,, | 44-00 |
| எழுத்திடைச் செழித்த செம்மல் கா.சி. வேங்கடரமணி | ,, | 20-00 |
| கார்ல் மார்க்சின் இலக்கியம் இதயம் | ,, | 25-00 |
| தடைகளை வென்று தலைமை பெற்ற ம.பொ.சி | ,, | 7-50 |

பூங்கொடி
பதிப்பகம்



# நானறிந்த ராஜாஜி

சிலம்புச் செல்வர்
ம.பொ. சிவஞானம்

ஈஸ்வரி